

சுதேச
த்திரன்
டம்பர் 23, '56 விலை 4 அணா
4 OCT 1956
MADRAS

பாருங்கள்!
ஒரு அரை வில்லை
ஸன்லைட்தான்
இவ்வளவு சலவையும்
செய்து முடித்தது!
அதன் அதிகப்படியான நுரையே இதைச் சாதித்தது!
SUNLIGHT SOAP
ஸன்லைட்
சோப்
பளிச்சென்று வெண்மையாக வெளுக்கிறது
S. 242-X52 TM
இந்தியாவில்
தயாரித்தது

பொருளடக்கம்

Vol. XXVII] துன்முகி௵ புரட்டாசி௴ 8௳ செப். 23 1956. [No. 34

ஜனநாயகத்தின் நாற்றங்கால் 3
காற்றுவாக்கிலே —வம்பன் 4
பிரமுகர் வரிசை 5
விபரீத விளையாட்டு
—வல்லிக்கண்ணன் 6
தலைநகர் தபால் 12
சரசுவின் தம்பி —பராங்குசம் 13
படித்திருக்கிறீர்களா?
—க. நா. சுப்ரமண்யம் 18
தெய்வச் சொத்து —ராஜ்யஸ்ரீ 20
பெண் மனம் —சுமங்கலி 23
நேசமும் தாரமும்
—எஸ். பி. ஹர்ஷன் 24
திரைக்குப்பின் —ஆர்வி 27
நடந்த விஷயம்
—என். பி. ஹரிஹரன் 32
நாராயணீயம்
—அனந்தராம தீக்ஷிதர் 33
விக்ரமாதித்தன் கதைகள்
—சாலிவாஹனன் 35
சாகா மருந்து! —அஸ்வத்தாமா 36
சட்டம் பேசுகிறது! 39
காணுதளித்த காவலன் —சௌமி 40
மோகமுள் —தி. ஜானகிராமன் 43
ஹாஸ்யமே உலகம் 49
கலாமண்டபம் 52
நகர அரங்கம் 55
வாசுதேவாச்சார் கீர்த்தனை 56

"மித்திரன்" வாரப்பதிப்பில் வெளிவரும் கதைகளில் பெயர்கள், சம்பவங்கள் எல்லாம் கற்பனையே: அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல

கவனம் இருக்கட்டும் **உணவுச் சிறப்பு**

காமதேனு வனஸ்பதியினால் இன்னும் உயர்வடைகிறது

உப்பு பக்ஷணங்கள் மட்டுமல்ல, ஏன், சில இனிப்புப் பண்டங்கள்கூட, காமதேனு வனஸ்பதியில் தயார் செய்தவையானால் அவை உண்மையில் நல்ல ருசி யுடையனவையாகின்றன. நெய் போன்றதேயானாலும் காமதேனு வனஸ்பதி, விலை குறைவானது. ஆனால் குணத்தில் கொஞ்சமும் குன்றியதல்ல.

காமதேனு வனஸ்பதியின் குணமும் தரமும் குன்றா திருப்பதற்கு அதன் சாஸ்திரீய தயாரிப்புதான் காரணம்.

கண் பார்வைக்குத் தேவையானதும் சரும உபாதைகளை போக்க வல்லதுமான விடமின் 'A' கலக்கப்பட்டது காமதேனு வனஸ்பதி.

காமதேனு வனஸ்பதியில் தயாரிக்கப்படும் பதார்த்தங்கள் தருவது **உடல் நலப் பெருக்து**

உங்களுக்கும் சரி உங்கள் குடும்பத்தினருக்கும் சரி!

தயாரிப்பு:
மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிட்., மேட்டூர் அணை, சேலம் ஜில்லா
மானேஜிங் ஏஜெண்ட்ஸ்: சேஷசாயி பிரதர்ஸ் பிரைவேட் லிட்.

'இசை விருந்து'—இலங்கை வானொலி—41.72 மீட்டர்கள் ஒவ்வொரு புதன்கிழமையும், மாலை 6-30 மணிக்கு, நாங்கள் அளிக்கும் இந்நிகழ்ச்சியில் பிரபல பின்னணி பாடகர்கள் பங்கெடுத்துக் கொள்ளுகிறார்கள். பாடவும் செய்கிறார்கள். கேட்கத் தவறாதீர்கள்.

காலச்சக்கரம்

காஷ்மீர்
பிடித்துத்தருகி றேன், கவலைப் படாதே
சுஹ்ராவர்த்தி
பாகிஸ்தான்
நிறைவேற்ற முடியாததை வாக்களிக்க மாட்டேன் என்கிறார் புது பாக். பிரதமர்
இன்னும் கொஞ்சம் வேண்டும்!
ஸ்தல ஸ்தாபனங்கள்
திட்டக்கமிஷன்
எகிப்தில் பலப்பிரயோகம் குறித்து ரஷ்யா எச்சரிக்கிறது
எனக்கும் இதில் அக்கறை இருக் கிறது
ப்ரான்ஸ்
பிரிட்டன்
எகிப்து

வாழிய செந்தமிழ் — சுதேசமித்திரன் — வாழ்க நற்றமிழர்

வாரப்பதிப்பு

ஜனநாயகத்தின் நாற்றங்கால்

சர்க்காரைவிட இன்னும் நேரடியாக மக்களது வாழ்க்கையில் தொடர்புள்ளவைகளும், அந்த வாழ்வைச் செம்மைப்படுத்தி வசதிகாமாக்க வல்லவைகளும், பொதுஜன ஊழியத்தில் சிரத்தை உள்ளவர்களுக்குச் சிறந்த பயிற்சி ஸ்தலமாக விளங்குபவைகளும் ஸ்தலஸ்தாபனங்களே. ஆனால், இந்த லட்சியங்கள் ஈடேறும் வகையில் இன்று ஸ்தலஸ்தாபனங்கள் இயங்குவதாகச் சொல்லமுடியாது. அவற்றின் அமைப்பு, அலுவல்கள், நிதி வசதிகள் ஆகியவை முறைப்படி உருவாகாததே இதற்குக் காரணமாகும்.

நமது ராஜ்யத்தில், பஞ்சாயத்து, நகரசபை, ஜில்லா போர்டு ஆகிய மூன்று வகை ஸ்தலஸ்தாபனங்கள் இருக்கின்றன. இவற்றைச் சீர்திருத்தியமைப்பதுபற்றிப் பல வருடங்களாகப் பரிசீலனை நடந்துவருகிறது. ஆயினும் இன்னும் ப்ராட்சார்த்த கட்டத்தை நாம் தாண்டியபாடில்லை. புதிய சட்டப்படி அலுவல்களும் அதிகாரங்களும் விஸ்தரிக்கப்பட்ட பஞ்சாயத்துகள் இயங்கும் விதம், எதிர்பார்த்தபடி திருப்தியளிக்கவில்லை. அவற்றிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் சரிவர நிறைவேற்றும் வகையில் பஞ்சாயத்துகளின் அமைப்பு இல்லை.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டப்பிரகாரம் இவை பெருவாரியாக அபிவிருத்தி வேலைகளை மேற்கொண்டாகவேண்டும். இதற்கேற்றவாறு திருத்தியமைக்கும் பொருட்டு, ஐந்து வருஷத் திட்டமொன்றை சர்க்கார் உருவாக்கியிருக்கின்றனராம். பொதுஜன சேவையில் அக்கறையும் நிர்வாகப் பயிற்சியும் உள்ளவர்கள் பஞ்சாயத்துகளில் இடம்பெற வகை செய்தாலன்றி எவ்விதச் சீர்திருத்தங்களினாலும் பலனேற்படாது.

நகரசபைகளுக்கு வெளியே எல்லா இடங்களிலும் பஞ்சாயத்துகள் திறம்பட இயங்குமாயின், ஜில்லா போர்டுகள் தற்போதுள்ள வகையில் நீடிக்க அவசியமில்லாது போகலாம். இது ஒருபுறமிருக்க, நகரசபைகளில் கமிஷனர் பதவியை எடுத்துவிட்டு சபைத் தலைவரிடமே பொது அலுவல்களையும் அதிகாரங்களையும் ஒப்படைக்கும் யோசனை கூறப்பட்டிருக்கிறது. நகரசபைத் தலைவர்களில் பெரும்பாலோர் கமிஷனரைப்போல திறமையாக நிர்வாகம் நடத்த இயலாது என்பதைத்தவிர, சபையிலுள்ள கட்சிப் பூசல்கள் நிர்வாகத்தில் பிரதிபலித்து ஏற்படக்கூடிய விபரீதத்தையும் புறக்கணிப்பதற்கில்லை. ஜனப்பிரதிநிதிகள் கொள்கை வகுப்பதோடு நிறுத்திக்கொண்டு, விருப்பு வெறுப்பின்றி அமுலாக்கும் பொறுப்பை நிரந்தர அதிகாரிகளிடம் விடுவதுதான் அறிவுடைமையாகும்.

பொதுவாக பலவிதத்தில் அலுவல்களும் பொறுப்பும், பெருகிவரும் ஸ்தலஸ்தாபனங்கள், அவற்றைச் சிறப்பாக நிறைவேற்றிவைக்கப் போதிய நிதி வசதியைப் பெறவில்லை. எல்லைப் பிரவேச வரி போன்றவை இந்த வசதியைப் பெருக்கப் பயன்படக்கூடும். மக்களின் கொடுக்கும் சக்தியைக் கொண்டே அவை உருவாக்கப்படவேண்டும். சர்க்கார் மேலும் தாராளமாக மான்யமளிப்பதன் மூலமே ஸ்தலஸ்தாபனங்கள் தமது பொறுப்புகளை நிறைவேற்ற உதவிபுரிய முடியுமென்பது உண்மையே. இதைப் புரிந்துகொண்டு மத்திய சர்க்காரும் தக்க நடவடிக்கை எடுக்குமென எதிர்பார்க்கலாம்.

விலைவாசி ஏற்றம்

உணவு தானிய விலையேற்றத்தைத் தடுப்பதற்கான முயற்சிகள் பலனளித்ததாகத் தெரியவில்லை. பாங்கிகள் கொடுக்கும் கடன் வசதியைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டபோதிலும், அதற்குமாறாக விலைகள் ஏறுமுகமாயின. ஆகவே, தற்போதைய நெருக்கடிக்கு வியாபாரிகளின் பதுக்கலும் முடக்கலும் முக்கிய காரணம் என்ற புகார்கூட சந்தேகத்துக்கிடமாகிவிட்டது.

எத்தகைய முறைகளை அனுஷ்டித்து விலை குறைக்கப்பட்டாலும், அது தற்கால சாந்தியாகவே இருக்கும். உள்நாட்டில் பண்ட உற்பத்திப் பெருக்கே நிலையான பரிகாரமாகும். இதற்கேற்ப இந்த ராஜ்யத்தில் விவசாயிகளுக்கு உயர்ரக விதை, எரு சப்ளையும் கடன் வசதியும் கிடைக்க அதிகாரிகள் வழி செய்து வருகின்றனர். விவசாயம் செழிக்க, இவை அனைத்தையும் விட முக்கியமானது, தண்ணீர். தமிழ் நாட்டிலுள்ள நீர் வசதிகள் அநேகமாகப் பயன்படுத்தப்பட்டுவிட்டன. அண்டை ராஜ்ய ஆற்றுத் தண்ணீரை தமிழ் நாட்டுக்குத் திருப்பினால்தான் சாகுபடியைப் பெருமளவில் விஸ்தரிக்க இயலும்.

ஆந்திராவிலுள்ள கோதாவரி நீரை இங்கு திருப்பினால் குறைந்தபட்சமாக 35 லட்சம் ஏகாவில் வேளாண்மை துவங்கமுடியும். அதேபோல கேரளத்தில் பரம்பிகுளம், பெரியாறு நதிகளின் நீரில் பாதியளவை தமிழ்நாட்டுக்கு திருப்பலாம். இவை அனைத்தும் இப்போது கடலில் விரயமாகின்றன. இவ்விஷயமாக மத்திய அதிகாரிகளின் உதவியைப் பெற்று ஏதாவது உருவாகச் சாதிப்பதில் நமது ராஜ்ய சர்க்கார் கவனம் செலுத்துவது அவசர அவசியம்.

காற்று வாக்கிலே..

பிரசார விந்தைகள் !

ஜனநாயகத்தில் பிரசாரம் இன்றியமையாத அம்சம். அதுவும் பதவி ஆசை பிடித்தோருக்கு பிரசார பலம் மிகத் தேவை. ஆட்களை தூக்கிவிட பிரசாரம் வேண்டும். தூக்கிவிட்ட ஆட்களை கீழே இறக்கவும் பிரசாரம் வேண்டும். கட்சிகளைத் தாண்டிவிட பிரசாரம்; மக்களை எழுப்பிவிட பிரசாரம். பூதானத்துக்கு பிரசாரம் செய்கிறார் வினோபாஜி. ரத்த தானத்திற்கும் பிரசாரம் நடக்கிறது. பிரேத தானத்துக்கும் பிரசாரத்தைத் துவக்கினார் ராஜ்ய கவர்னர். அரசாங்கமும் பிரசாரத்தின் அவசியத்தை நன்குணர்ந்து வருகிறது. பத்திரிகைகளின் ஆதரவை எப்பொழுதும் நம்பிக்கொண்டிருக்க முடியுமா? சமயத்தில் காலை வாரிவிட்டால் என் செய்வது? நேரடியாக மக்களிடையே தொடர்பு கொள்ள பிரசார இயக்கத்தை அமைத்துவிட்டது மக்கள் அரசாங்கம். ஜில்லாக்களில் வேலை துரிதமாக துவக்கம். ஆள்வோருக்கும் ஆளப்படுவோருக்கும் நெருங்கிய தொடர்பு வேண்டுமெனப்பேச்சு. மக்கள் சர்க்காரின் நற்பணிகளை மக்களிடமே நேரில் விளக்கிக் கூற முஸ்தீபு. தேர்தல் நெருங்கும் நேரமல்லவா? தேதி நெருங்க நெருங்க, ஆட்சியாளர்களுக்கும் மக்களுக்குமுள்ள தொடர்பும் நெருங்கிக்கொண்டுதானே போகும்!

பிரசாரத்தில் பல வகைகள் உண்டு. புளுகுப் பிரசாரம், துவேஷப் பிரசாரம், விஷமப் பிரசாரம், சுயநலப் பிரசாரம், மற்றும் எத்தனையோ. பிரசார மேடையில் அலசி ஆராயப்பட்டுவரும் விஷயங்கள் சமீபகாலத்தில் இரண்டு. பி. ஸி. ஜி.யும், நேத்தாஜியும். நேத்தாஜி இருந்த காலத்தில் பி. ஸி. ஜி. பிரச்னை நாட்டில் எழவில்லை. எனினும் பி. ஸி. ஜி ஊசியின் காரணமாகத்தான் நேதாஜி மறைந்துவிட்டார் என்று இப்பொழுது பிரசாரம் செய்தால் அதையும் நம்புவதற்கு ஆள் இருப்பார்கள். நேதாஜி உயிருடன் இருக்கிறாரா இல்லையா என்ற பிரச்னை, கடவுள் இருக்கிறாரா இல்லையா என்ற பிரச்னை போலாகிவிட்டது. முடிவு காண முடியாத பிரச்னை! விமான விபத்தில் நேத்தாஜி மரணமடைந்ததை ஊர்ஜிதம் செய்துவிட்டது மத்ய அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு. இரு சட்ட சபைகளிலும் குழுவின் அறிக்கையை சமர்ப்பித்து விளக்கிப் பேசியிருக்கிறார் பிரதம மந்திரி. ஆனால் நம்ப விரும்பாதவர்களை நம்பவைப்பது எப்படி? நேத்தாஜியின் மூத்த சகோதரர் விசாரணைக் குழுவின் முடிவை ஆட்சேபித்துப் பேசியிருக்கிறார். நேத்தாஜி உயிருடன் இருப்பதாகவே அவர் கருதுகிறார். உறவினர் அவ்வாறு கூறுவதில் என்ன மர்மமோ? ஆனால் உறவினர் அல்லாத தமிழ் நாட்டு வீரர் ஒருவரும் நேதாஜியுடன் தொடர்பு வைத்துக் கொண்டிருப்பதாக பிரசாரம் செய்கிறார். விரைவில் அவர் இந்தியாவுக்குத் திரும்பி வருவார் என்றும் கூறி வருகிறார். அந்த நன்னாள் எந்நாளோ? இறந்தவர் பிழைப்பதும் கலி காலத்தில் ஆச்சர்யமல்லவே!

சற்று ஓய்ந்துபோயிருந்த பி. ஸி. ஜி. சர்ச்சையை மீண்டும் பிரசார மேடைக்குக் கொண்டுவந்துவிட்டார் ராஜாஜி. எந்தக் கொள்கையின் பேரில் பாரத அரசாங்கம் பி. ஸி. ஜி. இயக்கத்தை நடத்திவந்ததோ, அந்தக் கொள்கையே தவறு என்பது நிரூபணமாகிவிட்டதாக அவர் அறிவிக்கிறார். டாக்டர் பாமரின் அறிக்கை பாரத அரசாங்கத்துக்குக் கிடைக்குமுன்பு, பாரத ரத்னத்துக்குக் கிடைத்துவிட்டது! பதில் கூறவேண்டியது பாரத அரசாங்கத்தின் பொறுப்பு. ஆனால், ராஜ்ய சுகாதார மந்திரி சீறி விழுகிறார். 'ராஜாஜிக்கு என்ன தெரியும்? அவர் வைத்தியரா?' என்று ஏசுகிறார். அரசாங்கத்தின் பிரசாரத்தைக்காட்டிலும், தனிப்பட்ட ஒரு நபரின் பிரசாரத்துக்கு மக்கள் ஆதரவு அதிகமாயிருக்கிறதே என்பதைக் கண்டபின், மந்திரிக்குக் கோபம் வரத்தானே செய்யும்?

அரசியல் பிரசாரத்துக்குத் தக்க விஷயமாக அமைந்துவிட்டது நெசவாளர் பிரச்னை. இலட்சியத்துக்கும் செய்கைக்கும் முரண்பாடு. காந்தீய பக்தர்களாகக் கூறிக்கொள்வோரிடையே கருத்து வேற்றுமை. விசைத் தறியை ஆதரிப்போருக்கும், எதிர்ப்போருக்கும் சர்ச்சை. சட்ட சபை காங்கிரஸ் கட்சி விசைத்தறித் திட்டத்தை ஆதரித்தது. தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி எதிர்த்தது. மந்திரிகளுக்கு தர்மசங்கடமான நிலை. விசைத் தறிகள் கைத்தறியைப் பாதிக்காது என்று கூறிவந்த மந்திரிகள், கருத்தை மாற்றிக்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. கைத்தறிக்குக் குந்தகம் ஏற்பட்டால், விசைத்தறிகளை வாபஸ் பெறுவோம் என்று கூறுகிறார் முதலமைச்சர். மத்திய அரசாங்கம் கோடிக்கணக்கான ரூபாய் மான்யமாகக் கொடுத்தாலும், விசைத்தறியை எதிர்த்துப் போராடுவோம் என்கிறார் நிதி அமைச்சர்.

'எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு' என்பது பொய்யாமொழி. வள்ளுவர் கூறும் 'மெய்ப்பொருளு'க்கு தக்க வியாக்யானம் கூறியுள்ளார் வடநாட்டு வினோபாஜி. பாத யாத்திரையில் பல எம். எல். ஏ.க்கள் பாவேஜியுடன் சேர்ந்து கால் கடுக்க நடந்து செல்லலாம். பூமி தானத்தில் மிக அக்கறையுள்ளவர்களாகக் காட்சியளிக்கலாம். ஆனால், தமது எம். எல். ஏ. பதவியை அந்தத் தொகுதியில் நிலைப்படுத்திக் கொள்வதே சிலருடைய நோக்கம். இந்த 'மெய்ப்பொருளை' மக்கள் கண்டு கொள்ளவேண்டும் என்று விரிவுரை நிகழ்த்தியுள்ளார் வினோபாஜி. உண்மையைக் கூறிவிட்டார் காந்திஜியின் உண்மையான சீடர். போலி பக்தர்களின் வேஷம் கலைகிறது. இது விஷமப் பிரசாரமா?

பூதான பிதாவின் திருவாயால் பொதுமக்களுக்கு இந்த 'புத்திதானம்' கிடைத்திருப்பதால், இதை விஷமப் பிரசாரம் என்று கூற 'மக்கள் பிரதிநிதிகள்' தயங்கலாம். அப்படியே வினோபாஜி விஷமப் பிரசாரம் செய்வதாகப் பிரசாரம் செய்தாலும், 'என்ன அபசாரம்!' என்று வாயடைக்க அல்லவா செய்து விடுவார்கள் மக்கள்!

—வம்பன்.

ஸௌ. சுகந்தா—சிர. வேணுகோபாலன்

'மித்திரன்' உதவி ஆசிரியர்கள் ஸ்ரீ கே. வி. ஸ்ரீநிவாஸன். ஸ்ரீ கே. வி. பாஷ்யம் ஆகியோரின் சகோதரி ஸௌ. சுகந்தாவுக்கும், எச்சூர் ஸ்ரீ சக்கரவர்த்தி ரங்காச்சாரியார் குமாரரும். வண்டலூர் ஸ்டாண்டர்ட் மோட்டார்ஸைச் சேர்ந்தவருமான சிர. வேணுகோபாலனுக்கும் இம்மாதம் 13-ந் தேதி ஸ்ரீபெரும்பூதூரில் வெகு விமரிசையாக விவாஹம் நடந்தேறியது.

பிரமுகர் வரிசை ★ மோ ஸே துங் ★

அக்ராசனர் மோ ஸே துங் தலைமையில் சென்ற வாரம் கூடியது. நவ சீனு கம்யூனிஸ்ட் கட்சியின் 8வது மகாசபை பதினேரு ஆண்டு இடைவெளிக்குப் பின்னர். இந்தக் காலத்திற்குள் தான் எத்தனை பிரமாத மாறுதல்! தலைமறைவாயிருந்த கம்யூனிஸ்டுகள், 68 கோடி மக்களை இன்று ஆட்சி புரிகின்றனர்.

'புரட்சியென்பது, விருந்துக்கு அழைப்பு அல்ல' என்று கூறும் மோ ஸே துங் தலைமையில் இடையருத உழைப்பே இந்நிலைக்கு வழி கோலியது. சாமர்த்தியமும், தந்திரமும், வைர நெஞ்சமும் படைத்த இவர், தோற்றத்திலும், நடையுடை பாவனையிலும் அசல் விவசாயி தான். இவரது தாண்டுகால் நடையும், உரத்த குரலும் தனி பாணியாகும். நான்கு முறை மணந்தார். மனைவியில் ஒருத்தி சியாங் கும்பலுக்கு பலியானுள்.

சர்க்காரின் தொல்லை தாளாமல் சீனுவின் ஒரு மூலையிலிருந்து மற்றென்றுக்கு—368 நாட்களில் 30 ஆயிரம் கம்யூனிஸ்டுகள் 6 ஆயிரம் மைல் நடந்து சென்ற சாதனை இவரது தலைமையில் நிகழ்ந்தது. அப்போது தமது குழந்தைகளில் ஐந்தை நடு வழியில் இவர் தானம் செய்ய நேர்ந்தது.

நகர தொழிற்சாலைப் பாட்டாளிகள் மூலமே புரட்சி சாத்தியம் என்ற ரஷ்ய சித்தாந்தத்தை தகர்த்து, விவசாயிகளை கொண்டே புரட்சியை சாதித்தார் மோ ஸே துங். 63 வயதாகும் இவரது வழிகாட்டுதல், ஆசியாவுக்கு ஏற்ற பொதுவுடமை மார்க்கமென சிலாகிக்கப்படுகிறது.

★

சாய்வு நாற்காலியில் சும்மா சோம்பிக் கிடந்த கைலாசம் பிள்ளையின் பார்வை தோட்டத்துச் செடிகளின் மீது படிந்திருந்தது. குறிப்பாக எதையும் நோக்காமல் அர்த்தமற்ற பார்வையோடு நின்ற கண்களில் திடீரென்று ஒரு மிரட்சி தோன்றியது. அவர் உள்ளத்தில் ஏற்பட்ட சிலிர்ப்பின் காரணமாக உடலில் நடுக்கம் பிறந்தது.

நிமிர்ந்து உட்கார்ந்த பிள்ளை தன் கண்களைத் துடைத்துக் கொண்டு நன்ருக உற்றுக் கவனித்தார். சந்தேகம் இல்லை; அங்கே ஒரு செடியின் அருகில் நின்றது பூனைதான். கறுப்பு நிறப் பூனை.

அந்தப் பூனையும் தம்மையே நோக்குவதாக உணர்ந்தார் பிள்ளை. சோகை பிடித்த மஞ்சள் நிற வட்டத்தின் நடுவில் கறுப்பாக ஒரு கோடு கீறியது போன்ற விழி—அதுதான் அந்தப் பூனையின் கண். இருள் பரவாத அந்த அந்தி வேளையில் அதன் கண்கள் சலனமற்ற—ஒளி அற்ற—வெறும் அவயவங்களாக நிலைத்து நிற்பதுபோல் தான் அவருக்குத் தோன்றியது.

அவர் உள்ளத்தில் இனம் புரிந்து கொள்ள முடியாத ஒரு உதைப்பு. அந்த உணர்ச்சி உந்திய நடுக்கம் தேகத்திலே. அவர் கண்களை மூடிமூடித் திறந்தார். கை விரல்களினுல் கசக்கி விட்டுக் கூர்ந்து நோக்கினுர். அந்தப் பூனை அதே இடத்தில் அதே நிலையில், அவரை அலட்சியமாகவும்—பழிக்கின்ற பாவனையிலும்—குற்றம் சாட்டுகிற தன்மையிலும் பார்வை எறிந்து நிற்பதாகக் கண்டார். கூச்சலிட வேண்டும் என்று கூடத் தோன்றவில்லை அவருக்கு.

பிறகு அவர் கண்களை மூடித் திறந்து பார்த்தபொழுது அங்கே பூனை இல்லை! புரண்டு பாய்ந்த அவருடைய விழிகளின் வீச்சிலும் அதன் உருவமோ நிழலோ தென்படவில்லை.

'என்ன மாமா, அங்கே என்ன இருக்குது? எதை அப்படி ஒரே பார்வையாகப் பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள்?' என்ற கேள்வி அவரைத் திடுக்கிட வைத்தது. அப்படிக் கேட்டவன் அவருடைய மருமகன்—அக்காள் மகன்—சிவசைலம் தான் என்பது குரலிலிருந்தே புரிந்து விட்டது. என்ருலும் தனக்குப் பின்னல் திடீரென்று பேச்சொலி பிறக்கவும் அவருக்கு சிறு அதிர்ச்சி ஏற்பட்டு விட்டது. திரும்பிப் பார்த்தார் பிள்ளை. 'எதையோ கண்டு பயந்து போனுர்!' என்ற களை அந்த முகத்திலே உறைந்து கிடந்தது.

'அங்கே ஏதாவது பாம்பு கீம்பு வந்ததோ என்று பயந்துவிட்டேன். நீங்

கள் ஒரே குறிப்பாக...' என்று இழுத் தான் சிவசைலம்.

'இஹிஹி... ஒண்ணுமில்லே' என்று வார்த்தைகளை மென்று விழுங்கினர் பிள்ளை. பிறகு கொஞ்ச நேரம் தயக்கத் திலும் யோசனையிலும் தத்தளித்து ஒருவாறு சமாளித்துக்கொண்டு பேசி ஞர்; 'ஆமா, சைலு! அந்தப் பூனையை என்ன பண்ணிஞங்க நம்ம ஆளுங்க? குழி தோண்டி அதைப் புதைக்கும்படி சொன்னேனே'

'பூனையா? புதுசாகவா? கறுப்புப் பூனையா? ஹெஹ.. இந்த வட்டாரத்திலேயே வேறே கறுப்புப் பூனை கிடையாது மாமா. மஞ்சள் படிந்த கண்கள். உடல் பூராவும் கறுப்பு மயிர். வாயைச் சுற்றிலும், அடி வயிற்றிலும், வால் நுனியிலும் திட்டு திட்டாக வெள்ளை நிறம் – அதுமாதிரி ஒரு கடுவன் பூனை நம்ம

ஜீவ விளையாட்டு

வல்லிக்கண்ணன்

'எந்தப் பூனை?' என்று ஒன்றும் தெரியாத சாது மாதிரிக் கேட்டான் சிவசைலம்.

'இங்க அலேஞ்சு திரிஞ்சு தொல்லை கொடுத்துக் கொண்டிருந்ததே கறுப்புப் பூனை...'

'வெள்ளிக்கிழமை சாயங்காலம் நீங்கள் தடியை வீசிக் கொன்றீர்களே, அது தானே?' என்று விசாரித்தான் அவன். அப்பொழுது அவர் முகத்தில் படர்ந்த வேதனையை உள்ளத்தால் ரசித்தவனுய் அவன் சொன்னன்; 'அதுதான் செத்துப் போச்சுதே. நீங்க சொன்னபடியே மாடசாமி குழி தோண்டி அதைப் புதைத்து நன்ருக மண்போட்டு மூடி விட்டானே!' என்று. பிறகு 'ஏன் மாமா இப்ப அந்தப் பூனையைப் பற்றி விசாரிக்கிறீர்கள்? போன வெள்ளிக்கிழமை தான் அது செத்துப்போச்சு என்ற ஞாபகம் உங்களுக்கு வந்ததோ?' என்று கேட்டான்.

'இல்லை' என்று முனங்கினர் பெரியவர். 'தோட்டத்திலே புதுசாகக் கறுப்புப் பூனை ஏதவாது வந்திருக்கும் போலிருக்கு' என்ருர்.

வீட்டுப் பக்கத்திலேதான் சுற்றிச் சுற்றி அலைந்தது. வேறே கறுப்புப் பூனையே கிடையாது.

கைலாசம் பிள்ளை ஒன்றுமே பேசவில்லை. மறுபடியும் சிவசைலமே ஆரம்பித்தான்: 'அப்படியே பூனை ஏதாவது வந்திருந்தால் அது எனக்குத் தெரியாமலா போகும்? இந்த வட்டாரத்தில் வசிக்கிற பூனைகள், நாய்கள், குழந்தைகள் எல்லாம் எங்கெங்கே உள்ளவை, எப்படி எப்படி அலைகின்றன என்பது எனக்கு நன்ருகத் தெரியும்...'

'இந்த ஊரில் உள்ள இளம்பெண்களில் யார் எந்த வீட்டைச் சேர்ந்தவள், எவள் எந்தத் தெருவில் வசிக்கிறவள் என்பது கூடத்தான் உனக்குத் தெரியும். இது மாதிரி விஷயங்களில் நீ பெரிய துப்பறியும் புலி இல்லையா!' என்ருர் பிள்ளை. வழக்கம் போல் கெண்டை பண்ணித் தன்னைச் சுதாரித்துக் கொள்ள அவர் செய்த முயற்சி அது. ஆனல் அவர் குரலில் சாரத்து இல்லை.

மாமாவின் இந்த ரகமான நோடிப்பும் நையாண்டியும் மருமகனுக்கு என்றுமே பிடிக்காது. அவனுக்கு அவர் மீது வெறுப்பு ஏற்படுவதற்கு இதுவும் ஒரு காரணம் தான்.

'என்ன இருந்தாலும் ஒருபூனையைக் கொல்லலாமா? பூனையைக் கொல்வது மகா பெரிய பாபம் என்று சொல்கிருர்களே மாமா?' என்ருன் சிவசைலம். அவரது உள்ளத்தில் வேதனை எழுப்ப வேண்டும் என்ற நோக்கத்துடனேயே தான் அவன் பேசினன். 'பூனையைக் கொன்ற பாபம் தீரவேண்டுமானல், தங்கத்திலே ஒரு பூனை செய்து தானம் கொடுக்க வேண்டுமாமே? இந்தக் காலத்

திலே தங்கத்துக்கு எங்கே போகிறது? தங்கத்தினால் பூனை செய்து தானம் கொடுக்க முடியாதவர்கள் வெல்லத்தினால் பூனை செய்து கொடுக்கலாம் என்று ஒருவர் சொன்னார், மாமா. பூனை உடம்பிலிருந்து ஒரு ரோமம் உதிரும்படி அடித்தாலே பெரிய பாபமாம். அப்படி இருக்கையிலே, பூனையே செத்துப் போகும்படி அடிப்பது என்றால், சேச்சே பயங்கரம்! மகா பயங்கரம்!'

அவனுடைய பேச்சு அவருக்கு வேதனை அளித்தது. தனது தவறைச் சுட்டிக் காட்டியதனால் எழுந்த கோபமும், தான் செய்த வினைக்குப் பரிகாரம் இல்லை என்று உணர்ந்த உள்ளத்தின் குமைதல் தூண்டிய செயல் திறமற்ற ஆத்திரமும் அவருக்குக் கொதி நிலை உண்டாக்கின. 'சீ, போடா! இங்கிருந்து போடாங்கிறேன்' என்று ஆங்காரத்தோடு கத்தினார் பிள்ளை. சாய்வு நாற்காலியில் துவண்டு விழுந்தார். அவர் உடலின் படபடப்பு தீருவதற்கு அதிக நேரம் தேவைப்பட்டது.

சிவசைலம் அவர் பக்கம் குறும்புத்தனமான பார்வையும் விஷமத்தனச் சிரிப்பும் எறிந்துவிட்டு, அவர் பார்வையிலிருந்து நகர்ந்து மறைந்தான்.

சிறிது சிறிதாக இருள் பரவி வந்தது. வேலைக்காரன் மாடசாமி வழக்கம்போல் 'அரிக்கன் லாந்தர்' சிமினியை மிகச் சுத்தமாகத் துடைத்து, திரியைச் செப்பனிட்டு, சுடர் ஏற்றிக்கொண்டு வந்தான். திண்ணையில் அதற்கு உரிய இடத்தில் விளக்கைத் தொங்கவிட்டான்.

அவன் செயல்களைக் கவனித்தபடியிருந்த பிள்ளை 'மாடசாமி!' என்று குரல் கொடுத்தார்.

'எசமான்!' என உச்சரித்து, கைகளைத் தேய்த்தபடி, கைலாசம் பிள்ளையின் முன்னால் நின்றான் அவன்.

'இங்கே ஒரு கறுப்புப் பூனை இருந்ததே...'

'அதுதான் செத்துப் போச்சுதே, எசமான்' என்று சொன்னான் அவன்.

'உம்' என்று முனங்கினார் பெரியவர்.

'எசமான் உத்தரவு இட்டபடி, சின்ன ஐயாவும் நானுமாச் சேர்ந்து அதைக் குழியில் புதைத்துப் போட்டோமே. அதோ அங்கே, அந்தச் செடிகளுக்கு மத்தியிலே...' என்று கூறி, மாடசாமி கை நீட்டி ஒரு இடத்தைச் சுட்டிக் காட்டினான்.

அவன் கை நீண்ட வழியே சென்றன அவருடைய கண்கள். முன்பு பூனை நின்றதைக் கண்டதாக உணர்ந்த இடம்தான் அது. பிள்ளையின் தேகம் தானாகவே நடுங்கிக் கொடுத்தது.

'சரி சரி. உன் வேலையைக் கவனி போ' என்று சிடுசிடுத்தார் பிள்ளை.

'எசமான் அநாவசியமாகக் கோபிக்கிறாரு' என்று எண்ணினான் மாடசாமி. 'அவர் குணமே அப்படித்தான். முன்கோபம் ஜாஸ்தி' என்று தனக்குத்தானே சமாதானமும் கூறிக்கொண்டு அங்கிருந்து நகர்ந்தான்.

'பூனை செத்துப்போச்சு. சரி. நான் வேணுமென்றா அதை அடித்துக் கொன்றேன்?' என்று தீனக்குரல் எழுப்பியது அவர் உள்ளம்.

பூனையை அவர் 'வேண்டுமென்றே' கொல்லவில்லைதான். கைலாசம் பிள்ளை நன்றாகத் தூங்கிக்கொண்டிருந்தார். அயர்ந்து உறங்குகிறவர்களைத் திடுமென எழுப்பினால் — தூக்கம் கெடும்படி தொல்லை கொடுத்தால் — கோபம் வருவது இயல்புதானே? சுபாவத்திலேயே முன்கோபக்காரர் அவர். தூங்குகிற பொழுது அவரை யார் எழுப்பினாலும் சரிதான், நரசிங்கம் ஆகத்தான் கண் விழிப்பார் அவர். அருகிலிருந்து எழுப்புவது யார் என்ற பிரக்ஞை பெறுவதற்கு முன்னதாகவே ஓங்கி அறைந்துவிடுவார். வீசிய கை எங்கே பட்டது—கண்ணிலா, மூக்கிலா, கன்னத்திலா — என்றெல்லாம் கவலை ஏற்படாது அவருக்கு. படிப்படியாகத் தூக்கம் கலைந்து, வெறி தணிந்து, விழிப்பு ஏற்பட்ட பிறகுதான் அடிபட்டது யார் என்ற கவனிப்பும், அடிக்க நேர்ந்துவிட்டதே என்ற வருத்தமும் அவருக்கு உண்டாகும். சில சமயங்களில் கையில் அகப்பட்ட பொருள்களை எடுத்து வீசி, சம்பந்தப்பட்டவர்களைக் காயப்படுத்துவதும் உண்டு. அதன் பிறகு மணிக்கணக்காகவும், நாள் கணக்கிலும் அவர் மனம் நொந்து வருத்தப்படுவதும் உண்டு. அவர் குணத்தை அறிந்தவர்கள் அவரை விட்டு விலகிப் போய் ஜாக்கிரதையாக நடந்துகொள்ளக் கற்றுக்கொண்டார்கள். பிள்ளை அவர்களுக்கு ஐம்பது வயசுக்கு அதிகமாகிவிட்ட போதிலும் கோபம் குறைந்துவிடவில்லை.

கைலாசம் பிள்ளைக்கு மனைவி மக்கள் என்று யாரும் இல்லை. அவருடைய அக்காள் பாக்கியத்தம்மாள்தான் தம்பி வீட்டு நிர்வாகங்களைக் கவனித்து வந்தாள். அவளுடைய புத்திரபாக்கியமான சிவசைலத்துக்கு வயசு அதிகரித்துக் கொண்டிருந்ததே தவிர அறிவு அபிவிருத்தியாகவில்லை; பொறுப்பு உணர்ச்சி ஏற்படவுமில்லை. அம்மாவின் அபரிமிதமான அன்பு அவனை உருப்படாதவனாக — உருப்பட விரும்பாதவனாக — வளர்த்துவிட்டது. 'மாமாவுக்குப் பிறகு அவருடைய சொத்தெல்லாம் நமக்குத்தானே!' என்கிற தைரியம், சுயமாக உழைத்துச் சம்பாதித்து நல்லபடியாக வாழவேண்டும் என்னும் உணர்ச்சி பிறப்பதற்கு அவசியம் இல்லாமல் செய்துவிட்டது. ஆகவே, வேளா வேளைக்கு 'மூக்கு முட்டச்' சாப்பிட்டுவிட்டு, கோயில் காளை மாதிரி சுற்றிக்கொண்டிருந்தான் அவன்.

'பெரிய பிள்ளை' உபதேசித்துப் பார்த்தார். கண்டித்தார். கோபித்தார். ஒன்றும் பலிக்காமல் போகவே 'எக்கேடும் கெடட்டும்!' என்று 'தண்ணீர் தெளித்து' விட்டுவிட்டார். எனினும், உறவும் உரிமையும் இருந்தது அல்லவா? ஆதலால், சும்மா இருக்க முடியவில்லை அவரால். போதனைகளும் கிண்டல்களும் உதிர்த்து வந்தார்.

இதனாலெல்லாம் சிவசைலத்துக்குப் பிள்ளை மீது வருத்தம் உண்டு. மேலும், செலவுக்கு சில்லறைக் காசு தேவைப்படுகிற போதெல்லாம் 'பெரியவாள்' கையை அவன் எதிர் பார்த்தாக வேண்டிய நிர்ப்பந்தம் இருந்தது. இந்த நிலைமை 'சுதந்திர உணர்வு உள்ள' அவனுடைய 'தன்மானத்தை' வெகுவாக பாதிப்பதாக அவன் நம்பினான். 'கிழவன் செத்த பிறகு சொத்து பூராவும் நமக்குத்தானே வரப் போகுது? அப்படி இருக்கையிலே அவர் ஏன் வீண் பிசினாறித்தனம் பண்ணணும்? காலணாக் காசுக்குக்கூட கணக்குச் சொல்லிவிட்டு அவர்கிட்டேயிருந்து பெறவேணும் என்றால், அது நமக்கு எப்படி ஐயா சரிப்படும்? இரண்டு மூன்று நாட்களுக்கு ஒரு தடவை, இந்தா 'பாக்கெட் மணி' என்று, பணம் கொடுத்துவிட்டால் எவ்வளவு கௌரவமாகவும், பெருந்தன்மையாகவும் இருக்கும்!' என்று அவன் குறைபட்டுக்கொள்வது வழக்கம். பெரியவருக்கு எப்பொழுதாவது — எப்படியாவது — பாடம் கற்பிக்க வேண்டும் என்று அவன் உள்ளம் கறுவிக்கொண்டிருந்தது . . .

பாக்கியத்தம்மாள் ஊரில் இல்லாத போதுதான் இந்த நிகழ்ச்சி நடந்தது. அந்த அம்மாள் புண்ணியம் தேடுவதற்காகவும், சொந்தக்காரர்கள் வீட்டு விசேஷத்துக்கு என்றும், 'சும்மனாச்சியும் கூட', அடிக்கடி 'டூர் போய் விடுவது' வழக்கம். அத்தகைய சந்தர்ப்பங்களில் அடுப்பங்கரை அலுவல்களைக் கவனிப்பதற்கு மூக்கையா என்ற சமையல்காரன் இருந்தான். 'மூக்கையா பிள்ளை' என்றுதான் அவன் கூறிக்கொள்வான். ஆள் 'பலே எம்டன்!' நளபாக வரிசைகளில் மாத்திரம் அல்ல; வாய்ச் சவடால் அடிப்பதிலும்தான். 'தாசில் பிள்ளை வீட்டிலே அப்படிச் செய்தேனாக்கும்! கலெக்டர் முதலியார் வீட்டிலே இப்படிச் செய்தேனாக்கும்! சிரஸ்தார் வீட்டிலே வேலை பார்த்தேனே; அப்ப நான் என்ன செய்தேன் தெரியுமா?' என்ற ரீதியில் அளந்து கொட்டுவான். அவனுடைய அளப்புகளும் பண்பாடும் சிவசைலத்துக்கு மிகவும் பிடித்திருந்தன. ஆகவே

அட்டைப்படம்

அவளை எங்கோ பார்த்திருக்கிறோமே' என்ற வியப்புக்குறி முகத்தில் தொனிக்க விழிவாங்காமல் நோக்குகிறான் அவன். 'இவர் முகம் இவ்வளவு பரிச்சயமாக இருக்கிறதே, ஏன்?' என்று ஆச்சரியப்படுகிறாள் அவள்.

சீக்கிரமே ஞானோதயம் ஏற்படுகிறது. தினம் காலையில் இருவரும் 9–10 மணி பஸ்ஸில் ஏறித்தான் அலுவலகத்துக்குச் செல்கின்றனர். இருவரும் ஒரே இடத்தில்தான் இறங்குகின்றனர். ஆனால், அவன் யாரோ, அவன் ஆபீஸ் எதுவோ, அவள் அறியாள். அவள் யாரோ அவன் அறியான். ஒரு நாள்கூட பேசியதுமில்லை.

இருந்தாலும், புதிய சூழ்நிலையில் பரஸ்பரம் நோக்கும்போது பரிச்சய இழை ஊடுருவிப்பாயத்தான் செய்கிறது! இந்தக் காட்சியையே அழகுறச் சித்திரிக்கிறது அட்டைப் படம்.

இரண்டு பேரும் தோழர்கள் ஆகிவிட்டார்கள்.

இவர்களைத் தவிர, வேலைக்காரன் மாடசாமி தான் அவ்வீட்டில் அதிகமாகப் பழகுகிறவன். அவனுக்கு 'பெரிய பிள்ளை'யிடம் பக்தி கொஞ்சம்; பயம் அதிகம். அவருடைய கரூரும் கஞ்சத்தனமும் பிடிக்காததனால் தோன்றிய வெறுப்பும் உண்டு. சிவசைலம் 'வருங்கால எசமான்' என்கிற முறையிலும், சிரித்தும் தாராளமாகப் பேசியும் அவ்வப்போது சில்லறைக் காசு கொடுக்கும் வள்ளல் தனத்தினாலும் மாடசாமியின் மதிப்பையும் பிரியத்தையும் பெற்றிருந்தான். எனவே, 'சின்ன ஐயா'வின் இஷ்டத்துக்கு ஓரளவு இணங்கிப் போகும் சுபாவம் அவனிடம் படிந்து வட்டது...

இந்தச் சம்பவம் ஒரு வெள்ளிக்கிழமை தான் நிகழ்ந்தது. அந்தி நேரம். கைலாசம் பிள்ளை மாலை மூன்று—மூன்றரை மணி சுமாருக்குப் படுத்து உறங்கத் தொடங்கியவர் எழுந்திருக்கவில்லை. 'வெள்ளிக்கிழமையும் அதுவுமா, விளக்கு வைக்கிற நேரத்திலே, இப்படியா தூங்குவது? நல்ல தூக்கம் வந்தது அம்மா, தன்னை மறந்த தூக்கம்!' என்று புலம்புவதற்கோ அக்காள் இல்லை. அதனால், எழுந்திருக்க வேணும் எனும் உள்ளுணர்வு வேலை செய்யவே இல்லை. விளக்கு ஏற்றி இரவில் ஏழு—எட்டு மணி ஆகும் வரைகூட அவர் தூங்கியிருக்கக்கூடும். ஆனால் அப்படி நடைபெறவில்லை.

கறுப்புப் பூனை ஒன்று வேறொரு வெள்ளைப் பூனையைத் துரத்தி விளையாடிக் கொண்டிருந்தது. கறுப்பு ஆண். மற்றது பெண். அநேக தடவைகள் இரண்டும் நடு இரவில் 'பேய்க் கூப்பாடு போட்டு' விளையாடுவதன்மூலம் ஊரையே எழுப்பியிருக்கின்றன. அது போன்ற சந்தர்ப்பங்களில் கைலாசம் பிள்ளைக்கு எழுந்த ஆங்காரத்தை அளவிடவே முடியாது.

'பிசாசுப் பயல் பூனை. என்றைக்காவது அதை அடிச்சுக் கொல்லத்தான் போகிறேன். பூனையாகவா வருது அது? சனியன். மனுசனைத் தூங்கவிடாமல் இப்படிக் கத்திக்கொண்டு..' என்று முணமுணப்பார். அந்தப் பூனையும் அவர் கைக்குள் சிக்காமல் ஓடி விளையாடித் தப்பித்து தொல்லை கொடுத்துக்கொண்டுதானிருந்தது.

வெள்ளிக்கிழமை சாயங்காலம், கைலாசம் பிள்ளை தூங்குகிறார் என்று கொஞ்சமேனும் அச்சமோ கூச்சமோ இல்லாமல் இரண்டு பூனைகளும் கத்திக் கொண்டு, ஒன்றை ஒன்று துரத்தி அமர்க்களப்படுத்தி மகிழ்ந்தன. வெள்ளைப் பூனை பிள்ளையின் தலை ஓரமாக நடந்து சென்றது. அதைத் துரத்தி வந்த கறுப்புப் பூனை, காதை அறுக்கும் கூச்சல் ஒன்று எழுப்பியவாறு ஓடி வந்தது. பிள்ளையைத் தாண்டிக் குதித்தது. அவர் திடுக்கிட்டு விழித்து அலறி அடித்து எழுந்து உட்கார்ந்தார். அவருடைய தேகம் நடுங்கிக் கொண்டிருந்தது. தூக்கத்தினாலும் கோபத்தாலும் கலங்கிப் போன கண்கள் ஜிவுஜிவென்று தணல் மாதிரி ஜொலித்தன. அது போன்ற சமயத்தில் அவர் முகத்தை எந்தக் குழந்தையாவது பார்க்க நேரிட்டால் அது பயந்து அலறாமல் இருக்க முடியாது. கோபமும் கொதிப்பும் பிடித்து ஆட்டுகிறபோது பிள்ளையின் முகம் பயங்கரமாக மாறிவிடும்; விகாரமாகவும் தோன்றும்.

சுழன்று புரண்ட அவரது சிவந்த விழிகள் பூனையைப் பார்த்த வேகத்திலேயே, கட்டிலின் பக்கத்தில், சுவர்களின் மூலையில் சாய்த்து வைக்கப்பட்டிருந்த தடியையும் பார்த்தன. அவர் கை அதை வேகமாகப்பற்றி எடுத்துச் சுழற்றி வீசி எறிந்தது, பூனையை நோக்கி. அப்பொழுது சாவகாசமாகப் பம்மி நின்று இன்னொரு பூனை போன சுவட்டைத் தேடிக்கொண்டிருந்தது கறுப்புப் பூனை. அதன் மீது தடி விழுந்தது.

'ஹோய், தொலைஞ்சே நீ!' என்று உறுமினார் பிள்ளை.

அந்த உறுமல், உள்ளே இருந்த சிவசைலத்தை இழுத்து வந்தது. தடி விழுந்த வேகத்தையும், பூனை தீனமாகக் குரலை இழைய விட்டபடி செடிகளின் மறைவில் நழுவுவதையும் அவன் பார்வை கிரகித்தது.

கைலாசம் பிள்ளை, பிடித்து வைத்த பிள்ளையார் மாதிரி, கொஞ்ச நேரம் அதே இடத்தில் உட்கார்ந்திருந்தார். பிறகு எழுந்து, வீட்டின் பின் பக்கமிருந்த கிணற்றடிக்குச் சென்றார்.

'ஏதோ கோட்டையைப் பிடிக்கத் திட்டமிடுவது போல், பிரமாத யோசனையில் மூழ்கியிருந்த சிவசைலம் பூனையைத் தேடிப் போனான்.

பிள்ளை சாந்தம் அடைந்த பிறகுதான் அவன் அவரிடம் பேச்சு கொடுக்க முன் வந்தான். அவரைப் புகழ்வதுபோல் ஆரம்பித்தான். 'ஒரு அறையின்னாலும் சரியான அறை மாமா அது. தடி விழுந்த வேகத்திலே பூனை உசிரும் ஓடியிருக்குது என்றால் சும்மாதானா! ஹொஹொ, வயிற்றிலே மட்டும் பட்டிருந்தாலாவது பூனை பிழைச்சிருக்கும். இந்த அடி பாருங்க, அதன் மூக்கு மேலே, கண்ணுலே, மண்டையிலே எல்லாம் பட்டிருக்குது. அந்த அடி ஒரு ஆள் மூஞ்சியிலே பட்டிருந்தால் அந்த ஆளே அவுட் ஆகியிருப்பான்னு சொன்னால், பூனை எந்த மூலைக்கு? அதுக்கு இடி விழுந்த மாதிரி ஆகியிருக்கும். கதிகலங்கிப் போயி, லேசாக நகர்ந்திருக்கு. சுருண்டு விழுந்து செத்துப் போச்சு, பாவம்!' என்றான். அவசரம் எதுவுமில்லாமல், மிகவும் நிதானமாக, ஒவ்வொரு வார்த்தையையும் சுவைத்து ரசித்து எடுத்துத் தருகிறவன் மாதிரிப் பேசினான் அவன்.

பெரிய பிள்ளைக்கு விஷயம் விளங்காமல் இல்லை. இருந்தாலும், 'என்னடா உளருகிறே?' என்று சொல்லி வைத்தார். மனக்குறு குறுப்பை அப்படியாவது அமுக்கிவிடமுடியாதா என்ற ஏக்கத்தில் பிறந்த எரிச்சல் அது.

'பூனை செத்துப் போச்சு, மாமா. அந்தக் கறுப்புப் பூனை...'

'போடா போடா! பூனையாவது சாகிறதாவது! ஒரு பூனைக்கு ஒன்பது உசிரு என்பாக. எமனுக்கே கடுக்கா கொடுத்துவிடுகிற பிராணி பூனை. தெரியுமா?' என்றார் பிள்ளை.

'இருக்கலாம், மாமா. கொள்ளிக் கட்டையினாலும் விறகுக் கட்டையினாலேயும் அடிபட்டுச் செத்துப்போன பூனைகளை நான் பார்த்திருக்கிறேன். அது ஏன்! இப்ப இந்தப் பூனை செத்துக் கிடக்குதே, அதுக்கு என்ன சொல்றீங்க? வேணுமின்னா அதை எடுத்துக் கொண்டு வந்து காட்டுகிறேன். இதோ போயி வாலைப் பிடிச்சுத் தூக்கி வாறேன்' என்று கிளம்பினான் சிவசைலம்.

'ஏய் ஏய், அது ஒண்ணும் வேண்டாம்' என்று கத்தினார் பிள்ளை. 'நெசமாவே

செத்துப் போச்சா அது?' என்று துக்கம் விசாரித்தார்.

'ஆமா. அதோ அங்கே செடிகளின் நடுவிலே விழுந்து கிடக்குது..'

பெரிய பிள்ளை தனது மனச்சுமையை உஷ்ணக் காற்றாக வெளியேற்றிவிட முயல்வது போல் நீண்ட பெருமூச்சு எறிந்தார். 'உம். ஆளைக் கூப்பிட்டு குழிதோண்டச் சொல்லு. அதை மண்ணிலே போட்டு மூடச் சொல்லு போ' என்று உத்தரவிட்டார்.

'சரிதான், மாமா' என்று சொல்லிப் போய் விட்டான் அருமை மருமகன்.

விஷயம் அத்துடன் முடிவடைந்து போகும் என்று தான் கைலாசம் பிள்ளை எண்ணினார். ஆனால் அவர் மனம் வேறு விதமாக எண்ணிவிட்டது! சதா 'பூனை ஜெபம்' பண்ணிக்கொண்டிருந்தது அது. 'ஐயோ, பூனை செத்துப் போச்சுதே... அநியாயமாக அதைச் சாகடிச்சுப் போட்டேனே... பூனையைக் கொன்றது பெரிய பாபம் அல்லவா?' என்ற தன்மையில் மனம் புலம்பிக் கொண்டிருந்தது. அதற்குத் தூபம் போட்டு மந்திர உச்சாடனம் செய்கிற தோரணையில் சிவசைலமும் அடிக்கடி பூனையின் மரணம் பற்றியும், அதற்கு ஏதுவாக அமைந்த பிள்ளை அவர்களின் கை வல்லமை பற்றியும் பிரஸ்தாபித்து வந்தான். மனஅமைதி இழந்து தவித்த பெரியவருக்கு மேலும் வேதனை அளிக்க விரும்பியதுபோல் வந்து போயிற்று பூனையின் உருவம்.

'அந்தி வேளையில் காட்சி அளித்தது வெறும் மயக்குத் தோற்றம்—சதா பூனையின் நினைவாகவே இருக்கும் மனம் சுட்டிக்காட்டிய வெறும் மாயை' என்று தான் கைலாசம் பிள்ளை முதலில் எண்ணினார். அது சரியான கணிப்பு அல்ல என்பது தெளிவாகி விட்டது.

அன்று இரவு ஏழரை மணைக்கு, அடுப்பங்கரையில் பிள்ளை சாப்பிட்டுக் கொண்டிருந்தார். அவருடைய பார்வை தற்செயலாக, அங்கிருந்த ஜன்னல் மீது பாய்ந்தது. உடனே அவர் உள்ளத்தில் கலக்கம் குதித்தது. ஜன்னலில் ஒரு பூனை—கறுப்பு நிறப் பூனை. அங்கங்கே வெள்ளைத் திட்டுகள் படிந்த உடல். மயிரடர்ந்த வால். அதே பூனைதான்—கவலையற்ற தன்மையில் வீற்றிருப்பதை அவர் கண்டார். 'அந்தப் பூனையும் அவரைப் பார்த்தது. அதனுடைய கண்கள்! சாதாரணப் பூனைக் கண்களா அவை? ஒளி கனலும் கங்குகள் போல் அல்லவா மினுமினுத்தன! அவை எறிந்த பார்வை பிள்ளையைச் சுடுவது போலிருந்தது.

கையில் எடுத்த சாதத்தை அப்படியே வைத்துக்கொண்டு பெரிய பிள்ளை ஜன்னலின் பக்கமே திருதிருவென்று முழித்துக்கொண்டு உட்கார்ந்திருப்பதைக் கவனித்த மூக்கையா, 'அங்கே என்னத்தை முதலாளி அப்படிப் பார்க்கிறீங்க?' என்று கேட்டான்.

அவர் திடுக்கிட்டுத் திரும்பி அவன் முகத்தைப் பார்த்தார். 'அந்த ஜன்னலில்..' என்று மெதுவாக ஆரம்பித்தார்.

ஜன்னலைப் பார்த்துக் கொண்டே, 'அங்கே ஒன்றும் இல்லையே, முதலாளி; ஒன்றையும் காணலியே' என்றான்.

பிள்ளையின் பார்வை மீண்டும் அந்தப் பக்கம் திரும்பியபோது ஜன்னல் வெறும் ஜன்னலாகத்தான் காட்சி தந்தது. அவரை அறியாமலே அவர் தேகம் நடுங்கிக்கொண்டது. 'அங்கே பூனை இருந்தது மாதிரித் தெரிஞ்சுது' என்றார் அவர்.

'பூனையா? இல்லையே; என் கண்ணிலே படலியே முதலாளி. அங்கே பூனை உட்கார்ந்திருந்தால் அது என் பார்வையிலே படாமலா போயிருக்கும்? ஆங், ரொம்ப ஆச்சரியமாக இருக்குதே!' என்றான் மூக்கையா.

கைலாசம் பிள்ளை ஒன்றும் பேசவில்லை. அந்த ஜன்னலையே வெறித்து நோக்கியவாறு இருந்தார். அவருக்குச் சாப்பாடு இறங்கவில்லை.

'சொன்னவங்க சரியாகத்தான் சொல்லியிருக்கிறாங்க, முதலாளி. கண்களே மனிதனுக்குப் பரம விரோதி என்றாங்க பாருங்க, அது நூற்றிலே ஒரு . . இல்லே, ஆயிரத்திலே . . இல்லே, பத்தாயிரத்திலே...இல்லே, லட்சத்திலே ஒரு வார்த்தை. மகாப் பெரிய உண்மை' என்று அடுக்கினான் மூக்கையா.

'வாயை மூடுடா முட்டாள்' என்று சீறினார் பெரியவர். தன் முன்னாலிருந்த சோற்றுத்தட்டை ஆத்திரத்தோடு தள்ளிவிட்டு எழுந்து போனார். கை கழுவி விட்டு அதே வேகத்தோடு வெளியே சென்றார்.

'முதலாளிக்கு மூக்குக்கு மேலே கோபம் வந்தாலும் மூக்கையா பிள்ளைக்குக் கவலை கிடையாதுங்கறேன். ஹேஹ்!' என்று வக்கணை கொழித்த சமையல்காரன் லேசாக முனங்கினான். பாட்டுதான் அது. 'உம் கண் உம்மை ஏமாற்றினால், எம் மேல் கோபம் உண்டாவதேன்?' பிறகு தனது சாமர்த்தியத்தை எண்ணித் தானாகவே சிரித்துக் கொண்டான்...

சிரிப்பு கைலாசம் பிள்ளையை மறந்துவிட்டது. சிடுசிடுப்பு அவருடன் தீவிர நட்பு கொண்டாடியது. யார் என்ன கேட்டாலும் எரிந்து விழுந்தார் அவர். சரியாகச் சாப்பிட முடியவில்லை அவரால். நல்ல தூக்கமும் கிடையாது. ஏதோ ஒரு வேதனை ஓயாது அவர் உள்ளத்தைக் குடைந்து கொண்டிருந்ததாகப் புலப்பட்டது.

'அவருடைய மூளையிலே குட்டிச் சாத்தான் புகுந்துக்கிட்டு அவரைப் பாடாய் படுத்திப் பம்பரமாக ஆட்டி வைக்குது!' என்று சிவசைலம் சொல்லத் தொடங்கினான்.

'குறளி செய்கிற வேலே இதெல்லாம்' என்று சிரித்தான் மூக்கையா.

'சரியான பூனைப் பைத்தியம் பிடிச்சிருக்கு நம்ம ஐயாவுக்கு. வெள்ளிக்கிழமையிலேயிருந்து அங்கே பூனை, இங்கே பூனை என்று எங்கே பார்த்தாலும் பூனையைத்தான் பார்க்கிறாரு. இதே நிலைமையில் போனால் அப்புறம் முதலாளியை குற்றாலத்துக்கு அழைத்துக்கொண்டு போக வேண்டியதுதான். அருவியிலே குளிரக் குளிர ஸ்நானம் பண்ணினால், மூளைக்கொதிப்பு தீர்ந்து போகுமாயில்லே?' என்றும் சொன்னான் அவன்.

கைலாசம் பிள்ளைக்குக்கூட அந்தச் சந்தேகம் ஏற்பட்டிருந்தது. 'பைத்தியம் பிடித்துவிட்டதா? பிடித்துக்கொண்டிருக்கிறதா? அல்லது இனிமேல் தான் பிடிக்குமா?' என்று குழம்பியது அவர் மனம். பின்னே என்ன? அவர் கண்களுக்கு மட்டும் கறுப்புப் பூனை தெரிகிறது; நன்றாக, தெளிவாகத் தெரிகிறது. அதன் பார்வையை அவர் எப்படி உணராமல் இருக்கமுடியும்? நையாண்டி செய்து சிரிப்பதுபோல் தோன்றும் அதனுடைய வாய் அமைப்பைத்தான் கவனிக்காமல் இருக்கமுடியுமா? அது ராஜாங்கமாக உட்காருகிறது. அட்டகாசமாகப் பார்க்கிறது. நீட்டி நெளித்துவிட்டு, அவர் பக்கம் அலட்சியப் பார்வையை வீசியவாறு, அசைந்து நடந்து போகிறது. ஆனால் ஒரு தடவை கூடக் கத்தவில்லை. அது மாத்திரமல்ல. மற்றவர்கள் கண்களுக்குப் புலனாகவில்லையாமே? இது என்ன? வேடிக்கை என்பதா? அதிசயம், அபூர்வம், அற்புதம், மர்மம் என்று ஏதாவது சொல்வதா? விளங்கவே இல்லே; விளங்கவே இல்லே. எண்ண எண்ண மூளைக் குழப்பம் நிச்சயமாக ஏற்பட்டுவிடும் போலிருந்தது பிள்ளைக்கு.

'ரொம்பவும் அதிசயமாகத்தான் இருக்குது, மாமா' என்றான் சிவசைலம்.

'ஆமா, முதலாளி!' என்று சொன்னான் மூக்கையா.

'யாரு கண்ணுக்கும் தெரியாது அரிச்சந்திரன் தாலி என்பார்கள். அந்தச் சந்திரமதி கழுத்துத் தாலி அரிச்சந்திரன் கண்ணுக்கு மட்டுமே தெரிந்ததாம். அப்படி அல்லவா இருக்குது இந்தப் பூனை விவகாரம்? எங்களுக்கெல்லாம் தெரியலே. உங்க கண்ணுக்கு மட்டுமே தெரிகிறது என்றால், இதிலே ஏதோ சூட்சுமம் இருக்குது என்றுதான் அர்த்தம். உங்க கையாலே கொல்லப்பட்ட பூனையினுடைய ஆவி உங்களைச் சுற்றிச் சுற்றி வருகிறதோ என்னமோ!' என்று சிவசைலம் சொன்னான். 'ஆனால் எனக்கு ஒரு சந்தேகம். மனுஷங்க தான் பிசாசு ரூபத்திலே அலைவாங்க. பிராணிகளும் அப்படி வருமா?'

'ஓ! நிச்சயமாக வரும். நான் சில பேப்பர்களிலே கூட இது விஷயமாக வந்தவற்றைப் படித்திருக்கிறேன். அது

மூன்று அபிப்பிராயங்கள்

இங்கிலாந்தும் அமெரிக்காவும் இரு தனி தேசங்கள். அவை பிரிக்கப்பட்டிருப்பது ஒரே பாஷையால் தான்.

—ஜியார்ஜ் பெர்னார்டு ஷா.

அமெரிக்கர்கள் என்கிற குற்றவாளிகளுக்கு தூக்கு தண்டனையைத் தவிர மற்ற எந்த தண்டனையை விதித்தாலும் தகும்.

—டாக்டர் ஜான்ஸன்.

ஒரு காரியம் வழக்கமாகச் செய்யப்பட்டு வருகிறது என்பதற்காக இங்கிலீஷ்காரன் செய்து பார்ப்பான். இதுவரை யாரும் செய்யவில்லையே என்பதற்காக ஒரு காரியத்தை அமெரிக்கன் செய்து பார்ப்பான்.

—மார்க் ட்வெயின்.

—எஸ் ராஜா.

ஏன், நானே என் கண்களால் பார்த்திருக்கிறேன். ஒரு நாயி..' என்று நீட்டினான் மூக்கையா.

'போதும் போதும்!' என்று எரிந்து விழுந்தார் பெரிய பிள்ளை. அவர் தான் இரண்டு பேரிடமும் அபிப்பிராயம் கேட்டார். பூனை தனது பார்வையில் பட்ட உடனே, அவர் மற்ற இருவரையும் அழைத்துக் காட்டினார். 'அதோ பூனை இருக்கிறதா, இல்லையா? சுகமாகப் படுத்துக்கொண்டு, நாக்கினாலே உடம்பை நக்கிக்கொண்டு...' என்று சுட்டிக் காட்டினார்.

'இல்லையே. எங்கே சொல்றீங்க?.. தெரியலையே...பூனை இல்லியே' என்று தான் இரண்டு பேரும் சொன்னார்கள். சுற்றிச் சுற்றிப் பார்த்தார்கள். அதன் பிறகு தான் தங்கள் கருத்தைச் சொன்னார்கள். அவர்கள் பேச்சு பெரிய பிள்ளைக்குப் பிடிக்கவில்லை என்றால் அதற்கு யார் என்ன செய்யமுடியும்? அவர்கள் அங்கேயிருந்து போய்விட்டார்கள்.

கைலாசம் பிள்ளை கோபப்பட்டாரே தவிர, அவர்களுடைய பேச்சில் உண்மை இருக்கிறது என்று தான் அவர் மனம் பேசியது. பூனை தன்னைப் பழிவாங்கத் திட்டமிட்டு இப்படி வந்து பயமுறுத்துகிறது என்று அவரும் எண்ணத் தொடங்கியிருந்தார்.

கறுப்புப் பூனை அந்தி நேரத்திலும், முன்னிரவிலும் மட்டுமே அவர் கண்களுக்குப் புலப்பட்டது என்றில்லை. காலையில் அவர் கண்விழித்து எழும் பொழுது தென்படும். அவர் எப்பொழுதாவது வெளியே கிளம்புகிற பொழுது குறுக்கிட்டாலும் குறுக்கிடும். மத்தியானத்துக்கு மேல், உண்ட இறக்கத்தினால் அவர் சோர்ந்து கிடக்கிறபோது, அது எங்காவது ஒரு இடத்தில் உட்கார்ந்து அவரையே பார்த்துக்கொண்டிருக்கும். இரவு நேரத்தில் அவர் படுக்கை அருகில் சுற்றிவரும். அந்தப் பூனை உயிரோடு இருந்தபோது அனுஷ்டித்து வந்த காரியங்களையெல்லாம் இப்பொழுதும் செய்து வந்ததாகத் தோன்றியது. ஆனால் கூச்சலிட்டுக் கொண்டு இதர பூனைகளை விரட்டித் திரியவில்லை. சில தினங்களாக மற்ற வெள்ளைப் பூனைகளை அந்தப் பக்கத்தில் காண முடியவில்லை. இந்த உண்மை அவருக்கு திடீரென்று மனசில் பட்டது.

'பேயாக மாறி அலைகிற கறுப்புப் பூனைக்கு பயந்துதான் மற்றப் பூனைகள் ஓடி ஒளிந்திருக்கும்' என்று எண்ணினார் அவர். இதனாலும் அவருடைய மன உதைப்பு அதிகமாகிவிட்டது. விழிப்பு நிலையிலே பூனையைக் கண்ணாரக்கண்டு மிரண்டுகொண்டிருந்த பிள்ளை, தூக்கத்திலே பயங்கரமான கனவுகள் கண்டு அலறினார். பூனை கோர உருவங்களில் தோன்றி அவரைக் கடித்துக் குதறிச் சித்திரவதை செய்வதாக மதிமயங்கி அவதிப்பட்டார்.

'மந்திரவாதி எவனையாவது அழைத்து வரட்டுமா, மாமா?' என்று கேட்டான் சிவசைலம்.

'மந்திரவாதியும் வேண்டாம். வைத்தியனும் வேண்டாம். இப்ப எனக்கு என்ன சீக்கு வந்துவிட்டது?' என்று சீறினார் பிள்ளை.

'உங்கள் இஷ்டம்' என ஒதுங்கிவிட்டான் மருமகன்.

மறுபடியும் வெள்ளிக்கிழமை வந்தது. அவருடைய வாழ்க்கையில் முக்கியமான மூன்றாவது வெள்ளி அது. முதல் வெள்ளியன்று அவர் பூனைமீது தடியை வீசி எறிந்தார். இரண்டாவது வெள்ளி முதல்தான் பூனை அவரை பயம் காட்ட ஆரம்பித்திருந்தது. இது மூன்றாம் வாரம்.

இந்த எண்ணம் கைலாசம் பிள்ளையின் மனதில் தலைதூக்கி நின்றது. அவர் உள்ளத்தில் அன்று காலையிலிருந்தே தெளிவற்ற பீதி கல்வரப்படுத்திக்கொண்டிருந்தது. அவருடைய உடல் தளர்ந்து கைகள் பதறி நடுங்கிக்கொண்டிருந்தன. உடல் சோர்வும் உள்ளச் சோர்வும் அவரை வெகுவாக பாதித்திருந்தன. அமைதி இல்லாமல் தவித்தார் அவர். தனக்கு என்ன வியாதி, தன் மனசுக்கு என்ன வந்துவிட்டது என்பதே அவருக்குப் புரியவில்லை. ஊர்ந்து செல்கிற ஒவ்வொரு மணி நேரமும் அவர் உடம்பிலும், உள்ளத்திலும் அர்த்தமற்ற—காரண காரியத் தொடர்பு இல்லாத—இன்னதுதான் என்று தெளிந்து கொள்ள இயலாத விதத்திலே ஏதோ ஒரு சுமையை, சோக பூர்வமான ஒரு உணர்வை, பதித்துவிட்டு முன்னேறுவதுபோல் தோன்றியது அவருக்கு. அவர் அசந்து அசந்து படுத்தார். சுருண்டு முடங்கிச் சோர்ந்து கிடந்தார்.

அந்தி வந்தது. இரவு அதைக் கவ்வி விழுங்கிவிட்டு, தாறுமாறாக முளைத்துக் கிடந்த நட்சத்திரப் பற்களைக் காட்டிச் சிரித்தது.

அப்பொழுது கைலாசம் பிள்ளை கட்டிலில் படுத்துக் கிடந்தார். அவருக்குப் பின்னால், தலைமாட்டில், சுவரில் விளக்கு மாட்டப்பட்டிருந்தது. எரியும் சுடரால் கவரப்பட்டு எவ்வளவோ பூச்சிகளும் கொசுக்களும் விஜயம் செய்திருந்தன. பறந்து சுழல்வனவும், வீழ்ந்து சாவனவும், சோர்ந்து சுவரில் இருப்பனவும் ஊர்வனவுமாக உயிர்த்துடிப்பு பல்வேறு உருவங்களில் இயங்கிக்கொண்டிருந்தது. உயிரைத்தின்று உயிர் வாழ வேண்டியிருக்கிற நியதிப்படி இயங்கும் பிராணிகளும் அங்கு தலை காட்டியிருந்தன. சிறு பூச்சிகளைத் தின்பதற்காகச் சில பல்லிகள் வந்திருந்தன. அவை கருமமே கண்ணாகிக் காலம் போக்கின.

இந்த ரக உயிர் இயக்கம் எதையும் கவனிக்கவில்லை பிள்ளை. அவர் ஏதோ நினைவாகப் படுத்துக் கிடந்தார். திடீரென்று அவர் பார்வை ஒரு திக்கிலே பாய்ந்தது. அங்கிருந்து ஒரு சக்தி அவர் கவனத்தைக் கவர்ந்து இழுக்கும் காந்தத் தன்மை பெற்றுவிட்டதுபோல் தோன்றியது. ஏனெனில், அவர் பார்க்கவும், அங்கிருந்த கறுப்புப் பூனை அவரையே பார்த்துக்கொண்டிருப்பது அவருக்குப் புலனாயிற்று. அந்தப் பூனையின் கண்களில் படர்ந்த மஞ்சள் குறுகி ஒளி ரேகை அகன்றிருப்பதாக உணர்ந்தார் அவர். அது தன்னையே பார்ப்பதாகவும், பாய்வதற்குக் குறிவைப்பதாகவும் தோன்றியது அவருக்கு. வாலை ஒரு முறை சுழற்றிக்கொண்டதாகத் தெரிந்தது. மெதுவாக நடந்து முன்னே, முன்னே அது வருவதாக உணர்ந்தார். விழிகளில் பிரகாசம் அதிகரிக்க, அந்தப் பூனை வேகமாக முன்பாய்ந்தது. அது தனது குரல்வளையிலே அழுத்தமாக நகங்களைப் பாய்ச்சி ரத்தத்தைத் தன் வாயினால் சுவைக்கப்போகிறது என்று பிள்ளைக்குத் தோன்றியது. கறுப்புப் பூனை பாய்வதையே கவனித்துக்கொண்டிருந்த பிள்ளையின் தொண்டையிலிருந்து ஒரு கூச்சல் கிளம்பியது. அது கோரமாக ஒலித்தது; பயங்கரமாகத் தொனித்தது; பரிதாபகரமாகவும் கேட்டது; அவல அழுகை போலவும் பரவியது. பின் அமுங்கி ஒடுங்கிவிட்டது.

அக்கூவலைக் கேட்டு சிவசைலமும், மூக்கையாவும், மாடசாமியும் ஓடிவந்தார்கள். பிள்ளை கிடந்த நிலையைப் பார்த்தார்கள். ஒரு பல்லியைக் கவ்விக் கொண்டுபோய் விழுங்கி, கடமுடவென்று ஒலி எழும்பும்படி வாயை அசைத்துச் சுவைத்துக்கொண்டிருந்த கறுப்புப் பூனையையும் பார்த்தார்கள். உடலும் உயிரும் உள்ள பூனைதான் அது. உண்மையைப் புரிந்துகொண்டு தலை ஆட்டினான் சிவசைலம். அதன் அர்த்தத்தைப் புரிந்துகொண்டு புன்னகைபூத்தான் மூக்கையா. கையைப் பிசைந்தபடி கண் கலங்கி நின்றான் மாடசாமி.

மாடசாமி கண்களைத் துடைத்துக்கொண்டு சோகக் குரலில் விம்மி விம்மிப் பேசினான். 'சின்ன ஐயா விளையாட்டுதான், தமாஷாக நடந்துவிட்டு அப்புறம் சொல்லிவிடலாம் என்றதனாலே நானும் தலையாட்டினேன். அது இப்படி முடியுமின்னு தெரிந்திருந்தால் நான் அன்றைக்கே நிசத்தைச் சொல்லியிருப்பேனே!' என்று புலம்பினான். அவனுடைய மனம் அவனைக் குறை கூறிக் கொண்டிருந்தது.

'பெரிய பிள்ளை தன்னுடைய மனப் பிராந்திக்குத் தானே பலியாகிவிட்டால் அதுக்கு யாரு பொறுப்பு?' என்றான் சிவசைலம்.

'அப்படிப்பட்ட நிலைமையை உண்டாக்கியது நாம் தானே? கறுப்புப் பூனை உயிரோடு அலைகிறபோதே செத்துப் போச்சு என்று அவரை நம்பவைத்தோம். அதற்காக ஒரு வார காலம் அதை மறைத்துவைத்திருந்தோம். பிறகு ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அது நம் கண்களில் படவேயில்லை என்று சாதித்தோம். நமது நடிப்பு மிகப் பிரமாதமாக அமைந்துவிட்டது. பிறர் பார்வையில் படாத பூனை தனது பார்வையில் மட்டும்தான் படுகிறது என்று ஆகிறபோது, அதில் ஏதோ விபரீதம் இருக்கிறது என்று குழம்புவது மனித சுபாவம்தானே?' என மூக்கையா விவரித்தான்.

மாடசாமியின் உள்ளத்தில் மட்டும் வேதனை குத்திக் குடைந்துகொண்டுதானிருந்தது.

தலைநகர் பால்.....

தலைநகரில் நடனக் கலையில் பயிற்சி அளித்துவரும் ஸ்தாபனங்களில் ஒன்றுன தில்லி நாட்டியக் கலாலயத்தின் மாணவிகள் சென்ற வாரம், பார்லிமெண்டு அங்கத்தினர்கள் சங்கக் கட்டிடத்தில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் தமது திறமையைக் காட்டினுர்கள். சபாநாயகர் ஸ்ரீ எம். அனந்தசயனம் அய்யங்கார் முன்னிலையில் நடந்த இந்த நிகழ்ச்சியில் பார்லிமெண்டு உறுப்பினர்களும், பிற கலா ரசிகர்களும் கலந்து கொண்டார்கள்.

சிறுமிகள் கவர்ச்சிகரமாக ஆடிக் காட்டினுர்கள். அலாரிப்பிலிருந்து தில்லான வரை விதவிதமான 'அயிட்டங்'களைச் செய்துகாட்டி, 'அப்ளாஸ்' வாங்கினுர்கள். சேபனு கிருஷ்ணமாச்சாரி, வீரபாலா, பிரேமா கணபதி, ஊர்மிளா அளகேசன் ஆகியோரின் நிகழ்ச்சிகளை யாரும் எளிதில் மறக்கமாட்டார்கள். ஏற்கெனவே பரதநாட்டியத்தில் பரிசுகள் வாங்கியுள்ள ஊர்மிளா, இரண்டு அயிட்டங்களிலும் சிறப்பாக அபிநயித்து ஆடிக்காட்டியதைக் குறிப்பிட வேண்டும். கலாலயத்தைச் சிறப்புற நடத்திவரும் ஸ்ரீ கே. என். பக்கிரிசாமியின் வாய்ப்பாட்டும், பக்கவாத்தியங்களும் நிகழ்ச்சியின் வெற்றிக்கு உதவின.

ஃ ஃ ஃ

இந்திய மொழிகளில் சென்ற மூன்று ஆண்டுகளில் வெளியான சிறந்த நூல்களுக்கான ஐயாயிரம் ரூபாய் பரிசு இந்த முறை அமரர் 'கல்கி' எழுதிய 'அலை ஓசை' என்ற தமிழ் நவீனத்திற்குக் கிடைத்திருக்கிறது. சென்ற திங்கட்கிழமையன்று ஸ்ரீ ஜவாஹர்லால் நேருவின் தலைமையில் கூடிய சாஹித்ய அகாடெமியின் நிர்வாகக் கமிட்டி, 'அலை ஓசை'யையும் சேர்த்து மொத்தம் 12 மொழிகளில் வெளியான சிறந்த நூல்களுக்குப் பரிசு அளிப்பதெனத் தீர்மானித்தது. வெவ்வேறு மொழி வல்லுனர்களைக்கொண்டு, அந்தந்தப் பிராந்தியங்களில் அமைந்துள்ள ஆலோசனைக் குழுக்களின் சிபார்சின்பேரில் உருவானது அந்தத் தீர்மானம். தமிழ் எழுத்துலகில் என்றும் அழியாத சிறப்பிடம் பெற்ற பேரறிஞர் 'கல்கி'யின் நூலுக்குப் பரிசு கிடைத்திருப்பதில் தமிழ் மக்கள் அளவில்லாத மகிழ்ச்சி கொள்வார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

ஃ ஃ ஃ

தலைநகர்த் தமிழர் செப். 10, 11-ந் தேதிகளை வெகு காலத்திற்கு மறக்க மாட்டார்கள். சாது முருகதாசர் ரிஷிகேஷிலிருந்து திரும்பும் வழியில் தலைநகரில் தங்கியிருந்த இரண்டு நாட்களில், லோதிகாலனியில் ஷண்முகானந்த சங்கீத சபாவின் ஆதரவிலும், கரோல்பாகில் பஜனை சமாஜத்தின் ஆதரவிலும் இன்னிசை விருந்தளித்தார். சிறுவர்கள், சிறுமிகள், ஆண்கள், பெண்கள் எல்லோரையும் கவரத்தக்கதாய், ஜனரஞ்சகமாக இருந்த முருகதாஸரின் இசையைக் கேட்க, தில்லித் தமிழ்ச் சமூகமே திரண்டுவந்திருந்தது என்றால் மிகையாகாது.

ஃ ஃ ஃ

தலைநகரில் பாரதி தினத்தை விமரிசையாகக் கொண்டாடி மகிழ்ந்தார்கள். தில்லித் தமிழ்ச் சங்கத்தார் கவி அரங்கு ஒன்றை அடக்கமான வகையில் நடத்தி கவியரசருக்குப் பாமாலை சூட்டினர். இந்த முறை மதராஸி பள்ளிக் கூடத்தார் விரிவான அளவில் விழா நடத்தினர். லோதி காலனியில் பள்ளிக் கூடத்துப் புதிய கட்டிடத்தில் சிறுவர், சிறுமியர் தம் தம் பெற்றோர்களுடன் கூடிக் கொண்டாடினுர்கள். பாரதிபற்றிய பேச்சுப் போட்டிகளும், பாரதி பாடல் போட்டிகளும் பிரதான அம்சங்களாயிருந்தன. ஏராளமான பரிசுகளும் வழங்கினர். தவிர, கதம்ப நிகழ்ச்சி ஒன்றையும் திறனுற நடத்தினுர்கள். கண்ணன் பாட்டுக்களை இசைத்து அபிநயித்துக்காட்டிய விதம் நன்றாயிருந்தது. விழாவுக்கு, தில்லிவாசியாகிவிட்ட ஸ்ரீ ஜே. சிவஷண்முகம் பிள்ளை அக்ராஸனம் வகித்தார். ஸ்ரீ பிள்ளை அவர்களை சாரணர்கள் அணிவகுத்து மரியாதை செய்து வரவேற்றார்கள்.

தில்லி நாட்டிய கலாலயத்து நிகழ்ச்சியில் குமாரி பிரேமா கணபதி நடனமாடியபோது எடுத்த படம்.

இந்த முறை விழாவின் சிறப்புக்குத் தலைமை ஆசிரியர் ஸ்ரீ சூரியநாராயணனும், குறிப்பாக தலைமைத் தமிழ் ஆசிரியர் ஸ்ரீ ஆர். பார்த்தசாரதியும், அவரது இதர சகாக்களும், மாணவர்களும் அரும்பாடுபட்டார்கள். இனி, பாரதி தினக் கொண்டாட்டத்தை, தலைநகரில் தமிழரின் உயர்ந்த ஸ்தாபனமாகவுள்ள பள்ளிக்கூடம் வருஷா வருஷம், மேன் மேலும் சிறப்பாக நடத்திவரும் என்று நம்பலாம்.

தில்லித் தமிழ்ச் சங்கத்தில் பாரதியார் திருவுருவப் படத்திற்குப் பூமாலை சூட்டி, அவர் புகழ் மாலை பாடினுர்கள். மறு நாளன்று கவியரங்கு கூடி, கவி மன்னருக்குப் பாமாலை சூட்டி மகிழ்ந்தார்கள். ஸ்ரீ பூர்ணம் சோமசுந்தரம், ஸ்ரீ சு. வெ. குப்புசாமி, ஸ்ரீ அ. வி. கிருஷ்ணமூர்த்தி உட்பட அன்பர்கள் பலர் அதில் கலந்துகொண்டனர். தில்லித் தமிழ்ச் சங்கம் உட்பட பல ஸ்தாபனங்கள் 'ஸௌத் இந்தியா கிளப்'பின் தலைமையில், பாரதியாரின் தினத்தை நவம்பர் வாக்கில் கொண்டாடுவது வழக்கம். சென்ற தடவை, கருத்து வேறுபாடுகளினால் நடக்காமலேயே போய்விட்டது; இம்முறை, ஸ்ரீ அ. வெ. வேங்கடசுப்பன் தலைமையிலான கிளப், தன் இதர சகோதர ஸ்தாபனங்கள், கழகங்கள் அனைத்தையும் அரவணைத்துக்கொண்டு, இந்த வருஷமாவது சிறப்பாகக் கொண்டாட வேண்டுமென்று தலைநகர்த் தமிழ் சமூகம் எதிர்பார்க்கிறது.



புதுடில்லி, கரோல்பாக். டில்லி பஜனை சமாஜ ஆதரவில் கோகுலாஷ்டமி கொண்டாட்டத்தையொட்டி செப். 2-ந் தேதி 'கிருஷ்ண துலாபாரம்' ஹரிகதை காலக்ஷேபம் மதுரை நித்தியானந்தா ராமநாம பஜனை கோஷ்டியைச் சேர்ந்த மாதாஜி சுபத்ராபாய் அவர்களால் நடத்தப்பெற்றது.

சரசுவின் தம்பி

பராங்குசம்

“இனி என்ன செய்யப்போவதாக உத்தேசம்?” என்றார் மாலதியின் தகப்பனார். ஏற்கெனவே சஞ்சலத்தால் குழம்பியிருந்த மனதில் அக்கேள்வி ஒரு அதிர்ச்சியை உண்டாக்கியது. இவ்வளவு சர்வ சாதாரணமான கேள்வி—படிப்பு முடிந்ததும், கடைசி பரீட்சை தேர்வு விவரம் தெரிந்ததும், ஒவ்வொரு தகப்பனாரும் ஒவ்வொரு பிள்ளையையும், பெண்ணையும் கேட்கும் அக்கேள்வி—அவளை ஏன் இவ்வாறு குலுக்கியது? அவளுக்கே புரியவில்லை. அந்தக் கேள்வியால் உடனே புரிந்து கொள்ளமுடியாத ஏதோ ஒரு நினைவு புதைந்து கிடந்தது. அது என்னவென்று எவ்வளவு முயற்சித்துப் பார்த்தாலும் ஞாபகம் வரவில்லை. பல்லிடையே மாட்டிக்கொண்டு நாக்கால் எவ்வளவு நெருடினாலும் வராத சிறுதுரும்பைப்போல், மனதில் எங்கோ சிக்குண்டு ஞாபகம் வராத இந்த நினைவு, துன்புறுத்திற்று. அவர் கேள்விக்கும், யோசிக்காமல் எங்கோ நினைவாக அவளே உரைத்த பதில்—“இன்னும் ஒரு முடிவுக்கு வரவில்லை, அப்பா!” என்ற சர்வ சாதாரண வாக்கியம்—அறியாமல் மின்சாரக் கம்பியைத் தொட்டுவிட்டாற் போல் தூக்கிவாரிப் போட்டது.

தன் கலவரத்தை ஒருவாறு சமாளித்துக்கொண்டு, “அப்பா, எனக்கு ஏதோ மாதிரியிருக்கிறது. நான் கொஞ்சம் வெளியே போய்விட்டு வருகிறேன்” என்றாள் மாலதி.

“சரி, அம்மா, போய்வா. என்னுடன் பீச்சுக்கு வருவாயோ என்று பார்த்தேன்....”

“நாளைக்கு வருகிறேன், அப்பா.”

“நீ வேண்டுமானால் காரை எடுத்துப் போ....”

“வேண்டாமப்பா. நீங்கள் காரில் போய் வாருங்கள். நான் சும்மா சற்று தூரம் உலவிவிட்டுத் திரும்பி விடுவேன்” என்று சொல்லிக்கொண்டே வெளியேறினாள் மாலதி.

“இனி என்ன செய்யப் போவதாக உத்தேசம்?”

“இன்னும் ஒரு முடிவுக்கு வரவில்லை.” எங்கு போகிறோம் என்று கவனிக்காமல் மாலதி ஸேந்தோம் ஹைரோட் வழியே நடந்தாள்.

இடது பக்கம் தையற் கடை, வலது பக்கம் தென்னந் தோப்பு. இடது பக்கம் சில புது வீடுகள்; வலது பக்கம் பழைய வீடுகள். இடது பக்கமிருந்து கடற் காற்று; மீன் நாற்றம். வலது பக்கம்.. இது என்ன பிரம்மாண்டமான கட்டடம்? ஏ! அந்தப் புது மாளிகையா?

“இனி என்ன செய்யப் போவதாக உத்தேசம்?”

“இன்னும் ஒரு முடிவுக்கு வரவில்லை.”

பிரேக் கிரீச்சென்று ஒலிக்க கார் நின்றது.

“கன்கிறேஜுலேஷன்ஸ், மாலதி.”

“தாங்க்யூ!”

திடீரென்று ஞாபகம் வந்தது. ஐந்து வருஷங்களுக்கு முன் நடந்த ஒரு சம்பாஷணை. சுசீலா காரில் உட்கார்ந்தபடி என்னமோ பேசிகொண்டிருந்தாள். மாலதிக்கு ஒன்றும் கேட்கவில்லை.

“கன்கிறேஜுலேஷன்ஸ்!” என்றார் அப்பா.

“தாங்க்யூ!” என்றாள் மாலதி.

“எல்லாம் உங்கள் ஆசீர்வாதம்!” என்றான் ராகவன்.

“இனி என்ன செய்யப்போவதாக உத்தேசம்?” என்று கேட்டார் அப்பா.

“இன்னும் ஒரு முடிவுக்கு வரவில்லை மாமா. ஆனால் ஏதாவது ஒரு பள்ளிக் கூடத்தில் உபாத்தியாயராக இருக்கலாம் என்று நினைக்கிறேன்” என்றான் ராகவன்.

பிறகு புயல் வீசிற்று. காற்றும், மழையும் ஓய்ந்த பிறகு பார்த்தால், மாலதிக்கும் ராகவனுக்கும் இடையே ஒரு சுவர் நின்றது.

கல்லையும், மண்ணையும் கொண்டு நிலத்தில் கட்டின சுவரை எளிதில் இடித்து அகற்றிவிடலாம். ஆனால் மமதையையும், அகங்காரத்தையும் கொண்டு சுயமரியாதை மனதில் எழுப்பின சுவரை...? ஒரு விதம் பார்க்கப்போனால் வெகு எளிது. கைப் பலமும், கடப்பாறையும் தேவையில்லை. ஆனால் இன்னொரு விதம் பார்க்கப்போனால்?

சுசீலா என்ன சொன்னாளோ; மாலதி என்ன பதிலுரைத்தாளோ; அவளுக்குத் தெரியாது. நாகரிகத்தில் பயிற்சி பெற்றிருந்த நாக்கு சம்பாஷணையை நடத்திற்று. மனம் வேறெங்கோ பழங் கதையைப் பின் தொடர்ந்தது. ஒரு நிமிஷம் நினைவு நிகழ் காலத்திற்கு திரும்பியபோதுதான் சுசீலா காரில் திருவல்லிக்கேணியை நோக்கி மெரினா வழியே போய்க்கொண்டிருப்பதைக் கவனித்தாள் மாலதி. கார் நின்றது.

“அதோ உங்கள் கார்... உன் அப்பா எங்கே காணோம்?” என்று சுசீலா கேட்டாள், கார் கதவைத் திறந்தவாறு.

“அங்கேதான் இருப்பார். நடைபாதையில் உலவிக்கொண்டிருப்பார், இல்லை கடற்கரை மணலில் உட்கார்ந்திருப்பார். நான் போய்ப் பார்க்கிறேன்.. காரில் அழைத்து வந்ததற்கு நன்றி....” என்றெல்லாம் நாகரிக நாக்கு பேசிற்று. காலும் பரிவுடன் மாலதியை கும்பலில்லாத, தனிமை நிலவும் ஒரு ஓரத்திற்கு அழைத்துச் சென்றது. மனம் மட்டும் பழங் கதையை மீண்டுமொருதரம் போய் கவ்விக்கொண்டது.

ராகவனது தகப்பனார் வெற்றிகரமாகச் செய்து முடித்த காரியம் ஒன்றே ஒன்றுதான். தன் ஒரே பிள்ளைக்கு ஆறு வயதாயிருந்தபோது இறந்து போய்விட்டார். பரம ஏழை. கிராமத்து கர்ணம். அவர் மைத்துனரோ டெபுடி கலெக்டர். தன் தங்கை அனாதையாக நின்றபோது ஊரார் பழிக்கப் போகிறார்களே என்று அவளைப் பிள்ளையுடன் தன்னுடன் வந்து இருக்கச் சொன்னார். மகாலக்ஷ்மி அம்மாளும், தமையனுக்கும் மதனிக்கும் இரண்டு வருஷங்கள் மாடாக உழைத்து, நன்றி செலுத்திவிட்டுக் கணவனைத் தேடிப் போய்விட்டாள்.

ராகவனுடைய மாமாவிற்கு என்ன தான் தோன்றிற்றோ, அவனைத் தன் ஒரே மகள் மாலதிக்குக் கல்யாணம் செய்து கொண்டார். பையன் புத்திசாலி; அப்பொழுதே—எப்பொழுதே? அவனுக்குக் கல்யாணம் ஆகும்பொழுது வயது பன்னிரண்டு. மாலதிக்கு எட்டு நிறைந்து விட்டது! கண்ணும் மூக்குமாகப் பார்க்க நன்றாகவிருப்பாள்.

மாலதி இன்டர்மீடியட் பரீட்சைக்கு போன அதே வருஷம் ராகவன் எம். ஏ. பரீட்சை எழுதினான். பரீட்சையானதும் கோடை விடுமுறைக்கு இருவரும் கிராமத்திற்குப் போயிருந்தனர். அப்பொழுதுதான் அவர்கள் முதன் முதலாகக் கணவன் மனைவி என்ற முறையில் வாழ்ந்தனர். கிராமத்தில் தங்கியிருந்த ஒரு மாதமும் வெகு இன்பமாகக் கழிந்தது. மாலதியின் தகப்பனார் இன்னும் டெபுடி கலெக்டரா? சென்னை சர்க்கார் காரியாலயத்தில் பெரிய உத்யோகஸ்தர். பரீட்சை தேர்வு விவரங்கள் பிரசுரமாகும் முன்பே செய்தி தெரிய ஏற்பாடு செய்திருந்தார். மாலதியும் ராகவனும் கிராமத்திலிருந்து மதராஸ் திரும்பிய அதே தினம் நண்பர் செய்தி கொண்டு வந்தார். இருவரும் முதல் வகுப்பில் தேறியிருந்தனர். பீச்சில் உல்லாசமாக இருந்துவிட்டு வீடு திரும்பும்போது முன் ஹாலில் மாமா உட்கார்ந்து பத்திரிகை படித்துக்கொண்டிருந்தார்.

"கன்கிரேஜுலேஷன்ஸ்" என்று புன்சிரிப்புடன் வரவேற்றார் இருவரையும்.

"தேங்க்யூ!" என்றாள் மாலதி.

"உங்கள் ஆசீர்வாதம்!" என்றான் ராகவன்.

"இனி என்ன செய்யப் போகிறதாக உத்தேசம்?"

மாமா ஏற்பாட்டின்படிதான் எல்லாம் நடக்கவேண்டும். மிகவும் முரட்டு மனிதர். அவர் ராகவனுக்கும் தன் இஷ்டப்படி ஏற்பாடுகளும் செய்துதான் இருந்தார். ஆகையால் கேள்விக்கு அவர் எதிர்பார்த்த பதில், "நீங்கள்தான் சொல்ல வேண்டும், மாமா" என்பதுதான். அதுதானே நல்ல பிள்ளைகளுக்கு அழகு! அதுதானே வழக்கம், கிரமம் எல்லாம்!

"இன்னும் ஒரு முடிவுக்கு வரவில்லை. ஆனால், ஏதாவது ஒரு பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயராக இருக்கலாம் என்று நினைக்கிறேன்" என்றான் ராகவன்.

இதைக் கேட்டதும் ஒரு க்ஷணத்தில் மாமாவிற்குக் கோபம் பொங்கி வந்துவிட்டது. சம்பிரதாயப்படி உதடுகள் துடித்தன; கண்கள் சிவந்தன. ஆனால், அதையெல்லாம் ஒருவாறு அடக்கிக் கொண்டு மமதையுடன் கேட்டார்: "சம்பளத்திற்கா, இல்லை சம்பளமில்லாமலே தர்ம சேவை என்று திட்டமோ!"

"ஏதோ என் செலவிற்கு வந்தால் போதும்."

"அதுகூட எதற்கு? நான்தான் இருக்கிறேனே அழுவதற்கு!"

ராகவன் தான் ஏழைப் பங்காளி வாழ்க்கை வாழ்வதை மறந்ததே இல்லை. அது அவனது பெரும் குறை. மாமா சொன்னது சுரீரென்று பாய்ந்தது அவன் மனதில்.

"இனிமேல் அழ வேண்டாம், மாமா" என்று நடுக்கமுற்ற குரலில் சொல்லிவிட்டு உள்ளே போகப் புறப்பட்டான் ராகவன்.

"ராகவன்!"

"என்ன மாமா"?

"உனக்கு என்ன பைத்தியமா? நீ போட்டிப் பரீட்சை எதற்காவது உட்காருவாய் என்று நான் பார்த்தேன்."

"எனக்கு சர்க்கார் வேலை வாண்டாம், மாமா!"

"சர்க்கார் வேலை அவ்வளவு குறைச்சலாய் போய்விட்டதா? நீ தின்று வளர்ந்ததெல்லாம் சர்க்கார் வேலையிலிருந்து நான் சம்பாதித்த பணத்தில் தான்."

"நான் சர்க்கார் வேலையைக் குறை கூறவில்லை. அதற்கு நான் பொருத்தமில்லை."

"ஓ! எல்லாம் யோசித்து நிச்சயம் செய்தாகிவிட்டதோ?"

"ஆகிவிட்டது, மாமா!"

"சீ, அதனப்பிரசங்கி நாளைக்குக் காலையில் எனக்கு ஞாபகம் மூட்டு. சர்க்கார் வேலை பிடிக்காவிட்டால் நான் ராமுவைப் போய் பார்க்கிறேன். அவன் கம்பெனியில் ஏதாவது நல்ல வேலையாக..."

"வேண்டாம், மாமா. நான் குழந்தையில்லை. வயது வந்தவன். மரியாதை அளித்து மரியாதை பெறுவதுதான் மாமா அழகு. வீணாக என்னை நீங்கள் வைது என்ன பிரயோசனம்? நீங்கள் ஒன்று சொல்ல நான் ஒன்று சொல்ல வீண் மனக் கசப்பு. வீசி எறிந்த வார்த்தையை திரும்பி வாங்கிக்கொள்ள முடியாது. எனக்கு கம்பெனி வேலையும் வேண்டாம். உபாத்தியாயர் வேலை எனக்குப் பிடித்திருக்கு."

மாமாவிற்கு கோபம் தாங்க முடியவில்லை. ஆயுள் பூராவும் அவருக்கு எதிராக ஒருவரும் ஒரு வார்த்தை சொன்னது கிடையாது. இந்தச் சிறு பயல், அதுவும் தன் சோற்றைத் தின்று தன் தர்மத்தில் வளர்ந்த இந்த தரித்திரப் பயல், தன்னுடன் சரிசமானமாக பேசத் துணிந்தான் என்றால் அவருக்கு நம்பவே முடியவில்லை.

"உலகத்திலே நன்றி, தர்மம் எல்லாம் நாசமாகப் போய்விட்டதா? சரி, போ; இப்பொழுதே போ! உன்போல் யாராவது அனாதை தரித்திரங்கள் இருந்தால் அவர்களுக்குப் போய் சொல்லிக் கொடு. எல்லாருமாகச் சேர்ந்து 'பவதி பிக்ஷாம் தேஹி' என்று தெருத் தெருவாகப் போகலாம். சும்மா தண்டப் பிண்டம் தின்றுவிட்டு உட்கார்ந்திருக்கக் குத்துகிறது... போ!"

"இந்தத் தெருப் பக்கமாக வாராமல் இருக்க ஞாபகம் வைத்துக்கொள்கிறேன், மாமா!... மாலதி, வருகிறாயா?"

"மாலதியா? சீ, போ! வெட்கமாக இல்லை? அவளை அழைத்துப் போக உனக்கு உரிமை ஏது? அருகதையுண்டா?"

"அவளைப்பற்றிச் சொல்ல உங்களுக்கு உரிமையில்லையே..மாலதி வருகிறாயா?"

முகத்தைச் சுளித்துக் கொண்டு உள்ளே சென்றாள் மாலதி.

அரைப் படிப்பு படித்த பதினேழு வயதுப் பெண், அந்த சந்தர்ப்பத்தில் வேறெப்படி நடந்துகொண்டிருக்க முடியும்? அப்பாவின் செல்லப் பெண்; ஒரே குழந்தை. ராகவன் சொல்வது தவறோ சரியோ, அக்கறையில்லை. 'அவன் என் கணவன்; என் இடம் அவன் பக்கத்தில்' என்று சொல்லி மாலதி அவனுடன் வெளியேறியிருந்தால், அவள் ஒரு முட்டாளாக இருந்திருக்க வேண்டும். பதி பக்தி என்பது இருவகை. ஒன்று அறிவிலிகளின் மூட நம்பிக்கை. இன்னொன்று, புத்திசாலிப் பெண்கள் தன்

தமாஷ் தம்பதி

மனைவி:—இப்போ ஒரு ஐம்பது ரூபாய் கடன் வாங்கினாத்தான் இந்த மாதத்தைக் கழிக்க முடியும். யாரிடமாவது போய்க் கேட்டு வாங்கிண்டு வாருங்கோ.

கணவன்:—இப்படி மாதந் தவறாமல் ஒருத்தரிடம் போய கடன் கேட்பதுன்னா, ரொம்ப வெட்கமான்னாயிருக்கு. நம்மைக் கேவலமா நினைச்சுடமாட்டா?

மனைவி:—ரொம்ப நன்னாருக்கு! நம்ப சர்க்காரே, வருஷா வருஷம் கோடிக்கணக்கா ரூபாயைக் கடன் வாங்கறாளே, அவாளுக்கு இல்லாத கேவலமா நமக்கு வந்துடுத்து?

னலத்திற்காகப் போடும் வேஷம். மாலதி அறிவிலியல்ல. பதினேழு வயதில் தன் னலத்திற்காக வேஷம் போடுவதற்கு வேண்டிய அவநம்பிக்கையையும் எதிர் பார்க்க முடியாது. ஆகையால் மாலதி செய்ததுதான் சகஜம், இயற்கை. முதிர்ச்சியடைந்த மாலதியின் மனம் இதைப் புரிந்துகொண்டது. ஆனால், இன்று அவள் என்ன செய்ய வேண்டும்? நடந்ததையெல்லாம் மறந்துவிட்டு, தன் வாழ்க்கையை வகுத்துக் கொள்வதா? இல்லை, நடந்ததில் ஒரு சம்பவத்தை மட்டும் மறந்துவிட்டு ராகவனுடன் தன் வாழ்க்கையை சீரமைத்துக்கொள்ள முயலுவதா?

மாலதியைப்போல இருபத்திரண்டு வயதில் எம். ஏ. பாஸ் செய்துவிட்டு, வாழ்க்கையின் வாசற்படியில் நிற்கும் எத்தனையோ பேர், பிடித்த வேலை ஒன்றைப் பார்த்துக்கொண்டு வாழ்க்கையை ஆரம்பிக்கக் காத்திருக்கின்றனர். வேறு சிலர் மனதிற்குப் பிடித்த மணாளனை பார்த்துக்கொண்டு வாழ்க்கையில் இறங்கக் காத்திருக்கின்றனர். இன்னும் சிலர் இரண்டையும் செய்ய முடியுமா என்று யோசித்துக்கொண்டிருக்கின்றனர். மாலதிக்கும் அவர்களுக்கும் ஒரே ஒரு வித்தியாசம்தான். மாலதிக்கு சரசு உண்டு.

இன்டர்மீடியட் பாஸ் செய்த பிறகு ஒரு வருஷம் மாலதி வீட்டிலிருந்ததற்குக் காரணம் சரசுதான். ராகவன் மாமாவுடன் சண்டை போட்டுக்கொண்டு வீட்டைவிட்டுப் போய் ஒரு மாதத்திற்குள் சரசுவின் வருகை நிச்சயமாயிற்று. ஆகையால்தான் அவ்வருஷமே மாலதி பி. ஏ. வகுப்பில் சேர முடியவில்லை.

சரசு, ஜனவரி மாதம் பிறந்தாள். அதே வருஷம் ஜூலை மாதத்தில் கல்லூரி திறந்தபோது மாலதி பி. ஏ. வகுப்பில் சேர்ந்துவிட்டாள். இன்டர்மீடியட்டிற்குப் பிறகு வீட்டில் ஒரு வருஷம்; பி. ஏ. இரண்டு வருஷம்; எம். ஏ. இரண்டு வருஷம். ஐந்து வருஷங்கள் கவலையின்றி நிம்மதியாக வாழ்ந்துவிட்டாள். மாலதி தனிமையை நாடும் சங்கோஜியன்று. நண்பர்களுடன் கலகலப்பாகச் சிரித்து வாழ ஆசைப்படும் சுபாவம். படிப்பிலும் நிரம்ப அக்கறை. குழந்தை வேறு உண்டு. அவள் வாழ்க்கையில் குறையே இல்லை. அழகாக, தெம்பும், உற்சாகமும் நிறைந்த நல் வாழ்க்கைதான் வாழ்ந்தாள். ஆனால், பரீட்சை முடிந்ததிலிருந்து ஏனோ ஒரு கலக்கம்; வர்ணிக்க முடியாத ஒரு கவலை; என்றுமில்லாத ஒரு குழப்பம் மனதில். படிப்பு முடிந்ததும் வருங்காலத்தைப்பற்றி இம்மாதிரியான ஒரு பயம் கலந்த குழப்பம் இளைஞர் மனதில் தென்படுவது வழக்கம்தான். இத்தனை நாளும் பெற்றோர் பிள்ளையாக வாழ்ந்தாயிற்று. இனி என்ன செய்யப் போகிறோம் என்ற கேள்வி பிறப்பது அக்கட்டத்தில்தானே. ஆனால் மாலதியின் மனதில் தோன்றிய குழப்பமும், கவலையும் அவளது வருங்காலத்தைப் பற்றிய பொதுவான பிரச்னை

என்று சொல்லிவிட முடியாது. அவள் அந்தக் கோடை விடுமுறைக்கு கிராமத்திற்குச் சென்றது தவறோ? ஐந்து வருஷங்களுக்கு முன் கோடை விடுமுறைக்கு ராகவனுடன் கிராமத்திற்குச் சென்றிருந்தாளே, அதற்குப் பிறகு அவள் கிராமப் பக்கம் செல்லவே இல்லை. அதனாலோ என்னவோ பழைய நினைவுகள் வெள்ளமென அடித்துக்கொண்டு வந்து மனதை நிலை தவறச் செய்தன. இந்த ஐந்து வருஷங்களாக அவள் ராகவனைப்பற்றி அவ்வளவாக நினைத்ததே இல்லை. ஏதோ ஓரிரு சமயங்களில் அப்பா, யாரோ சொல்லிக் காதில் விழுந்ததை அம்மாவிடம் முணுமுணுப்பார். மாலதிக்கும் கேட்கும். அதை அவள் அக்கறையுடன் கவனித்ததும் இல்லை. கோபத்துடன் வெறுத்ததும் இல்லை. அவன் வட இந்தியாவில் எங்கோ புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருந்த ஒரு தேசீயப் பள்ளிக்கூடத்தில் ஒரு உபாத்தியாயராகப் போய்ச் சேர்ந்தான். ஆனால், ஒரு வருஷத்திற்குள் அவனது மிதவாத சுபாவமும், அப் பள்ளியை நடத்திவந்தவாது தீவிரவாதமும் ஒத்துப் போகவில்லை. அப் பள்ளியை விட்டுவிட்டு பூனாவில் ஒரு பிரபல கல்லூரியில் ஒரு உதவி ஆசிரியராகச் சேர்ந்ததாகக் கேள்வி. அதற்கப்புறம் ஒரு செய்தியும் இல்லை. இன்னும் அங்குதான் வேலையாயிருக்கவேண்டும்.

இப்பொழுது என்னமோ நாளைக்கு நாற்பது தரம் ராகவன் ஞாபகம் வந்தது. அதுவும் இரவு படுத்தால் தூங்கு முன் ஓரிரு சம்பவங்களை கண்ணை மூடிக்கொண்டே மீண்டும் மீண்டும் மனதில் வாழ வேண்டிய நிர்ப்பந்தம் ஒன்று அவளைத் தொந்திரவு செய்தது. இளமையின் கொடுமை என்பார்களே, அது—அந்த தேகத் தேவை, இச்சா பூர்த்தியை நாடித் துடிக்கும் உடலின் அங்கலாய்ப்பு—மாலதிக்கு இத்தனை நாளும் இருந்ததே இல்லை. நாள் பூராவும் வேலையும், விளையாட்டும் உற்சாகமும், படிப்பும் நிறைந்த வாழ்க்கை; இரவு படுத்தால் அடுத்த நிமிஷம் உறக்கம். கனவுகளால்கூட கலைக்கப்படாத ஆரோக்கியமான அயர்ந்த தூக்கம். அப்படி வாழ்ந்தவளுக்கு இப்பொழுது என்னடாவென்றால் பிரதி இரவும் இந்தக் கண்மூடி நாடகம் இல்லாவிட்டால் தூக்கம் வருவதில்லை. இது என்ன வேதனை?

மாலதி என்ன சிறு குழந்தையா, இல்லை படிப்பு வாசனையில்லாத முட்

டாளா? அவளுக்கும் இதெல்லாம் புரியாமல் இல்லை. அவள் எப்பொழுதுமே தான் சன்யாச வாழ்க்கைக்கு ஏற்றவள் என்று நம்பியதில்லை. துறவிபோல் ஆசை, இச்சை ஒன்றும் இல்லாமல் பிரம்மச்சர்ய வாழ்க்கை வாழ அவளால் முடியாது. அவள் வாழ்க்கையை வெறுப்பவள் அல்ல; வாழ்க்கையை விரும்புபவள். அவளால் பிறருக்காக தியாக வாழ்க்கை வாழ முடியாது; பிறருடன் பரஸ்பர இன்ப வாழ்க்கைதான் வாழ முடியும். இதெல்லாம் அவளுக்கு நன்றாகத் தெரியும். அவள் வயது மங்கையர் எத்தனையோ பேர் அவளைப்போல்தான். ஆனால் அவர்கள் பிரச்னை சாதாரணம்; எளிதில் தீர்க்க முடியும், மாலதியின் விஷயம் சற்று சிக்கலானது. அவள் செய்யக் கூடியது என்ன?

நிதானமாக பதட்டமின்றி யோசித்தாள். மூன்று வழிகள் தோன்றின. பணக் கஷ்டம் இல்லை; ஆனால் வேலையில்லாமல் வீட்டில் உட்கார்ந்திருப்பது முடியாத காரியம். ஆகையால், ஏதாவது மனதிற்குப் பிடித்தமான ஒரு வேலை பார்த்துக்கொண்டு வேலையில் முன்னேறுவதிலும், சாசுவின் வளர்ப்பிலும் தன் கவனத்தையெல்லாம் திருப்பலாம். ஆனால் அம்மாதிரியான தனிமை வாழ்க்கையில் கசப்புக் கறை ஏறாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். முன்னுக்கு வர வேண்டும் என்ற மோகத்தில் ஆசைகளைக் கரைக்க முடியலாம்; வேலையின் களைப்பில் இன்பக் கிளர்ச்சிகள் எழாமல் இருக்கச் செய்யலாம். எப்படியும் மனம் வரண்டு போய்விடக் கூடாது. பட்டுப் போன செடி மாதிரி வாழும் பெண்ணைவிட விரசமான காட்சி உலகில் கிடையாது. இது முதல் வழி.

அல்லது மறு விவாகம் செய்து கொள்ளலாம். இதற்கு சட்டமே இடம் கொடுக்குமா என்பது சந்தேகம். மாலதியின் விவாகம் ரத்து செய்யக் கூடியதா? இல்லாவிடில்... நினைக்கவே என்னமோ கூச்சமாக இருக்கிறது! படித்த படிப்பெல்லாம் எங்கே? முற்போக்கான எண்ணமெல்லாம் எங்குபோய் ஒளிந்து கொண்டன? ஏன் இந்த பயங்கொள்ளிக் கூச்சம்?..இல்லாவிடில், ஏற்ற வேலையுடன், விவாகம் என்ற சடங்கிற்குப்புறம்பான ஒரு தொடர்பு..அது முடியும் என்று தோன்றவில்லை... அம்மாதிரியானதோர் தொடர்பு ஏதேச்சையாக, அதுவாக நேர்ந்தால் பாதகமில்லை. இருவர் சந்தித்து, பிடித்திருந்து, பரஸ்பர வாஞ்சை ஏற்பட்டு, ஆனால் சந்தர்ப்பங்கள் விவாகத்திற்கு இடம் கொடாவிட்டால் அம்மாதிரியான ஒரு தொடர்பு விரும்பத்தக்கதாகக்கூட இருக்கலாம். ஆனால் ஒரு பிரச்னைக்கு பரிகாரமாக அம்மாதிரி ஒரு தொடர்பை தேடுவது, நாசூக்கற்ற, பண்பற்ற காமச் செயலாகிவிடும்.

பின்? மூன்றாவது வழி, நடந்ததை மறந்துவிட்டு ராகவனுடன் போய் வாழ்வது தான். அதற்கு மாலதியின் சுயமரியாதை இடம் கொடவில்லை. இந்தப் பிரச்னை அவனுக்கும்தான் உண்டு. ஆனால் அவன் புருஷன். ஏதோ ஒருவிதத்தில் அவன் தன் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வான். இருந்தாலும் அவனுக்கு அக்கறையில்லையென்றால் அவளாக எப்படி அவன் காலில்போய் விழுவது? ஒரு வேளை அவனும் இம்மாதிரி தான் நினைக்கிறானோ? ராகவனுக்கும் நடந்ததை மறந்துவிட்டு மாலதியுடன் வாழ மனமிருக்கலாம். மாலதியிடம் அதை பிரஸ்தாபிக்க அவன் சுயமரியாதை இடம் கொடவில்லையோ என்னவோ? இம்மாதிரி இருவரும் தத்தம் மனதில் எண்ணங்களை அடக்கி வைத்திருந்தால் என்ன பயன்? யாராவது ஒருவர் தைரியமாக முன்வந்து கேட்கவேண்டும்... அப்படி மாலதியே முன் வந்து ராகவனைக் கேட்டாலும், அவனும் அவள் அப்படி கேட்கவே காத்திருந்தாலும் அது முடிகிற காரியமா? அப்பா என்ன ஆவது? அவரைக் காட்டிக் கொடுத்துவிட்டு ஓடி விடுவதுபோல் அல்லவா இருக்கும். அதுவும் இப்பொழுது அவரது தள்ளாத வயதில், தனிமையில். அம்மாகூட இல்லை; மாலதியும் அவரை திரஸ்கரித்துவிட்டு ராகவனுடன் சேர்ந்து கொண்டால் அவர் மனமுடைந்து போய் விடுவார். மாலதியின் சுயமரியாதை போகட்டும். அவளது தகப்பனாரது கௌரவம் என்ன ஆவது? அவர் செய்தது தவறாக இருக்கலாம்; ராகவனது கூற்று சரியானதாகவே இருக்கலாம். இருந்தாலும், வயதான அவர், அவனிடம் போய் மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டுமா? அவனல்லவா வந்து, "மாமா, முன் கோபத்தில் ஏதேதோ சொல்லிவிட்டேன்...மறந்து விடுங்கள்", என்று சொல்லவேண்டும்...அன்றே ராகவனுடன் போய்விட்டிருந்தால் அது வேறு. தகப்பனாரிடமிருந்து பெறக்கூடிய நலன்கள் யாவற்றையும் வாங்கிக்கொண்டு இன்று அவரை அம்பலத்தில் அனாதையாக விட்டுவிட்டுக் கணவனுடன் நட்புக் கொண்டாடுவது நன்றி கெட்டச் செயலாகாதா?

அப்படியென்றால் முதல் வழி ஒன்று தான் உண்டா? உலர்ந்து காய்ந்துபோன குச்சியாகத்தான் மாலதி வளரவேண்டுமா? ஏன் உலரவேண்டும்? ஏன் காய்ந்து போகவேண்டும்? வாழ்க்கையில் இல்லறம் ஒன்றுதானா சுகம்? இல்லை; சுகங்கள் எத்தனையோ லக்ஷம். இனிய இன்பங்கள் ஆயிரமாயிரம். ஆனால் இந்த ஒரு மூலாதார அனுபவம் இல்லாவிட்டால் வாழ்க்கையில் பரிபூரணத்துவம் உண்டா? பால்ய சன்யாசம் முக்திக்கு வழி காட்டலாம். ஆனால் அது மூளி வாழ்க்கை. அதில் நிறைவு கிடையாது.

"என்ன மாலதி, இங்கு இத்தனை நேரம் தனியாக உட்கார்ந்து என்ன யோசித்துக்கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டுக்கொண்டே மாலதியின் தகப்பனார் அங்கு வந்தார்.

"ஒன்றும் இல்லை, அப்பா.."

"ஐந்து வருஷங்களுக்கு முன் ராகவனைக் கேட்ட கேள்வியையே உன்னையும் கேட்டேன். அது உன்னை இந்த ஆழ்ந்த சிந்தனையில்.."

"என்ன கேள்வி?"

"மாலதி. இந்தக் கிழவனை உன்னால் ஏமாற்றமுடியாது! சரி, வா, புறப்படலாம். மணி எட்டாகப்போகிறது."

"இதோ..."

"நான் கொஞ்சம் ஸென்ட்ரல் ஸ்டேஷனுக்குப்போக வேண்டும். நீயும் வருகிறாயா?"

"ஸ்டேஷனுக்கா? யாரையாவது வழி அனுப்ப..."

"இல்லை. வரவேற்க."

"இப்பொழுது என்ன வண்டி வருகிறது?"

"இன்றைக்கு பாம்பே எக்ஸ்ப்ரெஸ் இரண்டு மணி நேரம் 'லேட்'."

"உன் சிநேகிதர் யாராவது வருகிறாரா? சரி, நீ போய் வா. நான் வீட்டுக்குப் போகிறேன்."

"அப்படியென்றால் சுசீலா உன்னை வீட்டில் விட்டுவிட்டுப் போகிறேன் என்றாள்..காத்திருப்பாள், வா."

மாலதி வீடு திரும்பியபோது முன் ஹாலில் ஒரு மூலையில் உட்கார்ந்து சாசு அழுது கொண்டிருந்தாள். ஓடிப் போய் அவளை எடுத்து அணைத்துக் கொண்டு, "என்னம்மா, சாசு ஏன் அழுகிறாய்? நீ ஏன் இன்னும் தூங்கவில்லை.' என்று கொஞ்சினாள்.

அழுகை சற்று பலத்தது. பதில் இல்லை.

"ஏம்மா? என்ன வேண்டும், சொல்!"

"ஒண்ணுமில்லை."

"சொல்லம்மா...ஏன் அழுகிறாய்?"

"சரோஜா மாதிரி..."

"உனக்கும் ஒரு நாய்க்குட்டிதானே? நாளைக்கே வாங்கித் தருகிறேன்."

"அவள் என்னைக் கேலி செய்கிறாள்."

பாத்ருடுவின் "பாலசஞ்சீவினி" REGD

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி வியாதிகளை சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் அசல் விஜயநகரம் மருந்து. எல்லா மருந்து கடைகளிலும் கிடைக்கும். போலிகளைக் கண்டு ஏமாறாதீர்

Dr. பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்.

19. தெற்குமாட வீதி, மயிலாப்பூர், மதராஸ்-4. போன்: 71354.

கும்பகோணம் கிளை: 7, சாரங்கபாணி கோவில் கீழ வீதி.

"ஏன்? உனக்கு நாய்க்குட்டி இல்லை என்றா?"

"ஊஹூம்..." என்று சொல்லிவிட்டு அம்மாவை இறுகக்கட்டிக்கொண்டு விக்கி விக்கி அழ ஆரம்பித்து விட்டாள் சரசு.

"இப்படி அழலாமா? என்ன சொன்னாள் சரோஜா?"

"அவள் மாதிரி எனக்கும் அப்பா வேணும்."

மாலதிக்குத் தூக்கிவாரிப் போட்டது. என்ன சொல்வது என்று தெரியாமல் திணறினாள். சரசு அழுது கொண்டே தனது இனிய கொச்சையை வாரி இறைத்துக்கொண்டிருந்தாள்.

"அவ அப்பா அவளை 'சரோ, சரோ' ன்னு கூப்பிடுவாளாம். ஸைகிள்லே வச்சு தள்ளிண்டு போவாளாம். பீச்சுக்கு அழைச்சுண்டு போயி கையை பிடிச்சுண்டு அலையிலே நிக்கவைப்பாளாம்.." என்று சொல்லிக்கொண்டே போனவள், "நாளைக்கு அவ அப்பா வரப்போரா ஊரிலேர்ந்து..எனக்கு மட்டும் அப்பா இல்லை..." என்று சொல்லிவிட்டு ஓவென்று அலறி அழ ஆரம்பித்து விட்டாள். மாலதி என்னென்னவோ சமாதானம் சொல்லிப் பார்த்தாள்; பிரயோஜனமே இல்லை. அழுது கொண்டே தாயார் மடியில் தூங்கிவிட்டாள் சரசு. தூங்கும் குழந்தை மடியிலிருந்தபடி, அங்கேயே, அப்படியே உட்கார்ந்த வண்ணம் மாலதி வெகு நேரம் யோசித்துக்கொண்டிருந்தாள்.

அவள் எவ்வளவோ சிந்தித்து சிந்தித்து செய்த முடிவெல்லாம் இந்த சின்னஞ்சிறு குழந்தையின் ஒரு வார்த்தையில் பொடியாகிவிட்டன. மாலதி கணவனின்றி கைம்பெண் வாழ்க்கை வாழப் பார்க்கலாம். ஆனால் சரசுவைத் தகப்பனரின்றி வாழச் செய்ய மாலதிக்கு உரிமையுண்டா? உரிமையில்லை. ஆனால் தன் குழந்தையின் தேவையை, ஆசையைப்பற்றிச் சற்றும் நினைக்காது, தன் கடமைகளை மறந்து, சுய திருப்திக்காகத் தானாக சிருஷ்டித்துக்கொண்ட ஒரு இலட்சியத்தைப் பின்தொடர்ந்து சென்றுகொண்டிருக்கும் ராகவன், சரசுவின் தகப்பனாக வாழ அருகதையுள்ளவனா? அப்பப்பா . . என்ன கஷ்டம். இதையெல்லாம் இந்தப் பச்சைக் குழந்தைக்கா சொல்ல முடியும்.,...

டெலிபோன் மணி அடித்தது. விட்டு விட்டு அடித்துக்கொண்டிருந்தது. சற்று நேரம் பார்த்துவிட்டு வைத்து விடுவார்களோ என்று எதிர்பார்த்தவண்ணம், மெள்ள மடியில் தூங்கிக்கொண்டிருந்த குழந்தையை எதிரே இருந்த சாய்வு நாற்காலியில் விட்டுவிட்டு, அடுத்த அறைக்குச் சென்றாள் மாலதி. கூப்பிடுவது யாரோ, ஆனால் லேசில் ஏமாற்றமடையும் சுபாவம் அல்ல. டெலிபோன் இன்னும் அடித்துக்கொண்டிருந்தது.

"ஹலோ!"

"மாலதியா?"

"ஆமாம்."

"குரல் அடையாளம் புரியவில்லையா?"

"புரியாமல் என்ன!"

"யார் சொல்லு பார்க்கலாம்!"

இது என்ன குறுக்கு விசாரணை.

"குரல் கேட்ட குரல் . . நினைவிருந்த.. பெயர் ஞாபகம் இல்லை."

"தெய்வாதீனம். பெயர் மட்டும் ஞாபகம். இருப்பதைவிட.."

அந்தச் சிரிப்பு! அதுவும் கேட்ட சிரிப்பு. இது யார் இந்த அசந்தர்ப்ப குடுக்கை.. பாவம், அவருக்கு மாலதியின் மன நிலை எப்படித் தெரியும்...

"யார் நீங்கள்? . . அதைச் சொன்னால் நானும் சிரிக்க முடியும் . ."

"ராகவன்."

"யார்?"

"ராகவன்."

". . ."

"என்ன காதையே நம்ப முடியவில்லையா?"

". . ."

"என்ன மாலதி? எதிர்பாராததின் அதிர்ச்சியா, இல்லை எனது பழைய தவறை . இன்னும் நீ மன்னிக்கவில்லையா?"

"தவறு என்னுடையதுதான்."

"அப்படியென்றால் நான் வரலாமா? உன்னுடன் நான் கொஞ்சம் பேசவேண்டும்."

"நானும்தான் உன்னுடன் ரொம்ப பேசவேண்டும்."

"பத்து நிமிஷம் பொறுத்திருக்க முடியுமா? இங்கிருந்து வர..."

"நீ எங்கிருந்து பேசுகிறாய்?"

"ரயில்வே ஸ்டேஷனிலிருந்து..."

"எக்மோரா? ஸெண்ட்ரலா? நான் அங்கு வருகிறேன்..."

"வேண்டாம், நான் வருகிறேன்."

"இல்லை, ராகவன். அப்பா வந்தால்.."

"கோபித்துக்கொள்வாரோ? கணவனும் மனைவியும் சந்தித்துப் பேச பெரியோர் அனுமதி தேவையா?... மாலதி நீ இன்னும் சிறு குழந்தையா..."

"குழந்தையாயிருந்தால் பிடித்தது வேண்டுமென்று மற்றவை யாவற்றையும் மறந்து ஓடி வருவேன்..."

"அன்று அழைத்தும் ஓடி வரவில்லையே..."

"அன்று பிடித்தது எது என்றுகூடத் தெரியாத..."

"பச்சைக் குழந்தை!"

"கேலி செய்யாதே, ராகவன். நீ வயதிற்கு முன் முதிர்ச்சியடைந்தவன். உன் சுபாவம் அப்படி. உன் சந்தர்ப்பங்களும் இளமையில் முதிர உதவின. நான் கொஞ்சம் மந்தம். என் மனம் சற்று தாமதமாகத்தான் முதிர்ச்சியடைந்தது..."

"அதற்கு உன் சந்தர்ப்பங்கள் காரணம்.. உனக்கு மந்தமும் இல்லை.. மாந்தமும் இல்லை.. சரி, எவ்வளவு நேரம் இப்படி டெலிபோனில் பேசிக்கொண்டிருக்கப் போகிறோம்.. நான் வீட்டிற்கு வந்த பிறகு பேசலாம். எனக்கு வேறு பசிக்கிறது."

"ராகவன், நான் சொல்வதைக் கேள். நான் வருகிறேன். நாம் எங்காவது ஹோட்டலில் சாப்பிட்டுவிட்டுப் பிறகு..."

"ஏன், நான் வீட்டிற்கு வரக் கூடாதா?"

"ராகு.. இப்படி முன்னெச்சரிக்கையில்லாமல் நீ வந்து நின்றால் அப்பா..."

"உன் கவலையெல்லாம் அப்பாவைப் பற்றித்தான்."

"நானில்லாவிட்டால் அப்பாவைப் பற்றிக் கவலைப்பட வேறு யாருண்டு... தயவு செய்து நான் சொல்கிறபடி செய்... இப்பொழுது நான் வருகிறேன். நாம் பேச எவ்வளவோ இருக்கிறது. பிறகு நாளைக்கு நீ வருவதற்குள் அப்பாவிடம் நான் எல்லாவற்றையும் சொல்லி அவரைக் கேட்டு வைக்கிறேன்..."

"அவர் வரக் கூடாது என்று சொல்லிவிட்டால்?"

"அப்படிச் சொல்ல மாட்டார். நான் சொல்ல விரும்புவதைக் கேட்ட பிறகு அப்படிச் சொல்லவே மாட்டார். ராகு, அப்பா ரொம்ப மாறியிருக்கிறார். முன்பிருந்த விறைப்பும், வணங்காமுடி அகங்காரமும் போய்விட்டன. அதுவும் அம்மா போனதிலிருந்து.."

"எனக்கும் தெரியும், மாலதி.."

"உனக்கெப்படித் தெரியும்... நான் டெலிபோனை வைத்துவிடப் போகிறேன்.. அங்கேயே இரு. நான் வருகிறேன்.."

"மாலதி . . ஒரு நிமிஷம் . . மாமா உன்னுடன் பேச வேண்டுமாம்!"

"என்ன?"

"என் மாமா, உன் அப்பா, உன்னுடன் ஏதோ பேச வேண்டுமாம்..."

"அப்பா அங்கு உன்னுடனா இருக்கிறார்?"

"அதேதான் சொல்கிறேன்."

"அப்பாவை நீ அங்கு சந்தித்தாயா?"

"என்னை சந்திக்கத்தான் வந்தார். நீதான் வரமாட்டேன் என்றுவிட்டாயாம்...."

என்று எண்ண வேண்டியதில்லை. கற்பனைக் கண்களைத் திறந்து சொல்லாத விஷயங்களைக் காணுறிக்கத் திணறவேண்டியதில்லை. வரதராசனாரின் நாவலில் வார்த்தைகளில் சொல்லாத விஷயம் என்று ஒன்றுமே கிடையாது. இந்த அம்சம் முக்கியமாகப் பலருக்கும் பிடித்திருக்கிறது என்பதில் வியப்படைய ஒன்றுமில்லை.

கரித்துண்டின் கதை அப்படி ஒன்றும் திருப்பங்கள் இல்லாத நேரான கதையல்ல. ஒரு கரிக்கட்டியை வைத்துக்கொண்டு ஒருவன் நடைபாதையிலே அழகழகாகச் சித்திரங்கள் தீட்டுகிறான். கூடுகிற கும்பலில் சிலர் வியந்து, அவனுக்கு ஏதாவது கொடுத்துவிட்டுச் செல்கிறார்கள். அந்தக் கலைஞன் நொண்டி. அவனைப் பின்பற்றிச் சென்று அவனிருப்பிடம், அவன் சேர்மானமான பொன்னி, பொன்னியின் முதல் கணவனின் புதல்வன், அக்கம்பக்கத்தார் முதலியவர்களை அறிந்து கொள்கிறார் கதையைச் சொல்லும் சாதாரண மனிதர். வடநாட்டுப் பெண்ணை மணந்துகொண்டிருக்கும் ஒரு பேராசிரியரும் வருகிறார் இந்த நாவலிலே—கதை சொல்கிறவரின் நண்பர், ஒரு மாணவன்மூலம். இந்த மாணவர் புரட்சிக்காரர். புரட்சி மனப்பான்மையும், அரசாங்கம் கவனியாத பல விஷயங்கள்பற்றிக் குற்றச்சாட்டுகளும் அங்கங்கே அள்ளித் தெளிக்கப்பட்டிருக்கின்றன. பல சாதாரண தினசரி விஷயங்கள்பற்றியும், அவை எப்படித் தீரவேண்டும் என்பது பற்றியும் தன் பாத்திரங்கள் மூலமாக ஆசிரியர் ஓரளவுக்கு அழுத்தமாகவே அறிவுறுத்துகிறார்.

கரித்துண்டுக் கலைஞன் வாழ்ந்த குப்பத்திலே வெள்ளம் வந்து ஏழை ஜனங்கள் வேறிடம் தேட நேரிடுகிறது. கதை சொல்பவரும் கலைஞரும் நெருங்குகிறார்கள். காரணமில்லாமலே அவர்கள் இருவரும் சிறைப்பட்டு, ஓரே லாக்அப்பில் இருக்க நேரிடுகிறது. அன்று இரவில் கலைஞர் மனம் திறந்து, தன் பழைய வாழ்க்கை பூராவையும் உணர்ச்சி வெள்ளமாகக் கதை சொல்பவர் காதில் கொட்டுகிறார். வங்காளக்காரர் அவர். மேன்மையான ஸ்திதியிலிருந்து, ஆசைப்பட்டுக் கல்யாணம் செய்துகொண்ட காதலியுடன் வாழும்போது, கால்களை இழந்து ஆஸ்பத்திரியில் இருக்கிறார். அவரை மணம் செய்துகொண்ட காதலி, அவரைத் திரும்பியும் பார்க்கவில்லை. மனமுடைந்து வெளியேறித் தென்னாடு வந்து, தமிழ் கற்றுக்கொண்டு, தமிழர்களிடையே ஏழையாக வாழ்ந்து, பொன்னியின் ஆதரவிலே அமைதி பெற்றவர் கரித்துண்டுக் கலைஞர்.

புரட்சிக்காரர் குமரேசன் அடிபட்டு ஆஸ்பத்திரியில் கிடக்கிறார். ஏழை பாழைகளுக்குக் கல்வியறிவு புகட்டத் துணிந்ததற்காக அவருக்குக் கிடைத்த தண்டனை அது. பேராசிரியரும் வந்து குமரேசனைப் பார்க்கிறார்—புரட்சி செய்வது சரியல்ல என்று தன் கட்சியை வலியுறுத்த அவருக்கு ஒரு சந்தர்ப்பமாக விட்டது குமரேசன் அடியுண்டது. ஆனால், அதைவிட முக்கியமான விஷயம் காத்திருக்கிறது. பேராசிரியரின் வங்காளி மனைவி, அவருக்கு ஒரு நீண்ட கடிதம் எழுதி வைத்துவிட்டு, எங்கேயோ போய்விட்டாள். அவள்தான் கரித்துண்டுக் கலைஞனின் பூர்வாசிரமத்தில் அவன் மனைவியாக இருந்த நிர்மலா.

இவ்வளவுதான் கதை. சித்தூர் எல்லைக் கிளர்ச்சி, கைத்தறி நெசவாளர் நிலை, பம்பாய்த் தமிழர் நிலை முதலியனவும் அங்கங்கே விவரிக்கப்படுகின்றன. முகவுரை எழுதியுள்ள சு. வேங்கடசாமி அவர்கள் சொல்வதுபோல, பொதுமக்களிடையே அரசியல் அறிவைப் பரப்ப இப்பகுதிகள் பெரிதும் பயன் தரலாம். லட்சிய அரசியல்பற்றி ஆசிரியர் கொண்டுள்ள கருத்துக்கள் பெரும்பாலோருக்கு – அதுவும் பெரும்பாலான தமிழ் வாசகர்களின் மனப் பண்புக்கு ஏற்றதாக இருப்பது இந்த நாவலின் தனிச் சிறப்பு என்று சொல்லலாம். கதாபாத்திரங்களில் சிலரை ஏழைகளின் பிரதிநிதிகளாகவும், சிலரை செல்வந்தர்களின் பிரதிநிதிகளாகவும் வைத்து, அவர்கள் வாய் மூலமாகவே பலவிதமான கருத்துக்களை எடுத்துக் கையாண்டிருக்கிறார், ஆசிரியர். "கலையின் தன்மை, கலைஞர் வாழ்வு ஆகியவற்றை அழகுணர்ச்சி கெடாமல் உள்ளது உள்ளபடியே எடுத்துக் கூறும் நோக்கத்தோடு இக்கதை உருவாகியுள்ளது" என்று சு. வேங்கடசாமி கூறுகிறார். அது எவ்வளவு உண்மை என்பது படிப்பவர்களுக்குத் தெளிவாகவே விளங்கும். இவைகளுக்கும் மேலாக ஒரு அம்சம் கரித்துண்டில் காணப்படுகிறது—அதுதான் திருக்குறளின் சிறப்புகழ். ஒரு இடத்தில் 'வேண்டாமை செல்வம்' என்கிற திருக்குறளைச் சொல்லி, சொற்களின் பொருளையும் விளக்கினார் கதை சொல்பவர். அமைதியாகக் கேட்டார் (கரித்துண்டுக் கலைஞர்). பெருமூச்சு விட்டார். "எனக்கு இப்போது [illegible]றும் என் வாழ்க்கையில் குறையாகத் தெரியவில்லை. இந்த நாட்டுக்கு வந்து வாழ்ந்த பிறகும், இந்த மொழியைப் பேசக் கற்றுக்கொண்ட பிறகும், இந்த உயர்ந்த புத்தகத்தைப் படிக்காமல் செத்துப்போவேனே என்று கவலைப்படுகிறேன். இதுதான் குறையாக இருக்கிறது' என்று கைகூப்பினார். அவர் திருக்குறளைப் படித்துக் கடைத்தேறினாரா என்பது கதையில் சொல்லப்படவில்லை. படித்திருப்பார்—அதனால் கடைத்தேறித்தேறியுமிருப்பார் என்று தமிழர்களாகிய நாம் பெருமையுடன் நம்பலாம்.



கதாநாயகனை கலைஞன் மட்டும்தான் திருக்குறளைப்பற்றி அறிந்துகொண்டான் என்பதில்லை. கலைஞனின் பூர்வாசிரமத்தில் அவன் மனைவியாக இருந்த நிர்மலா, பிறகு தன்னை ஆதரித்த பேராசிரியரைவிட்டுப் பிரியும்போது எழுதி வைத்த கடிதத்தில் திருக்குறளைப்பற்றிக் குறிப்பிடுகிறாள் என்பது கவனிக்க வேண்டிய விஷயம். "அன்புக்கு அடிமையாகும் பண்பாடு எனக்கு அந்தக் காலத்திலே இன்னது என்றே தெரியாது" என்று எழுதியிருந்தாள் நிர்மலா. "நான் இவ்வளவு திருந்தியிருக்கிறேனென்றால், அதற்கு முதல் காரணம், என்னோடு உள்ளம் கலந்து தமக்கைபோல் பழகிய (பம்பாய்த் தமிழ்ப் பெண்) செந்தாமரை. இரண்டாவது காரணம், அந்த அம்மா கற்றுக்கொடுத்த திருக்குறள். . .செந்தாமரையின் நட்பு எனக்குக் கிடைக்காதிருந்தால், நான் திருக்குறளைப் மதித்துக் கையால் தொட்டிருக்கமாட்டேன். திருக்குறளைப் படித்து அதனிடம் அன்புகொள்ளாமலிருந்திருந்தால், பம்பாயில் உங்களுடைய சொற்பொழிவைக் கேட்க வந்திருக்கமாட்டேன். . .திருக்குறளைக் கற்று அப்போதே நான் திருந்திவிட்டேன் என்பது உண்மைதான். . .என் வாழ்க்கையைப் பண்படுத்திய அந்தச் செந்தாமரைதான் இன்று நான் படும் மனநோய்க்குக் காரணம். எனக்கு வாழ்க்கையின் உண்மைகளை உணர்த்திய திருக்குறள்தான் என்னுடைய நெஞ்சம் என்னைச் சுடுவதற்குக் காரணம்.....திருக்குறள் என்னைக் கோழையாக்கிவிட்டது; குற்றம் செய்தால் இறுமாந்து திரியவிடவில்லை; நினைந்து வருந்தச் செய்கிறது. குற்றம் செய்யாமல் நல்ல வழியில் வாழ்வதற்கு முயலுமாறு தூண்டுகிறது; தனியே இருந்து சிந்திக்கும் பழக்கத்தை வளர்த்து விடுகிறது..... 'தன்னெஞ்சறிவது பொய்யற்க பொய்த்த பின் தன்னெஞ்சே தன்னைச்சுடும்' அந்தக் குறள் இன்னும் என் செவியில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.....மரத்துப் போயிருந்தது என் நெஞ்சம். அது இப்போது மனச்சான்றின் சுடுகைக்கு உரிய உணர்ச்சியுள்ளதாகிவிட்டது...

...மறுபடியும் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். மன்னித்து இரக்கம் காட்டுங்கள். திருக்குறளின் பெயரால் வேண்டிக்கொள்கிறேன். திருந்திவிட்ட பெண் மனம் என்பதை உணர்ந்து ஏற்றுக் கொள்ளுங்கள். 'திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து அறனல்ல செய்யாமை நன்று' " என்று ஒரு குறளுடன் நிர்மலாவின் கடிதம் முடிகிறது.

கரித்துண்டில் பேராசிரியர் வரதராசன் திருக்குறளையே கதாநாயகனாகவும், கதாநாயகியாகவும் வைத்துக் கதையை நடத்தியிருக்கிறார் என்று சொல்லவேண்டும். தமிழன் ஒருவனுடன் ஒருவன் போட்டியிட்டுக்கொண்டு வரதராசனாரின் நாவல்களை வாங்குவதில் வியப்பென்ன இருக்கிறது!

தெய்வச் சொத்து

ராஜ்யஸ்ரீ

பொறி பறக்கும் வெயிலில், கன்னிகா பரமேஸ்வரனின் சின்னஞ் சிறு ஆலயத்தை சுத்தம் செய்து விட்டு வந்து கொண்டிருந்தார் அனந்தராம பட்டர். அன்று மாதாந்தர வெள்ளிக் கிழமை. பரமேஸ்வரிக்கு விசேஷமான தினம். சுற்றியுள்ள பட்டி தொட்டியிலுள்ள தாய்மார்களெல்லாம் சீர் தட்டிய தங்கள் குழந்தைகளை எடுத்துக் கொண்டு சாயந்தரமே கோவிலில் அன்னையின் சந்நிதியில் கூடத் தொடங்கி விடுவார்கள். அத்துடன் இன்று டாக்டர் கைலாசத்தின் மண்டகப்படி வேறு!

அனந்தராமபட்டர் கோவில் கதவை இழுத்து மூடி விட்டு இரும்பு அளிக் கதவின் வழியாக உள்ளே பார்த்தார். சரவிளக்கின் ஒளியில் அன்னை புவனேஸ்வரி புவிகாக்கும் புன்னகை புரிந்து கொண்டிருந்தாள். அந்த அன்னையின் கருணையினால்தான் தன் மனைவி காமேஸ்வரி, ஐந்து வயதான குழந்தை தருமுவுடன் தானும் வயிற்றைக் கழுவுகிறோம் என்ற நினைவு வந்ததும் அன்னையை பய பக்தியுடன் பார்த்தார் பட்டர். டாக்டர் அணிவிக்கும் பட்டாடையுடன், இரவில் அன்னை மந்தஹாஸம் புரியப்போகும் காட்சி அவர் மனக்கண் முன் விரிந்தது.

இரவில் எல்லாம் முடிய மணி இரண்டு அல்லது மூன்று ஆகலாம். முதல் நாள் இரவில் கோவிலில் வேலை நெட்டி வாங்கியதால் பட்டரின் கண்களை அமுத்திற்று தூக்கம். சிறிது நேரம் கண்ணயர்ந்தால்தான் இரவில் கண்விழிக்கமுடியும் போலிருந்தது. கோவில் கதவை மூடிக் கொண்டு பங்குனி மாத வெயிலில் அவர் தன் வீட்டுக்கு வந்து கொண்டிருந்தார்.

காலையில் தையற்காரன் கொடுத்துச் சென்ற பட்டுப் பாவாடையின் மீது அவர் நினைவு சென்றது. நல்ல காஞ்சீபுரம் பட்டாலானது அது. கீழே கையகலத்திற்கும் மேலாக ஜரிகை போடப் பட்ட அந்த பட்டுப் பாவாடை அன்னை புவனேஸ்வரிக்கு மிகவும் அழகாக இருக்கும். பார்க்க பதினாயிரம் கண்கள்வேண்டும். அதுவும் அனந்தராம பட்டரின் அலங்காரமென்றால் தனிக் கவர்ச்சிதான். கூட்டத்திற்கு கேட்க வேண்டாம்!

டாக்டர் கைலாசம் அவசரமாக அழைத்ததால் பட்டர் அவசரமாக ஓட வேண்டியதாயிற்று. பாவாடையை பிரித்துக் கூடப் பார்க்காமல் அலமாரியில் வைத்து விட்டு அவர் பரக்க பரக்க ஓடினார். டாக்டருக்கு ராத்திரி எட்டு மணிக்கு மேல் ஒரு கேஸாம். வருகிற நேரம் நிச்சயமில்லையாம். எப்படியும் பத்து, பதினொரு மணிக்குள் வந்து விடுவதாகக் கூறத்தான் அவர் பட்டரை அழைத்திருந்தார். இப்பொழுது அவரைப் பார்த்து விட்டுத்தான் அனந்தராம பட்டர் கோவிலுக்கும் போய் விட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தார்.

தெருவின் முனை திரும்பியதுமே வீட்டினெதிரே டாக்டரின் கார் நிற்பதைப் பார்த்து விட்டார் பட்டர். திடீரென்று டாக்டரின் கார் அவர் வீட்டை நாடிவந்ததன் காரணம் புரியவில்லை. காரிலிருந்து எவரும் இறங்கியதாகவோ அல்லது ஏறியதாகவோ தெரியவில்லை. ஒரு நிமிஷ நேரம் நின்று விட்டு கார் புழுதியைக் கிளப்பிக்கொண்டு போய் விட்டது.

அனந்தராம பட்டர் தடதட வென்று ஓடி வந்து வீட்டினுள்ளே நுழைந்தார். அவர் மனைவி காமேஸ்வரி முற்றத்தில் அரிசி களைந்துகொண்டிருந்தாள். தருமுவைக் காணவில்லை. டாக்டர் உள்ளே வந்து சென்றிருப்பதாக எந்த வித அறிகுறியும் இல்லை.

"டாக்டர் வந்தாரா, காமு?" என்று கேட்டார் பட்டர்.

"இல்லையே!" என்றாள் காமேஸ்வரி.

"அவர் கார் வாசலிலே நின்னுதே?"

"உள்ளே வரலையே! அவாளெல்லாம் நம்மகத்துக்கு வர்ரவாளா என்ன?" என்று கேட்டாள் காமேஸ்வரி.

பட்டர் காலைக் கழுவிக் கொண்டு ஊஞ்சலில் வந்து உட்கார்ந்து கொண்டார். காமேஸ்வரி ஒரு கிண்ணத்தில் மோர் தீர்த்தம் கொண்டு வந்து அவரருகில் வைத்து விட்டு நின்றாள்.

"தருமு எங்கே, காமு?"

"வாசல்லேதானே நின்னுண்டிருந்தா!"

"காணோமே?" என்றார் பட்டர்.

"அடுத்தகத்துக்கு போயிருப்பாள்!" என்றாள் காமு.

"ஏது, ஏதாவது விசேஷமா? குழந்தை படி இறங்க மாட்டாளே!" என்று கேட்டார் பட்டர்.

காமேஸ்வரிக்கு சிரிப்பு வந்தது. அவர் ஒன்றும் அறியாதவர் போல் நடிப்பதாகத் தோன்றியது அவளுக்கு.

"பாவாடை ரொம்ப நன்னாயிருக்கு!" என்றாள் அவள்.

"நீ பாத்தியா காமு?"

"ஆமாம்!"

"நன்னாயில்லே?"

"பொம்மனாட்டிகள்தான் பார்த்துப் பாத்து வாங்குவா! நீங்க என்னடான்னா அவாளையெல்லாம் போயிட்டு வாங்கடின்னு தூக்கி அடிச்சுட்டேள். மஞ்சள் கலரும் கையகல ஜரிகையும் புகழாதவா கிடையாது. ரொம்பவும் அம்சமாயிருக்கு!"

"விலே எம்புட்டுத் தெரியுமோ காமு?" என்று கேட்டார் பட்டர். விலையைக்கூறி அவளைத் தக்கு முக்காடச் செய்ய வேண்டும் என்ற ஆசை அவருக்கு.

"நான் என்னத்தைக் கண்டேன்?" என்றாள் காமேஸ்வரி.

"நாப்பத்தெட்டு ரூபா ஏழணா மூணு தம்பிடியாக்கும்!" என்றார் பட்டர்.

"அம்புட்டு ரூபாயா?"

"அப்பத்தானே நன்னாயிருக்கும் காமு!"

"ஆனாலும் அதிகம்தான்! ஆசைக்குச் செய்ய வேண்டியதுதான். இவ்வளவு ரூபாய் செலவழிப்பாளோ! இரண்டு மாதச் செலவு!" என்றாள் காமேஸ்வரி.

"நம்ம பணமாடி?" என்று கேட்டார் பட்டர்.

"பின்னே?"

"டாக்டருடையது!"

"டாக்டருடையதா?"

"ஆமாம்!"

"கடன் வாங்கினேளா?"

"நானா?"

"பின்னே ஏது பணம்?.. சமைச்சு போட்டதுக்குத்தான் அன்னைக்கு கூரங்குப் பிடியா பதினைஞ்சு ரூபாய் டாக்டராகத்து மாமி கொடுத்துட்டுப் போயிட்டாளே"! என்று கேட்டாள் காமேஸ்வரி.

"நீ என்ன கேக்கறே காமு?"

"நீங்க என்ன சொல்றேள்?"

"பாவாடை நமக்கில்லே காமு! கன்னிகா பரமேஸ்வரிக்கு!"

"அம்மனுக்கா?—?" காமேஸ்வரியின் நாக்கு உலர்ந்து விட்டது.

"ஆமாம்! டாக்டர் பொண்ணு பிருந்தா செத்துப் பிழைச்சுதோ இல்லேயோ, அதுக்காக பரமேஸ்வரிக்கு பட்டுப் பாவாடை வாங்கிச் சாத்தரதாக நேந்துண்டிருந்தார்...."

காமேஸ்வரி சிலேயாகி விட்டாள்.

"இன்னிக்கு மாதாந்தர வெள்ளிக் கிழமை. இன்னிக்கு சந்தனக் காப்பு செஞ்சு பட்டுப் பாவாடையை சாத்தணும்னுதான்.."

காமேஸ்வரி 'உம்' கூட கொட்டாமல் கல்லால் அடித்த சிலே போல் உட்கார்ந்து விட்டாள்.

"நான் மட்டும் பேசிண்டே போறேன். நீயானா எதையோ பறி கொடுத்த மாதிரி உட்காந்திருக்காயே காமு. ஏன், திடீர்னு?" என்று கேட்டுக் கொண்டே ஊஞ்சலிலிருந்து இறங்கி வந்தார் அனந்தராம பட்டர்.

காமேஸ்வரி சிறு குழந்தையைப் போல் பொங்கிப் பொங்கி அழ ஆரம்பித்துவிட்டாள்.

"என்ன காமு?"

"பாவாடை தருமுவுக்கில்லேயா?"

"தருமுவுக்கா?"

"நான் அப்படீன்னு நெனைச்சேன்!"

"நெனைச்சு?"

"அப்பா!.. அப்பா!.. பாவாடை நன்னாயிருக்கப்பா! நேக்கு இது மாதிரி ஒரு சட்டையும் வாங்கித் தரயா?" என்று கேட்டுக் கொண்டே புதுப் பாவாடை மொர மொர என்று சப்திக்க சின்னஞ் சிறு கன்னிகா பரமேஸ்வரியைப் போல் அடி மேல் அடி வைத்து வந்து கொண்டிருந்த தருமுவைக் கண்டதும் பட்டரின் கோபம் கொந்தளித்தது.

"மூதேவி யாருடி உடுத்தினா?"

"அம்மா!" என்றது குழந்தை.

"அம்மாவா?" என்று கேட்டு, குழந்தையின் முன்னால் தொங்கிக் கொண்டிருந்த பாவாடை நாடாவைப் பிடித்து கர கர வென்று இழுத்தார் பட்டர். திடீரென்று இழுபட்ட வேகத்தில் குழந்தை தலைகுப்புற நிலைப்படியில் வந்து மோதியது. மண்டை பிளந்து இரத்தம் கொட்டியது.

குழந்தை சுருண்டு அலறியது.

"நன்னாயிருக்கு நீங்க செய்யறது! நான் செஞ்சதுக்குக் குழந்தையைக் கொல்றேளே!" என்று குழந்தையை வாரி எடுத்தாள் காமேஸ்வரி. குழந்தையின் தலையிலிருந்து ரத்தம் பெருகுவதைக் கண்டதும் "ஐயோ, தருமு" என்று அலறினாள்.

"நன்னா செஞ்சே காமு! மாதம் பொறந்தா நாலு ரூபா காசைப் பாக்கறது குதிரைக் கொம்பா இருக்கு! நாப்பத்தெட்டு ரூபாயிலே பாவாடை வாங்க ஏது சக்தின்னு புத்தி வேண்டாம்!" என்று கூறி, பாவாடையைக் கையிலெடுத்தார் பட்டர். பாவாடையில் இரத்தம் திட்டு திட்டாகத் தேங்கி அவரைப் பார்த்துச் சிரித்தது.

குழந்தையைத் தோளில் போட்டுக் கொண்டு எங்கோ கிளம்பினாள் காமேஸ்வரி. "தெய்வமும் குழந்தையும் ஒண்ணும்பா! யாருக்குன்னு சொல்லாதது உங்க குத்தமா, என் குத்தமா, கொழந்தையுடைய குத்தமா? ஆசையா கேட்டிண்டிருந்தாளே, வாங்கியிருக்கேளாக்கும்னு நெனைச்சேன்!" என்று கூறிக் கொண்டே வீதியிலிறங்கி நடந்தாள் காமு.

அனந்தராம பட்டர் இரத்தக் கறை படிந்த பாவாடையை கையில் எடுத்துப் பார்த்தார். தெய்வத்துக்கு வேண்டுமென்றே அபச்சாரம் செய்வது போலல்லவா ஆகி விட்டது. ஏழேழு ஜன்மமெடுத்தாலும் இந்தப் பாபம் தீராதே. அதைப் பார்க்கப் பார்க்க பட்டரின் மனம் துடித்தது. மாலையில் டாக்டருக்கு என்ன பதில் சொல்வது, ஏது செய்வது, என்ன செய்வது என்று கைகளைப் பிசைந்து கொண்டு உட்கார்ந்து விட்டார்.

டாக்டர் கைலாசம் போகாத ஊருக்கெல்லாம் போய் ஒரு மகளைப் பெற்றார். அவள்தான் பிருந்தா. ஏறக்குறைய தரு

முவின் வயதே இருக்கும். அனந்தராம பட்டர் தினசரி டாக்டர் வீட்டுக்குச் செல்வாராதலால் காமேஸ்வரிக்கும் டாக்டரின் மனைவி மகாலட்சுமிக்கும் பழக்கம் ஏற்பட்டது. மகாலட்சுமியின் அழைப்பின் பேரில் அடிக்கடி காமேஸ்வரி தன் குழந்தை தருமுவுடன் அவள் வீட்டிற்குச் செல்வாள்.

செல்வம் கொழிக்கும் டாக்டர் வீட்டில் சிதறிக் கிடக்கும் பொம்மைகளையும் விளையாட்டுப் பொருள்களையும் கண்ணைக் கவரும் பட்டாடைகளையும் கண்டு தருமு சுவரோடு சுவராக நின்று பெருமூச்சு விடுவாள். விசேஷ நாளன்று பிருந்தா உடுத்தும் பட்டுப் பாவாடையின் மீது தருமுவின் ஆசை விழுந்து விட்டது. பிருந்தா அறியா வண்ணம் அதை தொட்டு தொட்டுப் பார்த்து, தன் ஆசையைத் தீர்த்துக் கொள்வதைத் தவிர தருமுவுக்கு வேறு வழியில்லை. ஆனாலும் பட்டுப் பாவாடை ஆசை அந்தக் குழந்தையின் மனதில் மலையாக வளர்ந்து விட்டது.

"எனக்கு பட்டுப் பாவாடை வேணும்பா!" என்று ஒரு நாள் கேட்டாள் தருமு.

"பட்டுப் பாவாடையா?"

"பாவம், குழந்தை ஆசையாக் கேக்கறா?" என்றாள் காமு.

"உண்மைதான் காமு! ஆசையா கேக்றுன்னு, நாமும் நல்லதா வாங்கிக் கொடுத்தாதானே நன்னாயிருக்கும்? பதினைஞ்சு ரூபாயாவது ஆகாதோ?" என்று கேட்டார் பட்டர்.

இது நடந்து மூன்று மாதங்களாகி விட்டன. பட்டர் கோவிலில் கிடைக்கும் பணத்தைச் சேர்த்து வைப்பதாகவும் அது கணிசமான அளவில் வந்ததும் குழந்தைக்கு பட்டுப் பாவாடை எடுக்கப் போவதாகவும் கூறிக் கொண்டிருந்தார். அந்தத்தொகை பத்து ரூபாய் நோட்டாக மாறிய பொழுது பாழாய் போன காய்ச்சலொன்று வந்து அதை அவரிடமிருந்து பிடுங்கி ஒரு நாட்டு வைத்தியனிடம் கொடுத்து விட்டது. டாக்டர் ஊரிலில்லை. ஏதோ ஒரு வழக்கு காரணமாக அவர் சென்னை சென்றிருந்தார். இல்லாவிட்டால் வைத்தியம் இலவசமாக நடந்திருக்கும்.

அய்யர் மறுபடியும் தம் சேமிப்பைத் தொடங்கினார். அந்நேரத்தில்தான் டாக்டரின் குழந்தை பிருந்தா திண்ணையிலிருந்து தலை குப்புற கீழே விழுந்து, மண்டை உடைந்து படுக்கையில் விழுந்தாள். செய்தி கேட்டு டாக்டர் சென்னையிலிருந்து ஓடி வந்தார். குழந்தை பிழைப்பதென்பது அபூர்வமாகி விட்டது. இரத்தம் நிறைய வெளியேறியிருந்தது.

டாக்டர் தான் கற்ற வித்தையை எல்லாம் குழந்தையைக் காப்பாற்றுவதில் காட்டினார். அவர் மனைவி மகாலட்சுமி குழந்தையை விட்டு ஒரு நிமிஷம் கூட அந்தப்புறம் இந்தப்புறம் அகலவில்லை. பிறக்குமா பிறக்குமா என்று தவங்கிடந்து பெற்ற ஒரே குழந்தையல்லவா பிருந்தா?

"நீ இப்படியிருந்தா எப்படி மகாலட்சுமி. அப்பா வயதானவர். கண் வேறே தெரியலே.." என்றார் டாக்டர்.

"குழந்தை இப்படி துடிக்கிறப்போ எப்படி நான் இந்த வீட்டில் வளைய வருவேன்?" என்று கேட்டாள் மகாலட்சுமி.

டாக்டர் சிறிது நேரம் யோசித்தார். "ஏன் மகாலட்சுமி, பட்டருடைய சம்சாரத்தை ஒத்தாசைக்கு கூப்பிட்டா வருவாளா? பழகினவா!.. தப்பா நெனைச்சுக்காம இருக்கணும்.." என்றார் டாக்டர்.

அதை ஆமோதித்தாள் மகாலட்சுமி. அடுத்த அரை மணி நேரத்தில் டாக்டரின் கார் அனந்தராம பட்டரின் வாசலில் நின்றது. டாக்டர் தாம் வந்த விஷயத்தைக் கூறினார்.

"நன்னாயிருக்கே நீங்க சொல்றது? மனுஷான்னா ஒருத்தருக்கொருத்தர் உதவி செய்துக்கறத்துக்குத்தான். அதையேன் நான் தப்பா நினைக்கப் போறேன்! ஒரு மாசம் என்ன, குழந்தை எழுந்து நடமாடற வரை காமு உங்க அகத்திலேயே இருக்கட்டும் திவ்யமா!" என்று காமுவையும் குழந்தை தருமுவையும் அவர் காரிலேயே அனுப்பினார் பட்டர்.

பிருந்தாவின் நிலைமை நாளுக்குநாள் மோசமாகிக் கொண்டு வந்தது. இரத்தம் அதிகம் வெளியேறி விட்டதால் போதிய இரத்தம் உடலிலில்லை.

அன்னை கன்னிகா பரமேஸ்வரியை வேண்டிக் கொண்டார் டாக்டர். குழந்தை பிழைத்து எழுந்ததும் பட்டுப் பாவாடை வாங்கி சாத்துவதாக அவர் பிரார்த்தனை செய்து கொண்டார். பெற்ற மனதின் ஓலமோ, அல்லது டாக்டரின் பிரார்த்தனையோ பிருந்தா பிழைத்து விட்டாள்! எழுந்து நடமாடத் தொடங்கவிட்டாள்.



"ரொம்ப நாளாக 'டுலெட் போர்டு தொங்குகிறது. யாரும ஏன் குடித்தனம் வரவில்லை?''

"அந்த வீட்டுக்காரர் இன்ஷ்யூரன்ஸ் ஏஜெண்ட்!''

பதினைந்து நாளில் காமேஸ்வரி தருமுவுடன் வீடு வந்து சேர்ந்தாள். குழந்தை தருமுவுக்கு எவ்வளவு கஷ்டங்கள்! வீட்டிலிருக்கும் பொழுது இருபத்து நான்கு மணி நேரமும் தாயாரின் அரவணைப்பிலேயே இருப்பாள் அவள்! சரியாக உணவும் உறக்கமும் இல்லாமல் முகம் வெளுத்தல்லவா போய் விட்டாள் என்று எண்ணிக் கொண்டார் பட்டர்.

டாக்டரின் மனைவி மகாலட்சுமி ஒரு நாள் மஞ்சள் குங்குமத்தோடு வந்து, பதினைந்து ரூபாயை வைத்து கொடுத்து விட்டுப் போனாள் பலவந்தமாக. அதைக் கொண்டு தருமுவுக்குப் பாவாடை வாங்கலாம் என்று நினைத்தாள் காமேஸ்வரி. ஆனால் வீட்டுக்காரன் கிட்டிமுட்டி மூன்று மாத வாடகையை ஒரே மூச்சில் பிடுங்கிக் கொண்டு போய் விட்டான்!

கடைசி வெள்ளிக் கிழமை நெருங்கியதும் டாக்டர் தன் பிரார்த்தனையை ஈடேற்ற ஏற்பாடுகள் செய்யத் தொடங்கினார். பாவாடைத் துணி எடுத்துக் கொடுத்து பட்டரையே தைத்து வைத்துக் கொள்ளும்படிக் கூறி மேற் செலவுக்கும் பத்து ரூபாய் கொடுத்து விட்டார். இராத்திரி ஜாம் ஜாம், என்று பிருந்தா, மகாலட்சுமியுடன் கோவிலுக்கு வந்து விடுவாள்.

அனந்தராம பட்டர் எழுந்து பட்டுப் பாவாடையை கையிலெடுத்துப் பார்த்தார். இனிமேல் அதை அம்மனுக்குஅணிவிப்பதென்பது நடவாத காரியம். அதைச் செய்யவும் அவர் மனம் இடங் கொடுக்கவில்லை. தருமுவின் தலையிலடிபட்டு அவளை காமேஸ்வரி எடுத்துக் கொண்டு போனதைப் பற்றிக்கூட கவலைப் படவில்லை அவர். அவர் நினைவெல்

சித்தர் கோரோஜனை மாத்திரை

குழந்தைகளுக்கு உண்டாகும் சளி, இருமல், கபம், சுரம் இவைகளுக்குக் கைகண்டது.

40 மாத்திரைகள் கொண்ட புட்டி 1-க்கு விலை அணா 12. (தபாற் செலவு தனி)

விரிவான கேட்லாக் வேண்டுவோர் எழுதவும்.

ஆர். எஸ். பதி அண்ட் கோ

(ஸ்தாபிதம்: 1909)

தபாற் பெட்டி நெ. 99......மதுரை

லாம் பாவாடைப் பிரச்னையைத் தீர்ப்பதிலேயே இருந்தது.

சோமசுந்தரம் பிள்ளையின் ஜவுளிக் கடைக்குச் சென்று அவரிடம் விஷயத்தைக் கூறி, இதே துணியை எடுத்து மாலைக்குள் புதிய பாவாடை தைத்துவிடுவது என்று தீர்மானித்தார் அவர். சோமசுந்தரம் பிள்ளை நல்லவர். இந்த அவசரமான நிலையில் கேட்டால் மறுக்கமாட்டார் என்ற எண்ணத்தோடு அவர் புறப்படுகையில் எதிரே டாக்டர் கைலாசம் வந்து கொண்டிருந்தார். பின்னால் மகாலட்சுமியும் காமேஸ்வரியும்! காமேஸ்வரியின் தோளில் குழந்தை தருமு, தலையில் பெரிய கட்டுடன் சாய்ந்திருந்தாள்!

"ஐயோ, இவர்களை ஏன் காமு அழைத்து வருகிறாள்? குழந்தையை நான் அடித்துக் கொன்று விட்டதாகக் கூறி அவர்களை அழைத்து வருகிறாளா? பாவாடை பாழான படலத்தை அவர்களிடம் கூறிவிட்டாளா? புவனேஸ்வரி! தாயே! இதென்னமா சோதனை?' என்று குழம்பினார் பட்டர்.

"பட்டர்வாள்! கன்னிகா பரமேஸ்வரிதான் கண்கண்ட தெய்வம்னு சொல்லுவா. ஆனால் அதைவிட பிரத்யக்ஷமான தெய்வம் உங்க குழந்தை தருமு. அவள்தான் பிருந்தாவைக் காப்பாத்தினா! நாங்க அவளுக்கு ஏதாவது செய்யணும் என்கிறதை முதல்லே நினைக்காம அம்மனுக்கு பாவாடை எடுத்தோம். அது அன்னைக்கே பொறுக்கலை. தன் பொருளை தருமுவுக்கே கொடுத்துட்டா—" என்று பேசிக்கொண்டே போன டாக்டரின் பேச்சு ஒன்றும் புரியாமல் விழித்தார் பட்டர்.

"பிருந்தா உடம்புலேயிருந்து, ரத்தம் ரொம்பவும் வெளியே போயிடுத்து. தேவையான இரத்தம் செலுத்தினாத்தான் அவ பிழைப்பாள்னு ஆனப் போ உங்க சம்சாரம்—அவாளை சும்மாச் சொல்லப்படாது பட்டர்வாள்—தன் குழந்தையோட இரத்தத்தைக் கொடுக்க சம்மதம் தந்தா. பிருந்தாவும் பிழைச்சா. நாங்கதான் நன்னி மறந்துட்டோம். அம்மனுக்கு உள்ள பாவாடையை சித்தே நேரத்துக்கு முன்னாடி தருமு உடுத்திண்டிருக்கிறதை காரிலே போறப்போ பாத்தேன். அம்மனுடைய எல்லையில்லா கருணையுள்ளம் எனக்கு அப்போத்தான் புரிஞ்சுது. 'கேஸு'க்குப் போயிட்டு திரும்பறதுக்குள்ளே இங்கே எக்கச்சக்கமாயிடுத்து. உங்களுக்கு விஷயம் தெரிஞ்சா சம்மதிப்பேளோ மாட்டேளோன்னுதான் சொல்லலை. இனி தருமுவை நல்ல புஷ்டியாக்கறது எம் பொறுப்பு" என்றார் டாக்டர்.

"அம்மா...தருமு" என்று தன் குழந்தையை வாரி எடுத்து அணைத்துக் கொண்டார், அனந்தராம பட்டர்.

தருமு சிரித்தாள். அன்னை கன்னிகா பரமேஸ்வரியே சிரிப்பது போலிருந்தது பட்டரின் கண்களுக்கு.

★

பெண் மனம்

சுமங்கலி

பெண்களின் மனத்திலிருப்பதை மட்டும் ஒருவராலும் அறிந்துகொள்ளவே முடியாது என்று சொல்வதுண்டு. இது ஒரு வகையில் உண்மையே. ஆனால், குடும்பத்தில் ஒரு கிலேசமோ, துக்கமோ சம்பவிக்கும் சமயங்களில் எவ்வளவுதான் உள்ளழுத்தமான பெண்ணாக இருந்தாலும் மனம் இளகி தன் உள்ளத்தில் இருப்பதையெல்லாம் வெளிக் கொட்டிவிடுவாள். இதற்காக, எப்பொழுது வீட்டில் நெருக்கடியான நிலைமை ஏற்படும் என்று எல்லோரும் காத்திருப்பது சரியாகுமா?

வாழ்வெல்லாம் மனைவியுடன் பழக வேண்டிய கணவன்மார்களுக்குத்தான் அவர்கள் மனதை சரியாக அறிந்து கொள்ள முடியாமல் அவஸ்தைப்பட வேண்டியிருக்கிறது. பெண்களில் இரண்டு ரகங்கள் உண்டு. ஒன்று, ஆண்கள் தங்களுக்கு எல்லாவற்றையும் கொடுத்து, தங்கள் வழியே செல்லவேண்டும் என்ற ஏகபோக உரிமை கொண்டாடும் ரகம்; இன்னொன்று, தங்களை முழுக்க முழுக்கக் கணவனின் வாழ்க்கையில் ஐக்கியமாக்கிக்கொள்ள விரும்பும் 'கல்லானாலும் கணவன்; புல்லானாலும் புருஷன்' என்ற வகை. ஆனால், இதில் என்ன வேடிக்கையென்றால், முதல் ரகத்துப் பெண்கள் எவ்வளவுக்கு எவ்வளவு கணவன்மார்களை அடக்கி ஆள விரும்புகின்றார்களோ, அவ்வளவுக்கவ்வளவு கணவன் பேச்சுக்கு மிகவும் அடங்கியவர்களாகவும், அவர் பேச்சைத் தட்டாதவர்களாயும் இருப்பார்கள். ஏனென்றால், கணவன் அவள் விருப்பத்திற்கு மீறிய அல்லது நேர்மாறான பேச்சையே ஒரு நாளும் எடுக்க மாட்டான். அப்படியே அவன் மனைவியின் விருப்பத்திற்கு மாறாக ஏதாவது சொன்னாலும், அவள் அவன் சொல்லுக்குப் பணிந்து நடப்பதற்காகத் தனது இன்பங்களையும் துறந்து அவள் உள்ளூறப் படும் துன்பத்தை அவனால் பொறுத்துக் கொள்ளவே முடியாது; அவள் மனத்தில் கோபமும், தாபமும் புகைந்து கொண்டிருப்பதை அவனால் சகிக்கவே முடியாது. தானாகவே அவள் செய்வதுதான் சரியென்று ஒப்புக்கொள்வான். அல்லது ஒன்றும் செய்யாவிட்டாலும், அவள் தன் எந்தச் சொல்லிற்கு உடனே சம்மதிக்கிறாளோ, அதற்கு நேர்மாறாகச் செய்யத் தொடங்கிவிடுவான். பெண் உள்ளத்தில் இவ்வளவு நேர் முரணான தன்மைகள் இருப்பதை அறியாதவர்கள் பாடு படு திண்டாட்டம்தான்.

இதற்கு முக்கிய காரணம் என்னவென்றால், அடக்கியாளும் ரகத்தைச் சேர்ந்தவள், தான் அந்த ரகத்தைச் சேர்ந்தவளாக இருப்பதை மறைப்பதற்காகவே, தான் எதை வெகுவாக விரும்புகிறாளோ அதைத்தான் விரும்பாதது போல் நடித்து, அவருக்கு மிகவும் பயந்து, அவரைக் கேளாது ஒன்றுமே செய்யாதவள் போலும் அபிநயித்து, அவர் வாயாலேயே தன் விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்ள எண்ணுவதுதான். உதாரணமாக, தன் தாயார் வீட்டாருடன் தீபாவளிப் பண்டிகை கொண்டாட வேண்டும் என்று எண்ணமிருக்கும். அவர்களைத் தன் வீட்டிற்கு வரவழைத்து அவர்களுக்குத் தன் கையால் வரிசைகளும், பட்சணங்களும் செய்ய வேண்டும் என்ற அவாவும் இருக்கும். ஆனால், தன்து கணவன் முன், தனது மாமியாருக்கும், நாத்தனார்களுக்கும் திருப்தியாகச் செய்து தீபாவளி கொண்டாட வேண்டும் என்றுதான் பேசுவாள். "என் தாயார், பைத்தியக்காரி, இங்கு வந்து எனக்கு உதவிபுரிய அவள் விரும்பினாலும், 'மாப்பிள்ளை வீட்டிற்கு சமயத்துக்கு வந்துவிட்டாள்' என்ற அவப்பேச்சு அவளுக்கு எதற்கு என்றுதான் வேண்டாமென்று விட்டேன்" என்று சொல்லி வைப்பாள். கணவன் புரிந்துகொண்டு தானாகவே அவள் தாயார் வீட்டாரை அழைத்துவிடுவான். இதுதான் இந்த முதல் ரகப் பெண்ணின் சாமர்த்தியம்.

ஆனால், இந்த இரண்டாவது ரகத்துப் பெண் இருக்கிறாளே, அவளுக்குத் தன்னைக் கணவன் அடக்கி ஆளவேண்டும் என்ற விருப்பம்தான். ஆனால், இந்த பயமும், கணவனுடன் அவன் போன வழியே போகவேண்டும் என்ற இச்சையும், வெளியில் காண்பிக்கத் தெரியாதவளாக இருப்பாள். பார்த்தால், எப்போதும் கணவனுடன் சர்ச்சை செய்தவண்ணமாகவே இருப்பாள். "அவர், என் இஷ்டமில்லாமல் எதையும் செய்துவிடுவாரோ, என்னவோ" என்றெல்லாம் ஜம்பம் பேசுவாள். வீட்டில் தனக்குத்தான் எல்லா அதிகாரமும் என்ற மாதிரியில் சொல்லிக்கொள்வாள். இது கோழை தைரியம் பேசுவதைப்போல்தான்! ஆனால் அவள் கணவனோ, 'இவள் இப்படித்தான் கத்துவாள்' என்று சும்மா இருப்பார். ஆனால், கடைசியில், சாவதானமாக அவள் கேட்டவுடன் ஒப்புக்கொண்டவர்போல் நடித்து, அவளாகவே, 'வேண்டாம், வேண்டாம்! உங்கள் இஷ்டப்படியே செய்வோம்' என்று சொல்ல வைப்பார். பார்க்கப் போனால், இந்த இரண்டாவது ரகம்தான் அசடு என்று சொல்ல வேண்டும். அவள் பேசும் பேச்சு அவளுக்கு கெட்ட பெயரைச் சம்பாதித்துக் கொடுப்பதுமல்லாமல், அவள் விருப்பங்களும் ஒரு நாளும் நிறைவேறா.

ஆகவே, பெண் மனத்தை அறிய விரும்பும் யாவரும், அவர்கள் பேசும் பேச்சிலிருந்து அவர்களை அறிந்து கொண்டுவிட்டதாக எண்ணக் கூடாது. அவர்கள் சாதிக்கும் காரியங்களிலிருந்து மட்டுமே அவர்களை எந்த ரகம் என்று அறியலாம்!

நேசமும் தாரமும்

எஸ்.பி.ஹர்ஷன்



ரவி வாயைப் பிளந்த வண்ணம் அதைப் பார்த்துக்கொண்டு நின்றான்.

"சார் இந்த விலைக்கு உங்களுக்குக் கிடைக்கவே கிடைக்காது. ஒவ்வொரு சக்கரத்திலும் பெரிய குடம் பொருத்தப் பட்டு இருக்கிறது . . . ஸ்பாட் அரேஞ்ஜ் மெண்ட் வேறே இருக்கிறது. . ஏறி உட் கார்ந்துவிட்டால் ரோல்ஸ் ராய்ஸ் சவாரி கெட்டுது சார் . . ."

ரவிக்கு அதைப் பார்க்கப் பார்க்க வேட்கை அதிகரித்தது. பச்சை நிறத் தில் 'பளபள'வென்று மின்னிக் கொண்டு பாட்டரி லைட்டும் தானுமாக அதற்கே உரிய லாவகத்துடன் நின்றுகொண்டி ருந்த அதை, உடனே கேட்ட விலையைக் கொடுத்துத் தன்னுடையதாக ஆக்கிக் கொள்ள மாட்டோமா என்று ஏங்கி னான்.

கடைக்காரன் தூண்டில் முள் கனக் கிறது என்பதைப் புரிந்துகொண்டான். "கப்பல் சரக்கு சார் இது. வருகிறபோது கொண்டு வருவார்கள். போகிறபோது விற்றுவிட்டுப் போவார்கள். இந்த வியா பாரத்தில் எனக்கு காலணா லாபம் கிடை யாது. நீங்களும் வேண்டியவர், விற்பவ ரும் வேண்டியவர்.. இரண்டு பேருக்கும் ஏற்படுகிற சந்தோஷம்தான் என் லாபம்."

ரவிக்கு ரொம்ப நாட்களாகவே சைக் கிள் வாங்க வேண்டும் என்று ரொம்பவும் ஆசை. ஒரு நாளைப்போல் பஸ்ஸுக்குக் காத்துக் கிடக்க வேண்டாம். இந்த நேரத்தில் போய்ச் சேருவோம் என்ற நிதானத்தோடு மணிப்படி வீட்டை விட்டுக் கிளம்பலாம். ஞாயிற்றுக்கிழமை களில் பீச்சுக்குப்போக.. நண்பர்களு டன் அரட்டை அடிக்கப்போக.., கடைக் குப்போக எல்லாவற்றிற்குமே சௌக்கி யம்.

சைக்கிள் நல்ல ரக வண்டி. விடுவதற்கும் சுலபமாக இருந்தது. மற்ற சைக்கிள்களைவிட நல்ல வேகத்தில் போக முடிந்தது. சக்கரத்தில் ஏதோ ஸ்பெஷல் அரேஞ்ஜ்மெண்டாம். எப்படி இருந்தால் என்ன? சைக்கிள் நல்ல சைக் கிள்...

ரவிக்கு சபலம் தட்டிற்று.

பாங்கியில் இருநூறு ரூபாய்கள் இருந் தன. . மிச்சப் பணத்திற்கு ஏதாவது ஏற் பாடு செய்தால் இரண்டொரு மாதங் களில் 'போனஸ்' கொடுக்கும்போது சரி செய்துகொள்ளலாமே...

ரவி அன்றைக்குக் காரியாலயத்தில் எந்த வேலையையும் கவனிக்கவில்லை. ஹெட்கிளார்க் முதல் சக குமாஸ்தாக் கள் வரை ஒவ்வொருவரிடமும் சைக்கி ளைப் பற்றி லெக்சர் அடித்தான். துண்டு விழும் நூறு ரூபாயைக் கடனாகக் கொடு க்க யாராவது முன்வர மாட்டார்களா என்று ஜாடையாகச் சொன்னான். நேரிடையாகவும் கேட்டு வைத்தான் . .

பணம் புரள்வதாக இல்லை.

காரியாலயத்தில் புது மானேஜர் வந் திருந்தார். ரொம்பவும் முரட்டு ஆசாமி. சம்பளத்தில் முன் பணமாகக் கேட்டால் கூட சீறி விழுந்து குலைத்துக் குதறித் தள்ளி விடுவார்....

அன்றைக்குச் சாயந்திரம் வீடு திரும் பும்போது ரவியின் முகம் தொங்கிப் போயிற்று. கண்கள் கலக்கத்தின் சாய லைக் காட்டின.

ஆசை மனிதனை எத்தனை அலைக் கழித்து விடுகிறது?

ஃ ஃ ஃ

சுசீலா அவனைக் கண்டதும் பதறிப் போனாள். அவனுடைய நெற்றியில் பரி வோடு கையை வைத்து அவன் வலக் கையைப் பற்றிக்கொண்டாள். "என்ன ன்னா, உடம்பு சரியாக இல்லையா..? ஜுரம் கிரம் வரப்போகிறதா என்ன?"

ரவிக்கு ஒரு மாதிரியான சுபாவம். அவன் எதையாவது நினைத்துவிட்டான் என்றால், வெறி பிடித்தவன் மாதிரி அந்த நினைவின் விளிம்பிலேயே அலை யும் அசட்டுச் சுபாவம் அவனுக்கு. "சுசீலா. எனக்கு உடம்பு கிடம்பு எது வும் இல்லை. கல்லுக் குண்டாகத்தான் இருக்கிறேன்... அது போகட்டும். உன் கழுத்துச் சங்கிலியை கழட்டிக் கொடுப் பாயா மாட்டாயா சொல்லு. நல்ல சைக்

கின் ஒன்று விலைக்கு வந்திருக்கிறது. கைப்பணத்தில் நூறு ரூபாய் குறை கிறது. சங்கிலியை அடகு வைத்துப் பணம் வாங்கிக்கொண்டால் இரண்டொரு மாதத்தில் மீட்டுக்கொள்ள லாம் . ." படபடவென்று கொட்டினன் ரவி.

சுசீலாவின் கண்கள் இமைக்கோடி வரை இரண்டொரு முறை சுழன்று மறு படியும் தாழ்ந்தன. ..

"அவ்வளவு விலையில் வாங்குவா னேன்னு? கைப்பணத்தையும் அடியோடு துடைத்தெடுத்துக் கடனும் பட்டு.. நல் லது பொல்லாதது என்றால் போட்டுப் புரட்டக் கூட முடியாமல் போகுமே! இப்போதெல்லாம் சைக்கிள் ரொம்ப மலி வாமே... மலிவு விலையில் நம்ம சக்தி க்கு ஏற்றதாக ஒன்று வாங்கிக்கொண் டால் நல்லதில்லையா?"

"சங்கிலியைத் தர முடியாதுன்னு சொல்லிவிட்டுப் போயேன். ஏன் இந்தப் பஞ்சாங்கம் பாடறே..."

துக்கம் தோய்ந்த குரலில் சுசீலா மெள்ளச் சொன்னுள்: "உங்களுக்குத் தர முடியாது என்று சொல்ல எனக்கு என்ன உரிமை இருக்கிறது.. ஆனால், ஒரு காரி யத்திற்காகத் தான் தயங்குகிறேன். இன் னும் நாலு நாள் பொறுத்துக்கொள் வானு உங்கள் கடைக்காரன்?"

ரவி சீறினன். "ஏன், கடன் வாங்க மீனம் மேஷம், நாள் நட்சத்திரம் எல் லாம் பார்க்க வேண்டுமோ . . . சீச்சீ! பணம் என்று வந்துவிட்டால் கட்டின பெண்டாட்டியும் கூட வேற்று ஆளாக மாறிவிடுகிறுளே."

தன் மண்டையில் யாரோ ஓங்கி அடித் தாற்போல் இருந்தது, அவளுக்கு! குமு றும் நெஞ்சைச் சாந்தப்படுத்திக்கொள்ள வென அடுக்களைக்குள் தஞ்சம் புகுந் தாள் அந்தப் பேதை!

ரவி அன்றைக்கு இரவு சாப்பிட வில்லை. அவன் சாப்பிடாதபோது சுசீ லாவுக்கு மட்டும் சாப்பிடப் பிடிக்குமா? அவளும் பட்டினியாகவே படுத்துக் கொண்டாள். வெண்கல உருளியில் சாத மும், கல் சட்டியில் குழம்பும் குண்டு வாணலியில் கறியும் அடுப்பிலிருந்து இறங்கின நிலையில் அப்படியே கிடந் தன.

ஃ ஃ ஃ

மறு நாள் படுக்கையை விட்டு எழுந்தி ருந்தபோது சுசீலா தனது கணவன் காரணமில்லாமல் அற்பத்தனமாக நட ந்துகொண்டதை மறந்து போயிருந் தாள். முதல் நாள் இரவு சாப்பிடாமல் படுத்துக்கொண்டதன் விளைவாக உட ம்பு அளவுக்கு மீறி அசதியாக இருந் ததையும் பொருட்படுத்தாமல் பரக்கப் பரக்க அடுப்பை மூட்டினுள்.. ரவிக்குப் பசிக்குமே..! பாவம்.. நேற்றைக்குப் பூராவும் காரியாலயத்தில் உழைத்திருப் பாரே..! என்று அனுதாபம் அவளுக்கு.

காபியைக் கலந்து கணவனிடம் கொடு த்துவிட்டு மெள்ளச் சொன்னுள் சுசீலா:

"இன்றைக்கும் நாளைக்கும் சாமியார் மடத்தில் ராதா கல்யாணம் நடக்கப் போகிறது.. நிஜக் கல்யாணம் போலவே அம்மி மிதிப்பது முதல் பஜனையில் பாடி நலங்கு, ஊஞ்சல் உள்பட நடக்கப் போகிறதாம். அடுத்தாத்து மாமியும் எதி ராளாத்து மாமியும் என்னை வரச்சொல் லித் தொந்தரவு செய்கிறுர்கள்.. போய் விட்டு வரட்டுமா? . . ."

ரவி பேசவில்லை. காபியை சுவைப் பதில் ஊன்றிக் கிடந்தான் அவன்.

"ராத்திரி வரும்போது பத்து மணி ஆனாலும் ஆகுமே.."

"ஆகட்டுமே. பத்து மணி இல்லே பன் னிரண்டு மணி வேண்டுமானாலும் ஆகட் டும். நான் என்ன பச்சைக் குழந்தையா பயப்படப் போகிறேனு... இல்லே வராம லேயே போய்விடுவதானாலும் போய்க் கொள்".

அணு அணுவாகத் தன்னை யாரோ சித் திரவதை செய்வதைப்போல இருந்தது சுசீலாவுக்கு. கேவலம் ஒரு நகைக்கா கவா இத்தனை கொடுமையான வார்த்தை!

ஆனால் சமர்த்து அவள் . . "சாவியை கோடி வீட்டில் கொடுத்து விட்டுப் போகிறேன், வாங்கிக்கொள்ளுங்கள். காபியை கலந்து ப்ளாஸ்கில் கொட்டி உங்கள் மேஜையின் மேல் வைத்து வைக்கிறேன்.."

நேரம் கடந்தது. .சாப்பாடும் தயாரா யிற்று. .கோபமோ தாபமோ ஒரு வேளைக்கு மேல் பட்டினி கிடக்க ரவி தயாராக இல்லை. அவனுல் இருக்கவும் முடியாது.

இலையில் உட்கார்ந்து பருப்புஞ் சாதத் தைப் பிசைந்திருப்பான். வாசலில் கார் ஒன்று நிற்கும் ஓசையும், கதவைப் பட் டென்று திறந்து மூடும் ஓசையும் கேட் டன. அதைத் தொடர்ந்து வாசல் கதவை பிளக்கப் பிளக்க யாரோ தட்டி னுர்கள்.. சுசீலா கதவைத் திறந்தாள்..

வந்தவன் நேராக உள்ளே வந்து விட் டான். பூட்ஸை கழற்றி வராந்தாவில் எறிந்துவிட்டு, அந்த சுவட்டோடு கை கால்களையும் அலம்பிக்கொண்டு ரவிக்குப் பக்கத்திலேயே சென்றுவிட்டான் அவன். ரவிக்கு, ஆஜானுபாகுவான அவனை எங் கேயோ பார்த்தாற் போலவும் இருந்தது; உண்மையான அடையாளமும் விளங்க வில்லை. . .

"ரவி, ரவி! என்னைத் தெரியவில்லை யாடா உனக்கு. இல்லை. நான் ரொம்ப நாட்களாக உன்னைப் பார்க்க வரவில்லை என்று கோவமாடா.."

"...."

"அடப் பாவி! உன்னுடை சங்கர்டா நான். அந்தக் காலத்திலே என்னிடே எப்படிச் சுற்றுவே.. நான் பணம் இல் லாம தவிச்ச நாள்லே உன் கணக்குலே எத்தனை நாள் டிபனும் சாப்பாடும் சாப் பிட்டுண்டு கடனை ஏற்படுத்தி இருக் கேன்.. என்னை இத்தனை சீக்கிரம் மறந் துட்டயேடா.."

ரவி கைகளை உதறிக்கொண்டு எழுந் தான். டம்ளரைச் சாய்த்து அப்படியே கையை அலம்பிக்கொண்டு இடத்தை விட்டுத் துள்ளி எழுந்தான். அவன் கை களைச் சேர்த்துப்பிடித்துக்கொண்டு குதூ கலத்துடன் சிரித்தான்.. "அடேயப்பா. ரவியாடா நீ. எவ்வளவு வளர்ந்து விட் டாய். எத்தனை மாறிப்போனுய். உடல், தோற்றம், முகம், கிராப்பு எல்லாமே மாறிப்போய் விட்டதே..!"

அன்றைக்கு ரவி காரியாலயத்திற்குப் போகவில்லை. சங்கர் அவனைப் போக விட்டால்தானே . . ! சங்கரும் ரவியும் சந்தித்துப் பத்துப் பன்னிரண்டு வரு ஷங்கள் ஆகி இருந்தன. சங்கர் ஊர் ஊராய்ச் சுற்றி அலைந்து, வருஷத்துக்கு ஏழெட்டுக் கம்பெனிகள் வீதம் மாறிக் கொண்டு, வடக்கே வடக்கே என்று போய்க்கொண்டே இருந்தான். ரவி, இரு ந்த நிலையிலேயே, அன்றலர்ந்த மேனி க்கு அழிவில்லாமல் இருந்தான்.

மத்தியான்னம் பன்னிரண்டு மணிக் குத் திடீரென்று துள்ளினன் சங்கர். இன் றைக்குப் பிளேனிலேயே கல்கத்தா போகணும்டா.. ரொம்பவும் அவசர மான வேலை இருக்கிறது. காலையிலே இங்கே வந்தேன். வந்த காரியம் முடிந் தது. இருக்கும் இந்த இரண்டு மணி யிலே உன்னைப் பார்த்து விட்டுப் போகலாமே என்று வந்தேன். பார்த்தா யிற்று.. டாக்ஸி ஸ்டாண்டு வரை என் னேடு வாயேன். அப்படியே மீனம்பாக் கம் வரை என்னேடு வந்துவிட்டுத் திரும் பிக்கொள்வாயாம்'— முடுக்கி விடப் பட்ட இயந்திரம்போல் பேசினன் அவன்.

ரவி சிரித்தான். "அப்படி என்ன வேலையில் இருக்கிறுய்டா நீ."

"அதுவா.. அது ஒரு வேடிக்கை. நேர்மையாக இருந்து பார்த்தேன். முன் னுக்கு வர முடியவில்லை. சாப்பாட்டுக்குக் கூட லாட்டரியாக இருந்தது. இப்போது குல்மாலில் இறங்கிவிட்டேன். பணம் கொழிக்கிறது போயேன்! எப்படிச் சம்பாதிக்கிறேன் என்பாயோ . . . திடீ ரென்று பங்கு மார்க்கெட்டில் நுழை வேன். பலத்த நஷ்டம் வரும். 'புல்லி

நம் நாட்டின் நகரங்களிலும் கிராமங்களி லும் எல்லோராலும் விரும்பப்பட்டு அதிக விற்பனையாவது T. A. S. ரத்தினம் பட்டணம் பொடி. அதிக விற்பனையே உயர் குணத் துக்கு அத்தாட்சியான பொது மக்களின் தீர்ப்பு அல்லவா?

T.A.S ரத்தினம் பட்டணம் பொடி

தபால் பெட்டி 1151, சென்னை-21

யன் மார்க்கெட்டில் வெளிவருவேன். பழைய நஷ்டத்தையும் சரிக்கட்டிக் கொண்டு நிறைய லாபம் கிடைக்கும்.. திடீரென்று காரை வாங்குவேன். விற்பேன். பிரிண்டிங் மெஷினரி வரவழைப்பேன். சாமான் வருவதற்குள் லைசென்ஸையே விற்று விடுவேன் . . ."

ரவிக்குப் பிடிக்கவில்லை இந்தப் பேச்சு. அவன் சங்கரனின் தோளில் கையைப் போட்டுக்கொண்டு தெருவிலே இறங்கி நடந்தான். அவன் தலை மறைந்ததும், சுசீலா சாமியார் மடத்துக்குக் கிளம்பினாள்...

ஆனால், சங்கர் அன்றைய விமானத்தின் பக்கமே போகவில்லை. ரவியையும் இழுத்துக்கொண்டு மூலைக்கு மூலை அடையாறிலிருந்து திருவல்லிக்கேணி, அங்கிருந்து கெல்லாஸ், கெல்லாஸிலிருந்து ஜியார்ஜ் டவுன், தாம்பரம், மறுபடியும் அடையாறு என்று அலைந்தான். யார் யாரையோ சந்தித்தான். புரியாத விஷயங்களாக என்ன என்னவோ பேசினான். கடைசியாகச் சாயந்திரம் ஆறு மணிக்குக் கொச்சின் எக்ஸ்பிரஸில் ஏறிக் கொச்சிக்குக் கிளம்பிப் போனான்...

ஃ ஃ ஃ

ரவி வீட்டை நெருங்கியபோது எட்டு மணி ஆகி இருந்தது. தெருக் கோடியில் அவனைக் கண்டதும் எதிர்த்த வீட்டு ரங்கய்யர் அவனை நோக்கி ஓடிவந்தார். "சார், உங்கள் மனைவி சாமியார் மடத்தில் சங்கிலியைத் தொலைத்துவிட்டாளாம். எத்தனை சமாதானப்படுத்தியும் கேட்காமல் குமுறிக் குமுறி பரிதாபமாக அழுகிறாளாம். நீங்கள் அவளைக் கோபித்துக்கொள்ளாதீர்கள்... சார். பாவம், சின்னப் பெண்தானே. கூட்டமோ அதிகம்...!"

மிச்சப் பேச்சைக் கேட்க ரவிக்குப் பொறுமை இருக்கவில்லை. அவள் மட்டும் எதிரே இருந்தால் வேட்டை நாய் கோழியைக் குதறுவதைப்போலக் குதறித் தள்ளியிருந்தாலும் இருப்பான்.

சாவியை வாங்கிக்கொண்டு வீட்டைத் திறந்த அவனுடைய மனம் ஒரு நிலையில் இருக்கவில்லை. உள்ளூர சொத்து போயிற்றே என்ற துயரம் அவனுக்கு இருந்தாலும்கூட அவனுடைய அசட்டு மனம்... 'நன்றாக வேண்டும் அவளுக்கு.. கொண்ட கணவனுக்கு அவசியமான உதவிக்குத் தர மாட்டேன் என்று பிடிவாதம் பிடித்தாளே. பட்டால்தான் புத்தி வரும்..' என்று வன்மம் பாராட்டிற்று...

ஆறு சவரன். கூலி உள்பட நானூறு ரூபாய்க்குக் குறையாது அது... அவன் பாக்கப் பாக்க மேஜை ட்ராயர், ஹாலில் இருந்த அலமாரி, பீரோ எல்லாவற்றையும் கலைத்துப் போட்ட வண்ணம் அந்த சங்கிலியைத் தேடினான்... நினைவுப் பிசகாக இங்கேயே வைத்துவிட்டுப் போயிருக்க மாட்டாளா. சொத்துக்கு சொத்தும் லாபம். படிப்பினைக்குப் படிப்பினையும் ஆகும்... என்று சபலமும் தட்டிற்று!

கடைசியாக சுசீலாவின் பெட்டிதான் பாக்கி. அவள் பெட்டியின் மூடியைத் திறந்தபோது அவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது...புத்தம் புதிய இரண்டு பச்சை நோட்டுகள்...

அவனுடைய குறுகிய புத்தி விகல்பமான தீர்மானத்துக்கு வந்தது.. அவளிடம் பணம் வேறு இருந்திருக்கிறது—கள்ளி. நம்மிடம் சொல்லாமல் அப்பாவிடமிருந்து வரவழைத்துக்கொள்கிறாளோ என்னவோ? இந்த மாதிரி தாரத்தைவிட சந்நியாசம் மேல் போல இருக்கிறதே...!

செய்வதென்னவென்று புரியாத நிலையில் சாய்வு நாற்காலியில் பொத்தென்று விழுந்தான், தன்னை மறந்து.

ஃ ஃ ஃ

சுசீலா வீட்டுக்குத் திரும்பியபோது இரவு மணி பத்தடித்தது. ரவி, பல்லைக் கடித்துக்கொண்டு பேசாமல் இருந்தான். சங்கிலி தொலைந்துபோன செய்தியை அவள் எப்படிச் சொல்கிறாள் என்றுதான் பார்ப்போமே!

சுசீலா விறுவிறுவென்று அவன் தலைப்பக்கத்தில் நின்றுகொண்டாள். "நிஜமாகவே சங்கிலி தொலைந்து போயிற்று என்றுதானே பயந்தீர்கள்? அது கல்லுக் குண்டாக கடுகு டப்பியில் தூங்குகிறது. என்ன இருந்தாலும் இந்தக் காலத்தில் உள் மதிப்பைவிட வெளிப்பகட்டுத்தான் வேண்டி இருக்கிறது. ஊரார் எல்லோரும், உங்களுக்குச் சைக்கிள் வாங்குவதற்காக என் சங்கிலியை அடகு வைத்ததைச் சுட்டிக் காட்டி ஏளனம் செய்வார்கள். அதற்குத்தான் இப்படி நாடகம் போட்டேன். இந்தாருங்கள் உங்கள் பண்டம். விற்கவோ, அடகு வைக்கவோ ஏதாவது செய்துகொள்ளுங்கள்..."

ரவி மூடின கண்களைத் திறக்கவே இல்லை. 'இப்போதும்கூட சங்கிலியைத் தருகிறாளே தவிர, பணம் இருக்கிறது என்பதை சொல்லமாட்டேன் என்கிறாளே . . மாய்மாலக்காரி . .'

ஃ ஃ ஃ

இரண்டு நாட்கள் உருண்டன. மூன்றாவது நாள் ரவிக்கு சங்கரிடமிருந்து ஒரு கடிதம் வந்தது:

"ரவி!

உலகத்தில் ஒவ்வொருவரும் எத்தனையோ உதவிகளைச் செய்துவிடலாம். கோயில்கள், பள்ளிக்கூடங்கள், சத்திரங்கள் என்று தான தர்மங்கள்கூடச் செய்யலாம்.

ஆனால், எனக்கு நீ செய்த உதவி கணக்கில் அடங்காது. அதற்கு வரையறையும் இல்லை. நான் சோற்றுக்கும், துணிக்கும் இல்லாது கஷ்டப்பட்டபோது நீ எனக்கு உதவினாய். நான் கேட்கும்போதெல்லாம் காப்பி வாங்கிக் கொடுத்தாய், 'டிபன்' வாங்கித் தந்தாய். எனக்கு மன அமைதிக்காக சினிமா, டிராமா என்று செலவழித்தாய்...! இன்றைக்கு, நான் நிறைய சம்பாதிக்கிறேன் என்று தெரிந்தும் என்னிடம் நீ ஏனடா உதவி கேட்கவில்லை? என்னை அடித்துப் பிடுங்கிக்கொள்ளும் அளவுக்கு உனக்கு உரிமை உண்டேடா! உனக்கு அந்தக் காலத்தில் என்னிடம் இருந்த அன்பில் கொஞ்சம் குறைந்து போயிற்று என்று நினைக்கிறேன்.. அப்படித்தானே..!!

உன் விலாசத்திற்காக உன் ஆபீசிற்குப் போனேனா; அங்கே பியூன் கோபாலன் என்னிடம் ஒரு விஷயத்தைச் சொன்னான். உனக்கு சைக்கிள் வாங்க நூறு ரூபாய் குறைகிறதாமே!

நீ என்னை வாய் திறந்து கேட்காதது எனக்கு ரொம்ப வருத்தம். நீ புழக்கடைப் பக்கம் போயிருந்தபோது ஹாலில் திறந்தபடி கிடந்ததே ஒரு பெட்டி, அதில் சந்து வழியாக இரண்டு நூறு ரூபாய் நோட்டுகளைத் தள்ளி இருக்கிறேன். நேரிடையாகக் கொடுத்தால் வாங்க மாட்டாய். என்ன இருந்தாலும் நான் அயலான்தானே...

தயவு செய்து அந்த சைக்கிளை வாங்கிவிடு....!

..சங்கரன்.."

அந்தக் கடிதத்தைப் பிரித்தது பிரித்தபடி, நெட்டுக்குத்தலாக, நெடுமரமாக நின்றான் ரவி. அவனுக்கு அவனுடைய உண்மை நிலை வெட்கத்தைத் தந்தது... சொந்த மனைவியையும் நம்பவில்லை. உயிராகப் பழகிய நண்பனையும் நம்பவில்லை அவன்... ஆனால், அவர்களோ பிரமாதமான அன்பைக் காட்டி இருக்கிறார்கள்...

'அன்பும் பாசமும் நாம் மற்றவரை நேசிக்கும் அளவிலே இருக்கிறது... மனைவியையும், நண்பனையும் உண்மையான அளவில் நேசிப்போமேயானால் பதிலுக்குப் பெறுவது நன்மையாகத்தான் இருக்கும்...' என்றது அவன் நெஞ்சு.

★

விமரிசனம்

பல பிரபலமான நாடகங்களை நடத்திக் காட்டிப் புகழ் பெற்ற லியக்ரே ஒரு சமயம் தன்னுடைய ஐந்து வயதுச் சிறு பெண்ணை நாடகக் கொட்டகைக்குத் தன்னுடன் அழைத்துப்போனார். நாடக ஒத்திகை ஆரம்பிக்கும்போது அவர் அதட்டலாக "பார் கண்ணே! நாடகம் நடந்துகொண்டிருக்கும்போது பேசக்கூடாது! இருமக்கூடாது! கையைக் காலைக் காட்டி என்னைக் கூப்பிடக்கூடாது" என்றார்.

"எனக்கு ஒரு சந்தேகம் அப்பா" என்றாள் பெண்.

"என்ன? சொல்லு."

"வாயிலெடுக்க வந்தால் வாயிலெடுக்கலாமா?" என்று கேட்டாள் அவர் பெண்.

"வயதானால் இவள் பிரபல விமர்சகி ஆகிவிடுவாள் போல இருக்கிறதே!" என்றாராம் லியக்ரே.

—எஸ் ராஜா



திரைக்குப் பின்

37

இன்று இரவு மட்டும் என்ன, அதற்குப் பிறகு ஒவ்வொரு நாளும் இப்படித்தான் ஒன்று போன வழி ஒன்று போகாமல், ஒன்றுக்கு ஒன்று சரிப்பட்டு வராமல் காட்டிலே எரித்த நிலவாக விளைகப் போயிற்று.

தூக்கம் பிடிக்காமல் இரவு வெகு நேரம் வரையில் பாமினி படுக்கையில் புரண்டு புரண்டு தவிப்பாள். அந்த அவஸ்தையின் துளிப்பிரக்ஞையுமில்லாமல் அரவிந்தன் ஹாய்யாகத் தூங்கிக்கொண்டிருப்பான். அவன் நடுத் தூக்கத்தில் எல்லாம்கூட எழுந்து உட்கார்ந்து, என்ன என்னவோ எல்லாம் எண்ணுவான். தூக்கத்திலே புஷ்பம் போன்ற அவள் கைவிரல்கள், நடுராத்திரியில் இதழ்விரிக்கும் ரோஜா மொட்டைப்போல் பிரிந்திருப்பதைப் பார்த்துக்கொண்டே உட்கார்ந்திருப்பான். குவளை மலர்க் கண்கள் குவிந்திருக்கும் காட்சியில் லயித்துப் போவான். அழகும் மேன்மையும் கொண்ட அந்த நெஞ்சினுள்ளே எத்தனை துணிச்சலான உள்ளம் அடங்கியிருக்கிறது என்று அளந்து பார்ப்பான். கள்ளமோ கபடமோ இல்லாத மாசுமருவற்ற கன்னங்கள் பஞ்சுத் தலையணையிலே பதிந்திருப்பது கண்டு பொருமையாகக்கூட இருக்கும் அவனுக்கு. காற்றோடு காற்றாக "பாமு!" என்று தலையணையின் மூலையைப்பிடித்து உலுக்கி இழுத்தால் அவள் மெல்லக் கண்களைத் திறப்பாள். முத்துப் பல் வரிசை தெரியும். "தூங்கல்லியா?" என்று பவழ உதடுகள் முணுமுணுத்துக் கேட்கும், கேட்ட உதடுகள் மூடுமுன் கண்கள் மூடிக்கொண்டு விடும். அந்த அழகுத் தூக்கத்தைக் கெடுக்க அதற்குமேல் மனசு வராது....

ஆர்வி

ஒன்றும் நம்பும்படியாக இல்லை; நடப்பதாகவும் இல்லை. நிறமோ, ஒளியோ இல்லாத மாயத்திரை ஒன்று அவர்களுக்கு இடையே தடுத்துத் தடை செய்து கொண்டிருந்தது. கண் இமைக்கும் நேரத்தில் பிரயாசையின்றி கிழித்தெறிந்து விடக்கூடிய அந்தத் திரையைத் தொடவே கைவரவில்லை. யாருடைய கண்களோ அந்த இருளில், கதவின் சாவித் துவாரத்து வழியாக அவனை, அவன் செய்கையை, அவன் மன ஓட்டத்தை எட்டிப் பார்ப்பது போலத் தோன்றும். அந்த அயர்ச்சியில் அவன் களைத்துப் போய்த் தூங்கிப்போவான். கனவில் ஓடிப் பிடிக்கக் கால் எழும்பாமல் தவிப்பதைப் போலத்தான் அந்த அநுபவம் இருந்தது.

நாட்கள் எல்லாம் வாரங்களாகி, மாதமாகவும் மாறின. அன்றைக்கு இரண்டாவது சம்பளம் வாங்கிவர வேண்டிய நாள்.

பாமினி காலையிலிருந்தே புது மாதிரியாக விளங்கினாள். பணம் வரப்போகிற நாள் என்றாலே பெண்களுக்குத் தனி உற்சாகமோ? பணி விடைகள் எல்லாம் கொஞ்சம் அதிகப்படியாகத்தான் அன்று இருக்குமோ? பொலபொல வென்று விடியு முன்னரே அவள் படுக்கையைவிட்டு எழுந்துவிட்டாள். இடுப்பு வரையில் இழுத்துப் போர்த்திக்கொண்டு அவன் கோணல் மாணலாகக் கவிழ்ந்து படுத்திருந்தான். விடிகாலைத் தூக்கத்தில் தன்னை மறந்திருந்த அந்தப் புருஷ முகத்தை அவள் சற்று நேரம் பார்த்துக்கொண்டே நின்றாள். மனசிலே விவரித்து அறிய முடியாத கழிவிரக்கம். கண்கள் சொட்டச் சொட்ட நனையும் வரையில், பார்வை தெளிவில்லாமல் போகும் வரையில் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு நகர்ந்தாள். தனியே போய் நின்றுகொண்டு, தலைப்பினால் கண்களைத் துடைத்துக்கொண்டாள்.

அவன் விழித்து எழுந்திருக்கு முன்னமே, காலைக் காரியங்கள் ஆகிவிட்டன. காபி தயாராகிவிட்டது. மெதுவாக, அவன் கால்மாட்டருகே போய் நின்று, வருடுவது போலக் காலைத் தொட்டாள்.

அந்த ஸ்பரிசம் பட்டு நெளியும் அந்த விரல்களைத் தொட்டாள்; மெல்ல இழுத்தாள். அவன் விழித்துக்கொண்டுவிட்டான். விருட்டென்று எழுந்து உட்கார்ந்துகொண்டான். இடையைச் சுற்றியிருந்த சால்வை இடைபோல இருந்தது. கண்கள் நான்கும் கலந்தன. புன்னகை தவழ அவள், "காபி சாப்பிடல்லே?" என்று பெண்மைக்கே உரிய குழைவோடு கேட்டாள்.

"ஆயிடுத்தா அதுக்குள்ளே?"

"ஆயிடுத்து."

"உனக்கு ஸ்நானம், முழுகல் எல்லாம் ஆயிட்டுதா, என்ன?"

"ம்—"

"ஏது, என்ன இன்னிக்கு?"

"இனிமே இப்படித்தான்!"

"ஓ!"

"என்ன 'ஓ' இது, கிழவன் கொட்டாவி விடுவதுபோல! எழுந்திருங்கள்!" என்று அவள் ஓர் அடி முன்னால் வைத்தாள். அவன் எதிர்பார்க்காதபடி அவன் கைகளைப் பற்றித் தூக்கினாற்போல இழுத்தாள். பேச்சு, பார்வை, செய்கை எல்லாம் இன்று அவனுக்குப் புதுமையாகத்தான் இருந்தன.

குளிப்பதற்கு வெந்நீர் தயாராக இருந்தது. அதற்குமுன், தாழ்வாரத்தைக் கடந்ததுமே சோப்பு, டவல், செம்பு எல்லாம் அவனுக்காகக் காத்திருந்தன.

"ஒரு கை எண்ணெய் வேண்டுமானால் தலையில் வைத்துக்கொள்கிறீர்களா?"

"ஊஹூம்; வேண்டாம்—" பிரமிப் போடேயேதான் அவன் பதில் சொன்னான்.

ஒன்பது ஒன்பதரைக்கெல்லாமே சமையல் தயாராகி விட்டது; பாமினி நுனி வாழை இலை ஒன்றைப் போட்டுவிட்டு அவனை அழைத்துப் போனாள். பருப்பு, பாயசம், அப்பளம், வடை என்று சாப்பாடு.

"என்ன பாமு, இதெல்லாம்; இன்னிக்கு என்ன? உனக்குப் பிறந்த நாளா?"

"ஆமாம்."

"சொல்லவேயில்லையே நீ?"

"சொல்லியிருந்தால்—?"

"சொல்லியிருந்தால் அது வேறேதான்!"

"என்ன செய்திருப்பீர்களாம்? அதை முதலில் சொல்லுங்களேன்; கேட்போம்."

"என்னமோ செய்திருப்பேன். அதெல்லாம் என்ன?"

பாமினி என்ன பதிலை எதிர்பார்க்கிறாள் என்று அவனுக்குத் தெரியவில்லை. "உனக்கு ஒரு பிரசண்ட் வாங்கிண்டு வந்திருப்பேன்" என்றான்.

"அதைத்தான் இனிமேல் செய்யுங்களேன்! இன்னிக்குக்கூட சம்பளமாச்சே!"

"ஓ—இன்னிக்குச் சம்பளமா? அந்த நினைவே இல்லையே எனக்கு" என்று சொல்லிவிட்டுச் சிரித்தான் அரவிந்தன்.

"இதுக்கு என்ன சிரிப்பு?"

"இதுக்காக ஒண்ணும் சிரிக்கல்லே. என்னவோ நினைப்பு வந்தது. சிரிச்சேன்."

"என்னன்னு?"

"நான் இங்கே காலேஜிலே படித்துக்கொண்டிருந்தபோது, சுந்தரம் மாதிரி ஒரு சிநேகிதன் இருந்தான். அவன் வீட்டிலே இப்படித்தான். சம்பளம் என்றால் அன்னிக்கு அவன் அப்பாவுக்கு வீட்டிலே நடக்கிற உபசாரத்தைப் பார்க்கணுமே! எல்லாம் ஏகத் தடபுடலாக இருக்கும். கேட்கறதுக்கு முன்னாடி ஒவ்வொன்றும் தயாராக வந்து நிற்கும். அம்மா, பையன், பெண் எல்லாருக்கும் பேச்சே ஒரு தினுசாக இருக்கும்—"

"மத்த நாளெல்லாம்?"

"கேக்கணுமா? அப்படி-இப்படித்தான். தொண்டை வறளக் கதறினாலும், கைக்

குழந்தைகூட லட்சியம் பண்ணுது...”

பாமினி சிரித்தாள்.

“அந்த மாதிரி ஒண்ணும் ஆயிடாதே இங்கே?”

“புருஷன் கொஞ்ச நாளேக்குத்தான்; பணம்தான் என்னிக்கும் என்று?” என்று கேட்டாள் பாமினி.

“அப்பா பாயசம் அசாத்திய தித்திப்பு! பச்சடியில் அசாத்திய

உப்பு! குழம்பு அபார உறைப்பு—எல்லாம் இன்னிக்கு ஒருபடி தூக்கலாகவே இருக்கே?" என்று பேச்சை மாற்றுவதுபோல் கேட்டான் அரவிந்தன்.

அவ்வளவும் பொய் என்று பிறகு சாப்பிட்டபோதுதான் பாமினிக்குத் தெரிந்தது. "பொய்யைப் பாரு, பொய்யை!" என்றாள்.

அரவிந்தன் ஆடைகளை மாற்றி உடுப்பு அணிந்து கொள்ளும் போதுதான் கவனித்தான். சுவரிலே ராதா–கிருஷ்ணனுடைய படம் ஒன்று மாட்டி, மாலையும் சூட்டியிருந்தது. பக்கத்திலே ஊதுவத்தி மணம் வீசிக் கனிந்து கொண்டிருந்தது. எதைப் பார்த்தாலும் துப்புரவாக இருப்பது போலிருந்தது.

"ஒரு நிமிஷம் இருங்கோ; இதோ சாப்பிட்டுவிட்டு வந்து விடுகிறேன்" என்று பாமினி அவசரம் அவசரமாகச் சாப்பிட்டாள்.

அரவிந்தன் கண்ணாடி முன் நின்று தலையை வாரிக்கொண்டிருந்தான். பின்னால் தயங்கித் தயங்கி எதையோ சொல்லமுடியாமல் தவிக்கும் பாமினியின் நிலவு முகம் தோன்றியது. தலையைத் திருப்பாமலே, "சாப்பிட்டாச்சா?" என்றான்.

"ஆச்சு."

"இருக்கச் சொன்னியே—"

"ஆமாம்."

"எதுக்கு? அந்த மீனாவைப் பார்க்கக்கொள்ள வரப்போகிறாயோ?"

"மீனாவா? சேசே...அதெல்லாம் இல்லை."

"பின்னே?"

"சும்மாத்தான்!" என்றவாறு பாமினி வாசல் கதவுக்குப் பக்கத்து மறைவில், சுவரில் சாய்ந்து கொண்டு நின்றாள்

"அப்போ நான் புறப்படட்டுமா?"

"உம்.." என்றவாறே வாசல் கதவுக்கு அருகில் அவன் வரும் போது, கதவை மெல்லச் சாத்திவிட்டு, அவனுடைய, வலக்கரத்தைப் பற்றிக்கொண்டாள். அந்தக் கையைத் தன் இடையைச் சுற்றி அணையும்படி நிமிர்ந்து அவன் மார்பிலே சாய்ந்து கொண்டாள். எதிர்பாராத இந்தச் செய்கையைக்கண்டு அரவிந்தன் மலைத்து நிற்கும்போதே, அண்ணாந்து அவன் கன்னத்திலே தன் உதட்டைப் பதித்தாள். பதித்த வேகத்துடனேயே முகத்தைத் திருப்பி மூடிக்கொண்டாள்.

"என்ன இது, பாமினி!"

"சாயங்காலம் சீக்கிரம் வந்து விடுகிறீர்களா?"

"ஏன்? எங்கேயாவது போக வேண்டுமா உனக்கு?"

"அதெல்லாம் இல்லை. சும்மாத் தான்!" என்று சொல்லிவிட்டு அவன் மார்பிலே தன் முகத்தைப் புதைத்துக்கொண்டு நின்றாள்.

துளிச்சலனம் ஏற்பட்டால்கூட அந்தச் சுக நிலையைக் குலைத்து விடும்போலிருந்தது. ஆகவே அவன் செயலற்று அசையாமல் நின்றான். சற்றுப் பொறுத்து மெல்ல விலகிக்கொண்டு, "சரி, போய்விட்டுச் சீக்கிரமாக வந்து விடுங்கள்" என்று அவள் விடை கொடுத்து அனுப்பினாள்.

38

அன்று முற்பகல் எல்லாம் அரவிந்தனுக்கு ஒரு வேலையும் ஓடவில்லை. மேஜைமீது வந்திருந்த தபால்களைக்கூட அவன் ஏறெடுத்துப் பார்க்கவில்லை. புதைபொருள் இலாகாவில் கிடைத்த சிலைகளில் ஒன்றைப்போல அவன் உட்கார்ந்திருந்தான். எதைச் செய்ய முயன்றாலும் முடியவில்லை. முன்பு சோமேசபுரத்தில் இருந்தது மாதிரி, பாமினியின் செழுங்காங்களை வலிய வந்து அணைவது போலிருந்தது. குளஞ்சி முடிச்சும் போட்டிருந்த கூந்தல் முகத்தருகே கும்மென்று கவிந்து மணப்பது போலிருந்தது. அவளுடைய மெல்லிய அதரம் பதிந்த கன்னமெல்லாம் குறுகுறுத்துக் கொண்டேயிருந்தது. அவளுடைய கைஸ்பரிசம் கருத்தையெல்லாம் திணறவைத்தது. கைகளால் மூடிக்கொண்ட கண்கள் புதுமைப் புதிர்களைப் போட்டுக்கொண்டே இருந்தது.



"சர்க்குலரைப் பார்த்துக் கையெழுத்துப் போட்டீங்களா?" என்று ஆள் ஒருவன் வந்தான். அதுவரையில் அவன் சிந்தனையெல்லாம் வீட்டிலே [illegible] போல் விளங்கிய பாமினியிடத்தில்தான் லயித்திருந்தது.

வந்த ஆள், மேஜை மீதிருந்த அந்தச் சுற்றறிக்கையை எடுத்து மேலே கண்ணில் படும்படியாக வைத்தான். "நாளை இங்கே தலைமையதிகாரி எதிர்பார்க்கப்படுகிறார். அதை முன்னிட்டு அனைவரும் உரிய நேரத்துக்குச் சற்று முன்னதாகவே வந்து சேரவேண்டும்" என்று கூறியது அந்தக் கடிதம். முதலில் அந்த வாசகம் வெறும் அர்த்தமற்ற எழுத்து வரிசையாகத்தான் தோன்றியது அவனுக்கு. பிறகுதான் அது தேள் கொட்டியது போலச் சுரீர் என்று தைத்தது.

"டாக்டர் எதற்குத் திடீரென்று வருகிறார்? இதற்கு அவசியம் என்ன? வந்தால் என்ன ஆகும்?–" ஒரு முடிவே இல்லாமல் அந்தக் கேள்விகள் அவனைப் பயமுறுத்திக்கொண்டே போயின.

கலங்கிய உள்ளத்துடன் அவன் கால்சோர வந்து கொண்டிருந்தான். சீக்கிரம் வந்துவிடும்படி வேண்டிக்கொண்ட அந்தக் கண்கள் வழக்கத்தைவிட நேரமானதற்காக எப்படிக் கலங்கியிருக்குமோ, அவன் எண்ணிப்பார்க்கவில்லை. வேலையில் பாக்கியில்லாமல் வைத்துவிட்டு வரவேண்டியிருந்தால், நேரம் ஆகாமல் என்ன செய்யும்? வரும் வழியெல்லாம் மறுநாள் வேலைக்குப் போவதா, போகாமல் உடம்பு சரியில்லை என்று டாக்டர் சர்டிபிகேட்டுடன் மட்டம் போடுவதா என்று குழம்பிக்கொண்டே வந்தான்.

"பாம்–பாம்!"– என்று உறுமிவிட்டு, மேலே வந்து மோதி இடிக்காத குறையாக, அவ்வளவு பக்கத்தில் வந்து ஒரு குலுங்குக் குலுங்கிவிட்டு நின்றது ஒரு புது மாடல் வண்டி. அவன் நின்று திரும்பிப்பார்ப்பதற்குள் அதனுள்ளிருந்து ஒரு பெண் வெளியே எட்டிப்பார்த்து, "வீட்டுக்குத்தானே அண்ணே, போறீங்க? ஏறிக்குங்க வண்டியிலே!" என்றாள்.

அரவிந்தனுக்குத் திகைப்பாக இருந்தது. அப்படி ஒரு தங்கச் சிலையை அவன் இதுவரையில் பார்த்திருப்பதாகவே தோன்றவில்லை. மாலை விளக்குகள் ஏற்றியாகிவிட்டன. அந்த வெளிச்சத்தில் தெரிந்த அந்த முகத்தை தண்ணீரில் கண்ட பிம்பம்போல் தெளிவில்லாமல் பார்த்திருக்கிறோமோ என்ற சந்தேகம் மட்டும் தட்டியது. வேறு யாரோ என்று தவறுதலாக எண்ணிவிட்டாளோ என்று அவன் தயங்கினான்.

"அன்னிக்கு நீங்கள்ளாம் சபாவுக்கு வந்திருக்கலே?" என்று கேட்டுக்கொண்டே அவள் கதவைத் திறந்துவிட்டாள்.

"ஆமாம்..ஆமா.."

"என்னைத் தெரியலே போலிருக்கு உங்களுக்கு? இல்லிங்களா, அண்ணே? பாமினிங்கூட பக்கத்துலே உக்காந்துகிட்டிருந்தேனே! நாங்கள்ளாம் பழைய பிரண்டுசுங்க! அதுங்கிட்டே என் வெலாசத்தைக் கொடுத்தேனே, அதும் வெலாசத்தே வாங்கிக்கமாட்டேன்? அவ்வளவுதான் சாமர்த்தியம்; மறந்திட்டேன், அண்ணே!" என்று அவள் குலுங்கச் சிரித்தாள். என்ன ஹாஸ்யத்

தைக் கண்டாளோ, என்ன வேடிக்கையைக் கண்டாளோ–அதற்கெல்லாம் மேலாகத்தான் சிரித்தாள்.

பாமினியின் பெயரைச் சொல்லக்கேட்ட பிறகுதான் இது ஆள் மாருட்டக்கேஸ் அல்ல என்று அவனுக்குத் தைரியம் வந்தது. “இங்கே எங்களுக்குக் கிட்டத்திலேதான் வீடு. நடந்தே போயிடுவேன்” என்று நின்று கொண்டேயிருந்தான் அரவிந்தன்.

“பரவாயில்லீங்க; ஏறுங்க!” என்று வற்புறுத்தினாள் அவள்.

அந்த வற்புறுத்தலைத் தட்டமாட்டாமல் ஏறி உட்கார்ந்துகொண்டு டிரைவரிடம் அடையாளத்தைச் சொன்னான் அரவிந்தன். உள்ளே உட்கார்ந்த பிறகுதான் அது சரியில்லை என்றுபட்டது அவனுக்கு. எதோ சந்தனக் கடையில் போய் உட்கார்ந்ததுபோல பலவிதமான வாசனைகள் எல்லாம் சேர்ந்து வந்து நெடியடித்தது.

“இப்பக்கூட நான் ஷூட்டிங்க்குக் அவசரமாப் போயிட்டிருக்கேன். வீட்டைப் பாத்துக்கிட்டுப் போயிடலாம்னுதான் வறேன்” என்றாள் அவள்.

ரொம்ப நல்லதாகப் போயிற்று என்பது மாதிரி பெருமூச்சுவிட்டான் அரவிந்தன். எதனாலோ அவளுடன் கூடச் சேர்ந்து அத்தனை நேரங்கழித்து வருவது அவனுக்கே விகல்பமாகத்தான் பட்டது. காலைச்சுற்றிய பாம்பு கடிக்காமல் விட்டதே என்பதுபோல, “அதோ அந்த வீடுதான்; சிவப்புக் காவி பூசிய வீடு..நான் இங்கேயே இறங்கிக்கிறேன்” என்றான் அவன். “அங்கே போனால் வண்டியைத் திருப்புவது கஷ்டம்!” என்றான் அதற்குச் சமாதானமாக.

“பரவாயில்லே; அங்கேயே கொண்டுபோய் விட்டிடறேன், அண்ணே!”

அந்த உறவு முறையை அவன் கேட்கும்போது மிகவும் கஷ்டமாக இருந்தது. பெண்களையெல்லாம் சகோதரிகளாக உண்மையில் எண்ணுகிறவன்தான் அவன்; ஆனால் இந்தச் சகோதரி அப்படி அழைத்தபோது அவனுக்கு ஏனோ வேதனையாகவே இருந்தது.

ஏதாவது பேசாமல் இறங்கிப் போவது சரியாகத் தோன்றாததால், “என்னை எப்படி அடையாளம் தெரிஞ்சுது?” என்று கேட்டான்.

“உங்க சுருட்டைத் தலையைப் பாத்ததுமே கண்டுக்கிட்டேனே–” என்றாள் அவள். மீண்டும் அவள் சிரிக்கத் தொடங்குவாள் போலத் தோன்றியதால் அவன் வெகு அவசரமாகக் கைகூப்பி விடை பெற்றுக்கொண்டான்.

“பாமினிங்கிட்டே சொல்லுங் கண்ணே! அப்புறமா வறேன்னு!”

அவன் தலையை ஆட்டிக்கொண்டே இருள் சூழ்ந்த வீட்டு முகப்பில் மறைந்து போனான்.

கதவை லேசாகத் தட்டியதுமே, சட்டென்று கதவு திறந்துகொண்டது. அவன் அந்தக் காட்சியைச் சிறிதும் எதிர்பார்க்கவேயில்லை. பாமினியை அந்த மாதிரியான ஒரு கோலத்தில் அவன் இதுவரையில் கண்டதேயில்லை. இத்தனை நாள் எங்கே இருந்தனவோ என்று எண்ணும்படி அவள் தன் ஆபரணங்கள் அனைத்தையும் எடுத்துப் போட்டுக்கொண்டு, மணவறையில் நுழைகின்ற அலங்காரத்துடன் காணப்பட்டாள். நீண்ட பின்னலுக்குப் பட்டுக்குஞ்சலம் வைத்து முடிந்திருந்தாள். கண்களிலே மெல்லிய கோடு கிழித்து மையிட்டிருந்தாள். நெற்றியிலே பிறைத்திலகமும், செஞ்சாந்தும் இட்டு, பின்னலிலே மலர்க்கதம்பம் வைத்துச் சூடியிருந்தாள். செக்க சிவந்த மெல்லிய ஆடையும், கை நீண்டு, கழுத்து மூடிய கட்டம்போட்ட ரவிக்கையும் அவள் அழகுக் கோலத்தை அதிகரித்துக் காட்டின.

அரவிந்தன் வாயடைத்துப் போய், சுற்று முற்றும் பார்த்தான். அறையின் எந்த மூலையிலும் அவள் கைபட்டிருந்த காட்சி தெரிந்தது. இத்தனை சாமக்கிரியைகளையும் அவள் எப்படி வீட்டுக்குள் இருந்தபடியே சேகரித்திருந்தாளோ!

மட்டிப்பால் வத்திகள் நறுமணம் கமழும் தூமத்திரையை வீசிக்கொண்டிருந்தன. தாமரை மொக்குகள் மின்சார விளக்குகளைப்போல ஜன்னலுக்கு இருபுறமும் தொங்கின. கட்டில் எல்லாம் ஒரே ஜாதிமுல்லை மலர்கள்; இருவாட்சி சரமும் சம்பங்கிச் செண்டும் தட்டிலே காட்சியளித்தன. இளவரசி ஒருத்தியின் சயன மாளிகைக்குள் தட்டுக்கெட்டுப் போய் நுழைந்துவிட்ட பிரமையில் அரவிந்தன் திகைத்து நின்றான்.

டாக்டர் வரப்போவதும், மீனு காரில் கொண்டுவந்து விட்டதும் அற்பமான விஷயங்களாகச் சிறுத்துவிட்டன. ஒருவருக்கும் கிட்டாத உயர்ந்த ஆசனத்தில் அமர்ந்து, ராஜ்ய விவகாரங்களை நிர்வகிக்கவேண்டிய பொறுப்பை யாரோ திடீரென்று ஒப்படைத்துவிட்டதுபோல உணர்ந்தான் அவன்.

பாமினி வாய் திறவாமல் அவனைச் சுவாமி படத்தருகே அழைத்து வந்து நிறுத்தினாள். பக்கத்துத் தாம்பாளத்தில் இருந்த ரோஜா ஹாரம் ஒன்றை எடுத்து அவனுக்கு அக்கரையோடு, பய பக்தியோடு அணிவித்தாள். பிறகு மண்டியிட்டு, அவன் காலைப் பிடித்துக்கொண்டு நமஸ்காரம் செய்தாள். வெகு நேரம் வரையில் அவன் பாதத்தில் சாத்திய சிரசை அவள் தூக்கவேயில்லை. அவன் குனிந்து அந்தக் கைகளை எடுத்துத் தூக்கியபோதுதான் அவள் கண்கள், கைகள், உடல், உள்ளம் எல்லாம் துவள எழுந்து அடவொடுக்கமாக நின்றாள்.

“என்ன பாமினி!”

“இதற்கெல்லாம் ராதா மனோகை நிற்கும் இந்த இறைவனே சாட்சி. திரிகரண சுத்தியோடு என்னை அர்ப்பணிக்கிறேன். அப்படியே ஏற்றுக்கொள்ளவேண்டும். என்னை, எல்லாமுமாக இந்தக் கைகளிலே ஒப்படைத்துவிட்டேன்!” என்று கூறாமல் கூறுவது போல இருந்தது அவளுடைய தன்மயமான நோக்கு.

அரவிந்தன் உணர்ச்சி வசப்பட்டவனாய் அவளை அப்படியே வாரி அணைத்தான். காலக் கணக்கிலே ஒரு நிமிஷ நேரந்தான்.—

அதற்குள், “ஸார்! டெலிகிராம்!” என்று வெளியில் ஒருவன் சைகிள் மணியோடு ஓலமிட்டான்.

இருவரும் பதைபதைத்து விலகி நின்றார்கள்.

“காலை வண்டியில் நானும் பாமினியின் பாட்டியும் வருகிறோம். ஸ்டேஷனுக்கு வரவேண்டும்–தங்கம்” என்ற தந்தியை வாங்கி, ஆத்திரத்தோடு கசக்கி எறிந்தாள் பாமினி.

(தொடரும்)

ஏஜெண்டு தேவை

ஜாம்ஷெட்பூரில் எமது மித்திரன் தினப்பதிப்பு, வாரப்பதிப்பு விற்பனை செய்ய ஊக்கமுள்ள ஏஜெண்டு தேவை. விண்ணப்பதாரர்கள் உள்ளூர் வாசியாகவும், தகுந்த செக்யூரடி செலுத்தக் கூடியவராகவும் இருக்கவேண்டும். விவரங்களுக்கு கீழ்க்கண்டுள்ள விலாஸத்திற்கு எழுதவும்.

சர்க்குலேஷன் மானேஜர்,
சுதேசமித்திரன்,
விக்டரி ஹவுஸ், மதராஸ்–2.

திருவனந்தபுரத்திற்கு ஒன்பது மைல் தெற்கே கடலோரத்தில் விழிஞ்சம் என்னொரு கிராமம் இருக்கிறது. பெரும்பாலும் மீனவர்களே அங்கு வசிக்கின்றனர். ஹிந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர் இப்படிப் பல மதத்தவர்—ஆனால், அனைவருக்கும் ஜீவனோபாயம் தருவது சமுத்திர ராஜன்தான்.

கடலிலிருந்து செங்குத்தாக உயரக் கிளம்பி, கம்பீரமாக நிற்கும் இரு குன்றுகளிடை அமைதியான வளைகுடா ஒன்று இருக்கிறது. அதன் கரையோரம்தான் விழிஞ்சம் கிராமம். முன்னாளில் பெரிய துறைமுகமாகவும், கடற்படைதளமாகவும் இருந்து பெயர் பெற்றது. பின்னர், கொச்சி, கொலச்செல் துறைமுகங்கள் பெயரெடுத்தவுடன் இதன் புகழும் முக்கியத்துவமும் மங்கி இன்று மறைந்தே போய்விட்டது.

கிராமவாசிகள், தைரியத்திற்குப் பேர் போன மீனவர்கள். பல தடவை அங்கு வந்த ராக்ஷஸ திமிங்கிலங்களைப் பிடித்து, எலும்புகளை மியூஸியத்துக்குக் கொடுத்த பெருமை அவர்களுக்கு உண்டு. இப்பேர்ப்பட்ட கிராமத்தைத்தான் ஒரு நாள் பீதி பிடித்து உலுக்கியது.

நள்ளிரவில் மீனவ ஸ்திரீ ஒருத்தி தன் கழுத்தை ஏதோ பாம்பு போல ஒன்று சுற்றியிருப்பதாக நினைத்து அலறினாள். கணவன் விழித்து வெளிச்சம் கொணர்ந்து பார்த்தபோது ஏதும் தென்படவில்லை. குடிசையிலும், சுற்றுப்புறத்திலும் கிராமவாசிகள் தேடினர். துப்பு ஏதும் கிடைக்கவில்லை. பிசாசாகத்தான் இருக்க வேண்டுமெனத் தீர்மானித்தனர்.

அடுத்த இரவில் அண்டையில் கோழிக் கூண்டிலிருந்து முட்டைகள் பல காணாமற் போய்விட்டன. இது நரியின் வேலையல்ல; அது கோழிக்குஞ்சுகளை உயிரோடு விட்டுப் போகாது என்றனர் பெரியோர்.

மற்றொரு வீட்டில் ஒரு மூலையில் வைக்கப்பட்டிருந்த முட்டைகள் அப்படியே இருந்தன ஓடாக! உள்ளேயிருப்பது மாயமாக மறைந்து விட்டிருந்தது.

ஜனங்களை கிலி உலுக்கியது. கடலில் யாரோ ஒருவர் எரியும் பந்தத்தைக் கையில் ஏந்தி நடப்பதைப் பார்த்ததாகச் சிலர் கூறினர். கடலில் அந்த வழி செல்ல மீனவர்கள் பயந்தனர். மாலைப் பொழுதினிலே வீடு திரும்பி, குடும்பத்துடன் கதவைத் தாளிட்டுத் தங்கியிருக்கத் துவங்கினர். விழிஞ்சம் கோயிலிலும், மசூதியிலும், மாதா கோயிலிலும் விசேஷ பிரார்த்தனைகள் நடைபெற்றன.

ஒரு நாள் எனது நண்பர்—பக்கத்து நகரத்தில் உயர்தர அதிகாரி—அந்த கிராமத்துக்கு விஜயம் செய்தார். இரண்டு அல்ஸேஷன் நாய்கள், ஆணும் பெண்ணும், அவருடன் வந்தன. மோப்பம் பிடித்துக் கண்டு பிடிப்பதில் அவை நன்கு பயிற்சி பெற்றவை.

கடலோரத்தில் சிறிது நேரம் நாய்களுடன் உலவிய பிறகு பழைய மாதா கோயிலுக்குச் சென்றார் அதிகாரி. புராதனக் கோயிலாதலால் பழைய சின்னங்களை அங்கே கண்டு களிக்கலாம் என்ற ஆர்வம் அவருக்கு. நாய்களும் கிராமவாசிகள் சிலரும் அவருடன் கூடச் சென்றனர்.

கோயிலுள் நுழைந்து தெய்வ பீடத்துக்கு அருகே நின்று கவனித்துக்கொண்டிருந்தார் அதிகாரி. உருவங்கள் மிகப் பழமையானவை. பாண்டங்கள் இரு நூறு வருடத்துக்கு மூந்தியவை. நாய்கள் திடீரென எதையோ மோப்பம் பிடித்து உறுமுவது கேட்டது. பக்கத்து அறையில் நுழைந்தார். அதிகாரி. அது ஸ்டோர் அறை மாதிரி இருந்தது. கண்ட சாமான்கள் அங்கே குவிக்கப்பட்டிருந்தன. நாய்களின் உறுமல் பலத்தது. திடீரென ஒரு மூலையில் பாய்ந்தன. அங்கிருந்து வெளி தாழ்வாரத்துக்கு எதையோ துரத்திச் சென்றன. அதிகாரியும் அங்கு விரைந்தார். ஆறு அடி நீளமுள்ள நல்ல பாம்பு ஒன்றை வெளியே பிடித்திழுத்திருந்தன நாய்கள். ஸர்ப்பத்துக்கும், நாய்களுக்குமிடையே உயிர்ப் போராட்டம் பயங்கரமாகத் தொடங்கியது.

பாம்பைச் சமாளிக்கும் விதத்தில் நாய்கள் கைதேர்ந்திருந்தன. ஒன்று முன் நின்று பாய்ச்சுக் காட்டியது. அதன் மீது பாம்பு படம் விரித்துப் பாய்ந்தபோது, மற்றொன்று ஸர்ப்பத்தின் வாலைக் கடித்தது. பாம்பு திரும்பியதும், முதல் நாய் அதன் வாலைக் கடித்தது. அரை மணிக்குள் ஸர்ப்பம் கிழித்தெறியப்பட்டு விட்டது. கிராமவாசிகள் சொக்கப்பானை கொளுத்தி அதை அடக்கம் செய்தனர்.

ஸ்டோர் அறைக்குள் மீண்டும் பிரவேசித்தபோதுதான் கிராமத்தை பயத்தில் ஆழ்த்திய கயவன் யார் என்று தெரிந்தது. அங்கு முட்டை ஓடுகளும், கோழியின் இறகுகளும், சில எலும்புகளும் சிதறிக் கிடந்தன!

பிறழாப் பெருந்தலைவர்கள்

அலஹாபாத்திலிருந்து வெளிவரும் லீடர் என்ற ஆங்கிலப் பத்திரிகையின் ஆசிரியராக காலஞ்சென்ற ஸர் ஸி. ஒய். சிந்தாமணி பணியாற்றுகையில், தன் சுய அபிப்பிராயத்தை எந்த லாபத்தை உத்தேசித்தும் விட்டுக்கொடுக்க மாட்டார்.

இதற்கு உதாரணமாக இவருக்கும் பண்டித மாளவியாவுக்குமிடையே தோன்றிய கருத்து வேற்றுமையை விசேஷமாகக் குறிப்பிடுவது வழக்கம்.

மண்டேகு சீர் திருத்தங்கள் விஷயமாக எழுந்த கருத்து வேற்றுமை அது. சீர்திருத்தங்களை வரவேற்கும் கட்சி சிந்தாமணியினுடையது. அவற்றை நிராகரிக்கும் கட்சியைச் சேர்ந்தவர் மாளவியா.

மாளவியாவை அணுகி, “நான் பத்திரிகையின் ஆசிரியர். பத்திரிகையின்கொள்கையை முக்கியமாகக் கருதுவது உங்களுடைய உரிமை. உங்கள் கொள்கைக்கு விரோதமாக நான் நடப்பது சரியல்ல. இச்சந்தர்ப்பத்தில் என்னை என் வழியில் செல்ல (அதாவது, வெளியேற) அனுமதிக்க வேண்டும்” என்றாராம் சிந்தாமணி.

மாளவியா, “பத்திரிகையில் இருவருக்கும் அன்பு உண்டு. போர்டின் தலைவராகிய என்னைவிட, ஆசிரியராகிய உங்களையே அதிகம் பொறுத்திருக்கிறது பத்திரிகையின் வளர்ச்சி. நம்மில் யாராவது ஒருவர் அவசியம் வெளியேற வேண்டும்! அதை நானே ஏற்றுக் கொண்டுவிடுகிறேன். நீங்கள் எப்பொழுதும் போல உங்கள் வேலையைத் தொடர்ந்து செய்யுங்கள்” என்றாராம்!

—கே.

நாராயணீயம்

சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதர்

3. த்வாதசி விரதமும் கோதானமும்

(தொடர்ச்சி)

உபவாஸம் இருக்கும் காலங்களில் கர்மேந்திரியங்களால் பகவானைப் பூஜிப்பதில் ஒருவித குறைபாடும் இல்லாமல் நன்கு மிகச் சிறப்பாக அம்பரீஷன் பூஜித்ததை ஆச்சரியத்துடன் நம்பூதிரி

'महतीं वितन्वन्'

(மஹதீம் விதன்வன்) என்ற வாக்கியத்தால் கூறுகிறார்.

இம்மாதிரி பகவானைப் பூஜிப்பதற்கு முக்கியமான அங்கம் சாதுக்களுக்குச் செய்யும் தானங்களேயாகும். அத்தகைய தானங்களுள் மிகவும் சிறந்தது கோதானம் ஆகும். ஒரு பசுவை ஒரு நல்ல சாதுவிடத்தில் கொடுத்து, அந்த சாதுவானவர், ஸ்ரீ பகவானுடைய பூஜை அக்னிஹோத்ரம் முதலிய நல்ல காரியங்களுக்கு அதன் பாலை உபயோகப்படுத்திவிட்டானேயானால் அந்த புண்யமானது, தானம் கொடுத்தவனை, அந்த பசுவின் சரீரத்தில் எவ்வளவு ரோமங்கள் இருக்கின்றனவோ, அத்தனை ஆயிரம் வருஷங்கள் புண்யலோகத்தில் வசிக்கும்படி செய்துவிடும். ஒரு பசுவைக் கொடுப்பதே இம்மாதிரி பயனை அளிக்கின்றது. அம்பரீஷனோவெனில் அறுபது கோடி பசுக்களை சாதுக்களுக்கு தானம் செய்தான் என்று நம்பூதிரி பெருமையாய்

'पशुषष्टिकोटिं'

'பசுஷஷ்டிகோடிம்' என்று கூறுகிறார்.

சாதாரண காலத்தில் தானம் செய்தாலே புண்யம். அதுவும், ஏகாதசீ, த்வாதசீ என்ற புண்யகாலத்தில் கோடிக்கணக்கான பசுக்களை தானம் செய்தது அளவற்ற பலனைத் தரவல்லதாகும். இத்தகைய விரதத்தை ஒவ்வொரு மாதமும், தவறாது ஒரு வருஷகாலம் அனுஷ்டித்து வந்தான். இத்தகைய விரதம், பூஜை, தானம் இவைகளையெல்லாம், அம்பரீஷன் பகவானுடைய ப்ரீதிக்காகவே செய்து வந்தான் என்பதை

'भवदर्चनार्थम्'

'பவதர்சனார்த்தம்' என்ற பதத்தால் தெரிவிக்கிறார்.

இதிலிருந்து விவேகிகள், தாங்கள் செய்யும் சத்காரியங்கள் எல்லாம் பகவானுக்கே அர்ப்பணம் என்ற புத்தியுடன் செய்யவேண்டும் என்பது அம்பரீஷ சரித்திரத்தால் தெரிகிறது. இதுவே நிஷ்காம கர்மா எனப்படும். ஸ்ரீமத் பாகவதத்திலும், ஸ்ரீ கிருஷ்ணனுடைய ப்ரீதிக்காகவே அம்பரீஷன் இந்த விரதத்தை ஆரம்பித்தான் என்பதும் அரசனுக்கு எவ்வளவு ஆவலும், நம்பிக்கையும், இருந்ததோ அவ்வாறே அவன் மனைவிக்கும் இருந்ததென்றும் ஒரு வருஷகாலம் இந்திரியங்களை அடக்கி மனைவியுடன் விரதத்தைச் செய்து வந்தான் என்றும், ஸ்ரீ பகவானுக்கு மகாபிஷேக முறைப்படி அபிஷேகங்களைச் செய்து, பீதாம்பரம், ஆபரணம், புஷ்பம் முதலியவைகளால் பூஜை செய்தான் என்றும், வேதவித்துக்களுக்கு அறுபது கோடி பசுக்களை அலங்காரம் செய்து தானம் செய்தான் என்றும் விஸ்தாரமாய் கீழ்க்கண்ட சுலோகங்களில் ஸ்ரீ சுகர் வர்ணித்திருக்கிறார்.

आरि राधयिषुः कृष्णं महिष्या तुल्य
शीलया ।
युक्तः सांवत्सरं वीरो दधार द्वादशी
व्रतम् ॥
महाभिषेकविधिना सर्वोपस्कर संपदा ।
अभिषिच्याम्बराकल्पः गन्धमाल्यार्ह
णादिभिः ॥
गवां रुक्मविषाणीनां रूप्याङ्घ्रीणां
सुवाससाम् ।
पयश्शीलवयो रूप वत्सोपस्कर
संपदाम् ॥
प्राहिणोत् साधु विप्रेभ्यः गृहेषु
न्यर्बुदानि षट् ॥

ஆரி ராதயிஷு: க்ருஷ்ணம்
மஹிஷ்யா துல்யசீலயா
யுக்த: ஸம்வத்ஸரம் வீரோ
ததார த்வாதசீ வ்ரதம்
மஹாபிஷேக விதினா
ஸர்வோபஸ்கர ஸம்பதா
அபிஷிச்யாம்பரா கல்பை:
கந்தமால்யார்ஹணாதிபி
கவாம் ருக்ம விஷாணீநாம்
ரூப்யாங்க்ரீணாம் ஸுவாஸஸாம்
பயச்சீலவயோ ரூப
வத்ஸோபஸ்கர ஸம்பதாம்
ப்ராஹிணோத் ஸாது விப்ரேப்ய:
க்ருஹேஷு ந்யர்புதானிஷட்

(9வது ஸ்கந்தம் 4வது அத்யாயம்)

ஸ்ரீமத் பாகவதத்தில் இவ்வாறு பல சுலோகங்களால் கூறியுள்ள சாராம்சத்தை ஸ்ரீ நம்பூதிரி இந்த சுலோகத்தில் அடக்கிக் கூறியிருக்கிறார்.

4. துர்வாஸ முனிவரின் வருகை

तत्राथ पारणदिने भवदर्चनान्ते
दुर्वाससाऽस्य मुनिना भवनं प्रपेदे ।
भोक्तुं व्रतश्च स नृपेण परार्तिशीलो
मन्दं जगाम यमुनां नियमान्
विधास्यन् ॥

தத்ராத பாரணதினே பவதர்ச்சநாந்தே
துர்வாஸஸா அஸ்ய முனினா பவனம் ப்ரபேதே
போக்தும் வ்ருதஸ்ச ஸ ந்ருபேண பரார்த்திசீலோ
மந்தம் ஜகாம யமுநாம் நியமான் விதாஸ்யன்

பதவுரை:— அத-பிறகு, தத்ர-அந்த மதுவனத்தில், பாரணதினே-பாரணை (போஜனம்) செய்யவேண்டிய நாளில், பவதர்சனாந்தே-தங்களை பூஜை செய்து முடிந்ததும், துர்வாஸஸா-துர்வாஸர் என்ற, முனினா-முனிவரால், அஸ்ய-இந்த அம்பரீஷனுடைய, பவனம்-இருப்பிடமானது, ப்ரபேதே-அடையப்பட்டது. ந்ருபேண-அரசனால், போக்தும்-சாப்பிடுவதற்காக, பரார்த்திசீல: - பிறருடைய மனதைத் துன்பப்படுத்தும் சுபாவமுள்ள, ஸ: ச-அந்த துர்வாஸ முனிவரும், வ்ருத: - வேண்டப்பட்டு, நியமான்-அனுஷ்டானங்களை, விதாஸ்யன்-செய்வதற்காக, யமுனாம்-யமுனா நதியைக் குறித்து, மந்தம்-மெல்ல நடந்து, ஜகாம-சென்றார்.

கருத்துரை:— "ஹே குருவாயூரப்பா! அறுபது கோடி பசுக்களை தானம் செய்த பிறகு அந்த மதுவனத்தில் அம்பரீஷன் தங்களுடைய பூஜையின் முடிவில் பாரணை செய்யத் தொடங்கும்பொழுது துர்வாஸர் என்ற முனிவர் அம்பரீஷனுடைய இருப்பிடத்திற்கு வந்தார். அந்த முனிவர் பிறருடைய மனதைப் புண்படுத்தும் சுபாவமுடையவர். அப்படிப்பட்டவரை அம்பரீஷன் போஜனம் செய்யவேண்டுமென்று வேண்டிக்கொண்டான். அந்த முனிவரும் அனுஷ்டானங்களைச் செய்வதற்காக யமுனா நதியை நோக்கி மெதுவாக நடந்து சென்றாரமே!" என்று ஸ்ரீ நாராயண நம்பூதிரி கேட்க, பிம்பமான ஸ்ரீ குருவாயூரப்பனும் "ஆம்" என்று தலையை ஆட்டி அங்கீகாரம் செய்தாராம்.

விளக்கவுரை

पुण्यं मधुवनं यत्र नित्यं सन्निहितो
हरिः ।

புண்யம் மதுவனம் யத்ர நித்யம்
ஸந்நிஹிதோ ஹரி:

என்று ஸ்ரீமத் பாகவதத்தில் கூறப்பட்டிருக்கிறது. புனிதமான இடமாகிய மதுவனத்தில் எப்போதும் பகவான் ஸாந்நித்யமாயிருக்கிறார்.

புண்ய நதியான யமுனையின் கரையில் அமைந்திருப்பதால் மதுவனத்

திற்கு அவ்வளவு பெருமை. ஒரு புண்ய கர்மாவைச் செய்வது மேன்மையைக் கொடுக்கும். அதுவும் அந்தக் கர்மாவை ஒரு புண்ய தேசத்தில் செய்தால் அது விசேஷமான சிரேயஸ்ஸைக் கொடுக்கும். அம்பரீஷன் கர்மாக்களை மிகுந்த சிரத்தையுடன் செய்பவனாகையால், புண்ய தேசமான மதுவனத்தில் துவாதசீ வ்ரதத்தை அனுஷ்டித்தான்.

அந்த துவாதசி தினத்தன்று துவாதசி திதி ஒன்றேகால் நாழிகை (½ மணி) தான் இருந்தது. அதற்குள் பிராம்மணோத்தமர்களுக்கு போஜனம் செய்வித்து, அவர்களும் அம்பரீஷனை பாரணை செய்துவிடும்படி ஆக்ஞாபித்து விட்டார்கள். அந்த ஸமயத்தில் துர்வாஸ மகரிஷி அங்கு வந்து சேர்ந்தார். இதையே ஸ்ரீமத் பாகவதத்திலும்

भोजयित्वा द्विजानग्रे स्वाद्वन्नं
गुणवत्तमम् ।
लब्धकामैरनुज्ञातः पारणायोपचक्रमे ॥

போஜயித்வா த்விஜாநக்ரே
ஸ்வாத்வந்நம் குணவத்தமம்
லப்தகாமைரனுக்ஞாத:
பாரணாயோபசக்ரமே
(ஸ்ரீமத் பாகவதம்)

என்று கூறியிருக்கிறது.

அவர்களுடைய ஆக்ஞையின்பேரில் அரசனும் பாரணை செய்ய ஆரம்பித்தான். அந்த சமயம் துர்வாஸ மகரிஷி அங்கு வந்ததை அறிந்தான்.

ஒரு நல்ல காரியம் ஆரம்பிக்கும் போது பெரியோர்கள் அங்கு விஜயம் செய்வது உண்டு. அவர்களுடைய எதிர்பாராத வருகை ஒரு நல்ல அறிகுறி. அதிலும் மஹாமுனிவரான துர்வாஸர் விஜயம் செய்வது மிகுந்த பாக்கியமாகும். துர்வாஸ மகரிஷி தானாகவே அம்பரீஷன் இருப்பிடத்தைத் தேடிப் போனது மிகுந்த பாக்கியம் என்பதைக் காட்டவே ஸ்ரீ நம்பூதிரி "துர்வாஸஸாஸ்ய முனிரா பவனம் ப்ரபேதே" என்று சிறப்பாகக் கூறுகின்றார். இதை நன்குணர்ந்த அம்பரீஷன் உடனே எழுந்து சென்று துர்வாஸ மகரிஷியை வணங்கி வரவேற்றான். இதை ஸ்ரீமத் பாகவதத்தில் விவரமாகக் காணலாம்.

तस्य तर्ह्यतिथिस्साक्षात् दुर्वासा
भगवानभूत् ।

தஸ்ய தர்ஹ்யதிதிஸ்ஸாக்ஷாத்
துர்வாஸா பகவாநபூத்

பகவானான துர்வாஸ மகரிஷியே அம்பரீஷனின் அதிதியாக வந்தார் என்று கூறப்பட்டிருக்கிறது.

तमानर्चातिथिं भूयः प्रत्युत्थाना-
सनार्हणैः ।
ययाचेऽभ्यवहाराय पादमूलमुपागतः ।
प्रतिनन्द्य स तद्याच्ञां कर्तुमावश्यकं
गतः ।
निममज्ज बृहद्ध्यायन् कालिन्दी
सलिले शुभे ॥

தமாநர்ச்சாநதிதிம் பூய:
ப்ரத்யுத்தாநாஸநார்ஹணை:
யயாசே அப்யவஹாராய
பாதமூலமுபாகத:
ப்ரதிநந்த்ய ஸ தத்யாக்ஞாம்
கர்துமாவஸ்யகம் கத:
நிமமஜ்ஜப்ருஹத்த்யாயன் காளிந்தீ
ஸலிலே சுபே
(ஸ்ரீமத் பாகவதம் 9-வது ஸ்கந்தம் 4-வது அத்தியாயம்)

பூமண்டலத்திற்கே அதிபதியான அம்பரீஷன் அதிதியாக வந்திருக்கும் துர்வாஸ முனிவருக்கு எழுந்து ஆஸனம் கொடுத்து உட்காரச் செய்தான். பிறகு அவர் பாதங்களைப் பிடித்துக்கொண்டு, அன்று தன் வீட்டில் போஜனம் செய்ய வேண்டுமென்று வேண்டினான். அவனுடைய வேண்டுகோளை முனிவரும் கொண்டாடி, அங்கீகரித்து, அனுஷ்டானங்களைச் செய்வதற்காக யமுனா நதிக்குச் சென்றார். அங்கு சுபமான யமுனா ஜலத்தில் அகமர்ஷன ஸூக்தத்தை ஜபித்துக்கொண்டு பிரம்மத்தைத் த்யானித்தவராய் ஸ்நானம் செய்தார்.

ஸ்ரீ நாராயண நம்பூதிரி துர்வாஸ மகரிஷியை "பரார்த்திசீல:" (பிறருடைய மனதைத் துன்புறுத்தும் சுபாவமுள்ளவர்) என்று குறிப்பிடுகிறார். அம்பரீஷனுக்கும் துர்வாஸரைப் பற்றி நன்கு தெரியும். அப்படித் தெரிந்திருந்தும்கூட அவரை மிகுந்த அன்புடனும், மரியாதையுடனும், வரவேற்றுப் பூஜித்தது, அம்பரீஷனுடைய பெருமையை உணர்த்துகின்றது. அம்பரீஷனுடைய பெருமையை உணர்த்துவதற்காகவே நம்பூதிரி "பரார்த்திசீல:" என்ற சொற்களை உபயோகப்படுத்தியிருக்கிறார்.

துர்வாஸ முனிவரைப் பொறுத்த வரையில் அவர் பிறர் மனதைத் துன்புறுத்துகின்றவர் என்பது முற்றிலும் உண்மை. ஆனால் அவரால் அவ்வாறு துன்புறுத்தப்பட்டவர்கள் மிக்க மேன்மையை கண்டிப்பாக அடைந்துவிடுவார்கள். அப்படித் துன்புறுத்தினால் அது அவர்களை மேன்மைப்படுத்துவதற்காகவே இருக்கும்.

உதாரணமாக ஒருவன் ஒரு தப்பிதத்தைச் செய்கிறான். அந்தத் தவறை உடனே மற்றொருவர் கண்டித்தால் தவறு செய்தவனுக்கு முதலில் கோபம் ஏற்படும். கொஞ்சம் நேரங்கழித்து அவன் ஆற அமர யோசனை செய்யும்போது தன்னுடைய தவறு கண்டிக்கப்பட்டது சரி என்பதை உணர்வான். தவறு செய்தவன் கண்டிக்கப்படும்போது ஒரு சில நிமிஷங்கள், துன்பம் அடைந்தாலும், பிறகு அத்தவறு செய்யாத வகையில் திருந்திவிடுகிறான். அவ்வாறு அவன் தவறு செய்யும்போது நமக்கென்ன கவலையென்று பேசாமல் ஒருவன் போய் விடுவானேயாகில் அத்தவறுதலால், அவனுக்கும், பிறருக்கும் பின்னால் பல கஷ்டங்களும் நஷ்டங்களும் ஏற்படுகின்றன. ஞானிகள், கருணை நிரம்பியவர்கள், நல்லவர்கள், பல நாட்கள் அனுபவிக்க வேண்டிய வேதனைகளைச் சில நிமிஷங்கள் அனுபவிக்கும்படி செய்து, துன்பத்தை பல நாட்கள் அனுபவிக்காமல் செய்துவிடுவார்கள். அதனால் இது முடிவில் அனுக்ரஹமாகவே ஆகிவிடும். துர்வாஸ முனிவர் பிறரைத் துன்புறுத்தினால், அவருடைய தவம் விருத்தியாகின்றது என்று புராணங்கள் கூறுகின்றன. இதன் தாத்பர்யம் என்னவென்றால், அத்தகைய கோபம் அவர்களுக்கு முடிவில் நன்மையையே உண்டு பண்ணுகிறது என்பதுதான்.

துர்வாஸ முனிவர் அம்பரீஷனின் பக்தியை பரிசோதிக்க எண்ணிவிட்டார். அம்பரீஷன் அதிதியை உபசரிப்பதில் எவ்வளவு தூரம் சிரத்தை காண்பிக்கிறான் என்பதையும், அதிதியை உபசரிப்பது, பாரணையை துவாதசிக்குள் முடிப்பது என்ற இரண்டையும் எவ்வாறு நிறைவேற்றுகிறான் என்பதையும் பரிசோதிக்கவே அவர் யமுனை நதியை நோக்கி மெதுவாகச் சென்றார் என்று நம்பூதிரி "மந்தம் ஜகாம" என்ற வார்த்தைகளால் குறிப்பிடுகிறார்.

எதிர்பாராமல் திடீரென வரும் பெரியோர்கள் அதிதி எனப்படுவர். அவ்வாறு வரும் அதிதிகளை ஆதரித்துப் பூஜித்து, போஜனம் செய்வித்து திருப்தி செய்வது என்பது ஹிந்துக்களின் ஒரு புராதனப் பண்பாடு. அதிதியை பகவானாகவே பாவித்துப் பூஜிப்பது ஹிந்துக்களுக்கே உரித்தான ஒரு தனிப் பெருமை. இது சாஸ்திரங்களிலும் வலியுறுத்தப்படுகின்றது. "பசிக்குக் காரணமான ஜாடராக்னி ஸ்வரூபமாக இருப்பது நான்" என்று பகவான் கீதையில் கூறியிருக்கிறார். ஆகையால் பசியோடு வரும் எந்த அதிதியையும் பகவத் ஸ்வரூபமாக பாவிக்கவேண்டும் என்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றன.

"अहं वैश्वानरो भूत्वा प्राणिनां
देहमाश्रितः"

(அஹம் வைச்வாநரோ பூத்வா
ப்ராணினம் தேஹமாச்ரித:)

என்பது கீதையில் பகவானின் வாக்கியம். எல்லா தானங்களுக்கும் பாத்திரம் அறிந்து கொடுக்கவேண்டும். அன்னதானம் செய்வதற்கு மாத்திரம் அந்த நிபந்தனை கிடையாது. பசியுள்ள எவனுக்கும் அன்னதானம் செய்யவேண்டும்.

"अन्नस्य क्षुधितं पात्रम्"

(அன்னஸ்ய க்ஷுதிதம் பாத்ரம்) என்று சாஸ்திரம் கூறுகிறது. பசியுள்ளவன் அன்னதானத்திற்கு சிறந்த பாத்திரமாவான் என்பது பொருள்.

(தொடரும்)

விக்கிரமாதித்தன்

உலகியல் கதைகள்



பத்மாவதி சாகஸம் 2.

பத்து விரல் கன்னத்தில் பதிந்திருக்கும் விதம் பாரும் என்று அழுதாள் கிழவி. இளவரசன் கோபமுற்றுன்... மந்திரியின் வீரத் திருமகனும் இன்று முதல் நிலவு இரவு ஈரைந்துநாள் ஆகும் என்பதனைக் குறிப்பிடவே அவள் அடித்தாள் சந்தனத்தால்......... பதினோராம் நாள் மீண்டும் பல்லில்லாக் கிழவியையே சமாதானம் பல சொல்லி சாகஸ்பால் தூது அனுப்ப மன்னன் மகள் மூன்று மருதாணி விரல்களை ஓர் பொன் கிண்ணக் குங்குமத்துப் புதுக் குழம்பில் தோய்த்து. இவள் தன் நன்நெஞ்சில் பதித்து எவரும் காணுத திருட்டுவழிப் பின் கட்டுவழியாகப் போக்கித் துரத்திவிட்டாள்......" "இளவரசி மாதவிடாய் குங்குமத்து விரல் மூன்றுல் குறிப்பிட்டாள். நாலாம் நாள் எங்கெவர்க்கும் தெரியாமல் இரகசியமாய்க் கள்ள வழி மங்கையிடம் மன்னு நீ மருவுதற்குச் செல்" என்றுன். அங்கு அவனும் அப்படியே அந்தப்புரம் அடைந்தான்......கூடிக் குலவு சுகம் கொடுத்தாள் இளவரசி.

இளவரசி மையலிலே இருக்கின்றபோது, ஒரு நாள், இணை பிரியா மந்திரியை இவன் நினைத்து லயித்திருந்தான் வேற்று நினைப்பென்ன என அவள் கேட்கச் சொல்லிவிட்டான் தோழனுக்கு நஞ்சு ஊட்டித் தொலைத்துவிடத் திட்டமிட்டு......திராட்சை மதுப் பானகத்தில்...நஞ்சைக் கலந்து..நண்பருக்குப் பருகவைத்து.. வந்திடுவீர் அழைத்து என்று அனுப்ப. ...இளவரசன் ஏகித் தன் நண்பனிடம் கொடுத்தான்...மதுக் கிண்ணம் குறிப்பாகப் பார்த்து அவனும். நஞ்சு எனக்கேன் தருகின்றுய் என்றவனைக் கோபிக்க. பதுபானக் கிண்ணத்தை மந்திரி நாய் முன் வைத்தான்......குடித்த உடன் சுருண்டு விழுந் திறந்தது நாய் ..."இளவரசி, நாமிருவர் இணைபிரிய நஞ்சளித்தாள் வஞ்சகமாய். வஞ்சகியை வஞ்சிக்க வகை சொல்வேன் செய்திடுக" என இளவரசன் அவளிடம் போய் இந்திர போகம் கொடுத்து...தாமகுகையில் கழுத்தணிந்த தாழ்வடத்தைக் கழற்றிக்கொண்டவள் தனத்...ன் நடு மையத்தில் மூன்று விரல் நகம் பதிய ஊன்றிவர மறுநாள் நம் மந்திரி ஓர் மகயோகி போலாகிச் சுடுகாட்டில் தவம் செய்ய. சுகங்கொடுத்த இளவரசன் தாழ்வடத்தை, அவள் தந்தை தன் சபையில் கொண்டுவர "யாது விலை இதற்கு" என்ன "யானறியேன் யோகியவர் - சுடுகாட்டில் தவம் செய்வார் சொல்வார் விலை இதற்கு" என்றுன்.

(தொடரும்)

சாகா மருந்து!

(சென்ற இதழ் தொடர்ச்சி)

கிழவர் தன்னிடம் கூறியதையெல்லாம் கேட்ட இளவரசனுக்கு சிறிது நேரம் ஒன்றுமே புரியவில்லை. அவனுடைய மனதில் குழப்பம் குடிகொண்டது. அவன் போதிசத்துவரைத் தனது தந்தைக்குச் சமமாக எண்ணிக்கொண்டிருந்தான். ஆனால், 'என் தந்தைதானே நான் ராஜ்ய பரிபாலனம் செய்வதற்குத் தடையாக இருக்கிறார்; அப்படியிருக்க, இந்த போதிசத்துவர் என்ன வாழ்ந்தார்' என்றும் அவன் மனத்தில் தோன்றியது. 'இந்த போதிசத்துவர் என் தந்தைக்கு சாகா மருந்து அளித்ததால்தானே, எனக்கு நாட்டை ஆள்வதற்கு வாய்ப்பில்லாமல் போகப் போகிறது?' என்ற எண்ணம் இளவரசனின் மனத்தில் தோன்றியதும், போதிசத்துவரின் உயிரை வாங்குவதும் தவறில்லையென்றே கருதினான்.

இப்படி மனத்தில் ஏற்பட்ட பல போராட்டங்களுக்கு அப்புறம், கடைசியாக ஒரு உறுதி செய்துகொண்டு, போதிசத்துவரின் மாளிகையை அடைந்தான் இளவரசன்.

இளவரசன் தன்னை நாடி வந்திருப்பதைக் கண்ட மந்திரி போதிசத்துவர், "வாருங்கள் இளவரசே, வாருங்கள்! இவ்வளவு தூரம் தாங்கள் என்னை நாடி வர நான் என்ன பாக்கியம் பெற்றேனோ..." என்று அகமும் முகமும் மலர வரவேற்றார்.

இந்தப் பிரமாதமான வரவேற்பைக் கண்ட இளவரசனுக்கு ஒரு புறம் வெறுப்பும், மற்றொரு புறம் மன உறுத்தலும் ஏற்பட்டது. போதி சத்துவரின்மீதிருந்த கோபத்தால் அவனுக்கு வெறுப்பும், அகம் மலர வரவேற்கும் ஒருவரின் தலையையே தானம் கேட்கப் போகிறோமே என்ற எண்ணத்தால் மன உறுத்தலும் உண்டாயிற்று.

அஸ்வத்தாமா

மனத்தில் அவ்வளவு குழப்பம் இருந்தும், அவற்றையெல்லாம் ஒருவாறாக அடக்கிக்கொண்டு, "மந்திரியாரே, உம்மிடம் ஒரு தானம் கேட்கவே நாம் இங்கு வந்தோம். 'கேட்பவர்களுக்கு எதையும் இல்லையென்று சொல்லாமல் கொடுக்கும் வள்ளல்' என்று உம்மைப்பற்றி எல்லோரும் பேசிக்கொள்கிறார்கள். அதையும் பரிசோதித்து விடலாமேயென்றுதான் நாம் இங்கு வந்தோம்..." என்று பெரிய ராஜதோரணையில் கூறினான் இளவரசன்.

இதைக் கேட்ட போதிசத்துவருக்கு ஒரே திகைப்பாகப் போய்விட்டது. 'இளவரசரே தன்னிடம் யாசகம் கேட்டு வந்திருக்கிறார்!' என்ற நினைப்பு எழுந்ததும் அவருக்கு ஒரே ஆச்சரியமாகவும் இருந்தது. இளவரசரே தன்னிடம் வந்து தானம் கேட்பது தனக்கு வாய்த்த பாக்கியம் என்றும் எண்ணினார் அவர்.

"இளவரசே, இந்த ஏழையிடம் தாங்கள் தானம் கேட்க வந்ததாகச் சொல்வதை விளையாட்டுக்காகக் கூறுகிறீர்கள் என்றே கருதுகிறேன் நான். பொன்னும் மணியும் கொழிக்கும் நவநிதிக் களஞ்சியமே தங்கள் பாதாரவிந்தங்களில் கொட்டிக் கிடக்கிறது. இந்த நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் தாங்கள் இட்ட வேலையைத் தலைமேல் தாங்கிச் செய்யக் காத்துக் கிடக்கிறான். இந்த நாட்டின் செல்வமெல்லாம் தங்கள் செல்வம். அப்படியிருக்க, தாங்கள் என்னிடம் தானம் பெற என்னதான் இருக்கிறது! அப்படியும் என்னிடம் தாங்கள் தானம் பெற வேண்டிய பொருள் ஏதேனும் இருக்குமாயின், நான் பாக்கியசாலியே...இளவரசே, தாங்கள் என்னிடம் பெற விரும்பும்

காகிதம்

சீனத்துச் சரித்திரத்திலே காகிதம் முதன் முதல் கி. பி. 105–ல் உபயோகத்துக்கு வந்ததாகவும், அதை முதன் முதல் செய்து உபயோகித்தவர் பெயர் ஸைலுங் என்றும் சொல்லப் பட்டிருக்கிறது. ஒரு ஆறு நூற்றாண்டுகள் காகிதம் செய்யும் முறை மிகவும் ரகசியமாக இருந்தது. அராபியர்களிடம் அகப் பட்டுக்கொண்ட சீனக் கைதிகளிலே காகிதம் செய்யத் தெரிந்தவன் ஒருவன் இருந்தான். அவன் மூலம் ரகசியம் அராபிக்காரர்களுக்குத் தெரியவந்தது. எட்டாம் நூற்றாண்டிலே ஸாமர்க்கண்டு, பாக்தாத், டமாஸ்கஸ் முதலிய நகரங்களிலே காகிதத் தொழிற்சாலைகள் ஸ்தாபிதமாகிவிட்டன.

1189–ல் முதன் முதலாக ஹெரால்ட் என்கிற பிரான்ஸ் தேசத்து நகரிலே மேல் நாட்டில் காகித உற்பத்தி தொடங்கப் பட்டது.

—எஸ். ராஜா

பொருள்தான் என்னவோ?..நான் அறியலாமா...?” என்று வெகு பணிவாக, நா தழுதழுக்கக் கேட்டார் மந்திரி போதிசத்துவர்.

இவ்வளவு பணிவாக போதிசத்துவர் கூறிய வார்த்தைகளையெல்லாம் கேட்ட இளவரசனுக்கு ஒரே மலைப்பாகப் போய்விட்டது. தான் கேட்க விரும்புவதை அவரிடம் கேட்க முடியாமலே தன் நாக்கு வாயோடு ஒட்டிக் கொண்டு விடுமோ என்றுகூட ஒரு கணம் அஞ்சினான். ஆனால், எப்படியோ தன்னைத் திடப்படுத்திக் கொண்டு, “தங்கள்...தலைதான் வேண்டும்...மந்திரியாரே...” என்று ஒவ்வொரு வார்த்தையாகத் தட்டித் தடுமாறியவாறு கேட்டு முடித்தான்.

கேட்டவர்களுக்கு இல்லையென்று சொல்லியறியாத போதிசத்துவர், இளவரசன் தனது தலையை தானம் கேட்பது கண்டு ஒரு விநாடி திகைத்தார்; ஆச்சரியப்பட்டார். ஆனால், சிறிது நேரத்துக்கெல்லாம் அவருடைய அகக் கண்களுக்கு எல்லாம் விளங்கிவிட்டன. தன் தலையைக் கேட்பவன் உண்மையில் தன் உயிரையே கேட்கிறான் என்பதையும் அவர் உணர்ந்து கொண்டார்.

ஆகவே, சாகா மருந்து அருந்திய அவர், தானம் கேட்பவருக்கு இல்லையென்று சொல்லாது தன் உயிரைப் போக்கிக்கொள்ள வழியென்னவென்று யோசித்தார். பிறகு, உள்ளே சென்று ஏதோ மருந்து மெழுகைக் கொண்டுவந்தார். தனது உடைவாளை உருவி அதில் அந்த மெழுகைத் தடவி, இளவரசன் கையில் கொடுத்துத் தன் தலையைச் சீவி எடுத்துக்கொள்ளுமாறு கோரினார்.

இளவரசனும் அவர் கொடுத்த வாளை வீசி, அவரது தலையைச் சீவிவிட்டு, ஒரு ஆறுதல் பெருமூச்சுடன் சென்றுவிட்டான். தலை போன போதிசத்துவரின் உயிர் போய்விட்டது.

சாகா மருந்து அருந்திய அவருடைய உயிர் போனது ஆச்சரியமல்லவா? ஆச்சரியந்தான்! ஆனால், வாளில் தடவிய மெழுகில்தான் அந்த ஆச்சரியம் இருந்தது. அந்த மெழுகு சாகா மருந்தின் வீரியத்தைப் போக்கி, அதைப் பயனற்றதாக்கும் மாற்று மருந்து!

இளவரசன் மந்திரியின் தலையை தானம் கேட்டதையும், மந்திரி அதற்கு இணங்கிவிட்டதையும் காவலர்கள் மூலம் கேள்விப்பட்ட அரசன் ஓடோடி வந்து பார்த்தான். அங்கே மந்திரியின் தலை பூமியில் உருண்டுகிடப்பதைக்கண்ட அரசன் ‘கோ’ வென்று அழுதான். பிறகு, தனக்குச் சாகா மருந்து அளித்ததற்குக் கோபப்பட்டுக் கொண்டு தானே தன் மகன் மந்திரியின் தலையை வாங்கிவிட்டான் என்று எண்ணிய அரசன், ‘ஏ பாவி, எத்தனை நாட்கள்தான் நாம் இருந்து ஆட்சி புரிவது? மகனுக்கும் ஆளும் வாய்ப்பு இருக்க வேண்டாமா?’ என்று மனம் தெளிந்து, சாகா மருந்தாகிய இறைவனின் திருவடிகளை தியானிக்கக் காட்டுக்குச் சென்றுவிட்டான்.

அன்று முதல் இளவரசன் அந்த நாட்டை ஆட்சிபுரிந்தான்.

போதிசத்துவர் உறுதியளித்த போதிலும், உலக நியதிக்கு மாறாக எதுவும் நடந்துவிடக் கூடாதே என்ற எண்ணத்தில், சாகா மருந்து தயாரித்த போதிசத்துவரின் உயிரை வாங்க இளவரசனுக்குப் போதித்த அந்தக் கிழவர், மாற்றுருவில் வந்த தேவேந்திரன்தான்!

பெரியவர்கள் சிறியவர்களுக்கு வாய்ப்பளித்து, தருமங்களில் அவர்கள் அனுபவம் பெற வழி வகுப்பதுதானே நியாயம்?

(புத்த ஜாதகக் கதைகளில் ஒன்று இக்கதை.)

இது செய்தி! நாகு



புதிர்!

பிளாம்பெர்க் என்ற அமெரிக்கர் தமக்கு தினசரிப் பத்திரிகை ஒழுங்காகப் பட்டுவாடா ஆவதில்லை என்று பலதடவை நியூஸ்ஏஜெண்டிடம் புகார் செய்தார். தினம் தவறாமல் கொடுத்து வருவதாக நியூஸ் ஏஜெண்ட் சாதித்தார். இருவருக்கும் பேச்சு வார்த்தை தடித்தது தான் கண்ட பலன். ஒரு நாள் பிளாம்பெர்க்கின் அண்டை வீட்டுக்காரர், அதிகாலையில் தாழ்வாரத்தில் போடப்பட்ட பத்திரிகையை, ஒரு முயல் கௌவிச் செல்வதைக் கண்டார். அதைப் பின் தொடர்ந்தார். அங்கே அவர் கண்ட காட்சி! பத்திரிகை காகிதத்தால் அமைந்த கூடு ஒன்றில் முயல் சம்சாரம் நடத்திக்கொண்டிருந்தது!

—(டிட்பிட்ஸ், ஜூன் 1956)

கோழிக்கு மூக்குக்கண்ணாடி

கோழிகள் சண்டையிட்டு ஒன்றையொன்று கொத்திக்கொள்வதால் காயமடைகின்றன அல்லவா? காயத்திலிருந்து இரத்தம் வழியும் கோழியை, மற்றவை சேர்ந்து தாக்கிக் கொன்றுவிடுமாம். ஹாலந்தில் கோழிப்பண்ணை நடத்திவரும் மார்டின் ஸ்பிண்டர் என்பவருக்கு இதனால் ரொம்ப நஷ்டமேற்பட்டதாம். அதைத் தவிர்க்க கோழிகளுக்கு மூக்குக் கண்ணாடிகளை அவர் அணிவித்தார். அலுமினியத்தாலான அந்த 'மூக்குக்கண்ணாடி'யின் கீழ்ப்புறம் மட்டுமே—தீனி தின்பதற்காக—பார்க்க முடியும். எதிரிலுள்ளதைப் பார்க்க முடியாது; கொத்திச் சண்டை போடவும் இயலாது.

—(லைப்—ஏப்ரல் 1956)



நஞ்சுக்கு மாற்று!

பஞ்சாபில் பதன்கோட்—காங்ரா ரஸ்தாவில் 'அக்னி மாதா' பீடம் ஒன்று இருக்கிறது. பாம்பு தீண்டியவர்கள், இந்த பீடத்திலிருந்து மண்ணை எடுத்து, அருகில் செல்லும் நீரோடை ஜலத்துடன், நச்சுப்பல் பட்ட இடத்தில் தடவினால் விஷம் இறங்கி விடுகிறதாம்.

—(ஹிந்து)

கண்பார்வை மீள...

கண்ணில் சதை படர்ந்து, பார்வை மங்கியவர்களுக்கு நிவாரணமளிக்க இப்பொழுது பிரிட்டனில் சிறிய பிளாஸ்டிக் 'லென்ஸ்' தயாரிக்கப்படுகிறது. கண்ணிற்குள் இருக்கும் 'லென்ஸை' எடுத்து விட்டு இந்த பிளாஸ்டிக் 'லென்ஸை'ப் பொருத்துவதால் கண்பார்வை மீண்டும் நன்றாகத் தெரிகிறதாம்.

—(லைப், ஏப். 1956.)

விஞ்ஞான விளையாட்டுகள்

★

அன்புமிக்க தம்பி, தங்கைகளே!

உங்களுக்கு அதி நூதனமான விஞ்ஞான விளையாட்டைச் சொல்லித் தருகிறேன். செய்து பாருங்கள். உங்களுடைய நண்பர்களை இந்த விளையாட்டின் மூலம் பிரமிக்க வைத்து மகிழ்ச்சி அடையுங்கள்!

இந்த விஞ்ஞான விளையாட்டிற்கு வேண்டிய சாமான்கள் மூன்று சுத்தமான கண்ணாடி டம்ளர், ஐந்து கடுக்காய், கால் தோலா அன்னபேதி, ஆக்சாலிக் ஆஸிட் கால் அவுன்ஸ் இவைதான். சர்வ சாதாரணமாக கடைகளில் கிடைக்கக் கூடியவைதான்.

கடுக்காய்களை உடைத்து ஒரு கண்ணாடிப் பாத்திரத்தில் ஒரு நாள் முழுவதும் ஊறப்போட்டு மறு நாள் காலை திரவத்தை வடிக்கட்டி எடுத்து ஒரு சீசாவில் விட்டு வைத்துக் கொள்ளவும்.

ஒரு கண்ணாடி டம்ளரில் கடுக்காய் திரவத்தில் ஏழு துளிகள் விடவும். இரண்டாவது டம்ளரில் இரண்டு சிட்டிகை அன்னபேதிப் பொடியைப் போடவும். மூன்றாவது டம்ளரில் சிறிது ஆக்சாலிக் ஆசிட் பொடியைப் போடவும்.

மூன்று டம்ளர்களும் தூரப் பார்வைக்குக் காலியாக இருப்பது போன்றே வாக்கு சாதுர்யத்தாலும், நடிப்பினாலும் நம்பும்படிச் செய்யவேண்டும். டம்ளருக்கு அருகில் வந்து மிகவும் குறிப்பாகப் பார்த்தால்தான் உள்ளே சிட்டிகை அளவில் ஏதோ பொருள் இருப்பது தெரியும்.

ஒரு பாத்திரத்திலிருந்து மூன்று கண்ணாடி டம்ளர்களிலும் மூன்றிலொரு அளவிற்கு (சுமார் 2 அவுன்ஸ்) தண்ணீரை விடு. இந்த விஞ்ஞான மகத்துவத்தைப் பாருங்கள்! நன்றாகப் பாருங்கள்! என்று சொல்லிக்கொண்டே ஒவ்வொரு டம்ளராக எடுத்து அவற்றில் சுத்தத் தண்ணீர்தான் விட்டிருக்கிறேன் என்று காட்டுவதுபோல நடித்துக் கொண்டே டம்ளர்களை சுழற்றிச் சுழற்றி அவற்றிலுள்ள இரசாயனப் பொருள்களைத் தண்ணீரில் கரைய வைக்கவேண்டும்.

நண்பர்களே! உங்களுக்கு முதல்தரமான இங்க் வேண்டுமா? நீங்கள் ஷாப் கடைகளில் வாங்கும் இங்குகளைவிட இது மிகவும் உயர்ந்த இங்க்! இதோ உங்களுக்காக... ஒன்று, இரண்டு, மூன்று என்று சொல்லிக்கொண்டே இரண்டாவது டம்ளர் தண்ணீரை முதல் டம்ளரில் ஊற்றினால் கரேல் என்று கருப்பு இங்கியாக மாறிவிடும்.

என்ன தோழர்களே! தங்கைகளே! யோசிக்கிறீர்கள்! இப்போது இங்க் வேண்டாம். சுத்தமான தண்ணீர் இருந்தால் போதுமா? என்று கேட்டுக் கொண்டே மூன்றாவது டம்ளர் தண்ணீரை ஊற்றினால் கருப்பு இங்க் உடனே மறைந்து நிறமற்று சுத்த தண்ணீராகத் தோன்றும்! இதைக் கண்டு உங்கள் நண்பர்கள் பிரமித்துவிடுவார்கள்!

—பி. ஜி. ஸ்ரீனிவாசமூர்த்தி.

ஒப்பந்தம்

இரண்டு நபரோ அதற்கு மேற்பட்டவர்களோ ஒரு காரியத்தைக் குறித்து ஒப்புக்கொள்ளுதல் ஒப்பந்தமாகும். அபிப்பிராயங்களை ஒத்துக்கொள்தல் அல்ல; ஒரு காரியத்தை செய்யவோ செய்யாமலிருக்கவோ ஒத்துக்கொள்ளுதல்தான் ஒப்பந்தம்.

ஒப்பந்தத்திற்கு முதலில் ஒருவர் ஒரு காரியம் செய்ய விருப்பம் தெரிவித்தலும் மற்றவர் அதை ஒத்துக்கொள்தலும் வேண்டும்.

வேலன் தன் வீட்டை பழனிக்கு ரூபாய் ஆயிரத்திற்கு விற்பதாகக் கூறுகிறான். அந்த விலைக்கு ஷெ வீட்டை வாங்கிக்கொள்வதாக பழனி கூறுகிறான். இங்கு ஒப்பந்தம் பூர்த்தியாகிவிட்டது.

ஷெ விருப்பம் தெரிவிப்பது ஒரு குறிப்பிட்ட ஆளாக இருக்க வேண்டுமென்பதில்லை. உதாரணமாக, ரயிலில் தன் பெட்டியை இழந்த ஒருவர் தன் பெட்டியைக் கொண்டு தருபவருக்கு ரூ. 25 பரிசு கொடுப்பதாக விளம்பரம் செய்கிறார். விளம்பரத்தைப் படித்த கந்தன் பெட்டியைக் கண்டுபிடித்து அவரிடம் கொடுக்கிறான். அவனுக்கு ரூ. 25 பெட்டியின் சொந்தக்காரர் கொடுக்க வேண்டும்.

சட்டப்படி செல்ல வேண்டிய ஒப்பந்தங்கள் அல்லது காண்டிராக்ட்டுகள் சில முக்கியமான விதிகளை அனுசரித்திருத்தல் வேண்டும்.

ஒப்பந்தம் செய்து கொள்பவர்கள் சட்டப்படி அதற்குத் தகுதியுள்ளவர்களாக இருக்கவேண்டும். அதாவது இரு தரப்பாரும் மேஜர்களாக இருக்கவேண்டும்; புத்தி சுவாதீனமுள்ளவர்களாக இருக்க வேண்டும்; சுயமாக ஒப்பந்தம் செய்து கொண்டதாக இருத்தல் வேண்டும். ஒப்பந்தத்திற்கு ஒருவரை மிரட்டி, பயமுறுத்தி அல்லது தனக்கு அவர் பேரிலுள்ள அதிகாரத்தை உபயோகித்து, அவர் சம்மதம் வாங்கியதாக இருப்பின் அது செல்லாது. தான் சுய அறிவை உபயோகித்து ஒப்புக்கொண்டதல்ல என்று அவர் கூறலாம். மேலும், ஏமாற்றி ஒப்பந்தத்திற்கு ஒப்புக்கொள்ள வைத்திருந்தாலும் அதை ரத்து செய்யக் கோரலாம்.

கதிர்வேலன் தன் ஆலையில் ஒரு நாளைக்கு 50 மூட்டை அரிசி அரைக்கும் யந்திரம் இருக்கிறது என்று பொய் கூறி சந்தானத்தை அந்த ஆலையை வாங்க ஒத்துக்கொள்ள வைக்கிறார். சந்தானம் பிறகு இந்த ஒப்பந்தம் செல்லாது என்று கூறலாம். ஆனால் கதிர்வேலன் பொய் கூறியிருப்பினும், சந்தானம் யந்திரங்களையும் கணக்குகளையும் பார்த்து ஒரு நாளைக்கு 40 மூட்டை அரிசிதான் அரைக்கும் என்று அறிந்துகொண்ட பின்பு ஒப்பந்தம் செய்து கொண்டாராயின் ஷெ காரணத்திற்காக ஒப்பந்தம் செல்லாது என்று வாதாடமுடியாது. ஏனெனில் ஒப்பந்தம் ஏற்பட்டது கதிர்வேலன் சொன்னதை நம்பியல்ல.

மேலும், சட்டத்திற்கு முரணான ஒப்பந்தங்கள் செல்லா. ஒரு மணமாகாத பெண்ணோ, ஆணோ, தான் கல்யாணமே செய்து கொள்ளப் போவதில்லை என்று ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டால் அந்த ஒப்பந்தம் செல்லாது. சர்க்காரில் சேகருக்கு உத்தியோகம் வாங்கித் தருவதாக ஒப்புக்கொள்கிறார் நடேசன். அதற்காக நடேசனுக்கு ரூ. 1000 கொடுப்பதாக சேகர் ஒத்துக்கொள்கிறார். இந்த ஒப்பந்தம் செல்லாது.

கிஸ்தி கட்டாத காரணத்திற்காக குப்பன் நிலத்தை சர்க்கார் ஏலம் போடுகின்றனர். சட்டப்படி அந்த ஏலத்தில் குப்பனே அந்த நிலத்தை வாங்கக் கூடாது என்று நிபந்தனை இருக்கிறது. இதை மீற குப்பனும் இருளனும் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்கின்றனர். அதாவது, இருளன் ஏலத்தில் நிலத்தை வாங்க வேண்டுமென்றும் பிறகு அதே விலைக்கு ஷெ நிலத்தை குப்பனுக்கே கிரயம் செய்து கொடுக்கவேண்டுமென்றும் ஒப்பந்தம் செய்து கொள்கிறார்கள். இது செல்லாது.

மோசடி செய்துவரும் பணத்தைப் பங்கிட்டுக் கொள்வதாக ஏற்படுத்திக் கொள்ளும் ஒப்பந்தம் செல்லாது.

பந்தய ஒப்பந்தங்கள் செல்லா. வருகிற ஆடி மாதம் மூன்றாம் தேதி மழை பெய்தால் ரூபாய் 100 கந்தனுக்கு வேலன் கொடுப்பதாகவும், மழை பெய்யாவிட்டால் வேலன் கந்தனுக்கு ஷெ தொகையைக் கொடுக்க வேண்டுமென்றும் கந்தனும் வேலனும் ஒப்பந்தம் செய்து கொள்கின்றனர். இந்த ஒப்பந்தம் செல்லாது. குதிரைப் பந்தய ஒப்பந்தங்கள் இதற்கு விலக்கு.

சட்டப்படி உள்ள விதிகளை மீறும் ஒப்பந்தங்கள் செல்லுபடியாகா. சர்க்காரிடமிருந்து வாங்கும் அப்காரி கண்டிராக்டுகளை வேறு ஒருவருக்கு ஒப்பந்தம் செய்து கொண்டு குத்தகைக்கு விடக் கூடாது என்று இருந்த விதியை மீறிய ஒப்பந்தம் செல்லாது என்று ஒரு தீர்ப்பில் கூறப்பட்டது.

ஒப்பந்தம் ஏற்பட்ட காரியம் அல்லது பொருளே இல்லையாயின் ஒப்பந்தம் செல்லாததாகி விடுகிறது.

சந்தைக்கு வந்த கந்தனிடம் தன் வீட்டிலுள்ள மாட்டை ரூ. 50க்கு விற்பதாக ஒப்பந்தம் செய்து கொள்கிறான் வேலன். வேலனுடைய மாடு அப்பொழுது வீட்டில் இறந்து கிடந்தது. இது இருவருக்கும் தெரியாது. ஷெ ஒப்பந்தம் ரத்தாகிவிட்டது.

ஒருவர் வியாபாரம் செய்யக்கூடாது அல்லது உத்தியோகம் வகிக்கக்கூடாது என்று தடுக்கும் ஒப்பந்தங்கள் செல்லா. கூட்டு வியாபாரப் பிரிவினையில் பிரிந்து போகும் கூட்டாளி, கடையை எடுத்துக் கொண்ட கூட்டாளிக்குப் போட்டியாக ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு முன்பு பழைய வியாபாரத்தைக் தொடங்கக் கூடாது என்று ஏற்படுத்திக்கொள்ளும் நிபந்தனைகள் செல்லும். ஷெ ஒப்பந்தங்கள் அனுமதிக்கப்பட நியாயமானதாக இருத்தல் வேண்டும்—நியாயமான கட்டுப்பாடுகளை கோர்ட் அனுமதிப்பது உண்டு.

மோசடி, ஏமாற்றம், பயமுறுத்தல் முதலியவற்றால் சம்மதம் பெற்றுக் கொண்ட ஒப்பந்தங்கள் உடனடியே செல்லா என்பதில்லை. பாதிக்கப்பட்டவர் அதை ஏற்றுக்கொள்ளலாம்; செல்லாது என்றும் கூறலாம்.

பிரதி பலன் இல்லாத ஒப்பந்தங்கள் செல்லா. வேலன் தன் வீட்டை பழனிக்கு ரூ. 1000க்கு விற்க ஒத்துக்கொள்கிறான். வேலன் கொடுப்பது வீடு; அதற்கு பிரதி பலன் ரூ. 1000. பழனிக்குத் தன் பணத்திற்கு வீடு கிடைத்துவிடுகிறது. இது தான் பிரதி பலன். பழனி, வேலனுக்கு ரூ. 1000 கொடுப்பதாக (வீடு வாங்காமல்) ஒப்புக்கொண்டால் அந்த ஒப்பந்தம் செல்லாது. ஆனால் இதற்கு விதிவிலக்கு சில உண்டு. உதாரணமாக, இயற்கையாக உள்ள அன்பு காரணமாகத் தன் நெருங்கிய உறவினர்களுக்குக் கொடுக்க ஒப்புக்கொள்ளும் ஒப்பந்தங்கள். சிதம்பரம் தன் மகள் காமாட்சிக்கு தன் வீட்டைக் கொடுக்க ஒப்புக்கொள்கிறான். இது செல்லும். ஆனால் அப்படி சட்டப்படி செல்ல வேண்டுமாயின் ஷெ ஒப்பந்தம் எழுதப்பட்டு ரிஜிஸ்தர் செய்யப்படவேண்டும்.

ஏதாவது செய்ததிற்குப் பிரதி பலனைக் கொடுக்க ஒப்புக்கொள்வது. ராமனின் பணப்பை தொலைந்து போய் விடுகிறது. அதைக் கண்டுபிடித்து எடுத்துக்கொண்டு வந்து கொடுக்கிறான் சுந்தர். அதற்காக சுந்தருக்கு மணி ரூ. 15 கொடுப்பதாக ஒப்புக்கொள்கிறான். இந்த ஒப்பந்தம் செல்லும்.

சட்டப்படி காலாவதியாகி விட்ட கடனைக் கொடுத்து விடுவதாக கடன் பட்டவர் ஒப்புக்கொள்கிறார். மேற்படி ஒப்பந்தம் செல்ல வேண்டுமாயின், எழுதப்பட்டு, கடன்பட்டவர் கையெழுத்துப் போட்டிருத்தல் வேண்டும்.

ஒப்பந்தத்தைப் பத்திரத்தில் எழுதுவதாயின் ஒன்றரை ரூபாய் ஸ்டாம்பு பத்திரத்தில் எழுதி, இரு தரப்பாரும் கையெழுத்துப் போட வேண்டும்.

—வழக்கறிஞர்

ரமணவிலாசனி வடிகா

மிகச் சிறந்த நிவாரணி. தளர்ச்சியடைந்த நரம்புகளுக்கு முறுக்கேற்றி, ஜீவசக்தியையும் பலத்தையும் அதிகரிக்கிறது. வாழ்க்கையின் பூரண இன்பங்களை ரஸிக்க நிரந்தர யௌவனத்தை அளிக்கிறது

டப்பி ரூ. 1—4—0

மதன் மஞ்சரி பார்மஸி

ராம்வாடி, கல்பாதேவி ரோட், பம்பாய்-2

ஏஜண்டுகள்:— சேலம்: மாடர்ன் ஆயுர்வேதிக் ஸ்டோர்ஸ். பெங்களூர்: சிடி மெடிகல் ஸ்டோர்ஸ், சிக்பேட்.

மற்றஇடங்களுக்கு ஏஜண்டுகள்தேவை

காணைதளித்த காவலன்

சௌமி

அறிவிற் சிறந்த ஆன்றோர் பலரும், அருவினையும் மாண்ட அமைச்சர் குழுவும் கூடிய சபையில்தான் நடக்கக் கூடாத அந்த நிகழ்ச்சி நடந்தது.

புருஷாகாரமாக மார்பு நிமிர்ந்து வீரக்களை சொட்டச் சிங்காசனத்தில் அமர்ந்திருந்த இளஞ்சேரவிரும்பொறையின் எடுப்பான தோற்றம் சபையின் அழகை இருமடங்காக்கியது, குளுமை நிறைந்து அரச ஒளி வீசிய கம்பீரப் பார்வை சபையிலுள்ளோரை ஒருமுறை வட்டம் வந்தது. வலப்புறம் தத்தம் ஆசனங்களில் மந்தியமைச்சர்கள் அமர்ந்திருந்தார்கள். இடப்புறம் பிரதான சேனாபதியும் உதவிச் சேனாபதியும் வீற்றிருந்தார்கள். சிங்காசனத்தை அடுத்து இருமருங்கும் புலவர் குழாம் நிறைந்திருந்தது.

மன்னனுக்கு மிக நெருங்கிய ஓர் ஆசனத்தில் செந்நாப் புலவர் பெருங்குன்றூர்க்கிழார் அமர்ந்திருந்தார்.

சபை தொடங்கியது! கட்டியக்காரனின் கட்டியம்!

பிரதம சேனாபதி ஆசனம் விட்டெழுந்தான்.

"அரசே! வாழ்க நின் கொற்றம்! இன்று சபை தொடங்கப்பட்ட சில விநாடிகளிலேயே முக்கியமான செய்தி கூற இருக்கிறது. . ."

சபையோர் யாவரும் சேனாபதியின் வாயையே பார்த்துக் கொண்டிருந்தனர். புலவர் குழாத்திலே சேனாபதியின் கூற்று வியப்பைப் படரவிட்டது. சபை தொடங்கியதும் புலவர்கள் பொறையின் மீது தாங்கள் செய்த பாமாலைகளைச் சூட்டுவார்கள். வழக்கம் இதுதான்! ' ஆனால் அன்றோ வழக்கத்திற்கு மாற்று! அவர்களும் சேனாபதியை இமைகொட்டாமல் கவனித்துக்கொண்டிருந்தனர்.

"வாஞ்சிமாநகரின் கிழக்கில் ஒரு நாழிகை வழித்தொலைவில் சோழன் படை இரவு தண்டு இறங்கியிருக்கிறதாம். பாசறையில் போரைப் பற்றிச் சோழனும் பிரதான படைத் தலைவர்களும் கூடி ஆலோசித்ததை ஒற்றர்கள் அறிந்துவந்து செய்தி சொன்னார்கள். அவர்கள் பகைவர் கையில் சிக்கிக் கொண்டுவிட்டனராம். அதனாலேயே. . ."

"சுந்தரத்தோளரே! நம் ஒற்றர்கள் பகைவர் கையில் சிக்கிவிட்டார்களா?" உக்கிரத்துடன் பொறையின் வாயிலிருந்து புறப்பட்டது கேள்வி!

"ஆம் அரசே! அகப்பட்டாலும் அடுத்து நம் ஒற்ற வீரர்கள் செய்த செயல் வியப்பையும் திகைப்பையும் தருவதாயிருக்கிறது. ." பொறையின் கொதித்த கோபம் குறையத் தொடங்கியது.

"கூடாரத்தைத் தாண்டிய நம் வீரர்களை வளைத்துக்கொண்ட பகைவர் எண்மர்; நம் வீரர்கள் மூவர். பகை வீரர் ஒவ்வொருவர் கையிலும் வில், வாள், கேடயம் மூன்றுமிருந்தன. ஒற்றர்களிடத்திலோ ஒவ்வொருவருக்கும் ஒரே வாள்தானிருந்தது. ஏககாலத்தில் எட்டுப் பேரும் தாக்கினார்கள். ஆனால் மின் வேகத்தில் நம் வீரர்களின் வாள் தொகுதி சுழன்றது. எதிரிகள் முன்னிற்கமாட்டாது மூச்சுத்திணறினர். இமைகொட்டும் நேரத்தில் மூவர் சிரங்கள் தரையில் சரிந்ததும் இருவர் புறங்காட்டி ஓடிவிட்டனர். மற்ற மூவரும் தனித்தனியே போரிட்டனர். அவர்களும் மார்பில் கத்தியளித்த முத்தத்தைப் பெற்றுக்கொண்டு தரையில் சாய்ந்தனர். இதை ஒற்றர் தலைவன் கமலக்கண்ணன் கூறினான் அரசே!"

"சேனாபதி! நாம் சபைகூட்டிக் காலந் தாழ்த்துவது அறிவீனம். படைகள் ஆயத்தமாக எத்தனை நாட்களாகும்?"

சேனாபதி முதல் அமைச்சர் மையூர் கிழாரை நோக்கினான். சபையில் மௌனம்.

இரும்பொறையின் கோபத்தைக் கிண்டிவிட்டது, அந்தக் கணநேர மௌனம். "மையூர் கிழாரே! உங்களுக்குள் ஒருவருக்கொருவர் பார்த்துக்கொண்டால் வினாவுக்கு விடைவர எத்தனை ஆண்டுகளாகும்?" அத்தனை பேருக்கும் தூக்கிவாரிப்போட்டது. மையூர் கிழார் தடுமாற்றத்துடன் ஆரம்பித்தார்.

"இல்லை அரசே! படை திரட்டக் குறைந்தது பதினைந்து நாட்களாகும். இப்போதைக்குப் போர் ஏதும் இல்லை என்ற காரணத்தால் படை வீரர்கள் அங்கங்கே சிதறியிருக்கிறார்கள். அதனால்தான். . ."

"சுந்தரத் தோளரே! பகைவர் படை நகருக்கு வெகு அருகிலா இருக்கிறது?"

"ஆம் அரசே! எந்த விநாடியும் சோழர் படை நகரை முற்றுகையிட்டுத் தாக்கத் தயாராயிருக்கிறதாம். கமலக்கண்ணன் தெரிவித்தான் அரசே!"

'என்ன செய்வது?' என்ற ஏக்கத்தின் சாயலும், நெருக்கடியில் எப்படி நீஞ்சுவது என்ற கலக்கமும் அரசன் முகத்தில் படிந்திருந்தன. அவன் சிந்தனையிலாழ்ந்துவிட்டான்.

புலவர் குழாத்திலும் இசைகேடான நிலையை நினைத்துத் திகைப்பு. பெருங்குன்றூர்க்கிழார் முகத்திலும் கலக்கம் கண்டது. அன்று சபைக்கு வரும்போது தீர்மானமான ஓர் எண்ணத்துடன் வந்தார். 'புலவர்கள் வாழ்த்துப் பாடும்போது நாமும் நம் பாட்டில் கோரிக்கையைக் கூறிவிடவேண்டும்' என்பதே அது. ஆனால் சபையிலோ எல்லாம் மாற்றம்! தொடங்கியதும் தொடங்காததுமாகச் சேனாபதி சொன்ன செய்தி யாவரையும் கலக்கிவிட்டதே! இந்த நிலையில் கோரிக்கையை மன்னன் செவிக்கு எட்டச் செய்வது எப்படி? எரியும் கொள்ளியில் எண்ணெய் வார்த்தது போலானால் . . . ? இப்படித் தயங்கித் தயங்கித்தான் ஆறு மாதங்கள்

கழிந்து விட்டன. என்னவானாலும் இன்று கேட்டுவிடுவதே சரி' என்று கிழார் நெஞ்சில் உறுதி கொண்டார்.

நெஞ்சுறுதியையெல்லாம் நாவில் ஒருங்கே திரட்டிக்கொண்டு ஆசனம் விட்டெழுந்தார் புலவர்.

"சோழனைப் போரில் வென்று பலநாடு களைப் பறித்துப் புலவர்களுக்குப் பரிசி லாக அளித்த சேரவேந்தே! பகைவர் உன் பெயர் கேட்டதுமே அஞ்சத் தம் வழிபடு கடவுளை நினைக்குமாறு செய்யும் உன் வீரம் வாழ்க!"

சிந்தனை வயப்பட்டிருந்த சேரனை புலவர் குரல் கலைத்தது. போரைப் பற்றித்தான் புலவர் கூறுகிறார் என்று ஆவலுடன் கிழாரைப் பார்த்தான்.

"பரிசிலை நாடி ஏழைப் புலவன் வந்து நாட்கள் ஆகிவிட்டன; நாட்களும் மாதங்களாகிவிட்டன. பரிசில் அளித் துக் காத்து நிற்கும் என் நண்பர்களையும் என்னையும் விடைகொடுத்தனுப்புவா யாக..."

புலவர் சொற்களால் இரும்பொறை கோபாவேசமானன். கிழாரையும் மற்றப் புலவர்களையும் உறுத்து நோக்கினன் ஒருமுறை. சபை திகைத்துப்போய் விட் டது.

"பெருங்குன்றூர்க்கிழாரே! உம் கவலை யிலும் பெரிதாக என் கவலை இருப்பதை அறியமாட்டீரா? நாட்டைக் காப்பது எப்படி என்ற கலக்கத்தில் மூழ்கியி ருக்கும் என் நிலையை விளக்க வேண் டுமா? உலகம் பெறும் மூதறிவு பெற்ற புலவரானலும் அவர்கள் தங்கள் எண் ணம் நிறைவேறினல் போதும் என்ற குறுகிய எண்ணம் உடையவர்களே! உம் மைப் போக வேண்டாமென்று யாரும் தடுக்கவில்லை. உம் விருப்பம் இப்போதே விடைபெறுவதானல் சொல்லலாம்.."

இரும்பொறை விருட்டென எழுந் தான், கடுகடுத்த முகத்துடன் சென்று விட்டான்.

சபையில் அதிகமாக வியப்பிலாழ் ந்துவிட்டவர் மையூர் கிழார்தான். இரும் பொறைக்கும் குன்றூர்க்கிழாருக்கும் உள்ள நட்பின் நெருக்கத்தை அவரறி வார். பாட்டும் சுவையுமாக, நகமும் சதையுமாக இருந்த அவர்களிடையே பிணக்கு! 'ஆண்டாண்டாக இறுகி வந்த நட்புப்பாறை ஒரு நொடியில் முகம் மாறி மொழிந்த மன்னனின் சொல் லால் தூள் தூளாகிவிட்டதே' என்று கலங்கிவிட்டார் அவர். பரிதாபத்து டன் குன்றூர்க்கிழாரைப் பார்த்தார், மையூர் கிழார்.

பார்வையைக் குத்திட்டுத் தரையில் பாய்ச்சி, தக்பிரமையோடு சிலையாகி விட்டார் புலவர். 'இரும்பொறை நட் பின் அழகு இவ்வளவுதானா? ஆணிவேர் ஓடாத நட்புத்தானா? என்ன மோசம்! எனக்கு இது இழுக்கல்ல; என்போன்ற என்னிலும் கற்ற புலவர்களுக்கு இழு க்கு!' என்று மனக்குகையில் ஓலம் கேட் டது.

அடிபட்ட வேங்கையாகச் சீறியெழுந் தார், கிழார்!

"சேரனே! உயிர்க் கூட்டத்தைக் காக் கும் தன்மையை மறந்து, புலவரிடத் தில் கொண்ட அன்பு மாறி, அறம் திரிந்த பார்வையோடு உன்போல் மன் னர்கள் ஆவார்களானல், என்போன்ற ஏழைப்புலவர்கள் பிறவாமல் போகட் டும். வாரி வழங்கும் வள்ளலே, வாழ்க!

"நீ வள்ளல் என்று வந்தேன். என்னை வெறுங்கையினல் மற்ற மன்னர்கள் அனுப்பியதை ஏக்கத்துடன் சொன் னேன். எல்லாம் கேட்டுக்கொண்டு உன் நினைவாகவே இருந்தாய். முதலில் சில நாட்களுக்குப் பரிசில் கொடுப்பது போலக் காட்டிப் பிறகு பொய்யாக மாறிய உன் செயலுக்கு வருந்தினேன். அதற்கு நீ நாண வேண்டும். நானும லும், நினைத்துப் பாராமலும் கழித் தாய்! மீண்டும் மீண்டும் பாடச் சொல் லிக் கேட்டும் பூரித்த உன் மார்பை வணங்கிச் சொல்கிறேன்."

வாயிலை நோக்கி நாலடி எடுத்து வைத் தார். நின்று, திரும்பி, நீர்வாரும் கண்க ளோடு சபையைப் பார்த்தார்.

"நாற்புறமும் நசிந்து ஏழமை தவழும் என் வீடு நோக்கிச் செல்கிறேன். துயர மிகுதியால் பலவாறு பிதற்றிக் கொண்டி ருப்பாள் என் மனைவி."

புலவர் நடையைத் துரிதப்படுத்திக் கடந்துவிட்டார், வாயிலை. அத்தனை புலவர்களுக்கும் கிழாரின் பிரிவைத் தாங்க முடியவில்லை. கண்களில் நீர் முத்தாகக் கோத்திருந்தது. புலவர் சென்றவர் சென்றவர்தான்!

வஞ்சிமா நகரிலிருந்து வெகு தூரம்! பெருங்குன்றூரை நோக்கிச் செல்லும் சாலை. ஒன்றரைக்காதத் தொலைவிருக்க லாம். கொளுத்தும் கோடை வெயிலில் சுருண்டுபோன உயி ரினங்கள் களைப் பாறுகின்ற வேளை யில், எதையும் பொருட்படுத்தாமல் கால்வீசி நடந்து கொண்டிருந்தார், குன் றூர்க்கிழார்.

சபையில் நிகழ்ந் ததை நினைத்துப் பார்க்க முடியவில்லை அவரால். 'இளஞ் சேர விரும்பொறையா முகம் மாறி மொழிந்துவிட் டான்? என் ஊழ்

வினையா? அல்லது மன்னன் வெறுப்புக் கொண்டுவிட்டானா? வெறுப்பை நேரடி யாகக் கூருமல் காலைச் செய்தியைக் காரணமாகக்கொண்டு கோபத்தைக் காட்டி விட்டானா? அப்படியானல் இது வரை என் பாடல்களைக் கேட்டு மகிழ்ந்த தெல்லாம் வெளிப்பார்வைக்குத்தானா? உள்ளாழ்ந்து பாடல்களைச் சுவைக்க வில்லையா? பாடல்களுக்குப் பரிசில் தந்தானென்றால் பாட்டின் விலையாகக் கருதித்தான் கொடுத்திருக்க வேண்டும். இனி மன்னர்களை நாடிச் செல்லவே கூடாது. புலமையை விற்று வாழும் இழிநிலைக்கும் ஆளாகக்கூடாது.'

கிழாரின் சிந்தனை, நடை வேகத் தோடு போட்டியிட்டது. பாடல்களைப் பற்றி நினைத்ததும் தன் பாடல்களைக் கேட்டு மன்னன் ஆனந்தித்த நாட்களும் மனத்தடாகத்தில் அலைகளாக எழுந் தன...

வஞ்சிநகர் வந்தடைந்த புலவருக்கு மன்னர் நகரில் இல்லை என்ற செய்தி கிடைத்தது. மன்னர் இல்லாவிட்டால் என்ன? மந்திரிகள் இல்லையா? வாய சைத்தால் குவைகுவை யாகக் கொடுப்பார்களே! கிழாருக்கு அப்படிப் பொருள் பெறுவதில் விருப்பமேயில்லை!

மந்திரிகள் உபசாரங் களுடன் வரவேற்றனர்.

"இரும்பொறை எங்கே?" என்ற கேள் வியை வீசினர் கிழார். அவர் காணவேண்டியது அவன் ஒருவனைத்தானே!

"அரசர் போர்த் தலைமை பூண்டு இருகாத தூரத்தில் படையுடன் தங்கி இருக்கிறார், புல வரே!"

"மன்னனைக் காண வல்லவோ நான் வந் தேன். பாசறைக்கு இப் போதே செல்ல ஆயத்தம் செய்கிறீர்களா?"

பகல் உணவு மட்டும் உண்டு பல்லக்கில் ஏறிப் புறப்பட்டார். பாசறையை அடைந்தவுடன் அவர் கண்ட காட்சி!

போருக்கான ஆயத்தங்கள் அங்கங்கே காணப்பட்டன. கண்பார்வை நீளும் வரை காலாட் படை மயம். வலப்புறம் திரும்பினால் கொள்ளுச் சுண்டல் தின்ற களிப்பில் குதிரைகளின் கனைப்பொலி! இடப்புறம், பெரும் கற்பாறைகள் இடம் பெயர்ந்துவந்து சீராக அணிவகுத்து நிற்பதுபோல யானைகள்! அவற்றின் பிளிறல் ஒலி! வேறொருபுறம் வில் அம்பு பொறித்த கொடி பறக்கும் தேர்களின் வரிசை!

பார்த்துவந்த புலவருக்கு மெய்சிலிர்த்தது. அவர் சோழபாண்டிய படைகளைக் கண்டிருக்கிறார். அவை இரும்பொறையின் படைக்கு ஈடாகா என்று எண்ணியது அவர் மனம்!

இரும்பொறையின் கூடார வாசலில் பல்லக்கு இறங்கியது. கிழார் கூடாரத்தினுள் நுழைந்தார். காலடியோசை கேட்ட சேரன் சிந்தனை கலைந்து திரும்பினான். இரு கைகளையும் முன்னேக்கி நீட்டியவாறு "ஆ! பெருங்குன்றூர்க்கிழாரா!" என்றவாறே விரைந்து வந்து புலவரைக் கட்டிக்கொண்டு விட்டான்.

"சேர மன்னா! வஞ்சிக்கு வந்தேன், உன்னைக் காண. நீ இங்கு வந்திருப்பது தெரிந்தது!"

"போர் நடக்கும் இடத்திற்கே வந்துவிட்டீர்களே!" என்று கூறி அன்பொழுகப் பார்த்தான் இரும்பொறை! இரவு முழுதும் புலவரும் புரவலனும் அளவளாவி அகங்குளிர்ந்தார்கள்!...

கடுவெயிலால் கால்கடுக்க நடந்துகொண்டிருந்த கிழாருக்குக் கண்களில் நீர் முட்டியது. அன்று இரவு அவரும் அவனும் நெஞ்சு தழுவி அளவளாவியதெல்லாம் உருவெளித் தோற்றமாகிப் பொறையின் கடுஞ்சொல் தாங்காமல் தன்னூருக்குச் செல்கிறார். வெறுங்கையராய் விரைகிறார்...

மறுநாள் போர் தொடங்குமுன் இரும்பொறையின் கூடாரத்தில் யாவரும் கூடினர். முதல்நாள் மாலை கண்ட காட்சியைப் புலமைப் பூங்காவில் பூத்த நறுமலராகத் தந்தார்;

"பாடுநர், கொளக்கொளக் குறையாச்
செல்வத்துச் செற்றோர்
கொலக்கொலக் குறையாத் தானைச்
சான்றோர்
வண்மையுஞ் செம்மையும் சால்பும்
அறனும்
புகன்று புகழ்ந்திசையா நல்லிசை
நிலந்தரு திருவி னெடியோய்
நின்னே!"

புலவர் வாக்கில் பூரித்துப்போனான் சேரன். அவர் கரங்களைத் தொட்டெடுத்துக் கண்களில் ஒற்றிக்கொண்டான்...

புலவருக்குக் கண் பஞ்சடைத்து வந்தது. கால்கள் இரு காதங்களைக் கடந்ததால் களைத்துக் கெஞ்சின. சாலையோரக் கிணற்றுநீரைப் பருகி உடலைக் கிடத்தினார். கடந்துவந்த தொலைவைப் பார்த்துப் பெருமூச்செறிந்தார்.

ஊரை நெருங்கிவிட்ட மகிழ்ச்சியில் களைப்பையும் மறந்து கால்வீசி நடந்தார் கிழார்..நடந்தவர் பிடித்து நிறுத்தியதுபோல் நின்றார்.

எதிரில் மாடமாளிகைகள் நிறைந்த சிறு நகரத்தைக் கண்டார்., குன்றூர் என்று நினைத்துக்கொண்டு வேறு நகரத்திற்கு வந்துவிட்டாரா? சுற்றிக் கண்ணோட்டம் விட்டார் அவர். ஊர் நுழைவாயிலில் காவலர்கள்போல இரண்டு ஆலமரங்கள். அவை அருகில் இருபுறமும் தாமரைக் குளங்கள்! குன்றூரின் வாயிலில்கூட இப்படித்தானிருக்கும். இந்த அடையாளங்களை வைத்துப் பெருங்குன்றூர்தான் என்று தீர்மானித்தால் அதில் பெரிய மாளிகைகள் கிடையாதே! குன்றூரில் மட்டுந்தானா இந்த அடையாளங்கள்? வேறெங்கும் இராது என்று எப்படிக் கூறலாம்?

ஊரில் யாரையேனும் கேட்போம் என்று ஆலமரங்களைத் தாண்டிச் சென்றார். நகர அமைப்பு இலக்கணப்படி தோரணவாயில் கட்டப்பட்டிருந்தது. அதையடுத்துப் பெரிய மண்டபம். வாயில் மண்டபத்தில் நீண்ட வேலுடன் காவலாளி நின்றிருந்தான். அவனை நெருங்கினார் புலவர்.

"இந்த ஊர்ப் பெயரென்ன?"

"இது பெருங்குன்றூர், ஐயா! நீங்கள் அயலூர்க்காரரோ?"

'என்ன? என் ஊரல்லவா இது? ஆனால் பெரிய மாளிகைகளும், ஆசாரவாயிலும் அணிமண்டபமும் இராதே!' என்று எண்ணிக்கொண்டார்.

"அப்பா! நான்கூட இந்த ஊர்க்காரன்தான்" புலவர் சொல்லிக்கொண்டே இரண்டடிகள் எடுத்துவைத்தார்.

"ஐயா நில்லும். இந்த ஊர்க்காரரானால் ஊர்ப் பெயரை முதலில் கேட்டிருக்க மாட்டீரே நீர்? இங்கேயே நில்லும்."

காவலாளி சொல்லும்போதே சற்றுத் தொலைவில் ஒருவன் வந்தான். புலவரை உற்றுப்பார்த்துவிட்டு ஒரு துள்ளலுடன் காற்றையும் முந்திக் கடுவேகத்தில் திரும்பி ஓடினான்.

கிழாருக்குப் பசி காதடைத்தது. தள்ளாட்டத்துடன் மண்டபத்தில் உட்கார்ந்துவிட்டார்.

உச்சிப்பொழுது கடந்த சிறிது நேரத்தில் வந்த புலவர் மாலைவரை கண்ணயர்ந்துவிட்டார். தூக்கக் கலக்கம்போகக் கண்களைக் கசக்கிப் பார்த்தபோது மண்டபத்தை நோக்கிப் பெருங்கூட்டம் வந்துகொண்டிருந்தது. கூட்டத்தின் நடுவே ஒரு பல்லக்குக்கூட!

நெருங்க நெருங்கப் புலவர் காதில் வாழ்த்தொலி கேட்டது. "செந்நாப் புலவர் குன்றூர்க்கிழார் வாழ்க! வள்ளல் இரும்பொறை வாழ்க!"

கூட்டம் நெருங்கிவிட்டது. ஊர்த்தலைவர்போல் காணப்பட்டவர் செம்பு நிறையப் பாலையும், பழத்துண்டங்கள் நிறைந்த தட்டையும் கொடுத்துப் புசிக்கச் சொன்னார்; கடும்பசி! என்ன, ஏது என்று கேட்காமல் இமைப்போதில் புசித்துவிட்டார் பழங்களை. பாலைப் பருகச் செம்புடன் நிமிர்ந்தார். எதிரே யார்?

அவர் மனைவி! மக்கள்! புன்னகை தவழும் முகத்துடன்! பொன்னகை மின்னும் அணிகளுடன்! எத்தனையோ மாதங்களுக்கு அப்பால் கண்டதால் புலவர் கண்களில் நீர் சுரந்தது. "செங்கண்ணு", என்று மூத்த மகனையும், "கருங்குழலி" என்று கடைசி மகளையும் அழைத்துக் கட்டிக்கொண்டுவிட்டார்.

தாரை தப்பட்டை முழங்கப் புலவரைப் பல்லக்கில் ஏற்றிக்கொண்டு கிளம்பினர், மக்கள். ஊர்த்தலைவர் புலவரோடு பேசிக்கொண்டு வந்தார்.

"நாட்டாண்மைக்காரரே! ஆறு மாதத்தில் பெரிய நகராக்கிவிட்டீர்களே!"

"நானா? இளஞ்சேரலிரும்பொறையையல்லவா அந்தப் பெருமை சேரும்!"

"என்ன? இரும்பொறையையா?"

"தாங்கள் சென்ற ஒரு மாதத்துக்குப் பின் முன்னூறு பேர்கள் அடங்கிய கூட்டம் ஏராளமான பொருள்களோடு வந்தது; மன்னன் அனுப்பினான் என்று மட்டும் கூறியது. பேரூராக்கிச் சென்றுவிட்டது. தங்கள் குடில் இருந்த இடத்தில் இப்போது மாளிகை."

அதற்குமேல் கேட்கவில்லை புலவருக்கு. சேரனின் வள்ளன்மை வெள்ளத்தில் அமிழ்ந்துவிட்டார்.

" 'உங்கள் ஊரைப் பேரூராக்கிவிட்டேன்' என்று சொல்லித் தற்பெருமை காட்டாமல், அப்படிக் குறிப்பாகக் கூறி 'ஊர் செல்லலாம் புலவரே' என்று கூறினனோ இரும்பொறை! ஏன்? நான்தான் வேளைகெட்டுக் கேட்டுவிட்டேன்; சினத்தையும் மூட்டிவிட்டேன்" என்று தன்னை நொந்துகொண்டார், கிழார்.

அப்போது திடுதிப்பென்று குதிரை வீரன் ஒருவன் பல்லக்கைச் சமீபித்தான். லாகவமாக அதிலிருந்து இறங்கி இருவரையும் வணங்கினான்.

"அரசர்பிரான் அனுப்பினார். காவற்படையின் துணையுடன் போரிட்டுச் சோழன் படையை முற்றுகையிடா வண்ணம் முறியடித்தாயிற்று. பகைவர் மீண்டும் வருவதற்குள் பெரும்படை ஆயத்தமாகிவிடும். தங்களிடம் தெரிவிக்கும்படி வேந்தரின் கட்டளை."

செய்தி கேட்ட கிழாரின் முகம் மலர்ந்தது. நாட்டாண்மைக்காரரும் அந்த மகிழ்ச்சியில் பங்கு கொண்டார்.

"நாட்டாண்மைக்காரரே! மக்கள் பொறையை வாழ்த்துகிறார்களல்லவா? காணுதளித்த காவலன் என்பதையும் சேர்த்து வாழ்த்தச் சொல்லுங்கள்!"

மக்களின் பேரிடி முழக்கம் விண்ணை முட்டியது.

"காணுதளித்த காவலன் இளஞ்சேரலிரும்பொறை வாழ்க!"

"வாழ்க! வாழ்க!!"

கவிதையில் பாரதம்

மஹாபாரதத்தை ஹிந்திக் கவிதை வடிவில் உலகுக்கு அளித்த பெருமை, காசியைச் சேர்ந்த கோகுல்நாத் என்ற பெரியாரைச் சாரும். ராஜா உதித்நாராயண் என்பவரின் சகாயத்தால் இவர் இந்நூலை எழுத ஆரம்பித்தார். இதர நூல்களையும் எழுதியுள்ளார்; அவற்றுள் 'சேட் சந்த்ரிகா' 'கோவிந்த் ஸுகத் பீஹாரர்' என்பவை முக்கியமாகக் குறிப்பிடத்தக்கன. —கே,

மோக முள்

தி. ஜானகிராமன்

பாபுவுக்கு மொலமொல வென்றது.

சித்திரக்காரர், சொன்னதையெல்லாம் வாபஸ் வாங்கிக்கொண்டுவிட்டார். ஆனால், அதிகாரி சொன்னதற்காகவே தவிர, உண்மையாக இல்லையோ என்று திக்கென்றது பாபுவுக்கு. இவன் பொல்லாதவன். வெகுளிமாதிரி சிரிப்பு. அசடுமாதிரி சில சமயம் பேச்சு. ஆனால், பொத்தென்று எதையோ தூக்கிப் போடுகிறான்! நாம் சொன்னது உண்மையல்லவென்று எப்படி இவனுக்கு நறுக்கென்று தோன்றிற்று?

பொல்லாதவனா இவன்? இல்லவே இல்லை. நம்பகமானவன். குறும்பும் அறிவும் வெள்ளை மனதும் படைத்தவன். மூன்று வாரமாகப் பழகியதில் இந்த நிர்மலமான உள்ளத்தை வேறு எந்த நாற்காலியிலும் இந்த ஆபீசில் பார்க்க முடியாது என்று முடிவுக்கு வந்தது தவறில்லை. நம்மை ஒரு நிமிஷம் சும்மாவாவது கலவரப்படுத்தி வேடிக்கை பார்த்திருக்கிறான்..இருந்தாலும்..எப்படி நான் சொன்னது உண்மையில்லை என்று தோன்றிற்று? நான்தான் ராபணா என்று ஏதாவது உளறிவைத்தேனா?....அப்படி ஒன்றும் சொல்லவில்லையே?...நாமாக முந்திக்கொண்டு யாரும் கேட்காதபோது பேச்செடுத்த தோஷமா?..., பேசியதிலும் ஒன்றும் உளறுபடியில்லையே...

சித்திரக்காரனைச் சிறிது நேரம் பார்த்தான் அவன். நாக்கைப் பிதுக்கிக் கொண்டு பின்னணியில் சக்ரபகவானைக் கோடாக வரைந்துகொண்டிருக்கிறான் அவன்.

சிரிப்பு வந்தது.

இவனைப் பார்த்தால் வியப்பாகவும் இருக்கிறது. பயமாகவும் இருக்கிறது. கையில் எவ்வளவு சுருக்கு!...,இந்தக் குழந்தை உள்ளத்தில் உண்மை சட்டென்று ஒளிகாட்டிவிட்டதா?.... இந்நேரம் புரசைவாக்கம் போயிருக்கலாம்.. எவ்வளவு இளைப்பு! ஆனால், இவ்வளவுக்கும் அழகு போய்விடவில்லையே. இந்த இளைப்பிலும் வறுமைக் கோலத்திலும் வாடலிலும் மருவின் மணமாகக் கமழும் அழகு எங்கிருந்து எட்டிப் பார்க்கிறது! முன் கையில் எலும்புக்கும் சதைக்கும் நடுவில் வாய்க்கால்போல பள்ளம். தோளில் எலும்பு முட்டு... எந்த நோய் உன்னை இப்படி ஆசையுடன் தின்று உருக்குகிறது? அம்மாவுக்கும் அவளுக்கும் ஒத்துக்கொள்ளவில்லை என்று தனியாகக் குடித்தனம் நடத்துகிறாளா? பார்வதியும் இவளும் தனித்தனியாக எப்படி யிருக்க முடியும்? நீ தனியாகவா இருந்தாய்? தானே சமைத்து, தண்ணீர் கொண்டு வந்து, தானே கடைக்குப் போய், மார்க்கெட்டுக்குப் போய் சாமான் வாங்கி, சாப்பிட்டு, இடத்தை மெழுகி.. அம்மாகூடவா உன்னைக் கவனிக்காமல் விட்டுவிட்டாள்? இப்போது எதற்காக இங்கு வரவேண்டும்? மதராஸில் புதிதாக வருகிறவர்கள் இடம் கண்டுபிடிக்க முடியுமா? எனக்கு ஒரு கடிதம் எழுதினாலும் நேராக ரயிலுக்கு வந்து அழைத்துப் போயிருப்பேன்..அழைத்துப் போய்.. எங்கே இறக்கியிருப்பாய்..ஏன், என் அறையில்தான்.. போன வருஷம் பார்த்ததில் கால் உடம்புகூட இல்லை... இவர் சொல்வதுபோல ஐம்பது வயது மதிக்கலாம்போல்தான் இருக்கிறது...யமுனா, நீ எதற்காக மதராஸ் வந்திருக்கிறாய்.. தார் ரோடு உருகும்..., செருப்பில்லாமல் எதற்காக நடந்து வருகிறாய்....வீட்டில் இருந்து ஒரு கடிதம் போட்டால், நான் வரமாட்டேனா?...பதில் வரும்வரையில் காத்திருக்கமுடியறதா? . . . யமுனா . . யமுனா..எதற்காக இதைச் சொன்னாய்?.. அமிர்தமாகப் பொழிகிற இந்தச் சொற்களை?

"என்ன சார்?... என்ன சார் முனகுகிறீங்க?'— சித்திரக்காரர் உரக்கக் கேட்டார். "ரொம்ப ஏழைங்களா சார்? அதையே நெனச்சுக்கிட்டு உட்கார்ந்திருக்கீங்கபோலிருக்கே?"

"இல்லை இல்லை..என்னமோ நெனச்சிட்டிருந்தேன்."

"யாருக்காக வருத்தப்படறது? கையிலே கோடி கோடியா இருக்கணும்..இந்த மாதிரி வருத்தப்படணும்."

"ம்?"

"ஆமா அப்ப இந்த மாதிரி வருத்தப்பட வாண்டாமே..நம்ம மாதிரி முடியாதவங்களுக்குத்தானே இந்த மாதிரி மனசரப்படைச்சு வச்சிருக்கு..."

பாபு பதிலுக்குத் தலையாட்டினான்.

சாயங்காலம் போய்ப் பார்க்கவேண்டும்...சாயங்காலம் என்ன? இன்று சனிக்கிழமை.. ஆபீஸ் விட்டவுடன் போய்ப் பார்க்கவேண்டும்.. டாக்டரிடம் காண்பிக்கத்தான் வந்திருக்கிறாற்போலிருக்கிறது. எக்ஸ்-ரே எடுக்கவேண்டும் என்பாரோ..? எக்ஸ்-ரே எடுத்து க்ஷயம்தான் என்று சொல்லி, சனடோரியத்திற்கு அனுப்பினால்....அங்கு போகிறவர்கள் திரும்பி வருவது ஏது?..வருஷக் கணக்கில் படுக்கை...வந்தாலும் உடலைச் சுமந்துகொண்டு காலந்தள்ள வேண்டும். யமுனா, பிறரை ஏமாற்றி, சூறையாடிப் பிழைப்பவர்களுக்குத்தான் இந்த வியாதி வரும் என்று நீலுப்பாட்டி சொல்லிக்கொண்டிருப்பாள். ஒரு பாவமும் அறியாத உனக்கா வந்தது? குழந்தை மாதிரி, பாவத்தை நினைக்காமல்கூட வாழ்ந்துவிட்ட உனக்கா வந்தது? இல்லை; நான் இதைப் பார்த்துப் பார்த்து மனசு ஒடியவா? உனக்குத் தவறு செய்துவிட்ட குற்றத்திற்கு ஈடு செய்ய நான் உனக்குச் செய்து போடவா இந்த வியாதி உனக்கு வந்தது?—

தள்ளு கதவு திறந்தது. நம்மாள்வார் கோதண்டபாணியிடம் ஏதோ சொல்கிறான்.

"வரச் சொல்லு."

நம்மாள்வார் போகிறான். மறுபடியும் தள்ளு கதவு திறக்கிறது. யாரோ புதிதாக இருக்கிறது. லாங்கிளாத்தில் ஒரு ஜிப்பா. மாநிறத்திற்கும் குறைவு. வகிடில்லாத பின்னேடுகிற கிராப்பு. அகன்ற மூக்கு. கையில் ஒரு தோல்பை. நரிக்குறவன் மாதிரி இந்தத் தோல் பையைத் தூக்காத பத்திரிகாசிரியரையோ, பிஸினஸ்காரர்களையோ இங்கு பார்ப்பது அரிதாகிவிட்டது. இது பாடம் பண்ணின தோல். மனசும், சுண்ணாம்பிலும் திராவகத்திலும் பாடம் பண்ணினது தான்.

"விளம்பர மானேஜர்...?" என்று பாபுவின் மேஜை முன்வந்து நிற்கிறார். முகத்தில் யாசகம் கேட்க வந்ததுபோல ஒரு அச்சம்.

"அதோ" என்று பாபு கோதண்டபாணியைக் காட்டினான்.

"வணக்கம் சார்."

"வணக்கங்க..யாரு?"

பதில் சொல்லாமல் நாற்காலியில் உட்கார்ந்து, தோல் பையைத் திறந்து, நாலைந்து பத்திரிகை இதழ்களை மேஜை மீது வைக்கிறார் இளைஞர்.

"என்ன?"

"நம்ம பத்திரிகைங்க"... புன்னகையா? ஐயோ—யாசகனின் புன்னகைக்குக்கூட அந்தஸ்து கிடையாதா?

"நீங்க போடறீங்களா?"

தொடர் நாவல்

"இல்லீங்க. மதராஸ் ஸிடி விளம்பரம்லாம் நான்தான் பாத்துக்கறேன்."

"என்ன பத்திரிகை?..விருதா?"

"ஆமாங்க."

"அப்படின்னு?"

"விருதுபட்டியிலேருந்து வருது—"

"விருது?.. பேஷ்.."

கோதண்டபாணி ஒவ்வொன்ருகப் பிரித்துப் பார்க்கிருர்.

"பெரிய புள்ளிங்கள்ளாம் எளுதருங்க.. அருமைக்கண்ணு, சிறுக வாழ்ந்தான், நீலா திருமணி...."

"இவங்கள்ளாம் யாரு?"

"இன்னிக்கி முன்னணி எளுத்தாளர்ங்களாச்சே இவுங்கள்ளாம்."

"அப்படியா? நல்லது."

"முற்போக்கான எளுத்துங்க. தெக்குத்திச் சீமையெல்லாம் ஒரு கலக்கு கலக்கிடிச்சு."

"ஹ்..ம். அப்படியா?"

"நல்ல இலக்கியம்..முற்போக்கு இலக்கியமாத்தான் இப்ப கேக்கருங்க மாணவருங்க, பொம்பிளேங்க எல்லாரும். அதுக்கெல்லாம் பெரிய திட்டமாப் போட்டு செய்யுருங்க. முதல் இதழு முப்பதாயிரம் போட்டாங்க. அப்படியும் பல பேருக்குக் கிடைக்கலெ. அப்பறம் ஐயாயிரம் கூடுதலாக்கினுங்க. அப்பறம் ஏகப்பட்ட டிமாண்டு...மாசா மாசம் ஏறிக்கிட்டே வருது."

"இப்ப எப்படியிருக்கு?"

"இப்ப அறுபத்திரண்டாயிரம் போவுது. ஆனு சொல்லிக்கிறது எண்பதாயிரம்னு. போடறது அறுபத்தீராயிரம்தான்" என்று சிரித்துக்கொண்டே, அறையிலுள்ள மற்றவர்களைப் பார்க்கிருர் அவர்.

"நீங்க தேவலாம் சார். நாலூறு காப்பி போட்டுப்பிட்டு நாப்பதாயிரம் அம்பதாயிரம்னு நாக்குக் கூசாம சொல்ருங்க. நீங்க என்னன்னு எண்பதாயிரம்னு சொல்ருேம்னு சொல்லிப்பிட்டு, உண்மையையும் சொல்றீங்க...என்ன ஐயா ஆர்டிஸ்டு...?

"ஆமாங்க."

"இதுமாதிரி எல்லாரும் சொல்ருங்களா?"

"சேதி தெரிஞ்சவங்க நீங்க. இங்கியா உள்ளதை மறைக்கணும்?" என்கிருர் வந்தவர்.

"அப்படி யார் சார் நினைக்கிருங்க?"

சிறிது மௌனம்.

"விலே மூணணுவா?"

"ஆமாங்க. எண்பது பக்கம் போடருேம். விளம்பரத்துக்கும் பக்கத்துக்கு நாப்பது ரூபாதான்."

"தேவலேயே... குறைச்சலாத்தானிருக்கு..அறுபதாயிரத்து சொச்சம் காபி..மூணணு..எண்பது பக்கம்—ஏ அப்பா.. கட்டுமா சார் உங்களுக்கு."

"முதல்லெ அப்படித்தானேங்க செய்யணும்."

"அது சரி...நல்ல கொட்டை போட்ட ஆளுங்கதான்."

"நடத்துறவ்ரும் பெரிய வியாபாரிங்க.. வெங்காயம், பஞ்சு, தீப்பெட்டி, சுருட்டு—இப்படி பல வகை பிஸினஸ் நடத்துறவரு. பெரிய புள்ளி.."

"பேரு."

"காத்தையா."

"காத்தையாவா..பேஷ்.."

மீண்டும் மௌனம்.

"அப்ப..."

"என்ன புறப்பட்டுட்டீங்களா?"

"இல்லீங்க...ம்."

"விளம்பரம்தானே?"

"ஏதோ நீங்கள்ளாம்..பாத்துங்க."

"பேஷா."

"அப்ப..ஒரு.."

"என்ன எடுக்கிறீங்க?"

"காண்ட்ராக்டுங்க.."

"இப்ப என்ன அவசரம்..கொஞ்சம் போகட்டும்."

"வந்து.."

"பத்திரிகை அனுப்பிச்சிட்டே இருங்க...பாத்து செய்யருேம். இந்த வருஷம் விளம்பரத்துக்கு ரொம்ப கொஞ்சமாத்தான் ஒதுக்கியிருக்குருங்க. பாத்துச் செய்யுருேம்."

"அப்படிச் சொல்லக்கூடாதுங்க..."

"பின்னே எப்படிச் சொல்றது? இல்லேன்னு சொல்லச் சொல்றீங்களா?"

"———"

"பாத்துச் செய்யருேம்."

"சர்க்குலேசன், விலே, ரேட் எல்லாம் பாத்தா...."

"எல்லாம் பாத்துத்தான் செய்யுறது.... உங்களுது சவுகரியமா இருந்தா ரொம்ப நல்லதாச்சு. டைாக்டருங்கள்ளாம் பாத்தா செய்யாம இருப்பாங்களோ?"

"என்னங்க..நீங்க மனசு வச்சா.. நீங்களா பாத்து செய்யறது தானேங்க."

"நானு? நான் வெறும் களுதை. தூக்குன்னு தூக்கறது. இறக்குன்னு இறக்குறது. அவ்வளவுதான்..டைரக்டர் மீட்டிங்கிலே எல்லாம் பூந்து புறப்பட்டாகணும் இங்க."

"என்னமோ.. அப்பறம் உங்க தயவு."

"பாத்துக்கலாம்."

"மீட்டிங்கு என்னேக்கு?"

"ஜனவரி மாசம்."

"ஜனவரியா...இன்னும் நாலு மாசம் இருக்கே."

"நாலு மாசம் ஒரு பிரமாதமா? ராமர் காட்டுக்குப் போயி 14 வருசத்தை 14 நாளா ஓட்டிட்டு வரலியா?"

"அது சரிங்க....அப்ப ஞாபகம் வச்சிங்க... நானும் வருவேன்."

"வாங்க."

"அப்ப...?"

"புறப்பட்டாச்சா..சரி."

"இவங்க...?"

"இவர்தான் நம்ம ஆர்டிஸ்ட். அவரு நம்ம அசிஸ்டெண்ட். வந்து மூணு வாரம்

ஆவுது. இவரு நம்ம டைப்பிஸ்ட்டு..நான்தான் உங்களுக்குத் தெரியும்."

"ஹஹ்ஹஹ்ஹா..ஆமாங்க."

"நீங்களும் ஞாபகம் வச்சிங்க சார்."

"————"

"அப்ப, வரேனுங்க."

"பத்திரிகையை வச்சிட்டுப் போறீங்களே."

"உங்களுக்குத்தாங்க அதெல்லாம்...நிறைய இருக்குங்க நம்ம கிட்ட."

"நிறைய இருக்கா? அப்ப சரி."

"வரேன் சார்..நீங்களும் பாருங்க. மதிப்புரையெல்லாம் ரொம்ப நல்லா வந்திருக்குங்க."

"சரி."

"வரட்டுங்களா?"

"சரி."

"சார், செருப்பை விட்டுட்டுப் போறீங்களே?" என்று எழுந்தார் சித்திரக்காரர்.

"அடேடே" என்று திரும்பி வந்தார் அவர்.

"சர்க்குலேஷன் நம்பர் மாதிரி இதுவும் ஞாபகம் இருக்கவாண்டாமோ?" என்றார் கோதண்டபாணி.

"உண்மைங்க."

தள்ளு கதவு திறந்தது.

"விருதுபட்டி சனியனை விலைக்கு வாங்கினப்பலேம் பாங்க. இருமா இத்தனை காப்பியைத் தள்ளிட்டுப் போயிட்டாரே பாவம்...ஓய் ஆர்டிஸ்ட், பாத்தீராய்யா?"

"பாத்தேங்க..நல்ல சத்யசந்தருங்க. அப்பட்டமா உண்மையைச் சொல்லிப்பிட்டுப் போயிட்டாரு."

"கெட்டிக்கார ஆளுதான்..என்னமோ.. அண்டப்புளுகெல்லாம் கேட்டுக்கேட்டு, இந்த வெறும் புளுகெல்லாம் ஏறமாட்டேங்குது இந்த பாவிக் காதிலே...என்ன செய்யிறது?"

இந்த நாடகத்தைப் பார்த்து பாபுவின் மனம் சற்று லேசாக ஆயிற்று.

ஐந்து நிமிஷத்திற்கெல்லாம் மணி ஒன்றடித்தது. ஆபீஸ் முடிந்தது. அன்று சனிக்கிழமை. கோதண்டபாணியிடம்

சொல்லிக்கொண்டு கீழே இறங்கினான் பாபு. ஹோட்டலில் தோசை காப்பி சாப்பிட்டுவிட்டு, ஏழாம் நம்பர் பஸ்ஸில் போய், தோல் வளையத்தைப் பிடித்துக் கொண்டு நின்றான். வெப்பம் மூச்சைத் திணற அடித்தது. உடல், வேர்வையிலும் காங்கையிலும் வெந்து தவித்தது.

"இப்படி உட்கார்றீங்களா?" என்று குரல் கேட்டுத் திரும்பினான். 'விருது' விளம்பர ஏஜண்டுதான்!

"இப்படி உட்காருங்க."

"வாண்டாம்."

"பரவாயில்லிங்க. நான் நிக்கறேன்."

"வாண்டாம்."

"அட சும்மா உட்காருங்க."

"வாண்டாம் சார்."

பஸ் கிளம்பிவிட்டது.

ஃ ஃ ஃ

எல்லாவற்றையும் இங்கேயே சொல்லிவிட வேண்டுமா என்றாளே, அப்படி என்ன சொல்ல வைத்துக்கொண்டிருக்கிறாள்? அப்படி சொல்லப் போவதையும் நன்றாகச் சொல்ல முடியுமா? அவ்வளவு தனிமை, தங்கியிருக்கிற வீட்டில் கிடைக்கப் போகிறதா?

பஸ் ஸ்டாண்டிலிருந்து செல்வ விநாயகர் தெரு இரண்டு பர்லாங் தூரமிருந்தது. வெயிலில் நடக்கத்தான் முடியவில்லை. சட்டைக்குள்ளும் கால் சட்டைக்குள்ளும் கசகசவென்று வேர்த்து ஒழுகிற்று. ஆடுசதை, துடை, முதுகு, மூக்கு, நெற்றி—எங்கு பார்த்தாலும் வேர்வை ஊற்றிற்று. தங்கியிருக்கிற வீட்டில் குழந்தைகள் இருந்தாலும் இருக்கும். மனிதர்கள்தான் எப்படியோ என்று, பழக் கடையில் அரை டஜன் ஆப்பிளும், ஒரு டஜன் ஆரஞ்சும் வாங்கிக் கொண்டு ஒரு பொட்டணமாகக் கட்டிக்கொண்டு நடந்தான்.

வீட்டு நம்பரைக் கண்டுபிடிக்கத் தாமதமாக ஆகவில்லை. செல்வ விநாயகர் தெருவில் திரும்பி, ஏழெட்டு வீடு தாண்டியதுமே 'பாபு' என்று குரல் கேட்டது. திரும்பினான் அவன்.

"எங்கே நீளப் போறே?"

திரும்பி மேலே பார்த்தான். கிழக்குப் பார்த்த ஒரு வீட்டின் பால்கனியில் யமுனா நின்றுகொண்டிருந்தாள்.

"வா."

உள்ளே நுழைந்தான் பாபு.

யமுனாவும் கீழே இறங்கி வந்து விட்டாள்.

"உள்ள வா."

கூடத்தில் ஒரு வயதான அம்மாள் காலை நீட்டி உட்கார்ந்திருந்தாள். எதிரே இருபத்தைந்து வயதில் ஒரு பெண் பூத்தொடுத்துக் கொண்டிருந்தாள். பக்கத்தில் கருப்புப் புடவைக் கிழிசல்மீது ஒரு நாலு வயதுப் பெண் குழந்தை உறங்கிக்கொண்டிருந்தது. கூடத்திலேயே தாளியில் ஒரு சிறு குழந்தை உறங்கிற்று. பாபுவைப் பார்த்ததும் சட்டென்று எழுந்து உள்ளே போனாள் அந்தப் பெண்.

"யாரு?"

"இவங்களைத்தான், பாட்டி, போய் பாத்துட்டு வந்தேன்."

"வாங்க, உட்காருங்க."

"இந்தா யமுனா, குழந்தைகள்ட்ட கொடு" என்று பொட்டணங்களைக் கொடுத்தான் பாபு.

"என்ன பெரிய பொட்டணமாயிருக்கு."

"குழந்தைகளுக்குத்தான்."

பாட்டி பாபுவின் வேலை, சம்பளம், குடியிருப்பு, சாப்பிடுகிற இடம் எல்லாவற்றையும் விசாரித்தாள். நாற்பது வருஷக் குடும்ப சிநேகத்தை யமுனாவும் சற்று விவரமாகவே அவனிடம் சொல்லத் தொடங்கி, நடுநடுவே அவர்களைப் பற்றியும் சொல்லிக்கொண்டிருந்தாள். சின்னம்மா மாப்பிள்ளைக்குத் தம்பி சம்சாரம் அந்தப் பெண். மாப்பிள்ளையின் தாயார் அவள். சின்னப் பிள்ளையோடு இருக்கிறாள். மாப்பிள்ளையான பெரிய பிள்ளை மதுரையில் வேலையாக இருக்கிறாராம். இவர் புரசைவாக்கத்தில் கடை வைத்து நல்ல பணம் சேர்த்து, இந்த வீட்டையும் வாங்கிவிட்டார். இவர்களுக்குச் சொந்த ஊர் வேலூர். ஆனால், ஐம்பது வருஷமாக சென்னையில், இந்த புரசைவாக்கத்திலேயே இருக்கிறார்களாம். சொந்த ஊர் சென்னை என்றுதான் சொல்லவேண்டும். இந்த வீடு வாங்கி நாலைந்து வருஷமாகிறதாம்.

பழைய கால மோஸ்தரில் கட்டப்பட்டிருந்த வீடு. வாசலில் ஒரு சின்ன காம்பவுண்டு. மேலே ஒரு சிறிய பலகை பால்கனி. உள்ளே கூடம், கல்யாணக்கூடமாக மாடியில் ஜன்னல்களுடன் கட்டப்பட்டிருந்தது. வாசலைப் பார்த்த பால்கனிக்குப் பின்னால் ஒரு அறை. அதற்குப் பின்னால் மொட்டை மாடியும் கலியாணக் கூட ஜன்னல்களும் இருக்கும்போலிருக்கிறது.

"மத்யானம் ரண்டுமணியாச்சின்னு காத்து கொட்ட ஆரமிச்சிடும்" என்றாள் பாட்டி. "அதுவும் மாடியிலே உட்கார்ந்திட்டா, இறங்கி வரவே தோணுது."

"ஆமாம், கிழக்குப் பாத்த வீடில்லையா? பால்கனிகூட ரொம்ப லட்சணமாயிருக்கு பாக்கறதுக்கு", என்றான் பாபு.

"போய் உட்கார்ந்து பார்த்தால்ல தெரியும்? யமுனா, மாடியெல்லாம் அளச்சிக்காட்டுப் போய்க் காமியேன் இவங்களுக்கு. நான்தான் கடைப்படாம உக்காந்திருக்கிறேன்."

யமுனா பாபுவை அழைத்துக்கொண்டு சமையலறை, சாமான் அறை, விலக்கு அறை, ஸ்நான அறை எல்லாவற்றையும் காண்பித்துவிட்டு, மாடிக்கு அழைத்துப் போனாள். பாட்டி சொன்னாற்போலவே காற்று கொட்டிற்று.

"அஞ்சு மணிக்கு வரச் சொல்லியிருக்கார்னு சொல்லு பாபு" என்றாள் யமுனா மெதுவாக.

"யாரு?"

"யாராவது? நான் இப்ப வேலை தேடி வந்திருக்கேன்....வேலை கொடுக்கறவரிடம் அஞ்சு மணிக்கு நீதான் என்னை அழைச்சிண்டு போகணும்."

"சரி."

"இதுதான் கல்யாணக்கூடம்."

"அந்தண்டையும் ரூம் இருக்கா?"

"இருக்கு."

பாபு நினைவிழந்து நின்றான். முன்னால் அறை. நடுவில் கல்யாணக்கூட ஜன்னல். பின்னால் அறை. கும்பகோணத்தில் காவேரிக்கரை வீடுமாதிரிதான். தங்கம்மாள் குனிந்து எதையோ தினாவும் பிரமை நிழலாடிற்று. நள்ளிரவில் வந்து, கழுத்தைக் கட்டிக்கொண்டு... போய்ட்டு வரட்டுமா...கண்ணீர் வெதவெதக்கிறது..உங்களைப் பார்க்கவேண்டும்போலிருக்கிறதே . . . என்ன செய்வேன்..இவ்வளவு சாம்பலா?.. மயிர் சிலிர்த்து உடல் உதறிற்று.

"என்ன பாபு?"

"ஒண்ணுமில்லே."

"இந்தக் காத்துக்கூடச் சிலிர்க்கிறதா?"

பாபு பதில் பேசாமல் திரும்பினான். கீழே இறங்கினான்.

"பாட்டி, வீடு ரொம்ப நல்லாயிருக்கு. நீங்க சொன்னாப்பல காத்து கொட்டறது. அப்பாடா."

"காத்து, புளங்கறத்துக்கு இவ்வளவு இடம்—இதைப் பாத்துப்பிட்டுத்தான் வாங்கிப் போட்டுடணும்னு ஒத்தைக் காலாலே நின்னேன். இதுக்கு எத்தனை போட்டி, எத்தனை கலேசல்! வாங்கினது ஒரு பாடு. அப்பறம் குடியிருக்கிறவன் ஆணியடிச்சாப்பல உக்காந்துகிட்டான். அவனைக் கிளப்பறதுக்கு கோர்ட்டுக்கும் வக்கீல் வீட்டுக்கும் நடையா நடந்ததும் இறைச்ச காசும் . . அம்மாடி . . வீட்டை வாங்கிப்பிட்டா போதுமா? குடியிருக்கறவங்க என்னமோ பங்காளி பாத்தியமல்ல கொண்டாடறாங்க இந்த நாள்ளெ?...."

பாட்டி தன் பிள்ளைக்குக் கை கொடுத்து நின்று, குடியிருக்கிறவனை வெளியேற்றப் பட்ட பாட்டை அரை மணி நேரம் சொன்னாள்.

"அம்மா" என்று வாசலிலிருந்து ஒரு குரல் கன்னத்தில் அறைந்தது.

"முக்தா, முக்தா...பால்காரன் கூப்பிடறான் பாரு' என்று பாட்டி குரல் கொடுத்தாள்.

"மணி என்ன?"

"மூணு இருபது."

"அஞ்சு மணிக்கு வரச் சொல்லியிருக்காரே. பஸ்ஸு கிடைச்சு போயாகணுமே..."

"காப்பி சாப்பிட்டுப் போகலாங்க. மாடு வந்திரிச்சே."

"யமுனா, சுருக்கு பண்ணு."

"யமுனாவும் வரப்போறதா?"

"ஆமாம், பாட்டி. மத்யானம் போன்லே கூப்பிட்டுப் பேசினேன். அஞ்சுமணிக்கு வரச்சொல்லியிருக்காரு... யமுனா வேலை விஷயமாத்தான்."

"யாரு?"

"நமக்குத் தெரிஞ்சவங்கதான்."

"என்னமோ போய்ப் பாருங்க. எப்படியாப்பட்ட குடும்பம். எப்படியாயிருக்கு!..என்னமோ..என்ன வேலைக்குப் பாக்கிறீங்க."

"என்னமோ, போய்ப் பார்த்தாத்தான் தெரியும்."

"எங்க இருக்காங்க?"

"டவுன்லெதான்."

"டவுன்லெ எங்கே?"

"முத்தியால்பேட்டையிலே."

"பாத்திட்டுக் கொண்டு விட்டுட்டுப் போங்க. இருட்டிலெ வழி தெரியாம, பஸ்ஸு தெரியாம தவிக்கப்போவுது அது."

காப்பியைச் சாப்பிட்டுவிட்டு இருவரும் கிளம்பினார்கள். புறப்படும்போது மணி நாலடித்து விட்டது.

பஸ்ஸுக்கு நன்று பாரிஸ் மூலைக்குப் போய், அங்கிருந்து மறுபடியும் பஸ் கிடைத்து மரினாவில் இறங்கும்போது வெயில் நன்கு தணிந்துவிட்டது. சூரியன் மறைய இன்னும் கால்மணிகூட இராதுபோல் தோன்றுகிறது. இருவரும் பஸ்ஸைவிட்டு இறங்கித் தெற்கே நடந்து பரீட்சை ஹால் கட்டிடத்திற்கு எதிரே கடற்கரை மணலில் இறங்கி நடந்து, அலையின் அருகே ஒதுப்புறமாக உட்கார்ந்துகொண்டார்கள். வானத்தில் மேற்கேயிருந்து கிளம்பிய செந்நூல உத்தரங்கள் விரிந்து விரிந்து விண் முழுதும் வியாபித்து ஓடியிருந்தன. பக்கத்தில் கடலலை துள்ளித் துள்ளி விழுந்தது. முன்னே ஓடி ஓடிவந்து, தோட்டக்காரனைக் கண்ட குழந்தைகள் போல் திரும்பி ஓட்டம் பிடித்தன.

அவன் மனமும் நிறைந்து வழிந்தது. இந்த நிறைந்த தனிமை அவன் உள்ளத்தைத் தாக்கி நிரப்பிற்று. யமுனாவைப் பார்த்துக்கொண்டே, உட்கார்ந்திருந்தான். மெலிந்த தேகம். பெரிது பெரிதாக நீலப்பூக்களைத் தெளித்த ஒரு வெள்ளை வாயில் புடவை. புள்ளி போட்ட ஒரு சிவப்பு ரேயான் ரவிக்கை. கையில் ரப்பர் வளையிரண்டு.

இந்தத் தனிமையில், இந்தத் தோழமை நிறைந்த தனிமையில், அவன் உள்ளம் பொங்கி ஆர்ப்பரித்துக்கொண்டிருந்தது. பேச்சுக்கு இடமில்லாத தனிமை. பேசத் தோன்றவில்லை.

நெற்றியில் நுரையை அணிந்து அலைகள் வீசி வந்து கொண்டிருந்தன. வந்த சுருக்கில் அடங்கிக்கொண்டுமிருந்தன. எவ்வளவு இயலாமை! எதற்கு இந்த வேகம்! கடைசியில் அடக்கத்திலும் தேய்விலும் ஒடுங்கிவிடுகின்ற சீறல்! என்னைப்போல்தான் இருக்கிறது இந்த அலையும்.

"யமுனா, நீ சமுத்ர ஸ்நானம் செய்திருக்கிறாயோ?"

"எனக்கும் வேடிக்கையாகத் தானிருக்கிறது."

"என்ன?"

"ஒரு அர்த்தோதயத்தின் போது காவேரிப்பட்டணம் போனோம். உங்கப்பா, அம்மா, அக்கா, எங்கம்மா, நான், நீ எல்லாரும்..அப்பறம் இப்பதான் கடலைப் பார்க்கிறேன். இப்பவும் நீ கிட்ட இருக்கே."

காவேரிப்பட்டணத்திலிருந்து ஒரு கட்டை வண்டியில் பயணம். யமுனா மடியில் படுத்துத் தூங்கிவிட்டான் பாபு. அப்போது அவன் ஏழெட்டு வயதுக் குழந்தை.

யமுனா கடலலைகளைப் பார்த்துக் கொண்டு, பழைய நினைவுகளைக் கண்டு கொண்டிருந்தாள். அந்த யமுனாவா இவள்!

"உடம்புக்கென்ன யமுனா?"

"ஒன்றுமில்லை. உசிரு உடம்பைச் சுமக்கிறது."

"அதுதான் தெரிகிறதே ஏன்?"

"பசி"

"என்ன யமுனா இது?"

"ஆமாம். நான் ஒரு வேளை வயிறு நிரம்பச் சாப்பிட்டு மூணு மாசமாகிவிட்டது."

"ஏன்?"

"இருந்தால்தானே சாப்பிட?"

பாபுவுக்குச் சுரீர் என்றது.

"பசி இளைப்பா இது?"

"ஆமாம்."

"ஏன் எனக்கு எழுதவில்லை?"

"நிம்மதியாயிருக்கிற உன்னையும் உயிரை வாங்கணுமா?"

"அப்படியா?..சரி. ஏன் அம்மாவோடு இல்லை?"

"அம்மாவுக்கு நான் தனிக் கட்டையாக இருக்கறது பிடிக்கலை. கங்காதரம் பிள்ளையை நான் தட்டிக் கழித்திலிருந்தே அவளுக்கு ஆத்திரம். நீ வந்த பிற்பாடு இந்தத் தொணதொணப்பும் குடோரமும் ரொம்ப ஜாஸ்தியாப் போச்சு. ஒரு நாள் சாயங்காலம் ரண்டு புடவையையும் ரவிக்கையையும் எடுத்துட்டுக் கிளம்பி கர்ணக் கொல்லைத் தெருவுக்கு வந்துவிட்டேன். முப்பது,

வெட்டுக்காயம், சொரி சிறங்கு, வேனில்கட்டி, தீப்பட்டபுண், கரப்பான், முகப்பரு, சேத்துப்புண், கொப்புளம், பத்து முதலிய சகல சரும வியாதிகளையும் போக்கும் களிம்பு.

சைபால் CIBOL

ரமணீஸ் **பேபி கிரைப்**

குழந்தைகளுக்கு ஏற்படும் மாந்தம், வயிற்றுவலி, வயிற்றுப் பொருமல், பல் முளைக்கும்போது ஏற்படும் வயிற்றுப் போக்கு முதலிய சகல அஜீரணக் கோளாறுகளையும் போக்கி, புஷ்டி அளிப்பது.

நவீன யந்திர சாதனங்களால் தயாராகிறது

"எல்லிஸ் பாம்" (ELLIS BALM)

ஜலதோஷம், நரம்புவலி, தலைவலி, பல்வலி, மார்சளி, முதலியவைகளைப் போக்கவல்லது.

எமது பாக்டரியில் எல்லா மருந்துகளும் நவீன யந்திர சாதனங்களாலேயே தயாராகின்றன.

தயாரிப்பவர்கள்:

தி சௌத் இந்தியன் மானுபாக்சரிங் கம்பெனி, மதுரை.

ஹாஸ்யமே உலகம்!
கணவன்:-இந்த டிரைவருக்குச் சீட்டுக்கொடுக்க வேண்டியதுதான்; பல தடவை என்னைக் கொல்லப் பாத்துட்டான்! மனைவி:—தொலையருன்! இன்னும் ஒரு 'சான்ஸ்' கொடுத்துப் பாருங்கோ.
"சின்ன வயதில் எனக்கும் பெரிய கொள்ளைக்காரனுகணும்னு ஆசை"
"நீர் அதிருஷ்டசாலி! எல்லாருக்கும் இப்படி ஆசை நிறைவேர்றதில்லை"
இன்ஸ்பெக்டர்:--விபத்தின் போது காரை ஓட்டியது யார்?
டிரைவர்:—(குடிபோதையில்) யாருமில்லை; எல்லோரும் பின் ஸீட்டில்தான் இருந்தோம்.
"கடைசிவரை உங்க மாமா சித்த சுவாதீனத்தோடு இருந்தாரா?" 'நானைக்கு அவர் உயிலைப் பார்த்தாத்தான் தெரியும்"
காதலன்:—ஒரு முக்கியமான கேள்வி கேட்கணும்னு பல நாளா துடிச்சிண்டிருக்கேன்.
காதலி:—கேளுங்கோ! பல மாதமா நான் பதிலை தயாரா வெச்சிண்டிருக்கேன்.
டெலிபோன் குரல்:—இன்னிக்கு ராமு பள்ளிக்கூடம் வரமாட்டான்.
உபாத்தியாயர்:—யார் பேசறது!
குரல்:—என்னுடைய அப்பா பேசறூர.

இருவரும் மௌனமாக உட்கார்ந்திருந்தார்கள். வானிலும் விளக்குகள் மினுங்கிக் கொண்டிருந்தன.

"ராஜத்திட்டேர்ந்து லெட்டர் வந்திட்டிருக்கா?"

"நாலு நாள் முன்னாடிகூட வந்தது. குழந்தை பிறந்திருக்காம். பிள்ளைக் குழந்தை. டில்லி வெயில் தாங்கவில்லையாம். ஆனால், சவுகரியமாயிருக்காம். என்னை வரச் சொல்லிக்கூட எழுதியிருக்கான்."

"குழந்தை நல்லாயிருக்காமா?"

"ம்."

"உன்னோட படிச்சவங்கள்ளாம் சம்சாரிகளா ஆயிட்டாங்க. நீ இன்னும் ஒத்தை மரமா நிக்கிறே இப்ப."

"இப்ப நான் தனியா இல்லியே."

சட்டென்று வாயில் வந்துவிட்டது அவனுக்கு.

யமுனா ஒன்றும் பேசவில்லை. உருண்டு உருண்டு ஓடிவரும் இருளின் அலைகளை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

மணல் பரப்பில் கூட்டம் இல்லை. ஒன்றிரண்டு பேர் எங்கேயோ பேசுகிற குரல் கேட்டது. அங்குமிங்கும் ஒன்றிரண்டு பேர் படுத்திருப்பது மாதிரி இருந்தது. பட்டாணிக் கடலை, சுண்டல் விற்பவர்கள்கூடப் போய்விட்டார்கள்.

சங்கீத வித்வானும், சினிமாப் பின்னணிப் பாடகருமான 'இசைமணி' சீர்காழி எஸ். கோவிந்தராஜனுக்கும், திருச்சங்கோடு ஸ்ரீ பி மாரிமுத்து செட்டியார் குமாரத்தி செல்வி சுலோசனாவுக்கும் ஆக. 26-ந் தேதி உளுந்தூர்பேட்டையில் திருமணம் நடந்தேறியது. மாலையில் சங்கீத கலாநிதி திருப்பாம்புரம் ஸ்ரீ என் சாமிநாதபிள்ளையின் புல்லாங்குழல் கச்சேரியும், ஊர்வலத்தின் போது குழிக்கரை ஸ்ரீ பிச்சையப்பாவின் நாகஸ்வரக்கச்சேரியும் நிகழ்ந்தன. மணமக்களுக்கு ஏராளமான வாழ்த்துச் செய்திகளும் பரிசுகளும் வழங்கப்பட்டன.

"நேரமாயிட்டாப்போலிருக்கே" என்றாள் யமுனா.

"இங்கே நேரமேது? இப்ப நேரம் ஏது?"

மீண்டும் நாலைந்து நிமிஷம் மௌனம்.

"போவோம்" என்று எழுந்தாள் யமுனா.

பாபுவும் எழுந்தான். கை, முகம் எல்லாம் உப்பு பிசுபிசுத்தது. பஸ்ஸில் வந்து உட்கார்ந்தபோது, முகத்தில் எண்ணெய் வழிவதுபோலிருந்தது.

புரசைவாக்கம் வீட்டை அடைந்ததும் "இத்தனை நேரமாயிடுச்சா?" என்று வரவேற்றாள் பாட்டி.

"ஆமாம் பாட்டி. அஞ்சே கால் மணி ஆயிடுத்து போறபோது. அஞ்சே கால் வரையில் காத்திருந்துவிட்டு அவர் வெளியே போயிட்டாராம். ஏழரை மணி வரையில் பார்த்தோம். அப்பறம் நாழியாயிடிச்சேன்னு நாளைக்கு வரோம்னு வந்திட்டோம்."

"இருந்து பாத்து வரக்கூடாது?..சரி.. நாளைக்குதான் ஞாயித்துக்கிழமை. பாத்துக்கறது. நாளைக்குக் காலமே அவரைப் பாத்துட்டு, அவர் எப்ப வரச் சொல்றார்னு கேட்டுட்டு வரேன்."

இந்தக் கற்பனை மனிதர் சற்றுப் பருமனாக, கண்ணாடி போட்டு அவன் மனதில் வடிவெடுத்திருந்தார். கையில்லாத பனியன். நாற்காலியில் சாய்ந்திருக்கிறார். இடது புஜத்தில் அம்மை குத்தின தழும்புகள்தான் எவ்வளவு பெரியதாகப் பதிந்திருக்கின்றன. மாலையில் பிறந்து, மனிதனாகவே வளர்ந்துவிட்ட இந்த மனிதரை நினைத்துச் சிரிப்பு வந்தது. யமுனாவின் மனதில் எந்த உருவம் பதிந்திருக்கிறதோ?

"நான் வரட்டுமா பாட்டி."

"நேரமாயிடிச்சா?"

"ஆமாம்."

"இன்னும் கொஞ்சம் இருந்தா, பையன் கடையைப் பூட்டிகிட்டு வந்திருவான். பாத்திட்டுப் போகலாம்."

"நாளைக்குப் பாக்கறேன்."

"கடைக்குப் புதன்கிழமைதான் லீவு."

"பரவாயில்லை. கடையிலேயே ஒரு நாள் பாத்துக்கறது."

"சரி . . நேரமாச்சு. நீங்களும் பஸ்ஸு கிடைச்சு தில்லைக்கேணி போகணும். வாங்க."

விடை பெற்றுக்கொண்டு கிளம்பினான்.

சாப்பிட்டுவிட்டு அறையில் நுழைந்த பிறகுதான் பெல்ஸ் ரோடு சங்கீத ட்யூஷன் ஞாபகம் வந்தது.

"இன்னைக்கும் முடியாது. நாளைக்கும் முடியாது . . ரண்டு நாள் லீவாகத்தானிருக்கட்டுமே."

கடல் இரைந்தது. கட்டு மரத்தில் ஏறி மிதப்பதுபோலிருந்தது அவனுக்கு. அலையில் ஏறி ஏறி இறங்கிற்று உள்ளம். ஒரு கட்டையை நம்பி இந்தக் கடலில் ஏறி இறங்கி, அடிவானத்தைத் தாண்டி மறையும் இந்தத் துணிவையும் அலட்சியத்தையும் என்னவென்று சொல்வது? வெறுங் கட்டை. இந்த உலகத்தில் இதைவிட வீரமும் வைராக்கியமும் எங்கே காண முடியும் . . . ?

(தொடரும்)

பம்பாய் நிகழ்ச்சிகள்

தமிழர் வாழ்வில் ஓர் மறுமலர்ச்சியை உண்டு பண்ணிய கவிராயசர் ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியின் நினைவு தினம் பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தில் செப் 9-ந் தேதி ஸ்ரீ சி. வி. சுப்ரமண்யம் தலைமையில் கொண்டாடப்பட்டது. ஸ்ரீமதி லட்சுமி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பாரதியின் பாடல்களில் சிலவற்றை உணர்ச்சிகரமாகப் பாடிய பின், ஸ்ரீ ஆர். ராமஸ்வாமி, வித்துவான் ஆ. கி. ஜெயலட்சுமி, ஸ்ரீ எஸ். எஸ். மைக்கேல் பெர்னாந்து ஆகியோர்கள் முறையே 'பாரதி கண்ட கண்ணன்', 'பெண்மையைப் போற்றிய பாரதி', 'பாரதியின் தேசீயக் கனல்' ஆகிய தலைப்புகளில் விரிவுரைகள் நிகழ்த்தினர்.

பின்னர் ஸ்ரீமதி மீனாட்சி மூர்த்தி சுமார் 1½ மணி நேரம் செய்த இன்னிசைக் கச்சேரியும், ஸ்ரீ என். வி. எஸ். மணியின் மிருதங்கமும், ஸ்ரீமதி சுலோசனா கந்தஸ்வாமியின் பிடிலும் ரஸிகர்களின் ஒரு முகமான பாராட்டுதலைப் பெற்றன.

விழாவிற்கு மாதர்களும் திரளாக வந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

ஃ ஃ ஃ

பம்பாய் பாரதி கலா மன்றத்தார் ஆதரவில் செப்டம்பர் 9-ந் தேதி மாதுங்கா, தென் இந்திய உயர்நிலைப் பள்ளி ஹாலில், இந்திய சர்க்கார் காப்பு வரி போர்டு மெம்பர் ஸ்ரீ ஸி. ராமசுப்பன் அவர்கள் தலைமையில் பாரதி விழா நடைபெற்றது. ஸ்ரீ கே. பொன்னுசாமி அவர்களும், ஸ்ரீ கே. சிவராமன் அவர்களும் முறையே 'அமரர் பாரதி', 'பாரதி கண்ட பண்பாடு' என்பன பற்றி வெகு அழகாகச் சொற்பொழிவாற்றினர். ஸ்ரீமதி தர்மா ராமசுப்பன் அவர்கள் பாரதி பாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கினார். சுமார் 90 சிறுவர் சிறுமியர் கலந்து கொண்ட பாட்டுப் போட்டியில், பதினான்கு பரிசுகள் வழங்கப்பட்டன. ஸ்ரீ ராமசுப்பன் அவர்கள் முடிவுரை வழங்கினார்.

குமாரி ஏ. வி. விஜயலட்சுமியின் இசை நிகழ்ச்சி விழாவிற்கு இனிய முடிவாக இருந்தது. மன்றச் செயலாளர் ஸ்ரீ எஸ். ராமன் அவர்கள் எல்லோருக்கும் நன்றி தெரிவித்து, பாரதி பாடல் போட்டியினை மேலும் சிறப்பாக நடத்த விரும்புவதாகக் கூறினார்.

ஃ ஃ ஃ

செப். 8-ந் தேதியன்று செம்பூரில் உள்ள தெய்வ நெறிக் கழகத்தினரால் ஸ்ரீ சுவாமி சிவாநந்தரின் 70-வது பிறந்த தினமும், மேற்படி கழக 4-வது ஆண்டு விழாவும் கொண்டாடப்பட்டன. காலை முதல் இரவு வரை அகண்ட திவ்ய நாம சங்கீர்த்தனத்துடனும், பகலில் 300 ஏழைகளுக்கு மேல் அன்னதானத்துடனும், இரவில் நடந்தபொதுக்கூட்டத்தில் ஹரித்வார்வாசி சுவாமி வாசுதேவானந்த் அவர்கள் பஜன் சொற்பொழிவுடனும் விழா இனிது முடிவுற்றது. செயலாளர் ஸ்ரீ ஏ. எஸ். ராஜன் ஆண்டு அறிக்கையையும், சுவாமி சிவாநந்தரின் வாழ்த்துச் செய்தியையும் படித்தார்.

இலங்கை லிகிதம்

கொழும்பு தமிழ்க் கலாசார சங்கத்தின் ஆதரவில் இவ்வாரம் இரண்டு அரிய சொற்பொழிவுகள் நடைபெற்றன. சென்னை ஹைகோர்ட் நீதிபதியும், பிரபல எழுத்தாளருமான ஸ்ரீ ஏ. எஸ். பி. அய்யர் 'கலாசாரம்' என்பதைப்பற்றிப் பேசியபொழுது ஜாதி, மதம், நிறம், பாஷை முதலியவைகளெல்லாம் மனிதர்களுக்கிடையில் செயற்கையாக ஏற்பட்ட வேற்றுமைகளென்றும், மனித குலம் ஒன்றே என்றும் கூறினர். பாஷைக்காக நாட்டைப் பிரிவினை செய்வது முட்டாள்தனமானதென்றும், அதே சமயம் பெரும்பான்மையோர்களின் மொழி, கலாசார உரிமைகளை மதித்து நடக்க வேண்டுமென்றும் ஸ்ரீ அய்யர் கூறிய உபதேசம் பாஷைப் பிரச்னையினால் உணர்ச்சி வசப்பட்டிருக்கும் இலங்கைக்கு மிகப் பொருத்தமானதாகும். மாதர் உரிமையைப்பற்றிக் குறிப்பிடுகையில், ஆண் பெண் சரிசமத்துவ வாதம் அர்த்தமற்ற வெறுங் கூச்சலென்றும், இல்லமே பெண்களின் இடமென்பதோடு, தாய்மையே அவர்களுடைய தலை சிறந்த கடமையென்றும் ஸ்ரீ அய்யர் கூறினர். முன்னாள் பிரதம நீதிபதி ஸ்ரீ ஸி. நாகலிங்கம் இந்தக் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

ஃ ஃ ஃ

தமிழ்க் கலாசார சங்கத்தின் இன்னொரு கூட்டத்தில் ஸ்ரீ எஸ். ஜே. குணசேகரம் ஒரு சுவாரஸ்யமான ஆராய்ச்சிப் பிரசங்கம் செய்தார். இன்றைய சிங்களவர்களின் முன்னோர்களும், சிங்கள மன்னர்களும் அசல் தமிழர்களென்பதோடு, பண்பட்ட இந்துக்கள் என்பதற்கும் அவர் அநேக சரித்திர ஆதாரங்களை எடுத்துக் காட்டினர். சிங்கள வம்சத்தின் ஸ்தாபகர்களான விஜயனும் அவனுடைய 600 சகாக்களும் கலிங்கத்திலிருந்து இலங்கைக்கு வந்ததாயும், பாண்டிய நாட்டிலிருந்து தமிழ்ப் பெண்களைத் தருவித்து மணந்து கொண்டதாயும் சிங்கள சரித்திர மத நூலாகிய மகாவம்சம் கூறுவதை ஸ்ரீ குணசேகரம் எடுத்துக்காட்டி, "விஜயனும் அவன் சகாக்களும் தமிழர்களாகவும் ஹிந்துக்களாகவுமில்லாவிட்டால் அவர்களை மணந்துகொள்ள பாண்டிய நாட்டுத் தமிழ்ப் பெண்கள் இலங்கைக்கு வந்திருப்பார்களா?" என்று வினவினர். விஜயன் சந்ததியில்லாமல் இறந்த பின் பாண்டு வாசுதேவன் என்ற பாண்டிய இளவரசனை இலங்கைமக்கள் அழைத்துப் பட்டம் சூட்டியதையும், மன்னன் வாரிசு இல்லாமற் போகும் காலத்திலெல்லாம் அரச பதவியை வகிக்க தமிழ் நாட்டிலிருந்தே இளவரசர்கள் தருவிக்கப்பட்டிருப்பதையும் எடுத்துக்காட்டி, இலங்கையின் ராஜவம்சத்தினர் சமீப காலம் வரை தமிழர்களாகவே இருந்துள்ளனரென்றும், சிங்களவர்களின் முன்னோர்கள் அசல் தமிழர்களென்றும் ஸ்ரீ குணசேகரம் கூறினர்.

ஃ ஃ ஃ

சூயஸ் கால்வாய்த் தகராறு காரணமாக பிரிட்டன் எகிப்தைத் தாக்குமானல், இலங்கையிலுள்ள தோட்டத் தொழிலாளர்கள் எகிப்திற்கு தங்களுடைய ஆதரவைத் தெரிவிக்க, பிரிட்டிஷ் தோட்ட முதலாளிகள் மீது நேரடி நடவடிக்கை எடுப்பார்கள். வேலை நிறுத்தம் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு எகிப்துக்கு அவர்கள் ஆதரவு காட்டுவார்கள். இந்தத் தகவலை இலங்கை ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஜனப் அப்துல் அஸீஸ் எகிப்திய ஜனாதிபதி கர்னல் நாஸருக்கு இவ்வாரம் தந்தி மூலம் அறிவித்திருக்கிறார். சூயஸ் பிரச்னையில் இலங்கை மக்களும், இலங்கை அரசாங்கமும் இந்தியா கடைப்பிடிக்கும் கொள்கையைப் பலமாகப் பின்பற்றுவது குறிப்பிடத் தகுந்தது. மேற்கத்திய வல்லரசுகளுக்கு வால் பிடித்துக்கொண்டிருந்த கொத்தலாவலை மந்திரி சபை கவிழ்ந்து போன பிறகு வெளிநாட்டுக் கொள்கையில் இந்தியா-இலங்கை ஒத்துழைப்பு தினே தினே பலமடைந்து வருகிறது. இந்த ஒத்துழைப்பு சென்னை தூதுகோஷ்டி, ஒன்றிடம் நேருஜி சொன்னதைப்போல இலங்கை இந்தியர் பிரச்னைக்கு ஒரு சுமுகமான தீர்வு காணவும் காலக் கிரமத்தில் உதவி புரிவது நிச்சயமென்று எல்லோரும் எதிர் பார்க்கிறார்கள்.

ஃ ஃ ஃ

தென்னிந்திய பிரபல சினிமாப் பட முதலாளியும், ஜெமினி ஸ்டுடியோவின் அதிபருமான ஸ்ரீ எஸ். எஸ். வாஸன் அக்டோபர் முதல் வாரத்தில் இலங்கைக்கு விஜயம் செய்கிறார். ஜெமினி ஸ்டுடியோவில் தயாரித்த "இன்ஸானியத்" என்ற ஹிந்திப் படம் ஸிலோன் தியேட்டர்ஸ் ஸ்தாபனத்துக்காக இப்பொழுது சிங்களத்தில் 'டப்' செய்யப்பட்டு வருகிறது. சிங்கள "இன்ஸானியத்" அக்டோபர் முதல் வாரம் திரையிடப்படுமென்றும், அதற்காக ஸ்ரீ வாஸன் கொழும்புக்கு வருவாரென்றும் ஸிலோன் தியேட்டர்ஸ் அதிபர் ஸர் சிற்றம்பலம் கார்டினர் 'மித்திரன்' நிருபரிடம் தெரிவித்தார்.

ஃ ஃ ஃ

தென்னிந்திய ஸ்டுடியோக்களில் சிங்களப் படங்களை எடுப்பதற்காக லட்சக் கணக்கான ரூபாய் இந்தியா போவதைத் தடுக்க இலங்கை அரசாங்கம் பத்து லட்ச ரூபாய் செலவில் இலங்கையிலேயே ஒரு ஸ்டுடியோவை அமைக்க ஏற்பாடு செய்து வருகிறது. இதற்கு ஜப்பானிலிருந்து தொழில் நுட்ப நிபுணர்களைத் தருவிக்க உத்தேசித்திருக்கிறார்கள். இலங்கையில் வசதிகள் இல்லாததனல், இந்தியாவிற்குப் போகும் பட உற்பத்தியாளர்கள் போதிய வசதிகள் இலங்கையிலேயே இருந்தால் இந்தியாவிற்குப் போக மாட்டார்களென்று அரசாங்க அதிகாரி ஒருவர் கூறினர்.

—ரவி.

சேலத்தில் 'சுதேசமித்திரன்', 'ஹிந்து' பத்திரிகைகளின் மாஜி சப் ஏஜெண்டு ஸ்ரீ வி. ஜி. துரைஸ்வாமி நாயுடுவின் புதல்வி சௌ. சந்தானலட்சுமிக்கும், புதுக்கோட்டையைச் சேர்ந்த ஸ்ரீ என். வேணுகோபாலனுக்கும் செப். 9-ந் தேதி விவாகம் சிறப்பாக நடைபெற்றது.



'மித்திரன்' காரியாலயத்தில்பிராஸஸ் இலாகாவைச் சேர்ந்த ஸ்ரீ டி. ஸி. நாகலிங்கத்திற்கும், சென்னை பறங்கி மலையை அடுத்த ஆலந்தூர் ஸ்ரீ வி. கன்னியப்பன் குமாரத்தி சௌ. கோவிந்தம்மாளுக்கும் இம்மாதம் 14-ந் தேதி சென்னை மயிலாப்பூர் திருவள்ளுவர் பேட்டையில் விவாகம் விமரிசையாக நடந்தேறியது.

கலா மண்டபம்

சினிமா டைரக்டர்களுக்கு ஒழுக்கம் தேவை

★

[டைரக்டர் எல். பிரசாத்]

சிறந்த டைரக்டராவதற்கு என்னென்ன தகுதிகள் வேண்டும் என்பதைக் கூறு முன் ஒன்றுமட்டும் கூற விரும்புகிறேன். மற்ற தகுதிகள் எல்லாவற்றையும்விட ஒரு டைரக்டருக்கு வேண்டிய முக்கியமான தகுதி ஒழுக்கம் தான். அது இல்லாவிட்டால் மற்றத் தகுதிகள் இருந்தும் பயனில்லை. சினிமாத் தொழிலில் இருபத்தாறு வருஷ அனுபவம் எனக்குண்டு. ஆனால் பதினேறு வருஷமாகத்தான் நான் டைரக்டராக இருந்து வருகிறேன். நான் டைரக்டராவதற்கு முன் படக் கலை சம்பந்தப்பட்ட ஒவ்வொரு துறையிலும் இருந்து அனுபவம் பெற்றேன். டைரக்டராகும் வாய்ப்பு சிலருக்கு இளம் வயதிலேயே கிடைத்துவிடுகிறது. சிலருக்குத் தாமதமாகக் கிடைக்கிறது. தங்களுக்குக் கிடைக்கும் சந்தர்ப்பத்தை சிலர் நன்கு பயன்படுத்திக்கொண்டு முன்னேறி வருகிருர்கள். சிலருக்கு தங்களுக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை தகுந்த முறையில் பயன்படுத்த திறமையோ அனுபவமோ இன்றி வீணுக்கிவிடுகிருர்கள்.

என்னைப் பொறுத்தவரை டைரக்டராகும் வாய்ப்பு எனக்குத் தாமதமாகத்தான் கிடைத்தது. ஆனால் அதற்காக நான் வருத்தப்படவில்லை. ஏனென்ருல் தாமதமாக கிடைத்ததால் டைரக்டராவதற்கு வேண்டிய அனுபவங்களைச் சேகரித்துக் கொள்ள எனக்கு அவகாசம் இருந்தது" என்று சென்ற வாரம் 'டைரக்டர்களின் கடமை' என்ற தலைப்பில் சினிமா பத்திரிகையாளர் சங்கம் ஆரம்பித்துள்ள தொடர் பிரசங்கங்களின் முதல் பிரசங்கத்தில் பிரபல டைரக்டர் ஸ்ரீ எல். பிரசாத் கூறினர். அவர் மேற்கொண்டு கூறுகையில்,

என்னுடைய இந்தப் பதினேறு வருஷ டைரக்டர் தொழிலில் சுமார் 25 படங்களுக்கு மேல் பலதரப்பட்ட படங்களை நான் டைரக்ட் செய்திருக்கிறேன். இந்தக் குறுகிய காலத்தில் இத்தனை படங்களை டைரக்ட் செய்வதென்பது ஒரு சாதனைதான். இதில் ஓரளவு நான் வெற்றிபெற்றிருக்கிறேன் என்றே கூற வேண்டும். என்னிடம் உதவியாளராக இருந்து அனுபவம் பெற்றவர்களில் பலர் இன்று சிறந்த டைரக்டர்களாக விளங்குகிருர்கள். இதுபற்றி நான் பெருமை அடைகிறேன்.

என்னுடைய தொழிலில் நான் கொண்டுள்ள லட்சியம் இதுதான். சிறு விஷயமானலும் பெரிய விஷயமானலும் என்னுடன் இருப்பவர்கள் கூறும் யோசனைகளுக்கு நான் மதிப்புக் கொடுக்கிறேன். அவரவர் தங்கள் தங்கள் கருத்துக்களை வெளியிட சந்தர்ப்பம் அளிக்கிறேன். அவைகளில் சிறந்தவற்றை சரியானவைகளை—அது என் சகபாடிகளிடமிருந்து வந்ததென்பதற்காக நான் ஏற்றுக் கொள்ளாமல் இருந்ததில்லை. ஒரு படத்தை டைரக்ட் செய்பவனுக்கு பல வகைகளில் அனுபவம் வேண்டும். பல விஷயங்களை

'கற்புக்கரசி'யில் சாவித்திரி

அவன் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டி இருக்கிறது. சிறந்த உதவியாளர்கள் இதற்குத் தேவை. இவர்களில் திறமை உள்ளவர்கள் முன்னுக்கு வர நான் எப்பொழுதும் சந்தர்ப்பம் அளித்து வந்திருக்கிறேன். புதிய நடிக, நடிகையரை திரைக்குக் கொண்டுவர வேண்டும் என்ற ஆர்வம் எனக்கு உண்டு. பலரைக் கொண்டுவந்திருக்கிறேன். ஆனால் அவர்களில் சாவித்திரியும், என். டி. ராமராவும்தான் இன்று சிறந்த நட்சத்திரங்களாகப் பிரகாசிக்கிருர்கள்.

சாதாரணமாக தனிப்பட்ட படத் தயாரிப்பாளர்கள்தான் அதிகமாகப் படம் எடுக்கிருர்கள். இவர்கள் புதிய நடிக நடிகையரைப் போட்டு படம் எடுப்பதென்பது சாத்தியமல்ல. பெரிய ஸ்டூடியோவை நிர்வகிப்பவர்கள் தாங்கள் எடுக்கும் படங்களில் ஒரு படத்தை இம்மாதிரி, முற்றும் புதிய நடிக நடிகையர் புதிய டைரக்டர், இளம் டெக்னீஷியன்கள், புதிய முற்போக்குக் கருத்துள்ள கதைகள் ஆகியவற்றைக்கொண்டு எடுக்கலாம்.

ஆங்கிலப் படங்களைப்போல் நமது படங்களை குறைவான நீளத்தில் ஏன் தயாரிக்கக் கூடாது என்று கேட்கிறீர்கள். ஆங்கிலப் படங்களைப் பார்ப்பவர்கள் யாவரும் படித்தவர்கள். நகரத்தில் இருப்பவர்கள். ஒரு நீளமான கதையை நவீன டெக்னிக்குகளை புகுத்தி ஒன்றரை மணி நேரத்தில் பார்க்கும் படமாகத் தயாரித்து விடலாம். ஆனால் நம் நாட்டில் பெருவாரியான படம் பார்க்கும் மக்கள் நகரத்துக்குத் தொலைவில் உள்ள கிராமத்தில் இருப்பவர்கள். அவர்களுக்கு சாவதானமாக படம் பார்க்க வேண்டும். அதிவேகமாகச் செல்லும் கருத்துக்களை அவர்களால் புரிந்துகொள்ள முடியாது. நாம் கொடுக்கும் கதைகள் அவர்கள் பார்த்துப் புரிந்துகொண்டு ரசிக்கத்தக்க முறையில் அதைக் கொடுக்க வேண்டும்.

அதுமட்டுமல்ல. பழமையிலிருந்து முற்றிலும் மாறுபட்ட புதிய கருத்துக்களையோ விபரீதமான கருத்துக்களையோ நமது மக்கள் ஏற்றுக்கொண்டு விடமாட்டார்கள். இதன் கருத்து புதுமையைப் புகுத்த வேண்டாம் என்பதல்ல. இதை நாம் படிப்படியாகச் செய்யவேண்டும். செய்துகொண்டும் வருகிருேம். ஆயினும் நம்முடைய பழைய பண்பு என்ற அஸ்திவாரத்தின் மீதுதான் நம்முடைய

புதுமைக் கருத்துக்களாலான கலைக் கோயில் எழ வேண்டும்.

படத் தயாரிப்பாளர் யாவருமே மக்கள் விரும்பும் கருத்துள்ள கதைகளையே படமாக எடுக்க விரும்புகிறார்கள். அவர்களுடைய கருத்தின்படி படமெடுப்பதால் மக்களின் ரசனைக்கு நாம் படமெடுக்க வேண்டும். அப்படியானால் ரசனை உயர்வதெப்படி? இதை படிப்படியாகச் செய்ய வேண்டும் செய்து கொண்டும் வருகிறோம். முற்போக்கான கருத்துக்களை புகுத்த வேண்டும் என்பதும் எனக்கு விருப்பம்தான். இதற்காக படத் தயாரிப்பாளரின் அபிப்பிராயத்திற்கு விரோதமாக நான் ஒன்றும் செய்ய விரும்பவில்லை. ஏனென்றால் வியாபார ரீதியில் மக்கள் விரும்பும் படங்கள்பற்றி அவர்கள் கூறும் கருத்துக்கு இடம் கொடுத்தே ஆகவேண்டும். ஆகவேதான் திடீரென்று மாறுதல்களைப் புகுத்தாமல் நாளடைவில் செய்ய வேண்டுமென்று நான் கருதி அவ்வாறே செய்து வருகிறேன்.

தற்போது நடிக நடிகையருக்கு போதுமான அவகாசம் இல்லை. அவர்கள் பல படங்களில் நடிக்கவேண்டி இருக்கிறது. ஆகவே ஒரு படத்தில் நேற்று நடித்த காட்சி இன்று அவர்களுக்கு மறந்து போய்விடும். அவர்கள் வேஷமணிந்து அரங்கத்திற்கு வந்ததும் அவர்களுக்கு கதையில் எந்த கட்டத்தில் அவர்கள் நடிக்கப் போகிறார்கள் என்பதை அவர்களுக்கு விளக்கி அவர்களை அந்த கதாபாத்திரங்களின் 'நிலை'க்கு திருப்ப வேண்டும். இது டைரக்டரின் முக்கியமான பொறுப்பு. இதைச் செய்யும்போது டைரக்டருக்கு தான் எடுக்கும் கதையை பூராவும் தன் மனக்கண்ணால் கற்பனை செய்து பார்க்கும் ஆற்றல் வேண்டும்.

டைரக்டரின் திறமையினால்தான் நடிகர்கள் சிறப்பாக நடிக்க முடியும் என்று கூறுவதற்கில்லை. சிறந்த நடிக நடிகையர் நடிப்புக் கலையில் அனுபவமுள்ளவர்கள் டைரக்டரின் உதவி இன்றியே கதாபாத்திரங்களின் தன்மையை உணர்ந்து டைரக்டர் எதிர்பார்ப்பதைவிடக் கூட நன்றாக நடித்துவிட முடியும். ஏனென்றால் அவர்கள் தொழிலில் அவர்கள் பெற்றுள்ள அனுபவம் வீணாகி விடுமா?

சிற்சில படங்களில் நடைமுறையில் நம்ப முடியாத சம்பவங்கள் புகுத்தப்படுகின்றன என்பது வாஸ்தவம். இவை அந்தந்த கதைக்குத் தேவையான அளவு சேர்ப்பதில் தவறு ஒன்றும் இல்லை. நாடகம், சினிமா யாவுமே ஓரளவு வாழ்க்கையை மிகைப்படுத்திக் காட்டுவது தானே! கடைசியாக அவர் கூறுகையில், பொது மக்களின் ரசனையை உயர்த்த பத்திரிகைகளால்தான் முடியும். பொது மக்களின் ரசனையைவிட பலமடங்கு உயர்ந்த நிலையில் இருந்துதானே விமர்சகன் ஒரு கலையை நோக்க முடியும். விமர்சகன் நிலைக்கும் பொது மக்கள் நிலைக்கும் மையமாக நின்று செயல் புரிவதே எங்கள் நோக்கம்!

"படங்களை கதை அளவிலேயே தணிக்கை செய்வதுபற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?"

"அது நல்லதுதான்!"

தொழிலை தேசீய மயமாக்குவதுபற்றி உங்கள் கருத்தென்ன?"

"செய்யலாம். செய்யும் முறையில்தான் இருக்கிறது!"

டைரக்டர் பிரஸாத் தற்போது ஏவி. எம். தயாரிக்கும் ஹிந்தி மிஸியம்மாவை டைரக்ட் செய்துகொண்டிருக்கிறார். ஏற்கெனவே வெற்றிகரமான படங்கள் பலவற்றை டைரக்ட் செய்த இவர் தற்போது மூன்று தமிழ் தெலுங்கு படங்களை டைரக்ட் செய்துகொண்டிருக்கிறார்.

☘ ☘ ☘

இந்த வாரத்தில் மூன்று படங்கள் வெளி வருகின்றன. அவை தேவர் பிலிம்சாரின் "தாய்க்குப்பின் தாரம்" மெர்க்குரியின் "வாழ்விலே ஒரு நாள்" மற்றொன்று கல்பனாவின் "ரம்பையின் காதல்". மூன்றும் மூன்றுவிதமான படங்கள். ரம்பையின் காதல் வாசகர்களுக்குத் தெரிந்த கதைதான். ஆனால் இப்பொழுது பானுமதி, தங்கவேலு, பாலையா ஆகியோர் நடித்துள்ள இந்தப் படம் முற்றிலும் புதுமையாக இருக்கும். ஆர். சந்திரன் டைரக்ட் செய்துள்ளார். அவரேதான் இதன் தயாரிப்பாளர்.

மெர்குரியின் "வாழ்விலே ஒரு நாள்" ஒரு குடும்பக் கதை. சிவாஜி கணேசன், ஜி. வரலக்ஷ்மி இருவரும் நடிக்கின்றனர். இவர்களது மகனாக ஸ்ரீராமும், அவரது காதலியாக ராஜசுலோசனாவும் நடிக்கின்றனர். காசிலிங்கம் டைரக்ட் செய்து இப்படத்தை அனுபவஸ்தரான ஸ்ரீ வேங்கடசாமி தயாரித்துள்ளார்.

தேவர் பிலிம்சாரின் "தாய்க்குப் பின் தாரம்" வீரச்செயல்கள் நிறைந்த உருக்கமான கதை. தேவரின் சகோதரரான ஸ்ரீ திருமுகம் இதை டைரக்ட் செய்துள்ளார். எம். ஜி. ராமச்சந்திரன் இப்படத்தில் ஒரு முரட்டுக் காளை மாட்டுடன் சண்டை போடுவது பயங்கரமாக இருக்கும். மற்றும் பானுமதி, பாலையா ஆகியோரும் முக்கிய பாகத்தில் நடிக்கின்றனர். விஜயா ப்ரொடக்ஷன்ஸார் இதன் உரிமையை வாங்கிவிட்டதிலிருந்தே இது ஒரு சிறந்த படமாக இருக்கும் என்பது நிச்சயமாகிவிட்டது.

மகிழ்ச்சியால் மார்பில் கைபுதைக்கும் நடிகை காமு. வீனஸ் புரொடக்ஷன்ஸ் 'தால்வர்-கா-தானி'யில் தோன்றுகிறார்.

பம்பாய்த் தபால்

இந்தியப் படங்கள் கூடிய சீக்கிரத்தில் ஐரோப்பாவிலுள்ள அனேக நாடுகளில் காண்பிக்கப்படலாமென்ற நம்பிக்கை இப்பொழுதெல்லாம் ஏற்பட்டிருக்கிறது.

அடுத்த மாத முதலில் ரஷ்யாவில் ஒரு இந்திய சினமா விழா நடக்கப் போகிறது. அப்பொழுது 'மிர்ஜா காலிப்', 'வாரிஸ்', 'ஷ்ரீ 420,, 'ஜாக்ரிதி', 'முன்னு' என்ற படங்கள் ரஷ்யா முழுவதிலும் காண்பிக்கப் போகின்றன. இப்படங்களில் கலந்து கொண்டவர்கள் ரஷ்யாவுக்கு விஜயம் செய்வார்கள்.

அம்மாதிரி, இந்தியாவிலும் டிஸம்பர் மாதத்தில் ஒரு ரஷ்ய சினிமா விழா நடக்கப் போகிறது. அப்பொழுது, ரஷ்யாவின் 'ஒத்தெல்லோ', 'பன்னிரண்டாவது இரவு', 'தாய்', 'ரும்யாண்ட்செவ்வின் கேஸ்' என்னும் படங்கள் காண்பிக்கப்படும். ரஷ்ய நடிக நடிகைகளும், பட முதலாளிகளும், டைரக்டர்களும் அச்சமயம் இந்தியாவுக்கு விஜயம் செய்வார்கள்.

செக்கோஸ்லோவாகியாவில் கூடிய சீக்கிரத்தில் 'ஜான்ஸி கி ராணி', 'அவாரா', 'பாய்ஜு பாவ்ரா', 'முன்னு' என்னும் இந்தியப் படங்கள் காண்பிக்கப்படும். அம்மாதிரி, செக்கோஸ்லோவாகியாவின் 'தி ஷோ ஈஸ் ஆன்' (சர்க்கஸ் படம்), 'கர்வமுள்ள இளவரிசி' என்னும் படங்கள் இவ்வூரில் கூடிய சீக்கிரத்தில் காண்பிக்கப்படும்.

கிழக்கு ஜெர்மனியில் ஏற்கெனவே 'இரு காணி நிலம்', 'அவாரா' 'பாய்ஜு பாவ்ரா', 'முன்னு' என்னும் படங்கள் இதுவரையில் வெகு வெற்றிகரமாக ஓடியிருக்கின்றன. கூடிய சீக்கிரத்தில் அவ்வூர் பட வினியோகஸ்தர்கள் இன்னும் அனேக இந்தியப் படங்களைக் காண்பிக்கப் போகிறார்கள். கிழக்கு ஜெர்மனியின் படங்களான 'தி லிட்டில் மூக்', 'பர்லின் காதல்' என்னும் படங்கள் கூடிய சீக்கிரத்தில் இந்தியா முழுவதும் காண்பிக்கப்படும். இம்மாதிரியே கூடிய சீக்கிரம் போலண்டில் நம் தேசத்தின் அனேக படங்கள் காண்பிக்கப்படும். வெகு விரைவில் நாம் வெகு சிறந்த போலிஷ் படங்களையும் பார்க்கலாம்.

மேற்கு ஜெர்மனியிலும், பிரான்ஸிலும், ஸ்விட்ஜர்லாந்திலும், இத்தாலியிலும் மக்கள் இந்தியப் படங்களைப் பார்க்க விரும்புகிறார்கள். அவ்வூரிலுள்ள பட முதலாளிகளுக்கும், பத்திராதிபர்களுக்கும் இந்திய சினிமாத் தொழிலைப்பற்றியும், நம்முடைய சினிமாக் கலை எப்பேர்ப்பட்ட உயர்ந்த நிலைமையை அடைந்திருக்கிறதென்பதைப் பற்றியும் ஒன்றுமே தெரியாமலிருப்பது எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது.

ஐரோப்பாவிலுள்ள ஒவ்வொரு தேசத்துச் சர்க்காரும் அவரவர்களுடைய சினிமாத் தொழிலுக்கு வேண்டிய உதவி செய்து, சினிமாக் கலை விருத்தியடைய எவ்வளவோ உபகாரம் செய்து வருகிறார்கள். அம்மாதிரியே, இந்திய பட முதலாளிகளும் ஒன்று சேர்ந்து, இந்தியப் படங்களைப்பற்றி ஐரோப்பா முழுவதும் நன்றாகவும் சரியாகவும் விளம்பரம் செய்தால், இந்தியப் படங்களுக்கு அந்நாடுகளில் நல்ல 'டிமாண்டு' ஏற்படுமென்று சொல்லவும் வேண்டுமா?

பம்பாயில் நாராயணன் கம்பெனியாரின் முதல் ஹிந்திப் படமான 'தேவதா' சென்ற ஆறு வாரங்களாக நன்றாக ஓடிக்கொண்டிருக்கிறது. அப்படத்தை பாமர மக்கள் மிகவும் விரும்புவதாகத் தோன்றுகிறது.

அவர்கள் முதலில் தமிழில் தயாரித்த 'கணவனே கண்கண்ட தெய்வம்' என்னும் படம் எவ்வளவோ நன்றாக இருக்கிறதென்று சொல்ல வேண்டும். இதே படத்தை அக்கம்பெனியார் ஹிந்தியில் தயாரித்தால், சாதாரணமாக அப்பேர்ப்பட்ட படம் தமிழ்ப் பிரதியைக் காட்டிலும் நன்றாக இருக்கவேண்டும். அப்படியில்லாவிட்டால் மிகவும் வருந்தத்தக்கதே.

முதன் முதலாக இப்படத்தை டைரக்ஷன் செய்திருக்கும் ஸ்ரீ பட்டண்ணாவின் வேலைத் திறமை மெச்சத் தகுந்ததே. இப்படத்தில் ஸ்ரீ ஜெமினி கணேசன், ஸ்ரீமதிகள் அஞ்சலி தேவி, வைஜயந்தி மாலா இவர்களின் நடிப்பும் உயர்ந்த நிலைமையில்தான் இருக்கிறது. ஸ்ரீ ராமச்சந்திராவின் சங்கீதம் சில இடங்களில் நன்றாக இருக்கிறது. மற்ற இடங்களில் சுகமில்லை. கேவா கலர் சீன்கள் அவ்வளவு பிரமாதமென்று சொல்ல முடியாது. புகைப்படயாளரின் வேலை அவ்வளவு நன்றாயில்லையென்றுதான் சொல்ல வேண்டும். மொத்தத்தில் படம் ஸ்வாரஸ்யமாக இருக்கிறது.

ஃ ஃ ஃ

பிளாக் அண்டு ஒயிட்மூவிஸாரின் 'பாக்கெட்மார்' ஒரு நல்ல படம். ஒரு திருடன், தன்னுடையத் தீயச் செயலை உணர்ந்து, கடைசியில் ஒரு நல்ல மனிதனாகத் திருந்துகிறான். இதுதான் இப்படத்தின் கதை. இதில், திருடனாக நடித்திருக்கும் ஸ்ரீ தேவ் ஆனந்த் மிகவும் நன்றாக நடித்திருக்கிறார். ஸ்ரீமதி கீதா பலியும், நாதிராவும் நன்றாக நடித்திருக்கிறார்கள்.

இப்படத்தை தயாரித்த குஷிராம், சேதி, என்னும் பட முதலாளிகள், அவர்களுடைய படத்தின் வெற்றியைக் கொண்டாடுவதற்காக சென்ற வாரம் ஓரிரவு, ஒன்று சேர்ந்து, குடித்துக்கொண்டிருந்தார்கள். பாவம்! போலீஸார் வந்து, அவர்களைக் கைது செய்துவிட்டார்கள். தற்சமயம் கேஸ் நடந்து கொண்டிருக்கிறது.

ஸ்ரீமதி மதுபாலா, இனிமேல், ஸ்ரீ திலிப்குமாருடன் நடிக்கப் போவதில்லையென்ற தீர்மானத்திற்கு வந்திருக்கிறார். அவர்களுக்குள் மனவேற்றுமையே இதற்கு காரணம். ஸ்ரீமதி மதுபாலாவின் இப்பேர்ப்பட்ட தீர்மானத்தினால், பட முதலாளியான ஸ்ரீ பி. ஆர். சோப்ரா, அவர் தற்சமயம் தயாரிக்கும் 'நயா தோர்' என்னும் படத்தில், ஸ்ரீமதி மதுபாலாவுக்குப் பதிலாக, ஸ்ரீமதி வைஜயந்திமாலாவை நடிக்கும்படி கேட்டுக்கொண்டிருக்கிறார்.

—தி. மா. ராமச்சந்திரன்.

ஷர்ட் அணிந்திருக்கும் அழகி ஜபீன் ஜலில் 'ஸினே ஆர்ட்ஸ்' தயாரிப்பான 'அஞ்ஜுபி'யில் நடிக்கிறார்.

நகர அரங்கம்

பெரம்பூர் அமெச்சூர் சபை கோஷ்டியினர் சென்ற 12–ந் தேதி அண்ணாமலை மன்றத்தில் 'புயலும் தென்றலும்' என்ற சமூக நாடகத்தை நடித்தனர்.

மனைவியை இழந்த அட்வகேட் அனந்தசயனம் தன் பண பலத்தால் ரங்கூனிலிருந்து வந்த அகதி சாம்பசிவத்தின் பெண் மாகதத்தை காரியதரிசி கோல்மால் குப்புசாமியின் சூழ்ச்சியினால் மணம் செய்துகொள்ள விரும்புகிறார். ஆனால் மாகதம் தன் குடும்ப டாக்டர் கோபாலனையே மணம் செய்துகொள்ள விரும்புகிறாள். மாகதத்தின் அத்தை மகன் பி. ஏ. பட்டதாரி ராகவன் இவர்களுடைய காதலுக்குத் தடங்கலாக இல்லாமலிருப்பதற்காக தான் யார் என்பதை தெரிவித்துக் கொள்ளாமல் இவர்களுக்கு உதவுகிறான். மாகதத்தை அனந்தசயனத்திற்கு விவாகம் செய்து வைக்கும் முயற்சி தோல்வி அடையவே காரியதரிசி குப்புசாமி சேகர் என்பவன் காதலிக்கும் சினிமா நடிகை காந்தாமணியை அவர் மணக்க ஒப்புக்கொள்ளும்படி செய்கிறான். இதற்காக சேகருக்கும் காந்தாமணிக்கும் மனஸ்தாபம் ஏற்படுத்தி அவர்களைப் பிரித்து விடுகிறான் குப்புசாமி. இந்த மனஸ்தாபத்துக்கு அனந்தசயனம்தான் காரணம் என்று கருதி, சேகர் அவர் வீட்டிலேயே திருடுவதற்கு திட்டமிடுகிறான். அனந்தசயனமும் காந்தாமணியும் போட்டோ எடுத்துக்கொள்வதற்காக ஒரு போட்டோகிராபரிடம் செல்கின்றனர். காந்தமணியின் மாஜி காதலன் போட்டோகிராபர் தம் ஆல்பத்திலிருந்த அவளுடைய போட்டோவை அனந்தசயனத்திற்குக் காண்பித்து விடுகிறான். காந்தாமணியின் பூர்வோத்திரத்தை அறிந்த அனந்தசயனம் அவளை வீட்டை விட்டு வெளியே விரட்டுகிறார். காரியதரிசி குப்புசாமிக்கும் அனந்தசயனத்திற்கும் வாக்குவாதம் ஏற்படுகிறது. அனந்தசயனம் வீட்டு திருட்டு சம்பந்தமாக சேகரின் வீடு சோதனையிடப்படுகிறது. கைப்பிடித்த கணவனை காப்பாற்ற சேகர் மனைவி மஞ்சுளா தானே குற்றவாளி என்பதை ஒப்புக்கொள்கிறாள். பிறகு காந்தாமணி மூலம் உண்மை விஷயங்கள் வெளி வருகின்றன. போலீஸ் புலன் விசாரணையில் டாக்டர் கோபாலன் ஒரு விபத்தில் இழந்த தன் சொந்தப் பிள்ளை என அனந்தசயனத்துக்கு தெரிய வருகிறது. இறுதியில் டாக்டர் கோபாலன் தான் காதலித்த மாகதத்தையே வாழ்க்கைத் துணைவியாக அடைந்து நாடகம் சுபமாக முடிகிறது.

இந்த நாடகத்தில் 'சேகராக' நடித்த ஸ்ரீ நாராயண ராவ் முதல் தரமாக நடித்து தான் உண்மையில் ஒரு வில்லன் என்பதை நிரூபணம் செய்துவிட்டார். இவரது பேச்சிலும் நடிப்பிலும் விறுவிறுப்பு காணப்பட்டது. டாக்டர் கோபாலன் பாகமேற்ற ஸ்ரீ ஆர். சீனிவாசன் முற்பகுதியில் கன ஜோராக நடித்தார். மற்றொரு வில்லனாக நடித்த கோல்மால் குப்புசாமி நடிப்பு பரவாயில்லை.

'அத்தர் அண்ணாசாமி' ஸ்ரீ என். பாலச்சந்தர் இடை இடையே தோன்றி ஹாஸ்ய வெடிகளை அள்ளி வீசி தாம் ஒரு சிறந்த ஹாஸ்ய நடிகர் என்பதைக் காட்டி விட்டார்.

ஸ்திரீ நடிகைகளில் 'மஞ்சுளா', குமாரி ஜி. சரோஜா உருக்கமாக நடித்தார். 'மாகதம்', குமாரி ஆர். கல்பகம் நடிப்பு பரவாயில்லை. 'காந்தாமணி', குமாரி பீ. லீலா சுமாராக நடித்தார்.

எழுத்தாளர் ஸ்ரீ கோமதி ஸ்வாமிநாதன் நாடகத்திற்கு கதை, வசனம் அமைத்துக்கொடுத்திருக்கிறார். ஸ்ரீ பி. டி. சேஷாத்திரி திறமையுடன் டைரக்ட் செய்திருக்கிறார். காட்சி அமைப்பு, சீன்கள், மேடை அலங்காரம், சங்கீதம் இவை நன்கு அமைக்கப்பட்டிருந்தன. முதல் சீன் வசீகரமாயிருந்தது.

நாடகத்திற்குத் தலைமை தாங்கிய மேயர் ஸ்ரீ வி. ஆர். ராமநாத அய்யர் நடிகர்களின் திறமையைப் பாராட்டினார்.

...கே. ஆர். எஸ்.

மேற்கு மாம்பலம் ஸ்ரீ சத்யநாராயணப் பெருமாள் தேவஸ்தானம் ஸ்ரீ சஞ்சீவி ஆஞ்சநேயர் ஸ்வாமி சன்னிதி கட்டிட நிதிக்காக ஸ்ரீராம் கலைச் சங்கத்தினர் "மாந்தருள் மாணிக்கம்" என்ற நாடகத்தை 8-9.56–ல் வாணி மஹாலில் நடித்தனர்.

மைசூர் வாசுதேவாச்சார் கீர்த்தனைகள்

SL
m211, N30S
N51·27·33-35
208201

ராகம் : ஷண்முகப்ரியா] [தாளம் : ஆதி

ஆரோகணம் : ஸ ரி க ம ப த நி ஸ்
அவரோகணம்: ஸ் நி த ப ம க ரி ஸ } 56-வது மேள ராகம்

பல்லவி

மாநமுதோ நன்னு ப்ரோவராதா (அபி)
தீன பாந்தவ ஸ்ரீ வாஸுதேவா

அநுபல்லவி

ஸ்ரீ நிகேதன நீ நாமமு ப்ரேமதோ
த்யானமு ஸேயுட ஸுக்ஞான மொஸகராதா (மாநமு)

சரணம்

வாரிதி சயன வாரிஜ லோசன
வாரித துர்ஜன வரகக வாஹன
கரி மொரலிட நீவு கருணதோ ப்ரோவலேதா
பரமபுருஷ நின்னே நம்மினவாடு கதா (மாநமு) (47)

ப:— நான் உலகில் கௌரவமாய்ப் பிழைக்கும்படியாக என்னை ரக்ஷிக்க வேண்டும். தீனர்களுக்கு பந்துவானவனே, எல்லா ஹ்ருதயத்திலுமிருந்து, அவரவர் நன்மை தீமைகளைப் பார்ப்பவனே!

அ-ப:— லக்ஷ்மீ தேவிக்கு இருப்பிடமானவனே! உன் திவ்ய நாமாவைப் ப்ரேமையுடன் த்யானம் செய்யும்படியான ஸுக்ஞானத்தைக் கொடுக்கலாகாதா?

ச:— பாற்கடலில் பள்ளிகொண்டவனே! பத்மலோசனனே! துர்ஜனங்களை யழித்தவனே! பக்ஷிராஜனை கருடனை வாகனமாகக் கொண்டவனே! கஜேந்திரன் 'கோ'வென்றலர, அன்று நீ அதைக் கருணையுடன் காப்பாற்றவில்லையா? ஓ! புருஷோத்தமனே! நான் உன்னையே நம்பினவனன்றோ! (என்னைக் கௌரவமாய்ப் பிழைக்க அருள் செய்வாய்.)

ராகம் : ஷண்முகப்ரியா. தாளம் : ஆதி.

பல்லவி

, , பதா நி நீ ஸ்ா , , , , நி நி
. . மா . நமு தோ . . . . நன் னு
ததபம பதா நி நீ ரீ ஸ் , , , , நி நி
அ.பி . மா நமு தோ . . . . நன் னு
, , த ப தம மப பரி ரிகரிக ரீ , ,
. . தீ . . ன பா . . ந்த . . வ . .
நிதபம (மாநமுதோ.)
. . . . வா

நிதஸ்நி நிததா பமபம பதநிஸ்	, நி நிதஸ்நி நிததா பா
ப்ரோ . . . வ ரா	. . . . . தா.
நிதஸ்நி நிததா பமபம பதநிஸ்	ரீக்ரி ஸ்நி நிதஸ்நி நிததா பா
ப்ரோ . . . வ . . . ரா . . .	. தா .
, , ரிக ரிக மபாம பதபத	நிஸ்ாநி ஸ்ரிக்ா க்ரிஸ்ா ஸ்நிநித
. . ஸ்ரீ . . . . வா . . .	. . . . ஸு . . . தே . . .

அநுபல்லவி

, , , ஸ்ா நிஸ்ா ரீ ரீ ஸ்ரி ஸ்ரிக்ரி
. . . ஸ்ரீ நி கே தன நீ . . . .
, , ரீ க் ரீ ஸ்ாநித நீஸ்ா
. . . த்யான மு ஸே . . . யுட.
நிதபம (மானமுதோ)
. . . . தா.

க்ா க்மா க்ரீ	க் ரி ஸ்ரிக்ரி , க் ரி
. . நா . மமு	ப்ரே மதோ.
, , , நிஸ் நீ தபம	ப த நிஸ்ரிக் ரிஸ்நீ நிதஸ்நி
. . . ஸு . . . க்ஞான	மொ ஸ . . . க . . . . ரா . . .

சரணம்

, , , ஸா ப பா பாபா பம பாதப பமகா
. . . வா ரி தி . ச ய . ன . . . . . .
, , , க ரி க ரீ ஸ ரி ஸ ரி க ரி ஸ ஸ ஸா
. . . வா ரி த துர் . . . . . ஜ ன

, , க மா க ரீ	க ரி ஸரிகரி , கரீ
. . வா . . ரிஜ	லோ . . . . சன
, , , நி ஸ த நீ	ரி ஸ ஸா. ஸா ஸா.
. . . வ ர க க	வா . . . ஹ. ன .

கரி மொரலிட நீவு கருணதோ ப்ரோவலேதா.
பரம புருஷ நின்னே நம்மின வாடுகத.

(அநுபல்லவி மாதிரி பாடவும்)

4
பம்பாய் மெயில்
பாலாமணி
சாந்தன்
இம் முறை அப் பெண் புலி, தப்பி விட்டது. இருக்கட்டும். இம்முனுசாமி உயிருடன் இருக்கும் வரை அவள் நிம்மதியுடன் இருக்க முடியாது!
கொள்ளைக்காரன் பின் வாங்கி ஓடி விட்டான் அம்மா!
ஓடாமல் இருப்பானா? எங்கே தன்னுடைய தோழர்கள் போன இடத்துக்குத் தானும் போய்ச் சேர்ந்து விடுவோமோ, என்று பயந்துதான் ஓடி விட்டான்.
வெற்றியுடன் திருச்சிக்கு வந்து சேர்ந்தனர் ராஜப்பாவும், பாலாமணியும். மறு தினமே நாடகம் நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்தனர்.
பாலாமணி நாடக சபையாரின்
திருச்சி விஜயம்
எமது மகோன்னத ஸ்பெஷல் நாடகங்களை விரைவில் எதிர்பாருங்கள்
மானேஜர்
பா. நா. சபை.
பாலாமணி திருச்சிக்கு வந்து கிட்டத்தட்ட இரண்டு மாதங்களாகி விட்டன. பல ஸ்பெஷல் நாடகங்களை நடத்தி திருச்சி மக்களின் ஆதரவை அமோகமாகப் பெற்று விட்டாள்.
பல நாடகங்களைப் பார்த்துப் பரவசமடைந்த மக்கள், பகலும், இரவும் அந்நாடகங்களைப் பற்றியே பேச ஆரம்பித்தனர்.
இவர்களுடைய மாஸ்டர் பீஸ் பம்பாய் மெயில் நாடகம்னு சொல்லிக்கிறாங்களே? அதை எப்போ நடத்தப் போறாங்களாம்?
ஆமாம்! ஆமாம்! பம்பாய் மெயில் தான் அவர்களுடைய தலை சிறந்த நாடகம். இந்த ஊரில் அதைக் கடைசி நாடகமாக நடத்தி விட்டு, வேறு ஊருக்குத் புறப்படப் போவதாகக் கேள்வி.
இதுவே எமது கடைசி நாடகம்!
இம்முறை தவறினால் மறுமுறை வாய்ப்பதரிது!
எமது மகத்தான சிருஷ்டி!
பம்பாய் மெயில்
மாஸ்டர் ராஜப்பா, பம்பாய் மெயிலாகவும், பாலாமணி ஜமீன்தார் மகளாகவும் தோன்றும் காட்சியைக் கண்டு களியுங்கள்.
தொடரும்

Regd. No. 2514.
Registered as a Newspaper in CEYLON.



ஆரோக்கியமான குழந்தைகள் தவறாமல் லைப்பாய் சோப் உபயோகித்துக் குளிக்கின்றனர்

*அன்றாட அழுக்கிலுள்ள கிருமிகளை அது கழுவிக் களைகிறது!

*தினசரி நம்மீது படியும் அழுக்கிலுள்ள கிருமிகள் வாயிலாக நாம் ஒவ்வொருவரும் தொத்து நோய் ஆபத்துக்கு ஆளாகிறோம். அதன் காரணமாகவே, ஆரோக்கியமுள்ள பலர் வழக்கமாக லைப்பாய் சோப் உபயோகித்து அழுக்குடன் கிருமிகளையும் கழுவிக்களைந்து தத்தம் ஆரோக்கியத்தைப் பாதுகாத்துக் கொள்கின்றனர்—ஆரோக்கியமான அத்தகைய புதுமலர்ச்சியை அது அளிக்கிறது!

L. 257-X52 TM

இந்தியாவில் தயாரித்தது

Printed and Published by N. Rajagopalan, at the 'Swadesamitran' Press, 'Victory House' Mount Road, Madras, Editor: C. R. Srinivasan, B. A.